# கவிஞர் புதுவைச்சிவத்தின் சீர்திருத்த நாடகங்கள்

முனைவர் சிவ. இளங்கோ

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# கவிஞர் புதுவைச்சிவத்தின் சீர்திருத்த நாடகங்கள்

முனைவர் சிவ. இளங்கோ

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை - 600 113

பேரறிஞர் அண்ணா தமிழ் மேம்பாடு
அறக்கட்டளைச் சொற்பொழிவு
(அறக்கட்டளை நிறுவியோர் : தமிழ்நாடு அரசு)

வரிசை எண். 4 நாள் : 30.10.2012

## BIBLIOGRAPHICAL DATA

| | | |
|---|---|---|
| Title of the Book | : | Kavignar Putuvaic Civattin̲ C̃irtirutta nāṭakaṅkaḷ |
| Author | : | Dr. Siva Ilango<br>No.6, Poet Pudhuvai Sivam Street<br>Venkatta Nagar<br>Puducherry-605 011 |
| General Editor | : | Dr. M. Valarmathi<br>Associate Professor<br>Faculty of Overseas Tamils<br>International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus<br>Chennai - 600 113 |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus<br>Chennai - 600 113<br>Ph: 22542992 |
| Publication No. | : | 733 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Year of Publication | : | 2012 |
| Paper Used | : | 18.6 Kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type used | : | 10 Point |
| No. of Pages | : | x + 262 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs.120/- (One Hundred Twenty Only) |
| Printed by | : | Sri Venkateswara Offset<br>No.47 (Old No.20), Rajanga Mathya Street<br>Vadapalani, Chennai-600 026 |
| Subject | : | Reformative Plays of the Tamil poet<br>Pudhuvai Sivam |

அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகளுக்கு நிறுவனம் பொறுப்பன்று.

முனைவர் கா.மு. சேகர் எம்.ஏ.,எம்.ஃபில்.,பிஎச்.டி.
இயக்குநர் (மு.கூ.பொ.)
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை – 600 113

## அணிந்துரை

முனைவர் சிவ. இளங்கோ வழங்கியுள்ள **கவிஞர் புதுவைச் சிவத்தின் சீர்திருத்த நாடகங்கள்** எனும் இந்நூல் பேரறிஞர் அண்ணா தமிழ் மேம்பாடு அறக்கட்டளைப் பொழிவு நூலாக உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தால் வெளியிடப்படுகின்றது. திராவிட இயக்கக் கொள்கைகளைத் தமது சொற்பொழிவுகள், இலக்கியங்களின் வழியாக அடித்தட்டுப் பாமர மக்களிடம் கொண்டு சென்று பேராதரவைப் பெற்றவர் பேரறிஞர் அண்ணா. அண்ணாவின் வாழ்வும் இலக்கியமும் மனிதநேயத்தை, சமத்துவத்தை மையமாகக் கொண்டவை. அவருடைய சிந்தனைகளை, செயல்பாடுகளை எடுத்துக்காட்டும் வகையில் அமையும் அறக்கட்டளைப் பொழிவுகளை நூலாக்கம் செய்து உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியிட்டு வருகின்றது.

இவ்வரிசையில் நான்காவது நூலாக இந்நூல் அமைகின்றது. தந்தை பெரியார், பாவேந்தர் பாரதிதாசன், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் நட்பைப் பெற்றவர் கவிஞர் புதுவைச்சிவம். அவர் எழுதிய 18 நாடகங்கள் குறித்து இந்நூலாசிரியர் முனைவர் சிவ. இளங்கோ மிகச் சிறப்பாக வரலாற்று நோக்குடன், திறனாய்வு நுணுக்கத்துடன் இந்நூலில் திறம்பட விளக்கியுள்ளார். பேரறிஞர் அண்ணாவின் நாடகங்கள் அனைத்தும் பகுத்தறிவு, சீர்திருத்தக் கருத்துகளை எடுத்துக்காட்டியுள்ளதைத் தமிழுலகம் நன்கறியும். அதைப்போன்றே கவிஞர் புதுவைச்சிவம் 1930களிலேயே மேடை நாடக இலக்கியங்களைப் படைத்து அவற்றை மக்களிடையே நடத்திக் காட்டியுள்ளார்.

ஆண் பெண் சமத்துவம், பெண்ணுக்கு மண உரிமை, பெண்கல்வி, விதவை மறுமணம், காதல் திருமணம், சீர்திருத்தத் திருமணம், ஆரிய–திராவிடக் கொள்கைகளை எடுத்துக்காட்டுதல், வைதீகச் சடங்குகள், மூடப் பழக்கவழக்கங்களைக் கைவிட்டுச் சீர்திருத்தச் சிந்தனையும், பகுத்தறிவு நெறி சார்ந்த வாழ்வும் வாழ வழிகாட்டும் நாடகங்கள்தாம் திராவிட இயக்கம் சார்ந்த நாடகங்கள்.

கவிஞர் புதுவைச்சிவம் எழுதிய 1. ரஞ்சித சுந்தரா (அ) ரகசியச் சுரங்கம், 2. அமுதவல்லி (அ) அடிமையின் வீழ்ச்சி, 3. தமிழரின் வீழ்ச்சி (அ) இராமாயண சாரம், 4. கோவலன்–கண்ணகி, 5. வீரத்தாய், 6. தமிழச்சியின் தேசபக்தி, 7. கோகிலராணி, 8. சமூகசேவை, 9.காந்திமதி(அ)கல்வியின் மேன்மை, 10. வீரநந்தன், 11. மூன்று பெண்கள்,

12. புதிய வாழ்வு, 13. சிதைந்த வாழ்வு, 14. நிலம் யாருக்குச் சொந்தம், 15. ஒவ்வாமணம், 16. மோட்சப் பித்து, 17. கைகூடாக் காதல், 18. காதல் முன் கட்டுப்பாடு (மொ.பெ.) ஆகிய பதினெட்டு நாடகங்களும் மேற்குறிப்பிட்ட திராவிட இயக்கக் கொள்கைகளை விளக்குவதற்காக, நேரடிப் பிரச்சாரத்திற்குப் பயன்படும் வகையில் எழுதப்பட்டுள்ளன என்பதை இந்நூல் எடுத்துக்காட்டுகின்றது.

பேரறிஞர் அண்ணா தமிழ் மேம்பாடு அறக்கட்டளை வழியாக நடைபெறுகின்ற இப்பொழிவு, நூலாக வெளியிடப்பெறுவது மிகப் பொருத்தமான ஒன்றாகும். மேலும் பேரறிஞர் அண்ணாவின் கருத்தாக்கத்தில் உருவான உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் வழியாக இந்நூல் வெளிவருவது மற்றொரு சிறப்பாகும்.

கவிஞர் புதுவைச்சிவம் அவர்களின் மகன் முனைவர் சிவ. இளங்கோ இப்பெரும் முயற்சியில் ஈடுபட்டுத் தமது தந்தையின் அளப்பரிய இலக்கிய, சமுதாயத் தொண்டினை உலகோருக்கு எடுத்துக்காட்டும் வகையில் இந்நூலை வழங்கியிருப்பதும் பெரும் பாராட்டுக்குரியது. அவருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகள்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 2004–2005ஆம் ஆண்டில் நிறுவிய பேரறிஞர் அண்ணா தமிழ் மேம்பாடு அறக்கட்டளை இத்தகைய அறிவுப்பணிக்குப் பயன்படுவது குறித்துப் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

பெருமுயற்சியும் உழைப்பும் நல்கிச் சிறப்புடன் இப்பணியை ஆற்றுகின்ற இவ்வறக்கட்டளைப் பொறுப்பாளர் முனைவர் மு. வளர்மதி (இணைப்பேராசிரியர், அயல்நாட்டுத் தமிழர் புலம்) அவர்களுக்கு எனது பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் **பள்ளிக்கல்வி, தொல்லியல், விளையாட்டு (ம) இளைஞர் நலம், தமிழ் ஆட்சிமொழி (ம) பண்பாட்டுத் துறை அமைச்சர் மாண்புமிகு கே.என். சிவபதி** அவர்களுக்கு எமது இதயங்கனிந்த நன்றி.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் தமிழக அரசின் **தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறைச் செயலாளர் முனைவர் மூ. இராசாராம் இ.ஆ.ப.** அவர்களுக்கும் எமது மனமுவந்த நன்றி.

இந்நூலினை மெய்ப்புத்திருத்தம் செய்த முனைவர் ஆ. தசரதன், இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் திருமதி பா.கௌசல்யா ஆகியோருக்கும் என் நன்றிகள் என்றுமுண்டு. இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஆப்செட் அச்சகத்தாருக்கும் பாராட்டுகள்.

**இயக்குநர்**

# முன்னுரை

திராவிட இயக்கம் நூற்றாண்டுக் கால வளர்ச்சியைக் கொண்டுள்ளது. சமுதாய இயக்கமாகவும், அரசியல் இயக்கமாகவும் வளர்ச்சிபெற்ற காலங்களில் திராவிட இயக்கத்தின் கருத்துப் பரவல்கள், அறிக்கைகள், மேடைப்பேச்சு போன்ற நேரடிப் பரவல் முறைகள் மட்டுமின்றி இலக்கியம், கலை வடிவங்கள் சார்ந்தும் அமைந்திருந்தன. ஒரு காலக்கட்டத்தில் (1940, 1950களில்) இவையே முதன்மையான நிகழ்வுகளாக வெளிப்பட்டன. ஆனால் இவை 1930களிலேயே அவ்வியக்கத்தில் முகிழ்த்த கலை இலக்கியம் மூலமான கருத்துப் பரவல் முறையின் தொடர்ச்சியே எனலாம். அத் தொடக்கத்தைத் திராவிட இயக்கத்துக்கு அளித்த மிகச் சிலரில் பாவேந்தர் பாரதிதாசனும், கவிஞர் புதுவைச் சிவமும் மிகக் குறிப்பிடத் தகுந்தவர்கள்.

புதுவைச் சிவம் என்று புனைபெயர் கொண்ட புதுவைச் ச.சிவப்பிரகாசம் அவர்களின் பன்முகப் படைப்பாற்றல் கவிதை, நாடகம், இசைப்பாடல்கள், சிறுகதைகள், காவியங்கள், கட்டுரைகள், திறனாய்வு, மொழிபெயர்ப்பு ஆகிய இலக்கிய வகைமைகளில், கலை சார்ந்து வெளிப்பட்டது. இவற்றுள் அவரது நாடகப் படைப்புகளும், அவற்றின் இயக்கமும், அவை மேடையேற்றம் கண்ட நிகழ்வுகளும் இயக்கம் சார்ந்தவை மட்டுமல்லாது, தமிழினம் சார்ந்த கலை, இலக்கியம், பண்பாட்டில் சீர்திருத்த நோக்கம் உடையவையாக, அதாவது திராவிட இயக்கக் கருதுகோள்கள் வழி அமைக்கப்பட்ட தமிழ்ப் பண்பாட்டின் வெளிப் பாடுகளாக அமைந்துள்ளன.

இந்நிலை அவரது படைப்புகளை ஆழமான ஆய்வுகளுக்கு உட்படுத்தப்படும் நிலையை மட்டுமின்றி ஓர் இனத்தின் பகுத்தறிவு வழிப்பட்ட சீர்திருத்தச் சிந்தனைத் தாக்கத்தின் தொடர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளன. இக்கருத்தை நிறுவும் வகையில் கவிஞர் புதுவைச் சிவத்தின் நாடகங்களில் ஓர் ஆய்வு நிகழ்த்தப்பட்டு அது தற்போது அறிஞர் அண்ணா அறக்கட்டளைச் சொற்பொழிவு மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

காஞ்சிபுரத்தில் சுயமரியாதை இயக்கம் நடத்திய இந்தித் திணிப்பு எதிர்ப்பு மாநாட்டில் (1937) முதல் முதலாக

சி.என்.அண்ணாதுரை என்னும் இயக்கத் தோழரைச் சந்தித்த புதுவைச் சிவம், பின்னாள்களில் அவரைத் தளபதியாகவும், தலைவராகவும் ஏற்று அப்பாதையிலேயே இறுதி வரையில் பயணித்தவர். தமது புதுவைத் தோழர் என்று சிவத்தை அறிஞர் அண்ணாவும் தம் **திராவிடநாடு** இதழில் குறிப்பிட்டுப் பன்முறை நூல் மதிப்புரைகளும், கட்டுரைகளும் எழுதியுள்ளார். புதுவை வர நேர்ந்த பொழுதெல்லாம் இரவுகளில் நெடு நேரம் புதுவைச் சிவத்தோடு இயக்கக் கருத்துகளையும், தம் எண்ணங்களையும் பரிமாறிக் கொண்டவர் அண்ணா. இருவருக்குமிடையே கடிதப் போக்குவரத்தும் மிகுந்திருந்தது. திராவிட நாடு இதழ்களில் புதுவைச் சிவத்தின் கவிதைகள், கட்டுரைகள் கணிசமாக வெளியிடப்பட்டுள்ளன. ஒரு கருத்தைக் கடிதம் வாயிலாக அனுப்பி அதைக் கவிதையாகக் கேட்டுப் பெற்றுத் திராவிட நாடு இதழில் அண்ணா வெளியிட்ட நிகழ்வும் பதிவில் உள்ளது. தமிழினத்தின் பகுத்தறிவுச் சிந்தனையாளர்களாகவும், திராவிட இயக்கத்தின் கலை இலக்கிய முன்னோடிகளாகவும் பாரதிதாசன், புதுவைச் சிவம் மற்றும் சிலரைக் குறிப்பிட்டு அவர்களைப் **புதிய பேராசிரியர்கள்** என்று அண்ணா படைத்த கட்டுரைகளும் திராவிட நாடு இதழில் வெளியாகியுள்ளன.

பேரறிஞர் அண்ணாவின் நெருங்கிய தோழர்களின் வட்டத்தில் இருந்த கவிஞர் புதுவைச் சிவத்தின் சீர்திருத்த நாடகங்கள் குறித்து ஓர் சொற்பொழிவை அண்ணா அறக்கட்டளை வாயிலாக நிகழ்த்துவது மிகவும் இயல்பானதும், பொருத்தமானதுமான ஒன்று. அவ்வாய்ப்பை எனக்கு நல்கிய உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் முனைவர் கா.மு.சேகர் (மு.கூ.பொ.) அவர்களுக்கும், நிறுவனத்தின் இணைப்பேராசிரியர் முனைவர் மு. வளர்மதி அவர்களுக்கும், நிறுவனத்தின் கண்காணிப்பாளர் திரு.இராஜா மற்றும் நிறுவன வளர்ச்சியில் பங்கு கொண்டிருக்கும் அனைத்துப் பேராசிரியர், அலுவலர், ஊழியர்களுக்கும், மாணவர்களுக்கும் என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**முனைவர் சிவ.இளங்கோ**

## ஆசிரியரைப் பற்றி



புதுச்சேரி வரலாற்றில் புகழ்பெற்ற கவிஞர் புதுவைச் சிவம் - செகதாம்பாள் அம்மையார் ஆகியோரின் இளைய மகனாகப் புதுவையில் 15.2.1957 இல் பிறந்த முனைவர் சிவ. இளங்கோ, அரசியல் விஞ்ஞானப் பாடத்தில் முதுகலையும், இளமுனைவர் பட்டமும், தமிழிலக்கியத்தில் முனைவர் பட்டமும் பெற்றவர். கவிஞர் புதுவைச் சிவமும் திராவிட இயக்கமும் என்ற தலைப்பில் ஆனது இவரது முனைவர் பட்ட ஆய்வு. பாவேந்தர் பாரதிதாசன் இயற்றி இதுவரை வெளிவுலகம் அறியாத அவரது பல முற்காலப் படைப்புகளை வெளியுலகம் அறியத் தந்தவர். பாவேந்தர், புதுவைச் சிவம் குறித்த இவரது ஆய்வுகள் வரலாற்றுத் தகவல்களின் களஞ்சியமாகத் திகழ்கின்றன. புதுச்சேரியின் அரசியல் வரலாற்றையும், குறிப்பாகப் புதுச்சேரித் திராவிட இயக்கத்தின் வரலாற்றையும் முதன் முறையாக ஆய்வு செய்து நூலாக வெளியிட்டவர்.

கவிஞர் புதுவைச் சிவம் நினைவுப் பூக்கள் (1989), பாவேந்தரும் புதுவைச் சிவமும் (1990), புதிய பேராசிரியர்கள் (1990), பாரதிதாசன் என்கிற கனக-சுப்புரத்தினம் (1991), பிரஞ்சிந்தியாவும் திராவிட இயக்கமும் (2000), எட்டுமணி நேர வேலை — ஆசியாவின் முதல் வெற்றி (2004), பெரியார் பெருந்தொண்டர் புதுவைச் சிவம் (2007), புதுவைச் சிவம் கவிதைகளும் புரட்சிக் கோட்பாடுகளும் (2008) ஆகிய ஆய்வு நூல்களின் ஆசிரியர். புதுவைச் சிவம் கவிதைகள் (1997), புதுவைச் சிவம் நாடகங்கள் (2000), புதுவைச் சிவம் படைப்புகள் (2007), புதுவைச் சிவம் கட்டுரைகள் (2009) ஆகிய நூல்களின் தொகுப்பாசிரியர்.

கவியரங்கம், பட்டிமன்றம், கருத்தரங்கம் எனப் புதுவை, தமிழகத்தின் பல்வேறு மேடைகளில் அறிமுகமானவர். நூற்றுக்கும்

மேற்பட்ட இவரது ஆய்வுக் கட்டுரைகள் புதுவை, தமிழகம், மலேசியா உள்ளிட்ட பல்வேறு பல்கலைக் கழகக் கருத்தரங்குகளில் வாசிக்கப்பட்டவை. கவிதை, சிறுகதை, நாடகம், கட்டுரை, திறனாய்வு எனப் பல்திறன் கொண்ட படைப்பிலக்கியவாதி. பல்வேறு இதழ்களில் வரலாற்றுக் கட்டுரைத் தொடர்கள், வரலாற்று நாடகங்கள் எழுதி வருகிறார். தமிழகத்தின் முன்னணி இலக்கிய இதழ்களில் இவரது படைப்புகள் வெளியாகி வரவேற்பையும், விவாதத்தையும் ஏற்படுத்தி உள்ளன. தமிழ் வளர்ச்சி நடவடிக்கைக் குழு, தமிழ் மொழி விழிப்புணர்வுக்காக நடத்திய புதுச்சேரி மாநிலம் முழுவதுமான நடைப்பயணத்தில் பங்கேற்றவர். தமிழ் ஆட்சிமொழிச் சட்டத்தை நடைமுறைப் படுத்த நடைபெற்ற பல்வேறு போராட்டங்களிலும் பங்கு பெற்றவர்.

அண்ணா பேரவையின் புதுவை மாநில அமைப்பாளரும், கவிஞர் புதுவைச் சிவம் அறக்கட்டளையின் நிறுவனருமாகிய இவர் புதுச்சேரியின் பல்வேறு இலக்கிய அமைப்புகளில் பொறுப்பேற்றுத் தமிழ்த் தொண்டாற்றி வருகிறார். பல்வேறு இதழ்களில் எழுத்தாளராகவும், தொலைக்காட்சி அலைவரிசையில் செய்தி ஆசிரியராகவும் வானொலி, தொலைக் காட்சியில் செய்தி வாசிப்பாளராகவும் பணியாற்றி வருகிறார்.

புதுவை அரசின் பாவேந்தர் பட்டயம், காமராசர், புதுவைச் சிவம், வெங்கடசுப்பா ரெட்டியார் ஆகியோரின் நூற்றாண்டு விழாக் கவியரங்கப் பட்டயங்கள் பெற்ற இவருக்குப் **புதுக்கவிதை சித்தர், இலக்கிய மாமணி, பாவேந்தர் பைந்தமிழ்ச் செல்வர், இலக்கியச் சிந்தனைச் செல்வர், சான்றோர் மாமணி, சேவாரத்னா கவிஞர் தின விருது, பத்திரிகையாளர் தின விருது, கண்ணியச் செம்மல்** ஆகிய விருதுகளைப் புதுச்சேரி, தமிழ்நாட்டைச் சேர்ந்த பல்வேறு அமைப்புகள் வழங்கியுள்ளன. புதுவைப் படைப்பாளிகள் சங்கம் இவரது தமிழ்ப்பணிகள், சமுதாயப் பணிகள், அரசியல் பணிகள் ஆகியவற்றிற்காக 2010 ஆம் ஆண்டில் **வாழ்நாள் சாதனையாளர் விருது** வழங்கிச் சிறப்பித்துள்ளது. 2011 ஆம் ஆண்டில் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் நாடகமன்றம் இவருக்குத் **தந்தை பெரியார் விருது** வழங்கிச் சிறப்பித்துள்ளது. இவர் எழுதிய **புதுவைச் சிவமும் புரட்சிக் கோட்பாடுகளும்** என்னும் ஆராய்ச்சி நூலுக்காகப் புதுச்சேரி அரசின் கலைபண்பாட்டுத் துறை **தொல்காப்பியர் விருது** வழங்கிச் சிறப்பித்துள்ளது.

# உள்ளடக்கம்

பக்கம்

**அ. நாடகக் கலை வளர்ச்சியும் திராவிட இயக்கத்தின் பங்களிப்பும்** 1

1. நாடகக் கலை வளர்ச்சி
2. இந்திய நாடக வளர்ச்சி
3. தமிழ் நாடக வளர்ச்சி
4. இருபதாம் நூற்றாண்டில் தமிழ் நாடகங்கள்
5. தேசிய இயக்கத் தாக்கம்
6. திராவிட இயக்கத்தின் பங்களிப்பு

**ஆ. புதுச்சேரியில் நாடக வளர்ச்சி** 15

1. நாடகங்கள்
2. நாடகக் குழுக்கள்
3. நாடக அரங்கங்கள்
4. பொதுநல நிதிக்கான நாடகங்கள்

**இ. புதுவைச்சிவம் நாடகங்கள்** 25

1. நாடக எண்ணிக்கை
2. நாடக வகைப்பாடு
3. தமிழிலக்கியச் சார்பு நாடகங்கள்
4. பழங்கதைகள் ஒரு புதிய பார்வை
5. கற்பனை வரலாற்று நாடகங்கள்
6. சமூகச் சீர்திருத்த நாடகங்கள்

**ஈ. திராவிட இயக்க வளர்ச்சியில் புதுவைச் சிவத்தின் நாடகங்கள்** 79

**1) நாடக இலக்கணம்**

அ. நோக்கம்

ஆ. ஐவகை நிலை

இ. அங்கம் - காட்சி அமைப்பு

ஈ. காட்சி விளக்கம்

உ. நாடக முடிவுகள்
ஊ. இடம், காலம், செயல், ஒருமைப்பாடு
எ. நாடக உத்திகள்
ஏ. தனிமொழி
ஐ. தன் கருத்தேற்றல்
ஒ. கட்டுக் கோப்பு
ஓ. நாடகப் பயன்
**2) நாடகங்களின் உள்ளடக்கம்**
அ. இன உணர்வு
ஆ. மொழி உணர்வு
இ. பெண்ணுரிமை
ஈ. சமத்துவம், பொதுவுடைமை
உ. சாதி, தீண்டாமை எதிர்ப்பு
ஊ. சமூகச் சீர்திருத்தம்
எ. இயக்கம் குறித்த பிரச்சாரம்
**உ.நாடகப் பாடல்கள்** 146
**ஊ.தொகுப்புரை** 159
**அடிக்குறிப்புகள்** 162
**புதுவைச் சிவம் நூல் மதிப்புரைகள், சுருக்கத் தொகுப்பு** 170
**துணைநூல்கள்** 179
**பின்னிணைப்புகள்**
1) கவிஞர் புதுவைச் சிவம் வாழ்க்கை வரலாறு 184
2) நேர்காணல்கள் (கனிந்த நினைவுகள்) 216
3) புதுவைச் சிவம் நாடக ஆவணங்கள் 228
அ. புதுவைச் சிவம் நாடக நூல்களும், கையெழுத்துப் பிரதிகளும்
ஆ. புதுவைச் சிவம் நாடகத் துண்டறிக்கைகள்
இ. புதுவைச் சிவம் நாடகங்கள் குறித்த பிற ஆவணங்கள்

# அ. நாடகக் கலை வளர்ச்சியும் திராவிட இயக்கத்தின் பங்களிப்பும்

ஆதிமனிதன் உணவும் உறைவிடமும் தேடிமுடித்து, பாதுகாப்பாகவும் ஓய்வாகவும் இருந்த சூழ்நிலையில்தான் கலைகள் பிறந்திருக்கக் கூடும். அச்சூழ்நிலையுடன் சிந்தனையும் சேரக் கலைகளின் எண்ணிக்கையும், அறிவு வளர வளரக் கலைகளின் ஆழமும் அதிகமாயின. பாறையில் இழுக்கப்பட்ட கோடுகள் ஓவியமானதைப்போல், பல கலைகளும் பரிணாம வளர்ச்சி பெற்றன. பிறருடன் நிகழ்ச்சிகளையும் அனுபவங் களையும் பரிமாறிக் கொள்ளவும், சமூக உறவுகளை விரிவாக்கிக் கொள்ளவும் ஆதி மனிதனுக்குக் கலை வடிவங்கள் பயன்பட்டன.

'கலை ஓர் இனமக்களின் மனப்பண்பு; அவ்வின மக்களிடையே தோன்றும் தெளிவு, வீரம் ஆகியவற்றின் எடுத்துக்காட்டு; இனவளர்ச்சிக்கு ஏற்றபடி கலை மாறியும் விரிந்தும் வரும்' என்பார் அறிஞர் அண்ணா.[1]

ஆதிமனிதன் தன் வேட்டை அனுபவங்களைத் தன் சுற்றத்தினர்க்கு எப்போது சைகைகள் மூலம் சொல்லிப் புரிய வைக்க முற்பட்டானோ அப்பொழுதே மனித சமுதாயத்தின் முதல் நாடகம் உருவாகிவிட்டது என்று கூறலாம். மேலும், ''போலச் செய்தல்'' (Imitation) என்னும் சிறப்பியல்பு மனிதனுக்கே உரித்தானது. பிறவியில் இயற்கையாக அமையாத ஆற்றல்களைப் பார்த்தும் கேட்டும் அறிந்து, கற்றுக் கொண்டு மனிதன் உயர்வதற்கும், மனித சமுதாயத்தின் கல்வி, நாகரிக வளர்ச்சிக்கும் அடிப்படையாக இருப்பது ''போலச் செய்தல்'' என்னும் பண்பே ஆகும்.[2] ஏதாவது ஒன்றைப் ''போலச் செய்யும்'' ஆற்றலிலிருந்தே மனிதன் நாடகக் கலையை உருவாக்கியிருக்க

வேண்டும் என்பது அரிஸ்டாட்டிலின் (Aristotle) கருத்தாகும்.[3] ஆதிமக்கள் இனக் குழுக்களாக இருந்தபோது அவர்களின் பழக்க வழக்கங்களின் பாரம்பரியப் பரிமாற்றமும் நாடகமாக வளர்ந்திருக்க வாய்ப்புள்ளது. பின் வந்த காலங்களில் இதுவே கூத்து என்றாகி அதன் பரிணாம வளர்ச்சியே நாடகம் என்னும் மாபெரும் கலையாக வளர்ச்சி பெற்றது.

## நாடகக் கலை வளர்ச்சி

தொடக்கத்தில் தொன்மங்களே நாடகங்களின் கருவாய் அமைந்திருந்தன. கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலேயே இவ்வகைத் தன்மையிலான நாடகங்கள் கிரேக்க மொழியில் வளர்ச்சி பெற்றன. உரோமானியரின் கிரேக்கப் படையெடுப்பினால், கிரேக்க நாட்டின் நாடக மரபுகள் உரோமாபுரியிலும் வளர்ச்சி பெறத் தொடங்கின. கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டில் கடவுள், சமயச் சிந்தனைகள் கட்டுப் பாட்டில் இருந்த நாடகங்களில் மறுமலர்ச்சிச் சிந்தனைகள் மெல்லத் தலைதூக்க ஆரம்பித்தன. முன்னர் வகுக்கப்பட்ட நாடக இலக்கண மரபுகளை மீறிப் புதிய வடிவில் உருவாக்கம் பெற்ற ஷேக்ஸ்பியரின் (Sheakspeare) நாடகங்கள் பெரும் புகழ்பெற்றன. இவையே உலக நாடக மேடை முன்னேற்றம் பெறக் காரணமாகவும் அமைந்தன.

நாடக வித்தகர்களான ஹோமர் (Homer), வெர்ஜில் (Vergil), காளிதாசர் ஆகியோரால் கிரேக்க மொழியும், இலத்தீன் மொழியும், சமஸ்கிருத மொழியும், பெருமை பெற்றதைப் போல ஷேக்ஸ்பியரால் ஆங்கில மொழி சிறப்புப் பெற்றது என்று அறிஞர்கள் கருதுகின்றனர். பிரான்சின் மோலியே (Moliere), நார்வேயின் ஹென்றிஇப்சன் (Henrik Ibsen), இங்கிலாந்தின் பெர்னார்ட் ஷா (Bernard Shaw) ஆகியோரது நாடகப் படைப்புகள், நாடக உலகின் மறுமலர்ச்சிக்கு மேலும் துணை நின்றன. இப்சனின் மெய்மையியம் (Realism), குறியீட்டியம் (Symbolism) ஆகியவற்றால் உலக நாடக இலக்கியத்தில் இப்சன் ஒரு குறிப்பிடத் தக்க மாறுதலை ஏற்படுத்தினார். இங்கிலாந்தின் நாடக வளர்ச்சி ஜெர்மனியிலும் புத்துணர்ச்சியை ஏற்படுத்தியது. மரபின் அடிப்படையிலேயே அமைந்திருந்த சீன நாடகங்களில், முதல் உலகப் போருக்குப் பின் மேலை நாட்டு நாடகக் கூறுகள்

இடம் பெற்று, விரிவடையலாயின. அவ்வாறே முதல் உலகப் போருக்குப் பின்னர் அமெரிக்காவிலும் மக்கள் நாடகங்கள் பெருகின. வர்க்கப்புரட்சிக்கு முன்பாகவே ரஷ்ய நாடகங்கள் முற்போக்கான கருத்துக்கள் கொண்டிருந்தன. ஆண்டன் செகாவ் (Anton Chekhov) நாடகங்கள் உலகத் தரத்தை எட்டியது போலவே சோவியத்தின் நாடக அமைப்புகளும், அரங்குகளும் நாடக இலக்கியத்திற்கு இலக்கணமாக நின்று உலக நாடக மேடையில் முதலிடம் பெறுகின்றன.[4] பொதுவாகவே உலக மொழிகளின் நாடகங்கள், காலத்தின் போக்கை ஒட்டி மாறி வளர்ந்து, தற்காலத்தில் சமூக நாடகங்களாகவும் (Social Plays) நினைவாற்றலைத் தூண்டும் நாடகங்களாகவும் (Prollem Plays) இயங்குகின்றன என்பது அறிஞர் கருத்து.[5]

## இந்திய நாடக வளர்ச்சி

தமிழ், சமஸ்கிருத மொழிகளில் பண்டைய காலத்திலிருந்தே நாடகங்கள் இயற்றப்பட்டு வந்திருக்கின்றன. இவையே இந்திய நாடக மரபாகக் கருதப்படுகின்றன. கி.மு. நான்காம் நூற்றாண்டு களில் கிரேக்க நாட்டின் நாடகக் கலை இறக்குமதியால் இந்திய நாடகக் கலை வளர்ச்சி பெற்றதாக ஆறு. அழகப்பன் குறிப்பிடு கிறார்.[6] அதற்கும் முன்பே வடமொழியில் நாடக நூல்கள் இருந்திருக்கக் கூடுமென்று நாடகக் கலைக் களஞ்சியம் குறிப்பிடுகின்றது. ஆடலும், பாடலும் மிகுந்திருந்த இந்திய நாடகங்கள் பெரும்பான்மையும் புராண, இதிகாசங்களையே அடிப்படையாகக் கொண்டிருந்தன. பத்து வகைப்பட்ட நாடகமுறைகளும், ஒன்பது சுவைகளும், வடமொழி நாடகச் சிறப்புகள். இவற்றைப் 'பரத நாட்டிய சாஸ்திரம்' தொடங்கிப் பல்வேறு நூல்கள் நாடக இலக்கணத்துடன் விவரிக்கின்றன. காளிதாசரின் 'சாகுந்தலம்', சூத்திரகரின் 'மிருச்சகடிகா' ஆகியவை பெரும் புகழ் பெற்றன. பல மன்னர்களும், தென்னாட்டுப் புலவர்களும் கூட வடமொழி நாடக வளர்ச்சிக்குத் துணை நின்றிருக்கிறார்கள். பல்லவ மன்னன் மகேந்திர வர்மனின் 'மத்த விலாசப் பிரஹஸனம்', விஜய நகர அரசர் கிருஷ்ணதேவராயரின் 'உஷாபரிணயம்' ஆகியவை இவற்றிற்கு எடுத்துக் காட்டுகள். கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் இருந்து வடமொழி நாடகப் படைப்பு மிகவும் குறைந்து காணப்படுகிறது. வடமொழிகள் பல

வழக்கிழந்து போனதாலும், அந்நியர்களின் ஆதிக்கம் பல நூற்றாண்டுகளாக நிலைத்திருந்ததாலும், இந்திய நாடகக்கலை வீழ்ச்சியுற்ற நிலையை அடைந்தது.[7]

**தமிழ் நாடக வளர்ச்சி**

இயல்தமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்று நாடகத்திற்கு ஒரு தனிப்பிரிவையே உள்ளடக்கியது தமிழ்மொழி என அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். இசையும், நாடகமும் இயலுடன் ஒப்பத் தனிப்பகுதியாய் உலகின் எந்த மொழியிலும் சிறப்புறவில்லை என்பர் கா. அப்பாத்துரைப்பிள்ளை.[8] நாடகம் இயல்பாகத் தமிழில் தோன்றிய இலக்கிய வகை என்றும், சமஸ்கிருத நாடகங்களுக்கு முன்பாகவே தமிழ் நாடகங்கள் இருந்தனவென்றும் அறிஞர்கள் கருதுகின்றனர். நாடக வழக்குக் குறித்தும், எண்வகை மெய்ப்பாடுகள் குறித்தும் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. சங்க இலக்கியங்கள் பலவற்றிலும் நாடகத்தை ஒட்டிய அமைப்புகளும், நாடகம் என்ற சொல்லாட்சியும் பல இடங்களில் பயின்று வருகின்றன. உரையாசிரியர்களும் நாடகம், கூத்து என்பனவற்றில் பல விளக்கங்களை அளித்துள்ளனர்.

இசைக்கும், நாடகத்திற்கும் ஏற்றம் கொடுக்கும் ஒரு காப்பியமாகச் சிலப்பதிகாரம் விளங்குகிறது. ஏனைய காப்பியங்களும், புராணங்களும் கூட நாடகம் தொடர்பான செய்திகளைத் தம்மகத்தே கொண்டுள்ளன. சங்ககால மன்னராட்சிக் காலத்தில் நாடகங்கள் நடைபெற்ற செய்திகளைப் பல கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. இதே சமகாலங்களில் நடைபெற்றவையாக இலக்கியங்களிலும் குறிப்பிடப்படும் நாடக இலக்கியங்கள் இன்று கிடைக்காமல் போனதற்கு அவை எழுதா இலக்கியங்களாகவே போற்றப் பட்டிருக்கக்கூடும் என்று கருதப்படுகிறது. அதே நேரம் சமண, பௌத்தர்கள் தமிழின் மீது கொண்ட ஆதிக்கம், நாடகத் தமிழைத் தலையெடுக்க விடாமல் செய்து விட்டது என்றும்,[9] களப்பிரர் காலத்தில் இசைத்தமிழ், நாடகத் தமிழ் நூல்கள் திட்டமிட்டு அழிக்கப்பட்டன என்றும் குறிப்பிடப்படுகிறது .[10] இவை மேலும் ஆய்வுக் குரியன.

தமிழரல்லாதவர்களின் ஆட்சிக்காலம் தமிழகத்தில் பல நூற்றாண்டுகள் நிலைத்திருந்தபோது, தமிழ் நூல்கள் சரிவரப்

போற்றப்படாமல் அழிந்து போன நிலையில், இக்கலையை வடமொழிவாணர்கள் போற்றி வளர்ச்சி பெறச் செய்தனர். பரதம், அகத்தியம், இசை நுணுக்கம், இந்திரகாளியம், குணநூல், செயிற்றியம், சயந்தம், பரத சேனாபத்யம், பஞ்சமரபு, பெருநாரை, பெருங்குருகு, பேரிசை, மதிவாணர் நாடகத்தமிழ், முறுவல் ஆகியவை அழிந்துபோன தமிழ் நாடக இலக்கிய, இலக்கண நூல்களாகக் கருதப்படுகின்றன. பண்டைக் காலத்தில் நாட்டியமும் நாடகமும் ஒரே கலையாகக் கருதப்பட்டன என்றும், அதனால் நாட்டிய நூல்கள் எழுதப்படாத இலக்கியங்களாக அழிந்து போயின என்றும் கருதுகின்றனர்.[11] நாடகமேடைகளைச் சங்கீத வித்துவான்கள் கைப்பற்றிக் கொண்ட காரணத்தினால்தான் நாடகக்கலை நசிந்து போனது என்ற கருத்தைத் திராவிட இயக்கம் கொண்டிருந்தது.[12]

பதினேழாம் நூற்றாண்டின் இறுதியில் தமிழ் நாடகக்கலை ஒரு புதிய வடிவம் பெறத் தொடங்கியது. புலவர்களின் இலக்கியமாக இருந்த தமிழ் நாடகம், நொண்டி நாடகம், பள்ளு, குறவஞ்சி, குளுவநாடகம், தெருக்கூத்து என மக்கள் இலக்கியமாக மாற்றம்பெற்றது. இவ்வடிவங்கள் நெல்லையில் தோற்றம் பெறத் தஞ்சைப் பகுதிகளில் கீர்த்தனை நாடகங்கள் உருப்பெற்றன. ஒரே காலக் கட்டத்தில் தமிழகத்தில் இருவேறு பகுதிகளில் இரண்டு விதமான நாடகப்பாணிகள் தோன்றின என்று முத்துச் சண்முகம் குறிப்பிடுகிறார்.[13]

பத்தொன்பதாம் நூற்றாண்டு தமிழ் நாடக உலகிற்கும் மறுமலர்ச்சிக் காலமாக மலர்ந்தது. ஐரோப்பியர் ஆட்சியும் அவர்தம் கல்விமுறையும் மேலைநாட்டு நாடகக்கலையை இந்தியாவிற்கு இறக்குமதி செய்தன. இக்கல்வியைக் கற்ற அறிஞர்கள் பலர் மேலைநாட்டு நாடக அமைப்பு முறை ஆகியவற்றைப் பின்பற்றித் தமிழிலும் நாடகங்களை உருவாக்கினர். மேலும், மோலியே, இப்சன், ஷேக்ஸ்பியர் போன்றோரது நாடகங்களில் சிலவற்றைத் தமிழில் மொழி பெயர்த்தும் அளித்தனர். பழைய மரபோடு மேலைநாட்டு நாடகவியலின் தாக்கம் சேர்ந்த புதிய நாடகப் பாணியிலான இலக்கண நூல்களும் தோன்றின. பரிதிமாற் கலைஞரின்

நாடகவியலும், விபுலானந்த அடிகளாரின் மதங்க சூளாமணியும் இதற்குச் சான்றுகளாகின்றன.[14]

## இருபதாம் நூற்றாண்டில் தமிழ் நாடகங்கள்

இருபதாம் நூற்றாண்டு, தமிழ் நாடக மேடைகளிலும், மேடை நாடக வடிவங்களிலும் புதிய மறுமலர்ச்சிக் காலமாக அமைந்தது. பழந்தமிழ் நாடகமாகிய தெருக்கூத்திற்குப் புதிய வடிவம் கொடுத்து மேனாட்டுப் பாணிகளோடு இணைத்துப் புதிய நாடக வடிவொன்றைச் சங்கரதாஸ் சுவாமிகள் உருவாக்கினார். தமிழ் நாட்டில் தொழில் முறையான நாடக சபைகள் பலவற்றைத் தோற்றுவித்த பெருமையும் சங்கரதாஸ் சுவாமிகளையே சாரும். தமிழ் நாடகங்களில் பாடல்களைக் குறைத்து, உரையாடலை அதிகப்படுத்தி, அரங்க அமைப்புகளை நவீனப்படுத்தி, குறிப்பிட்ட காலத்திற்குள் நாடகத்தை முடிக்கும் புதிய முறையைத் தம் நாடகமேடைகளில் அறிமுகப்படுத்தியவர் பம்மல் சம்பந்தம் ஆவார். சங்கரதாஸ், பம்மல் சம்பந்தம் ஆகிய இருவருமே தமிழ் நாடக உலகின் முன்னோடிகளாகக் குறிப்பிடப்பட்டாலும், சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகங்கள் பாமர மக்களின் நாடகங்களாக வளர்ச்சிபெற்றன என்றும், பம்மல் சம்பந்தரின் நாடகங்கள் படித்த, இடைத்தர, முதல்தர மக்களுக்குரியனவாகத் திகழ்ந்தன என்றும் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.[15] இந்த வரிசையில் சிவசண்முகம்பிள்ளை, உடுமலை முத்துசாமிக் கவிராயர், மயிலை கந்தசாமி ஆகியோரும் தமிழ் நாடக வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பங்காற்றியவர்கள்.

தமிழ்நாடக வளர்ச்சிக்கு முனைப்பாகப் பங்காற்றிய மேற்குறித்தோர் தவிரவும், இவர்களுக்கு முன் பின் காலங்களில் சான்றோர் பலர் நாடகக் குழுக்களைத் தனித்தனியே அமைத்துத் தமிழ்நாட்டிலும் பிற இடங்களிலும் நாடகங்கள் நடத்தித் தொண்டாற்றியுள்ளனர். கோவிந்தசாமிராவ், திருச்சி கன்னையா, நவாப் டி.எஸ். இராசமாணிக்கம் போன்றோர் நாடகக் குழுக்களை நிறுவி நாடகக் கலை வளர்த்தவர்களுள் குறிப்பிடத் தகுந்தவர்கள். மேலும், தி.க. சண்முகம் சகோதரர்களின் பணி தமிழ்நாடக வளர்ச்சியில் மிகக் குறிப்பிடத் தகுந்ததாகும். அவ்வையார் போன்ற நாடக இலக்கணத்திற்கே கட்டுப்படாத கதையையும்

வெற்றி நாடகமாக்கித் தமிழ் வளர்ச்சிக்கும் இவர்கள் காரணமாக அமைந்தனர்.[16]

## தேசிய இயக்கத் தாக்கம்

ஆங்கில ஆதிக்கத்திற்கெதிரான போராட்ட உணர்வுகள் பதினெட்டாம் நூற்றாண்டிலிருந்தே சிறுகச் சிறுக வளர்ந்து கொண்டிருந்தன. அவ்வுணர்வு, பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் பேரியக்கமாக உருவெடுத்தது. ஆங்கிலேயரால் அளிக்கப்பட்ட உள்நாட்டு, வெளிநாட்டு உயர்கல்வித் திட்டங்கள், இந்திய உயர் கல்வியாளர்களுக்கு ஆதிக்கம், அரசியல், மக்களாட்சிப் பண்புகள் ஆகியவற்றைக் கற்றுத் தந்ததுடன், ஆதிக்கத்திற்கெதிராகப் போராடும் மனப்பான்மையுள்ள அரசியல் தலைவர்களை உருவாக்கவும் வழிவகுத்தன. தேசியத் தலைவர்கள் ஊட்டிய உணர்ச்சியும், விடுதலை வேட்கையும் நாடு முழுவதும் எதிரொலித்தன. அடக்கு முறைகளுக்கு எதிராகப் பொதுமக்களைத் திரட்டும் சிரமமான பணியில், கலை வடிவங்களைப் பயன்படுத்திக் கொள்ளும் போக்கு உலகநாடுகளில் தோன்றிய பல புரட்சிகளிலும் காணப்பட்டது. இந்நிலை, இந்தியாவிலும் நிலவியபோது கலை வடிவங்களான பாடல்களும், கூத்தும், நாடகமும் மக்களைத் திரட்டும் பெரும் ஊடகங்களாய் அமைந்தன.

தேசிய விடுதலைப் போராட்டத்தில், தங்கள் ஒவ்வொருவரின் பங்கும் இருக்க வேண்டும் என்பது பெரும்பான்மையோர் விருப்பமாக இருந்ததால் அந்தந்தத் துறையைச் சார்ந்தவர்களும் அதற்காக அரும்பணியாற்றினர். கலைத்துறையில் விடுதலை உணர்வைப் புகுத்தல் தேசியத் திருத்தொண்டு என்று எண்ணப்பட்டது. புராண, இதிகாசக் கதைகளையே நாடகமாக அளித்து வந்த நிலைமாறி, தேசியச் சிந்தனையுள்ள சமூக நாடகங்கள் மிகுந்தன. நவீனமும், சமூகச் சிந்தனையும் உள்ள இந்தப் போக்குகளால், தமிழ் நாடகமும் பெரு வளர்ச்சியடையக் காரணமாயிற்று.

நாடக சபைகளை நிறுவி, விடுதலை உணர்வையூட்டும் நாடகங்களைத் தமிழில் நடத்தியவர்களில் க. கோபாலாச்சாரி,

தெ.பொ. கிருஷ்ணசாமிப்பாவலர், டி.கே.எஸ். சகோதரர்கள், டி.எஸ். சுந்தரம், கருணாலய பாகவதர், கோவை அய்யாமுத்து, விசுவநாததாஸ், பாஸ்கரதாஸ் ஆகியோர் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்தவர்களாகக் கருதப்படுகின்றனர்.[17]

## திராவிட இயக்கத்தின் பங்களிப்பு

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சென்னை மாகாணத்தில் நிலவிய அரசியல் சூழல், திராவிட இயக்கம் தோன்றுவதற்கான தேவையை ஏற்படுத்தியது. மூட நம்பிக்கையை ஒழிக்க முனையும் ஒரு பகுத்தறிவு இயக்கமாகத் தோற்றுவிக்கப்பட்ட சுயமரியாதை இயக்கம், நாளடைவில் வரலாற்றடிப்படையில் தமிழனின் தொன்மையான இனம், மொழி, கலை, நாகரிகம், பண்பாடு போன்றவற்றில் தமிழர்கள் பெற்றிருந்த உயர்வான நிலையைத் தமிழர்களிடையே எடுத்துக் கூறி, மீண்டும் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட வைக்கும் பொறுப்பைத் தன்னிச்சையாக ஏற்றுக் கொண்டிருந்தது. வைதீகத்திலும், மூடச் சடங்குகளிலும் தமிழ்ச் சமுதாயம் ஆழ்ந்திருப்பதாகக் கூறி அவற்றிற்கு மாற்றாகப் பகுத்தறிவையும், தன்மானத்தையும் பிரச்சாரம் செய்யும் பணியைத் திராவிட இயக்கத்தினர் மேற்கொண்டிருந்தனர். அதனால் அவர்கள் தமிழர்களின் தொன்மையான கலை வடிவங்களையே பயன்படுத்தித் தங்கள் சீர்திருத்தப் பிரச்சாரத்தை எளிமையாக்கிக் கொள்ள முனைந்தனர். தங்களின் பிரச்சாரத்திற்கு இயல், இசை, நாடகம் என்னும் கலை வடிவங்களைப் பயன்படுத்திக் கொள்ளும் அதே நேரம், அக்கலை வடிவங்களில் ஏற்கெனவே உள்நுழைந்திருந்த பழமையையும், புராணங்களையும் தவிர்த்து அக்கலை வடிவங்களையே சீர்திருத்தும் பொறுப்பும் தங்களுக்கிருப்பதாகக் கருதிய திராவிட இயக்கத்தினர், அவ்வாறே தங்கள் கலைப் பணிகளை வடிவமைத்துக் கொண்டனர். சுருங்கக் கூறின், திராவிட இயக்கத்தினரின் சமுதாயச் சீர்திருத்தம் கலை வடிவங்களின் சீர்திருத்தமாகவும் பரவிநின்றது.

> ...மனித சமூகத்திற்கு இன்று உள்ள இழிவுகளுக்கும், குறைபாடுகளுக்கும், மானமற்ற தன்மைக்கும்,

> மதத்தின் பேரால், நீதியின் பேரால், தர்மத்தின் பேரால், அரசின் பேரால் எது எது ஆதாரமாய் இருந்து வருகிறதோ, அதுவேதான் இன்றைய நாடக உலகத்தின் நடிப்புகளுக்கு மூல ஆதரவாய் இருந்து வருகிறது[18]

என்று பெரியார் 1933 ஆம் ஆண்டில் தமிழ் நாடகங்களைப் பற்றிக் கருத்துத் தெரிவித்தார். என்றாலும் நாடகம் முதலான கலைகளை அவர் முற்றாக ஒதுக்கிவிட விரும்பவில்லை. மனித சமுதாயத்தின் நல்வாழ்வுக்கும் முன்னேற்றத்திற்கும், நல்லறிவு பெறுவதற்கும் இலக்கியம், நாடகம் முதலியன தேவை என்றும் பெரியார் கருதினார். அதே நேரம் அப்படிப்பட்ட நாடக உலகம் இதுவரை இருந்தது போல இல்லாமல், மனித சமுதாயத்திற்கு உண்மையில் பயனளிப்பதாகவும், பகுத்தறிவை முன்னிறுத்துவதாகவும், சமத்துவத்தை நிலை நாட்டுவதாகவும் இருக்க வேண்டும் என்றும் பெரியார் குறிப்பிட்டார்.[19]

பெரியாரின் மேற்குறித்த ஆதங்கத்தைத் தீர்த்து வைத்த திராவிட இயக்கப் படைப்பாளிகளுள் முதலிடம் வைத்துக் குறிப்பிடப்பட வேண்டியவர்கள் பாரதிதாசனும், புதுவைச்சிவமும் ஆவார்கள். 1931 ஆம் ஆண்டிலேயே 'சிந்தாமணி' எனும் நாடகத்தைப் பள்ளி மாணவர்களைக் கொண்டு, பள்ளி ஆண்டு விழாவில் நடத்திக் காட்டினார் பாரதிதாசன். 1932 ஆம் ஆண்டில் அவர் எழுதிய 'லதாக்ருகம்' எனும் நாடகம் பலமுறை ஒத்திகை பார்க்கப்பட்டு மேடையேற்றம் காணாமல் போய்விட்டது. இவ்விரண்டு குறு நாடக இயக்கங்களிலும் பங்கு கொண்டவர் புதுவைச்சிவம். இதற்கடுத்து 08.08.1934 அன்று பாரதிதாசனின் முதற்பெரும் நாடகப் படைப்பான 'இரணியன் அல்லது இணையற்ற வீரன்' சென்னை விக்டோரியா மண்டபத்தில் பெரியார் தலைமையில் நடைபெற்றது.[20] இதனைத் தொடர்ந்து சிறியதும் பெரியதுமான கவிதை நாடகம், உரைநடை நாடகங்களைப் பாரதிதாசன் படைத்திருந்தாலும் (மொத்தம் நாற்பத்தேழு) அவரது மேடை நாடகங்களும், அவை மேடையேற்றம் கண்டதும் குறைவாகவே காணப்படுகின்றன.

புதுவைச் சிவத்தின் முதல் நாடகம் 'ரஞ்சித சுந்தரா அல்லது ரகசியச் சுரங்கம்' 1935 ஆம் ஆண்டு இயற்றப்பட்டு 15.08.1936 அன்று மேடையேற்றம் கண்டது. திராவிட இயக்கப் படைப்பாளரால் இயற்றப்பட்டுத் திராவிட இயக்கக் கொள்கைகளில் பெரும்பாலானவற்றை நேரடியாக வலியுறுத்தும் முதல் சமூக நாடகமாக இதைக் கருதலாம். இதன் பின்னர், இந்நாடகம் பலமுறை புதுச்சேரிப் பகுதிகளிலும், புதுச்சேரியை அடுத்த தமிழகப் பகுதிகளிலும் நடைபெற்றது. புதுவைச்சிவம் எழுதி இயக்கிய 'சமூக சேவை' என்னும் நாடகம் 08.02.1941 அன்று புதுச்சேரியில் மேடையேற்றம் கண்டு பின்னர்ப் பலமுறை புதுச்சேரியிலும், தமிழகப் பகுதிகளிலும் நடைபெற்றது. இதற்கடுத்த காலங்களில் புதுவைச்சிவம் இயற்றிய கோகிலராணி, சிதைந்த வாழ்வு, புதிய வாழ்வு, குமரிக்கோட்டம் போன்ற, முழுவதும் திராவிட இயக்கக் கருத்தியல் அமைந்த நாடகங்கள், புதுச்சேரியிலும் தமிழ்நாட்டிலும் பன்முறை நடைபெற்றிருக் கின்றன. இவற்றுள் கோகிலராணி என்னும் நாடகம் இலங்கை, மலேசியா போன்ற நாடுகளிலும் நடத்தப்பட்டிருக்கிறது. புதுவைச்சிவம் இயற்றி இதுவரை கிடைத்திருக்கும் முழுமையான நாடகங்கள் அனைத்துமே மேடை நாடகங்களாகவே அமைந்திருப்பதால் அவை இயக்கத் தோழர்களால் பலமுறை நடிக்கப்பட்டும் இருக்கின்றன.

திராவிட இயக்கத்தில் பெரியாருக்கு அடுத்த நிலையில் இருந்த அண்ணா நாடகக்கலையில் சிறப்பான ஆளுமை பெற்றவராகக் குறிப்பிடப்படுகிறார். அவருடைய நாடகங்கள் சீர்திருத்த இயக்கக் கலைப் படைப்புகளின் சிகரம் என்று குறிப்பிடும் அளவில் தமிழகத்தில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தின. அவருடைய முதல் நாடகமான 'சந்திரோதயம்' 23.04.1943 அன்று நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து 'சிவாஜி கண்ட இந்து ராஜ்யம் (அல்லது) சந்திரமோகன்', 'நீதிதேவன் மயக்கம்' ஆகிய நாடகங்கள் மேடையேற்றம் கண்டன. அண்ணா சிறந்த நாடகாசிரியராக மட்டுமின்றி, நடிகராகவும் தம் பங்களிப்பைச் செய்துள்ளார். மேற்குறித்த மூன்று நாடகங்களிலும் அண்ணா நடித்து, அதிலும் தம் ஆற்றலை வெளிப்படுத்தினார். 1947 ஆம் ஆண்டில் 'ஓர் இரவு', 'வேலைக்காரி' ஆகிய நாடகங்கள் மக்களின் கருத்தைக் கவர்ந்து பெரும் வெற்றியும் பெற்றன.

'நல்லதம்பி', 'பாவையின் பயணம்', 'சொர்க்கவாசல்', 'காதல் ஜோதி', 'இன்பஒளி', 'கல்சுமந்த கசடர்' ஆகியவை அண்ணாவால் இயற்றப்பட்ட சில நாடகங்கள்.

அண்ணாவின் நாடகங்களை நடிப்பதற்கென்றே 'திராவிட நடிகர் கழகம்' எனும் அமைப்பு 15.12.1943 அன்று காஞ்சிபுரத்தில் தோற்றுவிக்கப்படடது. 'தமிழ் நாடகக் கலையின் வரலாற்றில் மறுமலர்ச்சி என்ற அத்தியாயத்தில் மணங்கமழும் ஏடாய்த் திகழ்பவர் அறிஞர் அண்ணா' என்று ப.நீலகண்டன் கருத்துரைத் திருக்கிறார்.

> இதோ ஒரு பெர்னார்ட் ஷா தமிழ்நாட்டில் இருக்கிறார். இப்சனும் இருக்கிறார். இன்னும் கால்ஸ்வொர்த்தி கூட இருக்கிறார் என்று தோன்றுகிறது. நடிக்கக் கூடிய நாடகத்தை எழுதும் ஆற்றல் மிகவும் அரியது. அந்த ஆற்றல் திரு.அண்ணாதுரையிடம் பூரணமாக அமைந்திருக்கிறது.

என்று கல்கி இரா. கிருஷ்ணமூர்த்தி அண்ணாவையும் அவரது நாடகங்களையும் மதிப்பீடு செய்திருப்பது நோக்கத்தக்கது.[21]

திராவிட இயக்கத்தினரில் முதல்முதலாகத் திரைப்படத் துறையில் கால்பதித்துப் பெரும் புகழ் பெற்று விளங்கிய கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன், நாடகத்திலும் குறிப்பிடத்தக்க சாதனைகளை நிகழ்த்தியுள்ளார். 'நாம் இருவர்', 'பைத்தியக்காரன்', 'ஐம்பதும் அறுபதும்' ஆகிய இவரது நாடகங்கள் மிகப் பிரபலமாயின. வில்லுப்பாட்டு நிகழ்ச்சியையும், 'கிந்தனார்', 'கீலகண்டர்' ஆகிய கதா காலட்சேபங்களையும் நாடகத்தில் சேர்த்து முத்திரை பதித்தார் கலைவாணர். பாய்ஸ் கம்பெனி நாடகக் குழுவில் தம் கலைப்பணியைத் தொடங்கிய கலைவாணர் 'மங்கள பாலகான சபா', 'கிருஷ்ணன் நாடக சபா' ஆகியவற்றின் மூலமாகவும் பல நாடகங்களை நடத்திவந்தார். 'சிரிக்க வைத்து நாட்டைச் செழிக்க வைக்கும் சீர்திருத்தக் கோமாளி' என்று தம்மைத் தாமே 'நல்ல தம்பி' என்னும் ஒரு திரைப்படக் கூத்தில் அறிமுகப்படுத்திக் கொள்ளும் கலைவாணர், நாடகத்துறையிலும் திரைப்படத் துறையிலும் திராவிட இயக்கத்தின் கொள்கைகளை யாவரும் ஏற்கும் வகையில் நயம்பட உரைத்தவராக மதிக்கப்பெறுபவர்.

தமிழ் நாடகங்களில் முத்திரை பதித்த திராவிட இயக்கத்தவரில் மற்றுமோர் சாதனையாளராகக் கலைஞர் மு. கருணாநிதி குறிப்பிடப்படுகிறார். 'நாகைத் திராவிட நடிகர் குழு' என்ற அமைப்பின் மூலம் நாகபட்டினம், கடலூர் ஆகிய தமிழகப் பகுதிகளிலும், புதுச்சேரியிலும் முகாம் அமைத்துப் பல சீர்திருத்த நாடகங்களை இவர் மேடையேற்றினார். இவரது நாடகங்கள் புதுச்சேரி கெப்ளே தியேட்டரில் நடைபெற அனைத்து உதவிகளையும் பாரதிதாசனும், புதுவைச்சிவமும் செய்தனர். 'அம்மையப்பன்', 'தூக்குமேடை', 'நச்சுக்கோப்பை', 'மணிமகுடம்', 'சாந்தா அல்லது பழநியப்பன்' ஆகியவை அவரது படைப்புகளில் சில. சீர்திருத்தக் கருத்துக்களை நாடகங்களிலும் திரைப்படங்களிலும் நயமாகச் சொன்னவர் கலைவாணர் என்றால், அதையே புயலாகப் புகுத்தியவர் மு. கருணாநிதி என மதிக்கப் பெறுகிறார்.

சீர்திருத்தக் கருத்துக்களை நாடக வாயிலாகவும், திரைப்படம் மூலமாகவும் மக்களிடம் கொண்டு சென்ற திராவிடஇயக்கத் தினருள் எம்.ஆர்.ராதாவிற்கு முக்கிய இடமுண்டு. தனி நாடகக் குழுவொன்றை அமைத்துப் பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கைகள் அடங்கிய நாடகங்களை அவர் நடத்திவந்தார். இவர் நடத்திய நாடகங்களுள் 'இரத்தக் கண்ணீர்', 'விமலா அல்லது விதவையின் கண்ணீர்', 'தூக்குமேடை' ஆகியவை மிகவும் பிரபலமடைந்த நாடகங்கள்.

இளமையில் நாடகக் கம்பெனியில் சேர்ந்து பல்வேறு நாடகங்களில் நடித்துப் புகழ்பெற்று, திராவிட இயக்கத்தில் தம்மை இணைத்துக் கொண்டு, அதன் கொள்கைகளை நாடக வழியாகவும், திரைப்பட வழியாகவும் எடுத்துச் சொல்லி, எண்ணற்ற தமிழ் மக்களைத் திராவிட இயக்கம் நோக்கி ஈர்த்தவராகக் கருதப்படுபவர் எம்.ஜி. இராமச்சந்திரன். 'எம்.ஜி.ஆர். நாடக மன்றம்' என்ற பெயரிலான நாடகக் குழு மூலம் இவர் சீர்திருத்தக் கருத்துகளடங்கிய 'இன்பக்கனவு', 'சுமைதாங்கி' போன்ற பல நாடகங்களை நடத்தி வந்தார். நல்லனவற்றைச் சொல்லும் நாடகங்களை நடத்தி, நல்லவரும் வல்லவருமான கதாபாத்திரங்களில் நடித்து வந்ததால் எம்.ஜி.ஆர்.

சொல்லுவதெல்லாம் நல்லனவென்று மக்கள் கருதினர். திராவிட இயக்கக் கருத்துப் பரவலுக்கு இச்சூழ்நிலை பெரிதும் சாதகமாக அமைந்தது. பின்னாள்களில் தமிழகத்தின் முதலமைச்சராக எம்.ஜி.ஆர் ஆனதற்கும் அவர் மீது அமைந்த இந்த நல்லெண்ணமே அடிப்படையாய் அமைந்தது. ஒரு நாடகம் மூலம் தமிழகத்தில் பெரும் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த அண்ணாவால் முடிந்தது என்றால், ஒரு திரைப்படம் மூலம் மக்களைத் தம்பால் கவர்ந்திழுக்க எம்.ஜி.ஆரால் முடிந்தது என்பதும் ஏற்புடையதே.

இலட்சிய நடிகர் என்ற அடைமொழி தாங்கிய எஸ்.எஸ். இராசேந்திரன் திராவிட இயக்கக் கொள்கைப் பரவலுக்காகப் பெரிதும் உழைத்தவராகக் கருதப்படுபவர். 'எஸ்.எஸ். இராசேந்திரன் நாடக மன்றம்' என்ற அமைப்பின் மூலம் தமது துணைவியார் விஜயகுமாரியுடன் இயக்கத்தலைவர்களின் பல நாடகங்களை இவர் நடத்தியிருக்கிறார். இவருடைய சொந்த நாடக மேடையேற்றங்களில் 'புதுவெள்ளம்', 'இரட்டை மனிதன்', 'அரக்கு மாளிகை' ஆகியவை குறிப்பிடத்தக்கன.

இவர்களுடன் 'இரத்தக்கண்ணீர்', 'இராமா(கீமா)யணம்' ஆகிய நாடகங்களை இயற்றிய திருவாரூர் கே. தங்கராசு, 'மின்னொளி', 'தமிழ்வாழத் தலைகொடுத்தான்' ஆகிய நாடகங்களின் ஆசிரியர் சலகண்டபுரம் ப. கண்ணன்; 'காமஞ்சரி' எழுதிய புலவர் குழந்தை; 'இராவணன்', 'எரிமலை' ஆகியவற்றைப் படைத்த ஏ.கே. வேலன்; 'முதல் விசாரணை' ஆசிரியர் தில்லை வில்லாளன்; 'போர்வாள்' படைப்பாளி சி.பி. சிற்றரசு; 'சிறைக்கோட்டம்' இயற்றிய வே. கபிலன்; 'நாளை நமதே' எழுதிய முரசொலிமாறன்; 'விடைகொடு தாயே' இயற்றிய சொர்ணம்; 'சிவகங்கைச் சீமை' படைத்த கவிஞர் கண்ணதாசன்; 'தொடாத வாலிபன்' எழுதிய சுரதா; 'முத்துமண்டபம்' எழுதிய கே.ஜி. இராதாமணாளன்; 'தமிழ்ச்செல்வன்' இயற்றிய கி.ஆ.பெ. விசுவநாதம்; 'வாழ்க்கை வாழ்வதற்கே' எழுதிய ஏ.வி.பி. ஆசைத்தம்பி; 'சந்தனமழை' படைத்த எஸ்.எஸ். தென்னரசு; 'வழிகாட்டி' எழுதிய கோவை செழியன்; 'போராட்டம்' இயற்றிய இரா. செழியன்;

'இருதுருவங்கள்' படைத்த ஏ.எஸ். வேணு; 'நகைச்சுவை நாடகங்கள்' எழுதிய கோவை இளஞ்சேரன் ஆகியோரும் திராவிட இயக்கக் கருத்தியல் அமைந்த நாடகப் படைப்பாளிகளாக விளங்கினர்.

திராவிட இயக்க நாடகங்களுக்கு நடிப்பாலும் பிற வகையினாலும் பங்களிப்பைச் செய்தவர்களாக நடிகர் திலகம் சிவாஜி கணேசன், நடிப்பிசைப்புலவர் கே. ஆர். இராமசாமி, கலைவாணரின் துணைவியார் டி.ஏ. மதுரம், சம்பங்கி, டி.வி. நாராயணசாமி, அண்ணாவோடு இணைந்து நடித்த ஈ.வெ.கி. சம்பத், என்.வி. நடராசன், கே.கே. நீலமேகம், இராமாமிர்தம், மனோரமா, சந்திரகாந்தா, நாகை ஆர்.வி. கோபால் மற்றும் பலர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

## ஆ. புதுச்சேரியில் நாடக வளர்ச்சி

தமிழ்பேசும் நிலப்பகுதிகளில் பெரிய ஆலயங்களும் மடங்களும் கலைகளின் வாழ்விடங்களாக விளங்கின. நாடகத்தின் இன்னொரு மூலவடிவமாயிருந்த நாட்டியக்கலை, பேராலயங்கள் ஆதரித்த கலை வடிவமாக வாழ்ந்திருந்தது. அதே நேரம் சமயத் தொடர்பு கொண்டவையாகவே இருந்த, தெருக்கூத்து போன்ற தமிழ் நாடகக் கலையின் மூலங்கள் நாட்டுப்புறக் கலைகளாக வாழ்ந்திருந்தன.[22] தமிழ்பேசும் நிலப்பகுதியான புதுச்சேரியில் மேற்கூறிய நிலையே காணப்பட்டது. பாகூர் கோயில் மற்றும் வில்லியனூர் திருக்காமிசுவரர் கோயில் ஆகியவற்றில், பழங்காலத்தில் நாட்டியங்கள் நடைபெற்றதற்கான கல்வெட்டுக் குறிப்புகள் காணப்படுகின்றன. பல்லவர்கள் ஆட்சிக் காலத்திலும், பிற்காலச் சோழர் ஆட்சிக்காலத்திலும் புதுச்சேரியில் நாட்டியக் கலை சிறந்து விளங்கியதாக இக்கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன.[23] வேதபுரீசுவரர் கோவிலிலும் இவை நடைபெற்றதாகப் புதுவை வந்த பிரெஞ்சுப்பயணிகள் சிலர் குறிப்பிட்டுள்ளனர்.[24]

### நாடகங்கள்

பன்னிரண்டாம் நூற்றாண்டில் வீராம்பட்டினத்தைச் சேர்ந்த வீரைத் தலைவன் பரசமய கோளரிமாமுனி என்ற புலவர் 'பூம்புலியூர் நாடகம்' எனும் நூலை இயற்றியதாகக் கூறப்படுகிறது. பிரெஞ்சிந்தியக் கவர்னராக இருந்த டியூப்ளே காலத்தில் ஆங்கிலேயரின் தோல்வியைக் குறிக்கும் விழாவில் ஐரோப்பியக் கலைஞர்களைக் கொண்டு ஆடலும், பாடலும் இணைந்த நிகழ்ச்சிகள் நடைபெற்றதாக ஆனந்தரங்கர் நாட்குறிப்பு கூறுகிறது. சீர்காழியைச் சேர்ந்த அருணாசலக் கவிராயர் தமது 'இராமநாடகத்தை' ஆனந்தரங்கப்பிள்ளை சபையின்

முன்னிலையில் அரங்கேற்றினார். 'பிரிட்டானிக்கஸ்' (Britannicus) என்ற தலைப்பிலான தமிழாக்கம் செய்யப்பட்ட நாடகம் ஒன்று சாமிநாதப்பிள்ளை என்பவரால் 1829 ஆம் ஆண்டில் காரைக்காலிலும், 1837 ஆம் ஆண்டில் புதுச்சேரியிலும் நடத்தப்பட்டது.[25]

நாட்டியங்களின் வளர்ச்சியில் பாடலும், உரைநடையும் கலந்த இசை நாடகம் ஒன்று இடைக்காலத்தில் உருவாகி 'வாசகப்பா' எனப் பெயர் பெற்றது. புதுச்சேரியில் இவ்வகை நாடகங்கள் நிறைய நிகழ்த்தப்பட்டன. 'மனுநீதிச் சக்கரவர்த்தியின் வாசகப்பா' என்னும் நூல் சங்கீத சாகித்தியத்தில் வல்லுனரான மாணிக்கப்பிள்ளை என்பவரால் இயற்றப்பட்டுப் புதுச்சேரியில் பதிப்பிக்கப்பட்டது. 'புனிதர் எஸ்தாஷ்' (Sainte Eustache) என்பவரின் வாழ்க்கை வரலாறு 'எஸ்தாக்கியர் வாசகப்பா' எனும் பெயரில் வல்லே தெ விர்வில் (Vallet de Virville) என்பவரால் இயற்றி 1837 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டு, 1845 ஆம் ஆண்டில் மேடையேற்றம் கண்டது.[26] பேச்சுத் தமிழில் 'வாசாப்பு' என அழைக்கப்பட்ட இவ்வாசாப்பு நாடகங்கள் ஒதியன்சாலை மைதானத்தில் (அண்ணாதிடல்) இரவு முழுவதும் நடைபெற்றன.[27]

புதுச்சேரியிலும் அதன் சுற்றுப் பகுதிகளிலும் தெருக்கூத்துக்கள் பிரபலமாக விளங்கின. காமன் பண்டிகை என்ற ஒரு கொண்டாட்டம் பத்தொன்பதாம் நூற்றாண்டில் காணப்பட்டது. அவற்றில் 'எரிந்த கட்சி', 'எரியாத கட்சி' என்று இரு பிரிவினர் பேசிப் பாடி விவாதங்கள் நடத்துவர். இவையும் தெருக்கூத்துக்கள் போலவே இரவு முழுவதும் நடக்கும்.[28]

இந்நிலையில்தான், தமிழ் நாடக வளர்ச்சியின் முன்னோடியாகக் குறிக்கப்பெறும் சங்கரதாஸ் சுவாமிகள் புதுச்சேரி வந்து சேர்ந்தார். 07.09.1867 அன்று தூத்துக்குடியில் பிறந்த சங்கரதாஸ், 1919 ஆம் ஆண்டில் அவருடைய மாணவரான ஆர்மோனியம் ஜெயராம் நாயுடு என்பவரது முயற்சியால் புதுச்சேரி வந்தார். புதுச்சேரியில் சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகங்களுக்கு மிகப்பெரிய வரவேற்பு இருந்தது. அவருடைய 'ஞானசௌந்தரி', 'பாதுகா பட்டாபிஷேகம்', 'லங்காதகனம்', 'சுலோசனா சதி' ஆகிய நாடகங்கள் புதுச்சேரி கெப்ளே தியேட்டரில் நிகழ்த்தப்பட்டு நல்ல வசூலாயின.

சங்கரதாஸ் சுவாமிகள் புதுச்சேரியில் நாடகப் பயிற்சிப் பட்டறைகள் பல நடத்தி மாணவர்களைப் பயிற்றுவித்தார். அவருக்குப் புதுவையில் ஜெயராம் நாயுடு, வயலின் சமுத்திரா நாராயணசாமி, மிருதங்கம் பக்கிரி மற்றும் சிலர் உறுதுணையாக இருந்து வந்தனர். உடல்நிலை சரியில்லாத நேரங்களிலும், மாணவர்களின் நாடக அரங்கேற்றத்திற்குத் தூக்கி வரப்பட்டு மேடையருகில் படுத்துக் கொண்டே ஆலோசனை வழங்கி நாடகக் கலைக்காகவே வாழ்ந்த சங்கரதாஸ் சுவாமிகள் 13.11.1922 அன்று காலமானார். அவருக்குப் புதுச்சேரியில் நினைவு மண்டபம் எழுப்பப்பட்டுத் தற்போது புதுவை அரசால் சுவாமிகளின் நினைவு தினம் நாடக வார விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.[29] புதுச்சேரியில் சங்கரதாஸ் தெரு என்றொரு வீதியும், புதுவைப் பல்கலைக் கழகத்தில் அவருடைய பெயரால் ஒரு நாடகத் துறையும் அமைந்துள்ளன.

1931 ஆம் ஆண்டிலிருந்து நாடகங்கள் இயற்றத் தொடங்கிய பாரதிதாசன் செய்யுள் நாடகம், உரைநடை நாடகம், உரைநடையும் பாடலும் கலந்த நாடகம் எனப் பல்வேறு வகையான நாடகங்களை உருவாக்கினார். அவருடைய நாடகங்கள் பல, தமிழ்நாட்டிலும் புதுச்சேரியிலும் மேடையேற்றம் கண்டன. பாரதிதாசனின் நாடகங்களில் பல, அவராலும், வேறு பதிப்பகங்களினாலும் பதிப்பிக்கப்பெற்றன.

புதுவைச்சிவம் 1935 ஆம் ஆண்டிலிருந்து நாடகங்கள் இயற்ற ஆரம்பித்தார். அவரது முதல் நாடகம் 'ரஞ்சித சுந்தரா (அ) ரகசியச் சுரங்கம்' 1936 ஆம் ஆண்டு மேடையேறியது. இதனைத் தொடர்ந்து அமுதவல்லி (அ) அடிமையின் வீழ்ச்சி, சமூக சேவை, கோகிலராணி, சிதைந்த வாழ்வு, புதிய வாழ்வு, குமரிக்கோட்டம் போன்ற முழு மேடை நாடகங்கள் பல புதுச்சேரியில் மேடையேறின. புதுவைச்சிவத்தின் நாடகங்கள் தமிழகத்தின் பல பகுதிகளிலும் நடைபெற்றுள்ளன. 1946 ஆம் ஆண்டில் அச்சில் வெளிவந்த அவரது கோகிலராணி நாடகம் இலங்கையிலும், மலேசியாவிலும் நடைபெற்றது. 1951 ஆம் ஆண்டில் அச்சில் வெளிவந்த அவரது 'சிதைந்த வாழ்வு' நாடகம் தமிழகத்தின் பல பகுதிகளில் நடத்தப்பட்டது. இவரது எட்டு நாடகங்களும், நான்கு நாடகப் பாட்டுகளும் அடங்கிய தொகுப்பொன்று புதுவை

அரசின் கலை பண்பாட்டுத்துறையால் 2000 ஆவது ஆண்டில் வெளியிடப்பட்டது.

புதுச்சேரியில் பல்லாண்டுக்காலம் வாழ்ந்த கவியோகி சுத்தானந்த பாரதியார் பல நாடகப் படைப்புகளைச் செய்துள்ளார். விக்தோர் உய்கோவின் (Victor Hugo) 'லெ மிஸரபிள்' (Les Miserables) என்னும் நாடகத்தைத் தமிழில் 'ஏழைபடும் பாடு' என்ற பெயரில் அவர் மொழிபெயர்த்தார். பின்னர் இது திரைப்படமாகவும் தயாரிக்கப்பட்டது. மேற்கத்திய நாடக ஆரியர்களான ஷேக்ஸ்பியர் (Shekspeare), மோலியே (Moliere), ரசின் (Racine), கொர்னே (Corneille) ஆகியோரது நாடகங்களைச் சுத்தானந்த பாரதியார் மொழிபெயர்த்துள்ளார். கொர்னேயின் நாடகமொன்றை 'ரோடோகியூன்' (Rodogune) என்ற தலைப்பில் அரவிந்தர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

கொர்னே இயற்றிய 'ஹோராஸ்' (Horace) எனும் நாடகம், 'தியாகமே பெரிது' எனும் தலைப்பில் எம்.எம். உசைன் என்பவரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு மேடையேற்றமும் கண்டது. விக்டர் உய்கோவின் 'ஹெர்னானி' (Hernani), தமிழில் 'சிம்மவர்மன்' எனும் தலைப்பில் டாக்டர் சீனிவாசனால் நடத்தப்பட்டது. மேற்கத்திய இலக்கியப் படைப்பாளர்களான எமிலிஜோலா (Emile Zola), ரோமன் ரோலண்ட் (Romain Rolland), கஸ்தாவ் பிலாபேர் (Gustave Flaubert), மாப்பசான் (Maupassant), அல்போன்ஸ் தொதெ (Alphonse Daudet), பால்ஜாக் (Balzac) போன்றோரின் பல படைப்புகள் தமிழில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன. லாரோஷ் ஃபூக்கோவின் (La Roche Foucauld), 'லெ மாக்சைம்' (Les Maximes), தமிழில் 'ஆளவந்தார்' என மொழி பெயர்க்கப்பட்டது. அல்போன்ஸ் தொதேவின் காவிய நாடக மொன்றைப் புதுவைச்சிவம் 'காதல் முன் கட்டுப்பாடு' என்ற தலைப்பில் குறுங்காவியமாகத் தமிழில் மொழிபெயர்த் திருக்கிறார்.

சீர்திருத்த நாவல் ஒன்று நாடகமாக்கப்பட்டுச் சிறுவர்களைக் கொண்டு புதுவைச் சுயமரியாதை இயக்கத்தினரால் நடத்தப் பட்டிருக்கிறது. 'பாலாமணி (அ) பார்ப்பன விதவை' என்னும் அந்நாடகத்தின் ஆசிரியர் சி. கோ. கோதண்டகிருஷ்ணசாமி. புதுவை முத்தியால் பேட்டையில் 27. 10. 1935 அன்று இரவு ஒன்பதரை மணிக்கு நடைபெற்ற அந்நாடகத்தைப் பற்றிய விமர்சனம் குடியரசு இதழில் வெளிவந்திருக்கிறது.[30]

கவிஞர் வாணிதாசன், 'நிலாமுற்றம்', 'பிறைமதி', 'தங்கையா தாரமா?', 'பிள்ளைப் பெருவிலங்கு' 'ஆன்மெழல்லோ' (மொழி பெயர்ப்பு) ஆகிய நாடகங்களை உருவாக்கி நாடகத்துறை வளர்ச்சிக்குப் பங்காற்றியுள்ளார்.

## நாடகக் குழுக்கள்

புதுச்சேரியில் 1909 ஆம் ஆண்டு கிருஷ்ண கானசபா, 1912 ஆம் ஆண்டு வாசுதேவ கான சபை, 1920 ஆம் ஆண்டு சொசியத்தே ஃபிலாமோனிக் தெ பொந்திசேரி (Societe Philharmonique de Pondichery), 1929 ஆம் ஆண்டு சமரசகான சங்கீத சபை, 1940 ஆம் ஆண்டு செல்வவாணி கான சபா, 1943 இல் மங்கள கான சபா ஆகியவை தொடங்கப்பட்டுப் புதுச்சேரியின் நாடக வளர்ச்சிக்குத் துணைபுரிந்தன. டாக்டர் சீனுவாசன் தொடங்கிய சுவாமி விவேகானந்த நாடக சபா, டாக்டர் சுந்தரேசன் தொடங்கிய வாணி விலாஸ் சபா ஆகியவையும் பல நாடகங்களைப் புதுச்சேரியில் நடத்தின.[31]

பிரெஞ்சிந்தியப் பள்ளிகளில் நாடகம் ஒரு துணைப்பாடமாகக் கற்பிக்கப்பட்டது. ஆசிரியர்கள் பிரெஞ்சு, தமிழ் நாடகங்களைக் கற்பித்ததுடன், மாணவர்களைக் கொண்டு நாடகங்களை நடத்தியும் காட்டினர். பாரதிதாசன், புதுவைச்சிவம், பொன்னம்பலம் ஆகியோர் இதுபோன்று, மாணவர்களைக் கொண்டு பள்ளி விழாக்களில் பல நாடகங்களை நடத்தி உள்ளனர்.

தமிழ் நிலையம் என்ற அமைப்பும், புதுச்சேரி சசிகலா மன்றத்தினரும், சுவாமி விவேகானந்தா நாடக சபாவினரும் பல நாடகங்களைப் புதுவையில் நடத்தினர். சசிகலா மன்றத் தலைவியும், சைசோன் சின்னையாவின் வாரிசுமான திருமதி சின்னாஸ் புதுச்சேரியில் முதன்முதலில் நாட்டியப் பள்ளியைத் தொடங்கியவர். இவரிடம் பயிற்சி பெற்ற தமிழ்ச்செல்வி என்னும் நாட்டியக்கலைஞர் புதுவைச்சிவம், ஆந்திரேமரி ஆகியோர் நாடகங்களில் நடித்துள்ளார். 'இளம் பிறைக்கண்ணி' எனும் நாடகத்தை நங்கையர் நல்வழிச் சங்கம் 1930 ஆம் ஆண்டுகளில் நடத்தியது. புதுச்சேரியில் ராயர் குடும்பத்தினர் நித்தியானந்த மன்றம் என்ற அமைப்பை நிறுவிப் பல நாடகங்களை நடத்தினர்.

விக்டர் ஹ்யூகோ எழுதிய 'எர்னானி' என்ற மொழிபெயர்க்கப்பட்ட பிரெஞ்சு நாடகத்தைப் பிரெஞ்சிந்திய வாலிபர் சங்கம் 1932 ஆம் ஆண்டில் நடத்தியது. இதே நாடகம் பிரெஞ்சு மொழியிலும் நடைபெற்றது. ஓய்வு பெற்ற பிரெஞ்சு ராணுவவீரர் ஆந்திரேமரி, பிரெஞ்சு நாடகாசிரியர் கொர்னே எழுதிய 'லெசீத்' (Le cid) என்ற பிரெஞ்சுத் துன்பியல் நாடகத்தை 'வெற்றி வீரன்' என்ற தலைப்பில் மொழிபெயர்த்து நடத்தியதுடன் தாமும் நடித்தார். இதே பிரெஞ்சு நாடகம் டாக்டர் சீனிவாசனால் 'சத்யாதேவி' எனும் தலைப்பில் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. திருமதி ஹென்றி அம்மையார் என்பவரும் புதுச்சேரியில் பல நாடகங்கள் நடத்தியுள்ளார்.

புதுச்சேரியில் இருந்த பல மன்றங்களும், சிறு நாடகக் குழுக்களும் பல நாடகங்களை இயற்றி மேடையேற்றம் செய்திருக்கின்றன. 1936 ஆம் ஆண்டில் உப்பளம் லா பிளேயாத் என்னும் நாடகக் குழுவினர் அதன் தலைவர் ஜெ. தவியோ முயற்சியில் புதுவைச்சிவத்தின் 'ரஞ்சித சுந்தரா (அ) ரகசியச் சுரங்கம்' உள்ளிட்ட பல நாடகங்களை நடத்தினர்.

புதுச்சேரிக் கல்விக் கழகத்தினர், சில பிரெஞ்சு நாடகங்களை மொழிபெயர்த்துப் புதுச்சேரியிலும், கடலூரிலும் நடத்தினர். 1940 ஆம் ஆண்டுகளில், இரா. தேசிகம் பிள்ளை, புதுவைச்சிவம் போன்றோர் இக்கழகத்தின் மூலம் பல நாடகங்களை நடத்தினர். ரோத்ரு (Rotrou) பிரெஞ்சு மொழியில் இயற்றிய 'வேன்செலாஸ்' (Vincelas) எனும் நாடகத்தைத் தேசிகம் பிள்ளை தமிழில் 'நீதிவர்மன்' என்ற தலைப்பில் மொழிபெயர்த்தார்.[32] இந்நாடக மூலக்கதைக்குப் புதுவைச்சிவம் வசனம், பாடல்கள் எழுதி இயக்கினார். 1941 ஆம் ஆண்டில் உப்பளம் சமூகச் சீர்திருத்த வாலிபர்கள் புதுவைச்சிவம் இயற்றிய 'சமூக சேவை' போன்ற பல சீர்திருத்த நாடகங்களை நடத்தினர்.

சென்னை மாகாணத்தில் புகழ் பெற்றிருந்த மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனிக் குழுவினரும், நவாப் டி.எஸ். இராஜமாணிக்கம் பிள்ளையின் 'மதுரை தேவிபால வினோத சங்கீத சபாக்' குழுவினரும் புதுச்சேரியில் முகாமிட்டுப் பல நாடகங்களை நடத்தினர். இவற்றில் பி.எஸ். கோவிந்தன், சி.எஸ். ஜெயராமன், வி.ஏ. செல்லப்பா, எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி, எம்.கே. தியாகராஜ பாகவதர் போன்ற

அன்றைய பிரபல நடிகர்கள் நடித்தனர். கதராடை மதுரை எம்.ஜி. பைரவசுந்தரம் பிள்ளைக் குழுவினரும் புதுவையில் நாடகங்களை நடத்தினர். மேலும் டி.கே. எஸ். சகோதரர்கள் நாடகக்குழு, கே.பி. கேசவன் பங்கு கொண்ட ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனி, எம்.ஆர்.ராதா நாடகக்குழு, சக்தி நாடக சபா போன்றவையும் புதுச்சேரியில் நாடகங்களை நடத்தியுள்ளன. இவற்றில் பி.யு.சின்னப்பா, என்.எஸ்.கிருஷ்ணன், பி.எஸ்.பாலையா, சகஸ்ரநாமம், கே. ஆர். ராமசாமி, எம்.ஜி.ஆர்., எஸ்.எஸ்.ஆர்., தி.க. சண்முகம் போன்ற பல பிரபல நடிகர்கள் நடித்தனர்.

திராவிடர் கழகத்தினர், நாடகங்களின் மூலம் இயக்கக் கொள்கைகளைப் பரப்புவதற்கென்றே தனி அமைப்புகளையும் தோற்றுவித்தனர். 'திராவிடர் நடிகர் கழகம்' என்று அவை பெயர் பெற்றன. காஞ்சி திராவிடர் நடிகர் கழகத்தில் அண்ணா இணைந்து பல நாடகங்களை நடத்தி வந்தார். திராவிட இயக்கத்தினர் பல ஊர்களிலும் இவை போன்ற அமைப்புகளை நிறுவி வேறு பல ஊர்களுக்கும் சென்று நாடகங்களை நடத்தி வந்தனர். நாகபட்டினத்தில் ஆர்.வி.கோபால் என்பவரால் ஆரம்பிக்கப் பட்ட 'நாகை திராவிடர் நடிகர் கழகம்' 1945 ஆம் ஆண்டில் புதுவையில் சில காலம் தங்கி நாடகங்களை நடத்தி வந்தது. இதில் திருவாரூர் மு. கருணாநிதியும் இணைந்து நாடகங்களில் நடித்தும், நடத்திக் கொண்டும் இருந்தார். அவரது 'சாந்தா (அ) பழனியப்பன்' போன்ற நாடகங்களும், மேலும் பல சீர்திருத்த நாடகங்களும் புதுவையில் நடைபெற்றன. இந் நடிகர் கழகத்திற்குப் புதுவையில் தேவையான உதவிகளைப் பாரதிதாசனும், புதுவைச்சிவமும் செய்து, புதுச்சேரி நேருவீதியில் இருந்த கெப்ளே தியேட்டரில் இந் நாடகங்கள் நடைபெற ஏற்பாடு செய்து கொடுத்தனர். அப்போது நடைபெற்ற சீர்திருத்த நாடகத் தொடக்க விழாவின் போது புதுவைச் சுயமரியாதை இயக்கத்தினரால் வரவேற்பு ஒன்றும் வாசித்தளிக்கப்பட்டது. பாரதிதாசன், சிவப்பிரகாசம் ஆகியோர் தலைமையில் பல நாடகங்கள் இங்குத் தொடர்ந்து நடைபெற்று வந்தன. இதில் புதுவைச்சிவத்தின் நாடகங்களும் நடைபெற்றன.[33]

வள்ளுவர் நாடக மன்றம் 1947 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, 1950 ஆம் ஆண்டில் 'குப்பையில் மாணிக்கம் (அ) தமிழர்

படும்பாடு', 1951 ஆம் ஆண்டில் 'கை கூடாக் காதல்' ஆகிய நாடகங்களை நடத்தியது. இந்நாடகங்களின் கதை - வசனம்-பாடல்களைத் தமிழ்த் தொண்டன் எழுதியுள்ளார். இதே அமைப்பினர் பின்னாள்களில் 'பழமையின் பயங்கரம்', 'நான் யார்', 'அன்புமலர்' போன்ற நாடகங்களை நடத்தினர். மாலை ஆறு மணி முதல் இரவு பத்து மணி வரை என்று முதன் முதலாக நாடக நேரம் வரையறுக்கப்பட்டு நாடகங்களை நடத்தியதாக இந்நாடகங்களில் நடித்த கூ.முருகன் குறிப்பிடுகிறார்.[34] வள்ளுவர் தமிழ் நூற்கழகத்தின் ஒரு பிரிவாகச் செயல்பட்ட வள்ளுவர் நாடகமன்றம் மேடையேற்றிய நாடகங்கள் அனைத்துமே சீர்திருத்த நாடகங்களாகும். புதுவைத் தமிழர் முன்னேற்ற நாடக மன்றம் 1953 ஆம் ஆண்டில் புதுவைச்சிவத்தின் 'சிதைந்த வாழ்வு' நாடகத்தை நடத்தியது.

வித்துவான் மனோரஞ்சரி சபா ஜெயராம் நாயுடுவின் முயற்சியில் பல நாடகங்களை நடத்தியது. கவியோகி சுத்தானந்த பாரதியார் 'நாடகாலயம்' என்ற அமைப்பை உருவாக்கிப் பல நடிகர்கள் உருவாகக் காரணமாக அமைந்தார். புதுவைப் பொதுப்பணி நாடக மன்றம், தஞ்சை பைன் ஆர்ட்ஸ், கந்தன் கலை மன்றம், வாணி இளைஞர் மன்றம், ஆதவன் பைன் ஆர்ட்ஸ், கலை இலக்கியப் பெருமன்றம், செஞ்சுடர் கலாமன்றம், செங்கதிர் கலைக்குழு, சங்கீத நாடக சங்கம், முற்போக்கு எழுத்தாளர் சங்கம், ஆசிரியர் கலைக்குழு மேலும் பல சங்கங்கள் புதுச்சேரியில் நாடகக் கலை வளர்ச்சியில் பங்கு பெற்று வருகின்றன. 1966 ஆம் ஆண்டில் புதுச்சேரியில் தொடங்கப் பட்ட அகில இந்திய வானொலி நிலையம், வானொலி நாடகங்கள் புதுச்சேரியில் பல்கிப் பெருகக் காரணமாய் அமைந்தது.[35]

## நாடக அரங்கங்கள்

தமிழிலக்கியத்தில், குறிப்பாகச் சிலப்பதிகாரத்தில்தான் நாடக அரங்க அமைப்புப் பற்றி விளக்கப்பட்டிருக்கிறது. அன்றைய நாடக அரங்கின் நீளம், அகலம், உயரம், வாயில் அமைப்புகள், அவை, அரங்கம் குறித்த தகவல்கள், ஒலி, ஒளி அமைப்புப் போன்ற நுண்ணிய தகவல்கள் கூடச் சிலப்பதிகாரம் வாயிலாகத் தெரியவருகின்றன. ஐரோப்பியர் வருகைக்குப்

பின்னர் நாடகம், வளர்ச்சி பெற்ற காலங்களில், கீற்றுக் கொட்டகைகளும், தகரம் வேய்ந்த கொட்டகைகளுமே நாடக அரங்கங்களாக அமைந்தன.

புதுச்சேரியில் மிகப் பழமையானதாகக் குறிப்பிடப்படுவது அக்கால டியூப்ளே வீதியில் (இன்றைய நேருவீதி) அமைக்கப் பட்டிருந்த கெப்ளே தியேட்டர்தான். மேயராக இருந்து பிரெஞ்சிந்திய அரசியலில் இருபது ஆண்டுகளுக்குக் கோலோச்சிய கெப்ளே குடும்பத்தினரின் பெயரில் அக்கொட்டகை வழங்கப் பட்டது. இன்றைய முத்து சில்க்ஹவுஸ் என்னும் துணிக்கடை அமைந்துள்ள இடமே அன்றைய கெப்ளே தியேட்டர் எனப்பட்டது.

ஒதியன்சாலை தகரக் கொட்டகை என்பது புதுச்சேரியில் நாடகங்கள் நடைபெற்ற மற்றுமொரு இடம். இது 1920 ஆம் ஆண்டுகளின் இறுதியில் ஆரம்பிக்கப் பட்டது. முதலில் துணிக் கொட்டகையாக (டென்ட்) இருந்தது. அப்போது அங்குப் பேசாத படங்கள் திரையிடப்பட்டன. பின்னர்ப் பேசும் படங்கள் வந்தபோது (1930) தகரக் கொட்டகையாக மாறியது. இங்குப் பொதுக் கூட்டங்களும் நாடகங்களும் நடைபெற்றிருக்கின்றன. இவ்விடமே இன்று கம்பன் கலை அரங்கம் என்னும் அரங்கமாகக் காட்சி தருகிறது.

மற்றுமொரு அரங்கம் இன்றைய பாரதிதாசன் அரசினர் மகளிர் கல்லூரி இருக்குமிடத்தில் 1940 ஆம் ஆண்டுகளில் இருந்தது. கீத்துக் கொட்டகை என்றே அழைக்கப்பட்ட இவ்வரங்கத்தில் திரைப் படங்களும், நாடகங்களும் நடைபெற்றிருக்கின்றன.

இவையேயன்றி வெட்ட வெளி மைதானம், நாற்சந்தி, முச்சந்தி, சாலையோரம், இடவசதியுள்ள இடம் இங்கெல்லாம் கீற்றுக் கொட்டகை போட்டு மேடை அமைத்தும் திறந்த வெளி நாடகமாகவும் பலர் நாடகங்களை நடத்தியுள்ளனர். புதுவை வடபாரிசம் சாராய ஆலைக் கெதிரில் மின்சார விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கும் கொட்டகையில் 15.08.1936 அன்று புதுவைச்சிவம் இயற்றிய ரஞ்சித சுந்தரா (அ) ரகசியச் சுரங்கம் எனும் நாடகம் நடைபெற்றதாக ஒரு பழைய துண்டறிக்கை தெரிவிக்கிறது.

**பொதுநல நிதிக்கான நாடகங்கள்**

புதுச்சேரியில் பல நாடகங்கள் நடத்தப்பட்டு அவற்றின் மூலம் வசூலான நிதி பொது நன்மைக்காகப் பயன்படுத்தப்பட்ட செய்திகளும் கிடைத்துள்ளன. முத்தியால் பேட்டை சாலடித் தெருவில் 14.11.1931 அன்று 'சாஸ விஜயர்' எனும் சீர்திருத்த நாடகம் நடைபெற்றது. பெண்கல்வி, மக்களின் உயர்நிலை, இவற்றை அடிப்படையாகக் கொண்டு அந்நாடகம் அமைக்கப் பட்டிருந்ததாகவும், நாடகத்தின் வருவாய் பொது நலத்திற்கு உபயோகப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்ட தாகவும் புதுவை முரசு தெரிவிக்கிறது.[36] உப்பளத்தில், 'கிராண் சீன் ரெக்ரியேடிவ்' (Grande Sceane Recreative) என்னும் அமைப்பின் கட்டட நிதிக்காகவும், 'எத்துவால் துய் மத்தேன்' (Etoile du matin) என்னும் பாடசாலைக்காகவும் புதுவைச்சிவத்தின் 'சமூகசேவை' என்னும் நாடகம் பலமுறை நடத்தப் பட்டிருக்கிறது.[37]

1912ஆம் ஆண்டுக் காலவாக்கில் துவக்கப்பட்டு, 1926 ஆம் ஆண்டில் பதியப்பெற்ற 'கல்விக் கழகம்' என்னும் அமைப்பின் நிதிக்காகப் பல நாடகங்கள் நடத்தப்பட்டன. இரா.தேசிகம்பிள்ளை பிரெஞ்சிலிருந்து மொழிபெயர்த்த 'நீதிவர்மன்' நாடகத்திற்கு வசனமும் பாடல்களும் எழுதிப் புதுவைச்சிவம் இயக்கினார். இந்நிதி கல்விக் கழகத்தின் மூலம் நடத்தப்பட்ட இலவசத் தமிழ் வகுப்புகளுக்காகவும், மாணவர்களுக்குப் பரிசளிக்கவும் பயன்படுத்திக் கொள்ளப்பட்டது.[38]

## இ. புதுவைச்சிவம் நாடகங்கள்

**நாடக எண்ணிக்கை**

சீர்திருத்த இயக்கத்தின் பொறுப்பாளராகவும், அவ்வியக்கக் கவிஞராகவும், எழுத்தாளராகவும், விளங்கிய புதுவைச்சிவம், தமிழின் மற்றொரு இயலான நாடகத் துறையிலும் தம் முத்திரையைப் பதித்து அக்கலையையும் தமது பிரச்சார உத்திக்குப் பயன்படுத்தியிருக்கிறார். உலக விஷயங்களைத் தமக்கு உணர்த்தி வரும் ஆசிரியராகப் பெரியாரையும், தீந்தமிழில் யாப்புப் பயிற்றுவித்த பாரதிதாசனை மற்றொரு ஆசிரியராகவும் புதுவைச்சிவம் குறிப்பிட்டுள்ளார்.[39] இவ்வடிப்படையில் பாரதி தாசனைப்போலவே பல நாடகங்கள் இயற்றிய புதுவைச்சிவம், அவை அனைத்தையுமே சுயமரியாதை இயக்கக் கொள்கை விளக்கமாக அமைப்பதில் கவனம் செலுத்தியிருக்கிறார். அதே நேரம் நாடக இலக்கணத்தையும் கற்று, அதிலும் கவனம் செலுத்தித் தமது நாடகங்கள் முழு நாடகத் தன்மையோடு விளங்கவும் முயன்றிருக்கிறார். சுயமரியாதை இயக்கத்தின் ஆரம்பக் காலக் கட்டத்தில் மக்கள் விரும்பிப் பார்க்கின்ற அளவில் இயக்கக் கொள்கைகளை நேரடியாகவும், மறைமுகமாகவும் நாடகங் களினூடே இழையோடச் செய்திருக்கிறார்.

புதுவைச்சிவம் இயற்றித் தற்போது கிடைத்திருக்கின்ற மொத்த நாடகங்கள் பதினெட்டு ஆகும். அவை தமிழரின் வீழ்ச்சி(அ) இராமாயண சாரம், ரஞ்சித சுந்தரா (அ) ரகசியச் சுரங்கம், அமுதவல்லி(அ) அடிமையின் வீழ்ச்சி, கோவலன் - கண்ணகி, வீரத்தாய், தமிழச்சியின் தேச பக்தி, கோகிலராணி, சமூக சேவை, காந்திமதி (அ) கல்வியின் மேன்மை, வீரநந்தன், மூன்று பெண்கள், புதிய வாழ்வு, சிதைந்த வாழ்வு, நிலம் யாருக்குச் சொந்தம், ஆகியன. இவை தவிர, 'ஒவ்வாமணம்', 'மோட்சப்பித்து', 'கைகூடாக்காதல்' ஆகிய செய்யுள்

நாடகங்களையும், 'காதல் முன் கட்டுப்பாடு' என்னுமோர் மொழிபெயர்ப்பு நாடகத்தையும் புதுவைச்சிவம் இயற்றியுள்ளார்.

அச்சிலும், கையெழுத்துப் படியாகவும் கிடைத்திருக்கின்ற மேற்குறிப்பிட்ட நாடகங்கள் தவிர இன்னும் பல நாடகங்களைப் புதுவைச்சிவம் இயற்றியுள்ளார் என்பது அவற்றில் நடித்தவர்களின் நினைவலைகளில் இருந்து அறிய முடிகிறது. இவற்றுள் குமரிக் கோட்டம் என்னும் நாடகத்தில் கதை நாயகனாக நடித்த திரு. எழிலன், கதைநாயகி திருமதி தமிழ்ச்செல்வி ஆகியோரின் மூலம் குமரிக் கோட்டம் நாடகத்தைப் புதுவைச்சிவம் இயற்றி, இயக்கி, மேடையேற்றமும் நடந்ததாக அறிய முடிகிறது. பூங்கொடி, நீதிவர்மன் ஆகிய இரு நாடகங்கள் குறித்துஅவற்றில் நடித்த திரு. தணிகாசலம் என்பவர் குறிப்பிட்டுள்ளார். இவற்றுள் நீதிவர்மன் என்னும் நாடகம், இரா.தேசிகம்பிள்ளை பிரெஞ்சு மொழியிலிருந்து மொழிபெயர்த்தது என்றும், 'வேன்செலாஸ்' என்னும் அந்நாடக மூலக்கதைக்கு வசனமும் பாடல்களும் எழுதியவர் புதுவைச்சிவம் என்றும் தெரியவருகிறது.[40] இவை தவிர, 'தேயிலைத் தோட்டத் தீமை அல்லது புத்தி கற்பித்த இராமாயி' என்னும் விகட நாடகமொன்றையும் புதுவைச்சிவம் இயற்றி, மேடையேற்றியதாக நாடகத் துண்டறிக்கையின் மூலம் தெரியவருகிறது. இப்படி பல நாடகங்கள் குறிப்பிடப் பட்டாலும் முன்பத்தியில் குறிப்பிடப்பட்ட அச்சிலும் கையெழுத்துப் படியாகவும் கிடைத்த பதினெட்டு நாடகங்கள் மட்டுமே இங்கு எடுத்தாளப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட பதினெட்டு நாடகங்களுள் கோகிலராணி, சிதைந்த வாழ்வு ஆகிய இருநாடகங்களும் அச்சில் வெளிவந் துள்ளன. ரஞ்சித சுந்தரா(அ) ரகசியச் சுரங்கம், அமுதவல்லி(அ) அடிமையின் வீழ்ச்சி, வீரத்தாய், தமிழச்சியின் தேச பக்தி, புதிய வாழ்வு ஆகிய ஐந்து நாடகங்கள் முழுமையாகவும் கையெழுத்துப் பிரதியாகவும் கிடைத்துள்ளன. சமூக சேவை நாடகம் நடைபெற்றபோது, அதனுடைய பாடல்கள் மட்டும் அச்சடித்து விற்பனை செய்யப்பட்டுள்ளன. அப்பாடல் நூலில் உள்ள கதைச்

சுருக்கம் மூலம் சமூக சேவை நாடகக் கதை கிடைத்துள்ளது. வீரநந்தன், தமிழரின் வீழ்ச்சி (அ) இராமாயண சாரம் ஆகியவை நாடகக் காட்சி பிரித்து எழுதப் பட்ட மூலக்கதையாகவும், கையெழுத்துப் படியாகவும் கிடைத்துள்ளன. காந்திமதி (அ) கல்வியின் மேன்மை, மூன்று பெண்கள் ஆகிய இரு நாடகங்களும் காட்சி பிரித்து எழுதப்பட்ட மூலக்கதையாகவும், ஒரு சில காட்சிகள் எழுதப்பட்ட கையெழுத்துப் படியாகவும் கிடைத்துள்ளன. காட்சி அமைப்பில் எழுதப்பட்ட நாடகமாகக், கையெழுத்துப்படியின் சில பக்கங்கள் மட்டுமே கிடைத்துள்ள தலைப்பிடப்படாத நாடகம் கோவலன் - கண்ணகி (இந்நாடகக் கதையைக் கருதி இதன் தலைப்பு இவ்வாய்வாளரால் குறிக்கப்படுகிறது), நிலம் யாருக்குச் சொந்தம் எனும் நாடகம் 1970 ஆம் ஆண்டில், புதுவைச்சிவம் சிறப்பாசிரியராக இருந்து செயல்பட்டதும், புதுச்சேரியில் இருந்து வெளிவந்ததும் ஆன 'போர்வாள்' என்னும் இதழில் வெளிவந்திருக்கிறது. புதுவைச் சிவம் இயற்றிய செய்யுள் நாடகங்களுள் 'ஒவ்வாமணம்', 'மோட்சப்பித்து' அகிய இரண்டும் பாரதிதாசனை ஆசிரியராகக் கொண்டு 1935ஆம் ஆண்டில் வெளிவந்த 'ஸ்ரீ சுப்ரமணிய பாரதி கவிதா மண்டலம்' இதழில் வெளிவந்தவை. மற்றொரு செய்யுள் நாடகமான 'கைகூடாக் காதல்' கையெழுத்துப் பிரதியாகக் கிடைத்துள்ளது. புதுவைச்சிவத்தின் மொழிபெயர்ப்பு நாடகமான 'காதல் முன் கட்டுப்பாடு' நாடகம் கையெழுத்துப் பிரதியாகக் கிடைத்துள்ளது.

இச்செய்திகளை வைத்துப் புதுவைச்சிவம் இயற்றி இதுவரை கிடைத்துள்ள நாடகங்களைப் பின்வருமாறு அட்டவணைப் படுத்தலாம்.

| வ. எண். | நாடக வகை | எண்ணிக் | நாடகத் தலைப்புகள் | ஆண்டு |
|---|---|---|---|---|
| 1. | நூல்களாக வெளிவந்தவை | 2 | அ. கோகிலராணி<br>ஆ. சிதைந்த வாழ்வு | 1939<br>1951 |
| 2. | இதழ்களில் வெளிவந்தவை | 3 | அ. நிலம் யாருக்குச் சொந்தம்<br>ஆ. ஒவ்வாமணம்<br>இ. மோட்சப்பித்து | 1970<br>1935<br>1935 |
| 3. | நாடகப் பாடல் வெளியீடு மூலம் கதைச் சுருக்கமாகக் கிடைத்தவை | 1 | அ. சமூக சேவை | 1941 |
| 4. | கையெழுத்துப் பிரதியாகக் கிடைத்த முழுமையான நாடகங்கள் | 5 | அ. ரஞ்சித சுந்தரா (அ) ரகசிய சுரங்கம்<br>ஆ. அமுதவல்லி (அ) அடிமையின் வீழ்ச்சி<br>இ. வீரத்தாய்<br>ஈ. தமிழச்சியின் தேச பக்தி<br>உ. புதிய வாழ்வு | 1935<br>1937<br>1938<br>1938<br>1949-55 |
| 5. | கையெழுத்துப் பிரதியாகக் கிடைத்த முழுமையான நாடக மூலக்கதைகள் | 2 | அ. தமிழரின் வீழ்ச்சி (அ) இராமாயண சாரம்<br>ஆ. வீரநந்தன் | 1935<br>1940-45 |
| 6. | ஒரு சில காட்சி அமைப்புகளுடன் கையெழுத்துப் பிரதியாகக் கிடைத்த முழுமையான நாடக மூலக்கதைகள் | 2 | அ. காந்தி மதி (அ) கல்வியின்மேன்மை<br>ஆ. மூன்று பெண்கள் | 1940-45<br>1945-50 |
| 7. | காட்சி அமைப்பு மட்டுமே கிடைத்த கையெழுத்துப் பிரதிகள் | 1 | கோவலன் - கண்ணகி | 1938 |
| 8. | கையெழுத்துப் பிரதியாகக் கிடைத்த செய்யுள் நாடகங்கள் | 1 | கைகூடாக் காதல் | 1950 |
| 9. | கையெழுத்துப் பிரதியாகக் கிடைத்த மொழிபெயர்ப்பு நாடகங்கள் | 1 | காதல் முன் கட்டுப்பாடு | 1940-45 |
| | மொத்தம் | 18 | | |

மேற்குறிப்பிட்ட பதினெட்டு நாடகங்களுள் ரஞ்சித சுந்தரா (அ) ரகசியச் சுரங்கம், அமுதவல்லி (அ) அடிமையின் வீழ்ச்சி, கோகிலராணி, சமூக சேவை, வீரநந்தன், காந்திமதி (அ) கல்வியின் மேன்மை, மூன்று பெண்கள், புதிய வாழ்வு ஆகிய எட்டு நாடகங்கள் புதுவை அரசின் கலைபண்பாட்டுத் துறையினரால் தொகுக்கப் பட்டு 2000 ஆவது ஆண்டில் வெளியிடப்பட்டன.

புதுவைச்சிவம் இயற்றியுள்ள நாடகங்களில் பெரும்பான்மையானவை அனைத்துமே உரைநடை

நாடகங்களாகவே அமைந்திருக் கின்றன. முழுமைபெற்ற நாடக மூலக் கதைகளும், முழுமைபெறாத நாடக மூலக்கதைகளும் கூட உரைநடையில் அமைந்து, காட்சி அமைப்பு வசனம் எழுதப்பட்டதும், எழுதப்பட வேண்டியவை களாகவும் உள்ளன. உரைநடையில் அமைந்துள்ள இந்நாடகங் களுக்குப் பாடல்களும் எழுதப்பட்டுள்ளன. நாடகங்களுக்கு இடையில் தேவையான இடங்களில் பாடல் என்று குறிக்கப்படும் அப்பாடல்கள் பின்னிணைப்பாகவும் எழுதப்பட்டுள்ளன. இவற்றுள் ரஞ்சித சுந்தரா (அ) ரகசியச்சுரங்கம், சமூக சேவை ஆகிய நாடகங்களின் பாடல்கள் அச்சிடப்பட்டு அந்நாடகங்கள் முறையே 1936, 1941 ஆம் ஆண்டுகளில் மேடையேற்றம் நடந்தபோது வெளியிடப்பட்டிருக்கின்றன.

புதுவை அரசின் கலை பண்பாட்டுத்துறை 2000 ஆவது ஆண்டு தொகுத்து வெளியிட்ட புதுவைச்சிவம் நாடகங்கள் நூலில், ரஞ்சித சுந்தரா (அ) ரகசியச் சுரங்கம், அமுதவல்லி (அ) அடிமையின் வீழ்ச்சி, சமூக சேவை, சிதைந்த வாழ்வு ஆகிய நாடகப்பாட்டுகள் நூல் வடிவம் பெற்றுள்ளன.

புதுவைச்சிவம் நாடகங்களை இன்பியல் நாடகங்கள், துன்பியல் நாடகங்கள் என்ற பிரிவிலும் வகைப்படுத்தலாம். ரஞ்சிதசுந்தரா (அ) ரகசியச்சுரங்கம், அமுதவல்லி(அ) அடிமையின் வீழ்ச்சி, சமூக சேவை, கோகிலராணி, புதிய வாழ்வு, மூன்று பெண்கள், காந்திமதி (அ) கல்வியின் மேன்மை, வீரத்தாய், தமிழச்சியின் தேசபக்தி ஆகியவை இன்பியல் முடிவைக் கொண்டுள்ளன.

சிதைந்த வாழ்வு என்னும் நாடகம் மட்டுமே துன்பியல் முடிவைக் கொண்டு அமைகிறது. கோவலன் கண்ணகி ஆறு காட்சிகள் கொண்ட நாடகப் பகுதிகள் மட்டுமே கிடைத்தாலும், அது துன்பியல் முடிவைக் கொண்டு தான் அமையும்.

இவைதவிர வீரநந்தன், தமிழரின் வீழ்ச்சி(அ) இராமயண சாரம் ஆகியவை இன்பியல் முடிவுள்ள புராணங்களாக இருந்தாலும் நந்தன் கொல்லப்படுவதாகவும், இராமாயண சாரத்தின் முடிவில் தமிழரின் வீழ்ச்சி சுட்டப்படுவதால்

இவற்றையும் துன்பியல் நாடகமாக மாற்றவே புதுவைச்சிவம் எண்ணியுள்ளார் என்றும் கொள்ளலாம்.

புதுவைச்சிவம் நாடகங்களில் வீரத்தாய், தமிழச்சியின் தேச பக்தி, சிதைந்த வாழ்வு ஆகியவை மட்டுமே கவிதை நடையிலும் இயற்றப்பட்டுள்ளன. அவற்றுள் சிதைந்த வாழ்வு தவிர ஏனைய இரண்டும் மறக்குடி மகளிர் என்னும் கவிதை நூலில் அச்சாக்கமும் பெற்றிருக்கின்றன. கவிதை வடிவில் முதலில் எழுதப்பட்டுப் பின்னர் நாடகமாக எழுதப்பட்டதா அல்லது நாடகம் முதலாவதாக எழுதப்பட்டதா என்பதைக் கணிக்க முடியவில்லை. ஏனைய நாடகங்களில் பிற உரைநடை நாடகங்களும், மூன்று செய்யுள் நாடகங்களும், ஒரு மொழிபெயர்ப்பு நாடகமும் அடங்குகின்றன.

புதுவைச்சிவத்தின் நாடகங்கள் அனைத்துமே நடிப்பதற்குரிய தன்மைகளோடு இயற்றப்பட்டிருக்கின்றன. காட்சி அமைப்பும், கதை மாந்தர் குறிப்பும், அவரவர் உளக் குறிப்புகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. காட்சிகளோடு கூடிய மூல நாடகக் கதைகளுக்கு வசனம் எழுதப்பட்டிருந்தால் இவ்வகையிலேயே அமைந்திருக்கும் என்று தெளியலாம்.

## நாடக வகைப்பாடு

புதுவைச்சிவம் நாடகங்களைப் பின்வரும் நான்கு வகைப் பிரிவுகளாகப் பிரித்து மேற்செல்லலாம்.

| வ.எண். | வகைகள் | எண்ணிக்கை | நாடகப் பெயர்கள் |
|---|---|---|---|
| 1. | தமிழிலக்கியச் சார்பு நாடகங்கள் | 3 | வீரத்தாய்<br>தமிழச்சியின் தேசபக்தி<br>கோவலன்-கண்ணகி |
| 2. | பழங்கதைகள் ஒரு புதிய பார்வை | 2 | தமிழரின் வீழ்ச்சி (அ)<br>இராமாயண சாரம்,<br>வீரநந்தன் |
| 3. | கற்பனை வரலாற்று நாடகம் | 1 | கோகிலராணி |
| 4. | சமூகச் சீர்திருத்த நாடகங்கள்<br>அ. மேடை நாடகங்கள் | 8 | ரஞ்சித சுந்தரா (அ)<br>ரகசியச் சுரங்கம்,<br>அமுதவல்லி (அ)<br>அடிமையின் வீழ்ச்சி |

| | | | |
|---|---|---|---|
| | | | சமூக சேவை, மூன்று பெண்கள், காந்திமதி (அ) கல்வியின் மேன்மை, புதிய வாழ்வு, சிதைந்த வாழ்வு, நிலம் யாருக்குச் சொந்தம் |
| | ஆ. செய்யுள் நாடகங்கள் | 3 | ஒவ்வாமணம் மோட்சப்பித்து கைகூடாக் காதல் |
| | இ. காப்பிய நாடகம் | 1 | காதல் முன் கட்டுப்பாடு |
| | மொத்தம் | 18 | |

மேற்குறித்த நான்கு வகைப் பிரிவுகளில் அடங்கும் நாடகங்களும் தனித்தனியாகக் கருத்து, கதை, அமைப்பு, சிறப்பு, பதிப்பு ஆகிய நிலைகளில் பின்வரும் பகுதிகளில் ஆய்வுக்கு உட்படுத்தப் பட்டுள்ளன.

### தமிழிலக்கியச் சார்பு நாடகங்கள்

தமிழ் இலக்கியங்களில் இருந்து நாடகக் கதைக் கருவை நேரடியாகப் பெற்றுக் கவிதை அல்லது வசன நாடகமாக இயற்றப்பட்டவற்றைத் தமிழிலக்கியச் சார்பு நாடகங்கள் என வகைப்படுத்தலாம். இவ்வகையில் புதுவைச்சிவம் கோவலன்-கண்ணகி, வீரத்தாய், தமிழச்சியின் தேசபக்தி, என்று மூன்று நாடகங்களை இயற்றியிருக்கிறார். இவ்வகையான நாடகங்களை இயற்றத் தமிழ் இலக்கியங்களில் முறையான தேர்ச்சி அவசியமாகிறது.

சங்க இலக்கியங்களிலும் தமிழ் இலக்கணத்திலும் முறையான பயிற்சி பெற்றவராகப் புதுவைச்சிவம் விளங்கினார். அரசு பள்ளியில் அவர் பத்தாவது வரை தமிழும், பிரெஞ்சும் பயின்றிருக்கிறார். பின்னர்ப் பிரெஞ்சிந்தியக் கல்வி முறையிலான பிரவே (Bravet de language Indegene) என்னும் தேர்வில் தேர்ச்சி

பெற்றிருக்கிறார். ஆசிரியர் வேலைக்கு அடிப்படைத் தகுதியாகக் கருதப்பட்ட இந்தப் பிரவே தேர்வுக்கான பயிற்சி வகுப்புகளைத் தாமே நடத்தி வந்திருக்கிறார். இப்படிப்பட்ட வகுப்புகளைப் பாரதிதாசனுடன் சேர்ந்தும் நடத்தியிருக்கிறார். பாரதிதாசனிடம் தனிப்பட்ட முறையில் தமிழ் இலக்கியம், இலக்கணம் கற்றவராகவும் இருந்திருக்கிறார். 'தமிழ் இலக்கண இலக்கியங் களை எளிய முறையில் நன்கு போதிக்கும் திறன்பெற்ற கவிஞர் அவர்களின் போதனையே எனக்குத் தமிழில் ஓரளவு பயிற்சியை உண்டுபண்ணிற்று' என்று பாரதிதாசனிடம் பயின்றதைப் பற்றிப் புதுவைச் சிவம் குறிப்பிட்டிருக்கிறார்.[41] மேலும், 'தனக்குத் தமிழறிவை வளர்த்தவர்' என்றும், 'சிறப்பாகத் தனக்குத் தீந்தமிழளித்தவர்' என்றும் அவர் பாரதிதாசனைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.[42]

'சிவப்பிரகாசம் முறையே இலக்கணம் இலக்கியம் படித்தவர்' என்று புதுவைச்சிவத்தின் ஆசிரியரான பாவேந்தர் பாரதிதாசன் கூறுகிறார். மேலும், 'சிவப்பிரகாசம் ஆற்றியது கற்றார்க்கே சுலபமல்லாத அரிய தொண்டு என்பது எனக்குத் தெரியும்' என்றும் புதுவைச்சிவத்தின் இலக்கியப் புலமை குறித்துப் பாரதிதாசன் கூறியுள்ளார்.[43] 'தோழர் சிவப்பிரகாசம் புரட்சிக்கவி பாரதிதாசன் அவர்களிடம் முறையாகப் பயின்ற நூற்றுக்கணக்கான மாணவர்களுள் முதலிடம் பெற்றவர்' என்று திருமதி குஞ்சிதம் அம்மையார் குறிப்பிடுகிறார்.[44]

புதுவைச்சிவத்தின் மறக்குடி மகளிர் (1945) நூல் முன்னுரையில் 'சங்க நூல்களையே புரட்டிப் பார்க்காதிருக்குஞ் சிலருக்கும், புரட்டிப் படித்தவர்க்கும் இந்நூல் நல்விருந்தெனத் திகழ்கின்றது' என்று தமிழ்ப்பொழில் ஆசிரியர் வித்துவான் கோ. சி. பெரியசாமிப் புலவரும், 'மறுவறு சிவப்பிரகாச மாக்கவி சிறுவருங் கற்றினிச் சிறப்பினோங்கவே' என்று மறுமலர்ச்சிக் கவிதைகள் (1946) நூல் அணிந்துரையில் புலவர் மே.வி.வேணு கோபாலரும் கூறியிருப்பதும் இவ்விடத்தில் சுட்டத்தகுந்தன. மேலும், தமிழிலக்கியத்தின்பால் புதுவைச் சிவத்திற்கு இருந்த ஈடுபாடு குறித்துக் காஞ்சி கல்யாணசுந்தரம் மறக்குடி மகளிர் நூல் முன்னுரையிலும், ஏ.பி. சனார்த்தனம், இராஜரத்தினம் அம்மை

யார் ஆகியோர் மறுமலர்ச்சிக் கவிதைகள் சிறப்புரையிலும், வ. பொன்னம்பலம் கைம்மை வெறுத்தகாரிகை நூலின் சிறப் புரையிலும் குறிப்பிட்டுள்ளனர்.

புதுவைச் சிவத்தின் காதலும் கற்பும் நூலின் சிறப்புரையில் 'நண்பர் புதுவைச்சிவம் அவர்கள் புரட்சிக் கவிஞர் அவர்களின் சிறந்த மாணவர் என்பதைத் தமிழுலகு அறிந்ததேயாகும். அவர்களின் தமிழறிவு - சங்கநூற்பயிற்சி - எத்துணை அழுத்த மானது என்பதனை இச்சிறுநூல் தெள்ளிதின் வெளிப்படுத்து கின்றது' என்று புலவர் நா.மு.மாணிக்கம் கூறியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.[45] புதுவைச் சிவத்தின் நூல்களைப்பற்றி மதிப்புரை எழுதியுள்ள பல்வேறு இதழ்களும் கூட அவரது தமிழிலக்கிய ஆர்வத்தையும் சங்க நூற்பயிற்சியையும் சிறப்பித்துக் கூறியுள்ளமை ஈண்டு நோக்கத்தக்கது.[46]

இலக்கியங்களில் மிகுந்த ஈடுபாடு உடையவராகவே புதுவைச்சிவம் காணப்படுகிறார். அவரது 'கைம்மை வெறுத்த காரிகை', 'மறக்குடி மகளிர்', 'காதலும் கற்பும்' ஆகிய கவிதை நூல்கள் இலக்கியத்தை எளிமைப்படுத்தித் தரும் முயற்சிகளாகவே அமைந்துள்ளன. மற்றகவிதைத் தொகுதிகளிலும் திருக்குறள் பகுதி என்னும் தனிப்பிரிவையும், திருக்குறளைச் சிறப்பித்துக் கூறும் சில பாடல்களையும், பண்டைத்தமிழரின் இலக்கிய வளத்தைச் சிறப்பித்துக் கூறும் கருத்துக்களையும் காணமுடிகிறது. அவரது கையெழுத்துப் பிரதியிலான நோட்டுப் புத்தகம் ஒன்று தமிழ் இலக்கியங்களிலிருந்து பலவிதமான குறிப்புகளைக் கொண்டு, அவரது இலக்கிய ஈடுபாட்டை விரித்துக் கூறுமுகமாக அமைந்திருக்கின்றது. தமிழிலக்கியங்களில் காணப்படும் குறிப்புகளை அல்லது நிகழ்வுகளைத் தேர்ந்தெடுத்து அவற்றை எளிமையான நாடகமாக்கும் முயற்சியில் ஈடுபட்டும் புதுவைச்சிவம் மூன்று நாடகங்களை இயற்றியிருக்கிறார்.

தமிழிலக்கிய ஈடுபாடு, சங்க நூல்களின் பயிற்சி காரணமாகப் புதுவைச் சிவத்தின் மூன்று நூல்கள் சங்க நூற்பாடல்களின் எளிமை வடிவங்களாக மாறியிருக்கின்றன. 1945 ஆம் ஆண்டில் வெளியான அவரது 'கைம்மை வெறுத்த காரிகை' நூல் புறநானூற்றுச் செய்யுளொன்றின் விளக்கமாக அமைந்திருக்கிறது.

இந்நூலை வெளியிட்ட பூங்கொடிப் பதிப்பகத்தார் இந்நூலை வெளியிட இரண்டு காரணங்களைக் குறிப்பிடுகின்றனர். இதுபோன்ற நூற்களால் பழைய இலக்கியச் செய்யுட்களைச் சிறிது தமிழறிந்தோரும் படித்துணர்ந்து கொள்ள முடியும் என்பது ஒன்று. இரண்டாவது விதவைக் கொடுமையை இந்நாட்டினர் இந்நூலைப் படிப்பதன் மூலம் தொலைக்க முடியும் என்பது.[47] புறநானூறு முதலிய தொகை நூல்களுள் விதவை நிலை குறிக்கும் செய்யுட்கள் சிலவுள என்று கூற வந்த புதுவைச் சிவம், 'கைம்பெண் நிலையை விளக்கிக் காட்டுவதற்காகவே இந்நூலை எழுத முன் வந்தேன்' என்றும் அந்நூலின் முன்னுரையில் குறிப்பிடுகிறார்.

1939 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி தோன்றிய பிறகு தமிழிலக்கியங்களின் கருத்தை மக்களிடம் வளர்க்கப் பலர் வேலை செய்தனர் என்றும், அதில் தாமும் இணைந்து பழைய சங்க இலக்கியச் செய்யுள் கருத்துகளை மக்கள் உணர்ந்து கொள்ள 'மறக்குடி மகளிர்' போன்ற நூல்களை இயற்றியதாகவும் புதுவைச்சிவம் குறிப்பிட்டிருக்கிறார்.[48] இந்நூலில் இடம்பெற்றுள்ள 'படைக்குப் பிந்திய பதரோ என் மகன்', 'சிங்கமனார் வழி வந்த சிங்கமன்றோ என் சிறுவன்' என்ற இரண்டு இயலையும் புதுவைச்சிவம் 'வீரத்தாய்', 'தமிழச்சியின் தேசபக்தி' ஆகிய தலைப்புகளில் நாடகமாக்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்நூல் குறித்த சிறப்புரையில், 'புறநானூற்றிலுள்ள மூன்று செய்யுட்களை விளக்கி அவற்றை எளிய விருத்தப்பாவால் சித்தரிப்பதாகும்: புறநானூறு போன்ற நூல்களிலிருந்து திரட்டப்பட்ட இம்மாதிரி வரலாறுகளைத் தமிழ்ச் சிறுமிகளுக்குப் பாடப் புத்தகமாக வைக்க வேண்டும்' என்று குஞ்சிதம் குருசாமி குறிப்பிடுகிறார். 'தமிழ்ச் சமுதாயத்தின் மானம் மீட்சியடைய இன்றைய பெண்கள் முன்வந்துழைக்க வேண்டும்' என்று கூறும் புதுவைச்சிவம், 'அதற்கு இச்சிறு நூல் ஓர் வழிகாட்டியாக இருக்குமானால் அதுவே இந்நூற் பயனுமாகும்' என்றும் அந்நூல் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

1946 ஆம் ஆண்டில் வெளியான புதுவைச் சிவத்தின் 'காதலும் கற்பும்' நூலும் சங்க இலக்கியத் தொகை நூற்களுள் ஒன்றான கலித்தொகைச் செய்யுளின் விளக்கமேயாகும். 'தமிழர்கள் அறிவுக்கொவ்வாத கற்பு நெறியைக் கைவிட்டுக் காதலின் உயர்வையும் கற்பின் உண்மையையும் உணர்ந்து, வாழ்வில் வளம் பெற்று உயர்வு நிலையடைய வேண்டும்' என்ற எண்ணத்துடன் இந்நூலைப்படைத்ததாகப் புதுவைச்சிவம் அந்நூல் முன்னுரையில் குறிப்பிடுகிறார். 'இலக்கியப் புலவர்களுக்கும் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் நாட்டமுடைய அறிஞர்களுக்கும் இச்சிறு நூல் ஒரு வழி காட்டியென்றே கூறலாம்' என்று இந்நூலின் சிறப்புரையில் புலவர் நா.மு. மாணிக்கம் கூறியிருக்கிறார்.

இங்குக் குறிப்பிடப்பட்ட இம் மூன்று நூல்கள் தவிரப் புதுவைச் சிவத்தின் ஏனைய நூல்களிலும், இசைப்பாடல் நூல்களிலும் சங்க இலக்கியத்தின் தாக்கத்தைப் பல இடங்களில் காண முடிகிறது.

**வீரத்தாய்**

*கருத்து:* தாய்நாட்டைக்காப்பதிலும், போருக்கஞ்சாமல் களம் புகுவதிலும் தமிழரின் வீரத்தையும் பண்பாட்டையும் விளக்கும் வகையிலும், தமிழ்ப் பெண்களின் வீரத்தையும் மானத்தையும் வெளியுலகம் அறியும் வகையிலும் இந்நாடகம், புறநானூற்றுப் பாடலொன்றைத் தழுவி எழுதப்பட்டுள்ளது.

*கதை:* சோழ நாடு அமைதியாக ஆடலிலும், பாடலிலும் திளைத்துக் கொண்டிருக்கிறது. அந்நாட்டின் மீது பல்லவ மன்னன் படையெடுக்கிறான். சோழமன்னனும், சேனாதிபதியும் போர்வீரர்களுடன் முரசம் கொட்டிப் புறப்படுகின்றனர். போர் முடிவு என்னாகுமோ என்று எல்லைப் பகுதியிலிருந்து மக்கள் தவித்துக் கொண்டிருக்கின்றனர். போர்க்களத்தில் தன் மகன் புறமுதுகிட்டான் என்ற ஒரு செய்தி கேட்டுத் துடித்த தமிழ் மூதாட்டியொருத்தி, அது உண்மையானால் அவனுக்குப் பாலூட்டிய மார்பகங்களை அறுத்தெறிவேன் என்று கையில் வாளுடன் போர்க்களம் நோக்கிப் போகிறாள். களத்தில் தன் மகன் வீர மரணம்அடைந்ததை நேரில் கண்டு மகிழ்ந்து மகனையும், நாட்டையும் வாழ்த்துகின்றாள். சோழனின் வெற்றி முரசு முழங்குகிறது.

*அமைப்பு:* இரண்டு பாகங்களைக் கொண்டு இவ் உரைநடை நாடகம் இயற்றப்பட்டிருக்கிறது. நிகழிடம் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. இடையிடையே நிகழ்ச்சிக் குறிப்புகளும் இடம் பெற்றுள்ளன. இருபாகங்களின் தொடக்கத்திலும் கதைமாந்தர் பற்றிய குறிப்பு காணப்பட வில்லையாயினும், நாடகத்தில் ஒருசில கதைமாந்தர் பெயர்களும், அரசன், சேனாபதி, வீரன், தூதுவன், கிழவி என்று பொதுச்சுட்டாகவும் கதை மாந்தர்கள் குறிக்கப்பட்டுள்ளனர்.

*சிறப்பு:* நாடகத்தின் தொடக்கத்திலேயே, புறநானூற்றுச் செய்யுளொன்றைத் தழுவி எழுதியது என்ற குறிப்புடன் பாகம் ஒன்று தொடங்குகிறது. காக்கைப்பாடினியார் நச்செள்ளையார் இயற்றிய புறநானூற்றுப் பாடலின் (பாடல்: 278) விளக்கமாக இந்நாடகம் இயற்றப்பட்டிருக்கிறது. சங்க காலத் தமிழ் மகளிர் வீரமும், தைரியமும், நாட்டுப்பற்றும் வாய்க்கப் பெற்றுத் துணிவுடன் எதனையும் எதிர்கொண்டனர் என்பதனை இக்காலத் தமிழ் மகளிருக்கு விளக்கி எதனைக் கண்டும் அஞ்சும் மகளிர் தங்கள் துணிவையும், வீரத்தையும் மீண்டும் அடைய வேண்டும் என்ற நோக்கில் இந்நாடகம் அமைந்துள்ளது.

இதே புறநானூற்றுப்பாடல் எளிய கவிதை நடையில் 'படைக்குப் பிந்திய பதரோ என் மகன்?' என்ற தலைப்பில் புதுவைச்சிவத்தால் இயற்றப்பட்டு 1945 ஆம் ஆண்டில் வெளியான அவரது 'மறக்குடி மகளிர்' நூலின் ஒரு பகுதியாகக் காணப்படுகிறது. நாடகத்தில் பெயர் குறிக்கப்பெறும் இரண்டு பாத்திரங்களான சண்பகம், கோகிலம் ஆகிய இருவரும் கவிதையில் செண்பகம், வஞ்சி என்று குறிக்கப்பெறுகின்றனர். இக்கவிதை நூல் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின் போது எழுதப்பட்டதாகப் புதுவைச்சிவம் அந்நூல் முன்னுரையில் குறிப்பதால் 1938 ஆம் ஆண்டில் இந்நூல் இயற்றப்பட்டிருக்கலாம் என்றும், நாடகத்தைவிடக் கவிதையின் இறுதிப்பகுதி, நீட்சியாகக் காணப்படுவதால், கவிதையாக்கத்திற்கு முன்னரே இந்நாடகம் இயற்றப்பட்டிருக்கலாம் என்றும் துணியலாம்.

*பதிப்பு:* கவிதையாக்கம் மட்டுமே 1945 ஆம் ஆண்டில் தொழிலாளர் மித்திரன் பதிப்பகத்தால் நூலாக வெளியிடப் பட்டிருக்கிறது. நாடகம் முழுமையாகக் கையெழுத்துப்

பிரதியாகவே உள்ளது. இந்நாடகம் நூலாக்கம் பெறவில்லை. இது இதழ்களில் வெளியானதா என்பதும், மேடையேற்றம் கண்டதா என்பதுமான விவரங்களும் கிடைக்கவில்லை. 2007 ஆம் ஆண்டில் காவ்யா பதிப்பகம் வெளியிட்ட 'புதுவைச் சிவம் படைப்புகள்' தொகுப்பு நூலில், குறு நாடகங்கள் பிரிவில் இந்நாடகம் இடம் பெற்றுள்ளது.

## தமிழச்சியின் தேசபக்தி

*கருத்து:* நாட்டுப்பற்றும், நாட்டு நலனில் அக்கறையும் பெண்கள் கொண்டு, அப்படியான நிகழ்வுகளில் துணிவுடன் பங்கு கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில், சங்ககாலத் தமிழ்ப் பெண்களின் நாட்டுப்பற்றையும், துணிவையும் எடுத்தியம்பு வதாக இந்நாடகம் உருவாக்கப்பட்டுள்ளது. இதுவும் புறநானூற்றுப் பாடல் ஒன்றைத் தழுவி எழுதப்பட்டதே.

*கதை:* பாண்டிய நாட்டின் மீது வேறோர் நாடு படையெடுக்கின்றது. அப்போது மூண்ட போரில் தன் தனயனையும், கணவனையும் இழந்து புலம்புகிறாள் அஞ்சுகம் என்னும் இளம்பெண். அவளைத் தேற்றுகிறாள் அவளது தோழியான சொர்ணம். அப்போது அங்கு வந்த அஞ்சுகத்தின் மகன், தான் போருக்குப் போவதாகச் சொல்கிறான். அவனைத் தாய்க்குத் துணையாக இருக்கச் சொல்லிச் சொர்ணம் கூற, அஞ்சுகமோ புறநானூற்றுப் பாடலைச் சொல்லித் தன் மகனுக்குப் போருடை தரித்து வாளையும் கொடுக்கிறாள். மகன் போருக்குச் செல்ல அவனை வாழ்த்தி வழியனுப்புகிறாள் அஞ்சுகம்.

*அமைப்பு:* இந்நாடகம் முழுவதும் ஒரே காட்சி அமைப்பைக் கொண்டிருக்கிறது. காலம், இடம், போன்ற விவரங்கள் குறிக்கப்படவில்லை. நிகழ்ச்சிக் குறிப்பு மட்டுமே துவக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. கதை மாந்தர் குறிப்பு துவக்கத்தில் இல்லையாயினும் நாடகத்தில் சொர்ணமும், அஞ்சுகமும் பெயர் சுட்டப்பட்டும், அஞ்சுகத்தின் மகன் பெயரிடப்படாமல் மைந்தன் என்று பொதுப்பெயரிலும் குறிக்கப்படுகின்றனர்.

*சிறப்பு:* இந்நாடகத்தின் துவக்கத்திலும், புறநானூற்றுச் செய்யுளைத் தழுவி எழுதியது என்ற குறிப்பு காணப்படுகிறது. பண்டைய மகளிரின் துணிவும், வீரமும் இன்றைய கால மகளிருக்கு இல்லை என்ற திராவிட இயக்கத்தினரின் ஆதங்கமே இந்நாடகம் உருவாகக் காரணம் என்று கொள்ளவே இடமிருக்கிறது. இதைப் பெரியாரின் சொற்பொழிவாலும், திராவிட இயக்க இதழ்களில் வெளிவந்த கட்டுரைகளாலும் உணரலாம். தங்களின் இலட்சியத்திற்குத் தங்களின் பண்டைய மரபிலிருந்தே சான்றுகளை எடுத்துத் தரும் ஆர்வமும், தமிழிலக்கியத்தில் புதுவைச்சிவம் கொண்டிருந்த ஈடுபாடும் இந்நாடக ஆக்கத்திற்குக் காரணமாக அமைந்துள்ளன.

ஒக்கூர் மாசாத்தியார் இயற்றிய புறநானூற்றுப்பாடலின் (பாடல் 279) விளக்கமாக இந்நாடகம் இயற்றப்பட்டுள்ளது. இந்நாடகத்தின் இடையில், சொர்ணத்திற்கு அறிவுரை சொல்லும் அஞ்சுகம், 'ஈன்று புறந்தருதல் என்றலைக்கடனே' என்ற பொன்முடியார் பாடலைக் (புறநானூறு 312) கூறுவதாகவும் அமைக்கப்பட்டுள்ளது. இதே அமைப்பில் இந்நாடகத்தைக் கவிதை வடிவில் குறுங்காவியமாகவும் இயற்றியுள்ளார் புதுவைச்சிவம். 'சிங்கமனார் வழிவந்த சிங்கமன்றோ என்சிறுவன்' என்ற தலைப்பிலான காவியம் 'மறக்குடி மகளிர்' (1945) நூலில் இடம்பெற்றுள்ளது. இந்நூல் இயற்றப்பட்ட காலம் 1938 ஆம் ஆண்டு என முன்னுரையில் குறிக்கப்படுவதால் அதற்கு முன்பாகவே இந்நாடகம் இயற்றப்பட்டிருக்க வேண்டும் என்று கொள்ளலாம்.

*பதிப்பு:* கவிதை நடையிலான குறுங்காவியம் பதிக்கப்பெற்றது போல் உரைநடையிலான நாடகம் நூலாக்கம் பெறவில்லை. முழுமையாகக் கையெழுத்துப் பிரதியாகவே கிடைத்திருக்கின்றது. இதன் மேடையேற்றம், இதழ்களில் வெளியான தகவல் ஏதும் கிடைக்கவில்லை. 2007 ஆம் ஆண்டில் காவ்யா பதிப்பகம் வெளியிட்ட 'புதுவைச் சிவம் படைப்புகள்' தொகுப்பு நூலில், குறு நாடகங்கள் பிரிவில் இந்நாடகம் இடம் பெற்றுள்ளது.

**கோவலன் - கண்ணகி**

*கருத்து:* தமிழிலக்கியங்களில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த புதுவைச்சிவம், புராண, பக்தி இலக்கியங்களிலிருந்து வேறுபட்ட சிலப்பதிகாரக் கதையை, முற்றிலும் பகுத்தறிவு சார்ந்த இலக்கியமாக மக்களுக்கு அறிமுகப்படுத்தும் வகையில் நாடக வடிவில் கொடுக்க மேற்கொண்ட முயற்சியே கோவலன்- கண்ணகி என்னும் இந்நாடகம் என்று கூறலாம்.

*கதை:* கோவலனுக்குப் பெண்பார்த்துவிட்டுத் திரும்பிய மாசாத்துவான், கண்ணகியின் நற்குணங்களைப் பற்றித் தன் மனைவியான பெருமனைக் கிழத்தியிடம் புகழ்கிறான். அவளும் மகிழ்ந்து, விரைவில் நாள் குறித்துத் திருமணத்தை முடிக்க முடிவு செய்கின்றனர். அதன்படியே கோவலன் கண்ணகி திருமணம் மிகச் சிறப்பாக நடந்தேறுகிறது. கோவலன் தனிமையில் கண்ணகியைப் புகழ்கிறான். கரிகாற் பெருவளத்தானின் அரசவையில் மாதவியின் அவை அரங்கேற்றத்திற்கு மன்னன் உத்தரவளிக்க மாதவியின் நடன அரங்கேற்றம் நடைபெறுகிறது. மன்னன் மாதவியைப் புகழ்ந்து ஆயிரத்தெட்டுக் கழஞ்சு பொன்னும். பரிச மாலையும் பரிசாகத் தருகிறான். அம்மாலையைச் சித்திராபதி விலைகூறக் கோவலன் அதனை வாங்கிப் பின், சித்திராபதியின் நிபந்தனைப்படி மாதவியை நாடிச் செல்கிறான். (இப்பகுதி வரை மட்டுமே இந்நாடகம் கிடைத்துள்ளது).

*அமைப்பு:* ஆறு காட்சிகளின் கையெழுத்துப் படி மட்டுமே கிடைத்திருப்பதால் இந்நாடகம் எத்தனைக் காட்சிகளுடன் எழுதப்பட்டது என்று தீர்மானிக்க இயலவில்லை. கிடைத்திருக்கும் ஆறு காட்சிகளிலும் இடமும், கதை மாந்தர் விவரங்களும் குறிக்கப்பட்டுள்ளன. கிடைத்திருக்கும் கதையும் கதை அமைப்புடனே நின்று விடுகிறது. உரையாடல்கள் எழுதப்பட்ட விவரமும் கிடைக்கவில்லை.

*சிறப்பு:* தமிழன், திராவிடன் என்னும் இனவுணர்வை அடிப்படையாகக் கொண்டு திராவிட இயக்கக் கொள்கைகள் கட்டமைக்கப்பட்டதால், தமிழரின் மேன்மை குறித்த

வாதங்களுக்குத், தமிழிலக்கியங்களையும், தமிழ்ப்பண்பாட்டு வடிவங்களையுமே சான்றாகக் காட்டினர் திராவிட இயக்கத்தினர். ஆனால் மூடநம்பிக்கை ஒழிப்பை வலியுறுத்திய திராவிட இயக்கத்திற்குப் பக்தி இலக்கியங்கள் பெரும் சவாலாகவே அமைந்தன. ஆதலால் அவற்றில் பிரபலமானவற்றை மறுசிந்தனைக்குள்ளான படைப்புகளாகவும், கலை வடிவங்களாகவும் திராவிட இயக்கத்தினர் உருவாக்கியும், பரப்பியும் வந்தனர் (எடுத்துக்காட்டு: பாரதிதாசன் இயற்றிய இரணியன் (அ) இணையற்ற வீரன் நாடகம், புதுவைச்சிவம் இயற்றிய தமிழரின் வீழ்ச்சி (அ) இராமாயண சாரம் நாடகம்). அதே நேரம் பக்தி இலக்கியம் தவிர்த்த தமிழ் இலக்கியங்களில் இருந்து, தங்களின் பண்பாட்டை மீட்டுருவாக்கம் செய்து தமிழரின் மேன்மையையும், இனவுணர்வையும் ஊட்ட வேண்டிய தேவை தங்களுக்கு இருந்ததாகத் திராவிட இயக்கத்தினர் நம்பினர். முதலாம் இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டக் காலத்தில் (1938) வீறிட்டெழுந்த இவ்வுணர்வு, இரண்டாம் கட்டத்தையும் (1948) தாண்டி, மூன்றாம் கட்டம் வரையிலும் (1965) நீடித்திருந்தது. தமிழ் இலக்கியங்களின் மீள்பார்வை இக்காலக்கட்டங்களில் பெருமளவில் திராவிட இயக்கத்தினரால் மேற்கொள்ளப்பட்டது. சிலப்பதிகாரத்தைப் பொறுத்து, அதில் தங்கள் இயக்கத்திற்கு மாறான கருத்துக்களை மாற்றி அமைத்து, முழுமையான தமிழ்ப் பண்பாட்டுக் காவியமாக மாற்றும் முயற்சியில் புதுவைச் சிவத்தால் எழுதப்பட்ட நாடகமே 'கோவலன்-கண்ணகி' என்று கொள்ளலாம். தமிழிசைக் கூறுகளும், நாடகப் பாங்கும் அமையப்பெற்ற, தமிழ்ப் பண்பாட்டுக் காப்பியமாகச் சிலப்பதிகாரம் விளங்குவதால், இந்நாடகத்தைப் புதுவைச்சிவம் திராவிட இயக்கக் கருத்தியலுக் கேற்ப நாடகமாக்கியிருக்கிறார் என்று கொள்ளலாம்.

**பதிப்பு:** நாடகத்தின் ஆறு காட்சிகளின் கதை அமைப்பு மட்டுமே கையெழுத்துப் பிரதியாகக் கிடைத்துள்ளன. சேர்த்துத் தைக்கப்பட்ட தாள் கட்டையிலிருந்து பிரிக்கப்பட்ட ஒரு சில தாள்கள் மட்டுமே கிடைத்திருப்பதால், இந்நாடகம் முற்றாகவோ அல்லது பெரும்பகுதியோ எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று கொள்ளவே வாய்ப்பிருக்கிறது. இத்தாள்களின் பின்பக்கத்தில்

உள்ள ஒரு குறிப்பில் 31.7.38 என்று தேதி குறிப்பிட்டிருப்பதை வைத்து இந்நாடகம் 1938 ஆம் ஆண்டு வாக்கில் எழுதப்பட்டிருக்கக்கூடும் என்று அனுமானிக்கலாம். இந்நாடகம் நூல் வடிவில் பதிப்பிக்கப்படவில்லை. இதழ்களில் வெளியானதைப் பற்றிய தகவல்களும் இல்லை. ஆனால் இந்நாடகம் ஒத்திகை பார்க்கப்பட்டதற்கான செய்திகள் கிடைத்துள்ளன.[49] என்றாலும் இது மேடையில் நடிக்கப் பட்டதற்கான விவரங்கள் கிடைக்கவில்லை. 2007 ஆம் ஆண்டில் காவ்யா பதிப்பகம் வெளியிட்ட 'புதுவைச் சிவம் படைப்புகள்' தொகுப்பு நூலில், காப்பிய நாடகங்கள் பிரிவில் இந்நாடகம் இடம் பெற்றுள்ளது.

**பழங்கதைகள் - ஒரு புதிய பார்வை**

1920 ஆம் ஆண்டுக்குப் பின்னர்த் தோற்றம் பெற்ற சுயமரியாதை இயக்கம், 1930 ஆம் ஆண்டுகளில் வளர்ச்சி பெற்று, சென்னை மாகாணத்திலும், புதுச்சேரியிலும் இனவுணர்வுச் சிந்தனைகள் உருவாகக் காரணமாக அமைந்தது. புதுமை, பொதுவுடைமை, புரட்சி போன்ற சொற்களும், அவற்றின் பொருளும் தமிழ் பேசும் மக்களிடையே மறுமலர்ச்சிச் சிந்தனைகளை உண்டாக்கிக் கொண்டிருந்தன. திராவிட இன உணர்வும், திராவிடரின் வீழ்ச்சிக்கு ஆரியரே காரணம் என்ற எண்ணமும் மேலோங்கி, ஆரியக் கலப்புள்ள எவற்றையும் அவை எவ்வடிவத்திலிருந்தாலும் எதிர்க்கும் அல்லது மறு சிந்தனைக்குள்ளாக்கும் போக்கும் நிலவின. இந்நிலைக்குக் கடவுளைப் போதித்த புராணங்களும், கடவுள் தன்மைக்கு அருகில் வைத்துப் போற்றப்பட்ட கலைகளும் கூட விதிவிலக்காகவில்லை.

இப்புதிய அலை நாடக உலகிலும் வீசியது. பக்தியை விளக்கும் புராண நாடகங்களே பெரிதும் நிலவியிருந்த நாடக மேடைகளில் சமூக நாடகங்களும், சீர்திருத்த நாடகங்களும் உள்நுழைந்து பெரும் வரவேற்பையும் பெற்றன. இது ஒருபுறமிருக்கப் புராணங்களை மறுத்துப் புதிய சிந்தனைப் போக்கில் அவற்றைச் சொல்லும் முயற்சிகளும் நடைபெற்றன. இம்முயற்சியில் முதலாவதாக இரணியனைத் திராவிட மக்களின்

பாதுகாவலனாகச் சித்திரிக்கும் பாரதிதாசன் இயற்றிய 'இரணியன்(அ) இணையற்ற வீரன்' நாடகத்தைக் குறிப்பிடலாம். இந்நாடகம் 1934 ஆம் ஆண்டு சென்னையில் மேடையேறியது.

இராமாயணம், கூத்து வடிவிலும், நாடகவடிவிலும் மக்கள் பெரிதும் அறிந்த ஓர் இதிகாசம். இராமாயணத்தில் வில்லனாகச் சித்திரிக்கப்பட்ட இராவணனைத் திராவிடர்களின் தலைவனாகத் திராவிட இயக்கத்தினர் வடிவமைத்தனர். இந்த மீள்பார்வை முயற்சியில், இராவணனைக் கதாநாயகனாகக் கொண்டு துறையூர் கே.மூர்த்தியின் 'இலங்கேஸ்வரன்' எனும் நாடகமும், புலவர் அ.கு.வேலனின் 'இராவணன்' எனும் நாடகமும், திருவாரூர் கே.தங்கராசு இயற்றி எம்.ஆர். இராதா நடத்திய 'இராமாயணம்' எனும் நாடகமும் குறிப்பிடத்தக்கன. புலவர் குழந்தை இராவணனைக் காவிய நாயகனாக்கி 'இராவண காவியம்' எனும் காவியத்தைப் படைத்தார். இராவணனைத் தமிழர் தலைவராகவும், நாடக நாயகனாகவும் ஆக்கிய இம்முயற்சிகளுக்கெல்லாம் முதலாவதாகப் புதுவைச்சிவம் 1935 ஆம் ஆண்டில் இயற்றிய 'தமிழரின் வீழ்ச்சி (அ) இராமாயண சாரம்' நாடகம் அமைந்திருக்கிறது.

## தமிழரின் வீழ்ச்சி(அ) இராமாயண சாரம்

*கருத்து:* இராவணனைத் தமிழர்களைப் பாதுகாக்கும் அரசனாக உருவகப்படுத்தும் நாடகம் இது. இராவணனை நேரடியாக வெல்ல முடியாது என்பதால் ஆரியர்கள் சூழ்ச்சி செய்து இராவணனையும் தமிழர்களையும் வீழ்த்தி, ஆரிய தர்மத்தைத் தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் பரவச்செய்தனர் என்னும் கருத்தில் இந்நாடகம் எழுதப்பட்டிருக்கிறது. திராவிட இயக்கத்தினர் முன்வைத்த திராவிட ஆரியப் போராட்டத்தினை விளக்கும் முயற்சியாகவும் மக்களின் மனதில் ஏற்கெனவே ஊடுருவி இருக்கும் புராணக்கதையினை அடியோடு மாற்றிச் சொல்லும் புதுமையான, துணிச்சலான முயற்சியாகவும் இந்நாடகம் அமைந்துள்ளது என்று கூறலாம்.

*கதை:* தமிழ் நாட்டில் ஆரியர் குடியேற வேண்டும் என்று விரும்பும் விசுவாமித்திரன் அதற்குத் தசரத மன்னனின் உதவியைக்

கோருகிறான். தமிழ் மன்னர்களின் வீரத்திற்குப் பயந்த தசரதன், அதை மறுக்கின்றான். கோபங் கொண்ட விசுவாமித்திரன் இராமனுக்குப் பட்டாபிஷேகம் நடத்துவதை, கைகேயி மூலம் நிறுத்த முயற்சிக்கிறான். இராம இலட்சுமணரை ஆரிய நலன் கருதி விசுவாமித்திரனோடு செல்லும்படி கைகேயி சொல்ல அவர்களும் உடன்படுகின்றனர். தசரதன் அதற்கும் மறுக்க, கைகேயி இதனால் உலகப்பழிநேரும் என்று சொல்ல, இராமனும் தேறுதல் சொல்லிப் புறப்படுகின்றான். சீதையும் அவனோடு செல்கிறாள். தசரதன் மூர்ச்சையாகிறான்.

இராமனும், சீதையும், இலட்சுமணனும் தென்னாட்டின் வாயிற்படியான தண்டகாரண்யம் வந்தடைகின்றனர். இதன் இராஜதானியாகிய ஜனஸ்தானத்தை ஆளும் சூர்ப்பணகையைப் பற்றி விசுவாமித்திரன் சொல்ல, அதை ஆவலோடு இராமன் கேட்க, அதைச் சீதை கவனிக்கிறாள். சூர்ப்பணகையை வெல்லச் சந்தர்ப்பம் வரும் வரை காத்திருக்கச் சொல்லி விசுவாமித்திரன் செல்கிறான். தண்ட காரண்யத்தில் புத்திர சோகத்தால் தனித்திருக்கும் சூர்ப்பணகையை இராமன் பார்த்து அவள் அழகில் மயங்குகிறான். அவளிடம் தன்னைப் பற்றிக் கூறித் தன்னைவிட மூத்தவளான சீதையைத் தான் விரும்பவில்லை என்றும், சூர்ப்பணகையின் தனிமையைப் போக்கத் தான் விரும்புவதாகவும் இராமன் கூறச் சூர்ப்பணகை சினந்து அவனை விரட்டுகிறாள். இவற்றைக் கவனித்துக் கொண்டிருந்த சீதை, இலட்சுமனிடம் சென்று சூர்ப்பணகையால் தன் வாழ்வு பாழாகும் என்று கூறி அவள் அழகைச் சிதைக்க இலட்சுமணனை ஏவுகிறாள். அவனும் உடன்பட்டுச் சூர்ப்பணகையைத் தேடிக் கண்டுபிடித்து அவள் தூங்கும்போது அவளது மூக்கைச் சிதைத்துவிட்டுப் பஞ்சவடி ஓடிப் பதுங்கிக் கொள்கிறான். தன் படைகளுக்கு அழைப்பு அனுப்பி விட்டுப் பஞ்சவடி வந்த சூர்ப்பணகை இலட்சுமணனைச் சண்டைக்கு அழைக்கிறாள். இதனால் யுத்தம் மூண்டதாக இராமன் சொல்லவும், ஆரியப் படையைத் திரட்ட விசுவாமித்திரன் செல்கிறான்.

சூர்ப்பணகையின் படைகள் தண்டகாரண்யம் வருகின்றன. செய்தியைக் கேள்விப்பட்டு இராவணனும் அங்கு வருகின்றான்.

இராவணன் வருவதையறிந்த எதிரிப்படையினர் அனைவரும் தப்பியோடுகின்றனர். ஜடாயுவுடன் வந்த சீதையைப் பார்த்து, இராவணன் யார் என்று வினவ, சூர்ப்பணகை சீதையைப்பற்றிக் கூறி, இவளால்தான் தனக்கு இந்நிலை வரக்காரணம் என்று கூறுகிறாள். ஆரியர் வீரத்தை இகழும் இராவணன், அவர்களுக்கு வீரமிருந்தால் சீதையை மீட்கட்டும், என்று சொல்லிச் சீதையைச் சிறைவைக்கிறான். ஜடாயு மூலம் சீதை சிறையானதைக் கிஷ்கிந்தையில் கேள்விப்பட்ட இராமன் சுக்கிரீவனின் உதவியை நாடுகிறான். வாலியை மறைந்திருந்து கொன்றதால் இராமனுக்கு உதவச் சுக்ரீவன் ஒப்புகிறான்.

அசோகவனத்தில் சிறை இருக்கும் சீதை, திரிசடை மூலம் விபீஷணனை வரவழைத்து, அவனுடன் மதுவருந்தி அவனை மயக்கித் தனக்கு உதவிசெய்பவனாக அவனை மாற்றுகிறாள். அனுமன் சீதையைச் சந்தித்ததையும், விபீஷணன் உதவியதையும் இராமனிடம் கூற அங்கதனைத் தூதனுப்புகின்றனர். இராவணன் யுத்தத்திற்குத் தயார் என்கிறான். விபீஷணன் இராமன் பக்கம் வர, முதலில் யுத்தத்திற்கு வந்த இந்திரஜித்தைத் தந்திரமாகக் கொல்கின்றனர். இராமனின் கோழைத்தனத்திற்கும், விபீஷணனின் துரோகத்திற்கும் இராவணன் வருந்துகிறான். விபீஷணன் உதவி யுடன் தந்திரத்தாலேயே கும்பகர்ணன் உள்படப் பலர் மாள்கின்றனர். இறுதியில் இராவணனும் அவ்விதமே கொல்லப்படுகிறான். மண்டோதரி விபீஷணனின் துரோகத்தை வெளிப்படுத்தி இராவணின்மேல் விழுந்து சாகிறாள். அங்குச் சீதைவர, இராமன், தமிழரின் கற்புத்தன்மையையும், சீதையின் துரோகத்தையும் பற்றிக் கூறுகிறான். அதுவே ஆரியதர்மம் என்று விசுவாமித்திரனும் மற்ற ரிஷிகளும் சொல்ல, இராமன் சீதையை ஏற்றுக் கொள்கிறான். இவ்வுண்மையை அறிந்தால் தமிழர்கள் நம்மை வெறுப்பார்கள் என்று இராமன் கூறி நடந்த நிகழ்வுகளை மாற்றி எழுதுமாறு வால்மீகியிடம் கூறுகிறான். இலங்கையில் விபீஷணனுக்குப் பட்டாபிஷேகம் செய்வித்து இவ்வரலாறு இந்நாட்டு மக்களால் எழுதாதிருக்கப் பார்த்துக் கொள்ளுமாறு விபீஷணனிடம் சொல்லி விடை பெறுகிறார்கள் இராமனும் மற்றவர்களும்.

**அமைப்பு:** மொத்தம் இருபத்தெட்டுக் காட்சிகளாக இந்நாடகக் கதை எழுதப்பட்டிருக்கிறது. இந்நாடக மூலக்கதை மட்டுமே உள்ளது. இதன் உரையாடல் கிடைக்கவில்லை. இடம், காலம், கதைமாந்தர் போன்ற விவரங்கள் மூலக்கதை அமைப்பில் குறிக்கப்படவில்லை.

**சிறப்பு:** இந்நாடகக்கதை முழுவதுமாகத் தமிழரின் வீரத்தையும், பண்பாட்டையும் உயர்த்துகின்ற வகையிலேயே படைக்கப்பட்டிருக்கிறது. பெரியார், இராமாயணத்தை ஆரியப் புரட்டு என்று வருணித்துப் பேசியும் எழுதியும் பிரச்சாரம் செய்ததை அடுத்துத் திராவிட இயக்கப் படைப்பாளர்கள் இராமாயணத்தை மாறுபட்ட சிந்தனையில் அணுகி ஆராய்ந்து பல படைப்புகளைப் பல்வேறு இலக்கிய வகைகளில் படைத்தனர்.

பாரதிதாசனின் இரணியன் அல்லது இணையற்ற வீரன் நாடகமும், அறிஞர் அண்ணாவின் கம்பரசம், தீபரவட்டும், ஆரியமாயை ஆகியநூல்களும், புலவர் குழந்தையின் இராவண காவியமும், ஏ.கே. வேலனின் இராவணன் நாடகமும் இத்தகைய வகையில் ஆனவையே. இவற்றுள் பாரதிதாசன் தவிர்த்த ஏனை யோரின் படைப்புகளுக்கு முன்பாகவே புதுவைச்சிவம், தமிழரின் வீழ்ச்சி அல்லது இராமாயண சாரம் எனும் இந்நாடகத்தை இயற்றியிருக்கிறார். இராமாயணத்தை மறுமலர்ச்சிச் சிந்தனைக் குள்ளாக்கி அதன் ஒரு பகுதியை மட்டும் 'டெலிபோன் படலம்' என்ற பெயரில் சிறுநாடகம் எழுதினார் பாரதிதாசன். இராமாயணம் முழுவதையுமே புதிய பார்வை நாடகமாக எழுதியுள்ளார் புதுவைச்சிவம். 1934 ஆம் ஆண்டில் பாரதிதாசன் இயற்றிய இரணியன் (அ) இணையற்ற வீரன் முழு நீள நாடகத்தைத் தொடர்ந்தே புதுவைச்சிவமும் இந்த நாடகக் கருவை எழுதியிருக்கக் கூடும். அந்த வகையில் இதன் உருவாக்கக் காலத்தை 1935 ஆம் ஆண்டு எனக் கொள்ளலாம். பாரதிதாசன், புதுவைச்சிவம் ஆகியோரின் நாடக இலக்கிய முயற்சிகளுக்குப் பின்னரே மற்ற திராவிட இயக்கப் படைப்பாளர்கள் இராமாயணத்தைப் புதிய சிந்தனையிலும் புதிய ஆய்விலும் உட்படுத்தியிருக்கின்றனர் என்று கொள்ளலாம்.

*பதிப்பு:* புதுவைச்சிவத்தின் இந்நாடக மூலக்கதையின் இருபத்தெட்டுக் காட்சிகளும் கையெழுத்துப் பிரதியாகவே உள்ளன. இவை நாடகக் காட்சிகளாக மாற்றப்பட்ட விவரமும், அரங்கேற்றப் பட்ட விவரமும் இதுவரை கிடைக்கவில்லை. இது அச்சில் வரவில்லை என்று துணியலாம். 2007 ஆம் ஆண்டில் காவ்யா பதிப்பகம் வெளியிட்ட 'புதுவைச் சிவம் படைப்புகள்' தொகுப்பு நூலில், காப்பிய நாடகங்கள் பிரிவில் இந்நாடகம் இடம் பெற்றுள்ளது.

**வீரநந்தன்**

*கருத்து:* கி.பி.ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவராகக் கருதப்படும் நந்தனின் வரலாற்றைப் பெரியபுராணம் கூறுகிறது.[50] புராணக் கதைகளைப் பற்றிய மறு சிந்தனைகளின் விளைவாகப், புரட்சிக்காரனான நந்தன், பார்ப்பனர்களால் பழிவாங்கப் படுவதாகக் கூறி, நந்தன் வாழ்வு சீர்த்திருத்த வழியைச் சார்ந்ததே என்பதை நிறுவும் அடிப்படையில் இந்நாடகம் இயற்றப் பட்டுள்ளது.

*கதை:* ஆதனூரில் நந்தன் புத்தனின் போதனையால் ஒரு சீர்த்திருத்தவாதியாக மாறித் தன் மக்களின் மூடநம்பிக்கைகளைப் போக்க முயல்கிறான். மனிதனை மனிதன் இழிவுபடுத்தும் செயல்களை நந்தன் மீறும் போதெல்லாம் ஊர் மக்கள் கூடி நந்தனைக் கண்டிக்கின்றனர். நந்தன் தன் நண்பர்களோடு சேர்ந்து ஆலய நுழைவு செய்யத் திட்டமிடுகிறான். இதை அறிந்த அவனது எஜமானனான வேதியன், தில்லை சென்று தீட்சதர்களிடம் கலந்தாலோசிக்க அவர்கள் அனைவரும் ஒரு சதித்திட்டம் தீட்டுகின்றனர். அதன்படி வேதியன் ஆதனூர் வந்து, நந்தனை வணங்கி, தில்லை நடராஜர் கனவில் வந்து கட்டளையிட்டதாகக் கூறி, நந்தனைத் தில்லைக்கு அனுப்பி வைக்கிறான். தில்லை சென்ற நந்தனை நடராஜர் கோயில் தீட்சிதர்கள் வரவேற்று நந்தனை மட்டும் கோயிலுக்குள் கொண்டு செல்கின்றனர். அக்கினிக்குண்டத்தின் முன் நந்தனை அமரவைத்து வேதம் ஓதி யாகம் வளர்க்கின்றனர். பின் நந்தனை அக்கினிக்குண்டத்துள் தள்ளிவிட்டு வெளியே ஓடி வந்து,

நந்தனோடு வந்தவர்களிடம், நந்தனைப் புஷ்பப்பல்லக்கு வந்து கயிலைக்கு அழைத்துச் செல்வதாகக் கூறி ஆகாயத்தை நோக்கி வணங்குகின்றனர். சேரிமக்கள் செய்வதறியாது திகைத்து வீடு திரும்புகின்றனர்.

நந்தனின் வழக்கமான பெரியபுராணக் கதையைக் காலட்சேபம் செய்யும் பாகவதனை மறித்து வீரன் என்பவன் மேற்சொன்ன உண்மைக்கதையைக் கூறுகிறான். பாகவதன், 'நான் வயிற்றுப் பிழைப்புக்காரன்' என்கிறான். வீரனோ, 'ஆரியரின் புரட்டு இது' என்று கூறி இனிப்பழங்கதை பேசலாகாது என்று பாகவதனை எச்சரித்து அனுப்புகிறான்.

***அமைப்பு:*** இந்நாடக மூலக்கதை இருபத்திரண்டு காட்சிகளாக அமைக்கப் பட்டிருக்கிறது. மூலக்கதை மட்டுமே கிடைத்திருப்பதால் காட்சி அமைப்புகள், காலம், இடம், கதை மாந்தர் முழு விவரம் ஆகியன குறித்துக் கூற இயலவில்லை.

***சிறப்பு:*** திராவிட இனத்தவரையும், தமிழ்ப் பண்பாட்டையும் இழித்துக் கூறுவதாகவும், ஆரியப் பண்பாட்டைப்போற்றுவதாகவும் உள்ள புராண, பக்தி இலக்கியங்களை, அவை தமிழிலக்கியமாக இருந்தால் கூட அவற்றைப் புறந்தள்ள வேண்டியது தமது கடமை என்று திராவிட இயக்கத் தலைவர்கள் பிரச்சாரம் செய்து வந்தனர். இது குறித்த அறிஞர் அண்ணாவின் விவாதங்களைத் 'தீ பரவட்டும்' என்னுந்தலைப்பில் 1943 ஆம் ஆண்டில் புதுவைச் சிவமே நூலாகப் பதிப்பித்திருக்கிறார். இந்த அடிப்படையில் தாழ்த்தப்பட்ட குலத்தில் பிறந்து சீர்திருத்தக்காரராக மாறிய நந்தன் கதையைப் புதிய சிந்தனைப் போக்கில் அளிக்கும் முயற்சியே புதுவைச்சிவத்தின் வீரநந்தன் ஆகும். நந்தனாரை வீரநந்தன் ஆக்கியதும், வேதவிற்பன்னர்களுக்கு மனித உரிமை குறித்து நந்தன் போதிப்பதும், புத்தரின் போதனையால் நந்தன் சீர்திருத்தவாதியாக மாறுவதையும், இறுதியில் நந்தன், பார்ப்பனர் களின் சதியால் கொல்லப்படுவதாகவும் காட்சிகளை அமைத் திருப்பதை இந்நாடகத்தின் சிறப்பம்சங்களாகக் கொள்ளலாம். திராவிட இயக்கத்தவரின் முயற்சியில், நந்தனாரின் கதையைத் தங்கள் இயக்க வரலாறாக மாற்றிய முதல் முயற்சியாக

இந்நாடகத்தைக் கருத வாய்ப்பிருக்கிறது. இது இயற்றப்பட்ட காலம் 1940-1945 ஆம் ஆண்டு என்று குறிப்புகள் தெரிவிக்கின்றன.[51] இம்மூலக்கதை உரையாடலாக எழுதப்பட்டுப் புதுவை அரசின் கலை பண்பாட்டுத் துறையும், தஞ்சைத் தமிழகப் பண்பாட்டு மையமும் இணைந்து நடத்திய புதுவைச்சிவம் பிறந்தநாள் விழாவில் புதுவைக் கண்மணி கிரியேஷன்ஸ் குழுவினரால் 24.10.2009 அன்று மேடை நாடகமாக நிகழ்த்தப்பட்டது. மேலும் 22.01.2011 அன்று இந்நாடகம் புதுவை மாநிலப் படைப்பாளிகள் கூட்டமைப்பினரால் புதுச்சேரியில் நடத்தப்பட்டது.

**பதிப்பு:** இந்நாடக மூலக்கதை கையெழுத்துப் பிரதியாகக் கிடைத்திருக்கிறது. புதுவைச்சிவம் வாழ்ந்த காலத்தில் இது நூலாக்கம் பெற்றதாகத் தகவல் இல்லை. புதுவை அரசின் கலை பண்பாட்டுத் துறை 2000 ஆவது ஆண்டில் தொகுத்து வெளியிட்ட புதுவைச்சிவத்தின் எட்டு நாடகங்களில் வீர நந்தனும் அடங்கியுள்ளது. 2007 ஆம் ஆண்டில் காவ்யா பதிப்பகம் வெளியிட்ட ‘புதுவைச் சிவம் படைப்புகள்’ தொகுப்பு நூலில், மேடை நாடகங்கள் பிரிவில் இந்நாடகம் இடம் பெற்றுள்ளது.

## கற்பனை வரலாற்று நாடகங்கள்

நடந்த உண்மையை வரலாற்று நிகழ்வுகளின் அடிப்படையில் நாடகமாக உருவாக்குவது வரலாற்று நாடகங்கள் எனப்படும். வரலாற்றுக் காலத்தில் கதை நிகழ்வதாகக் கொண்டு, கற்பனையில் அக்காலத்தின் கதாபாத்திரங்களை உருவாக்கிக் கொள்வதும், அதற்குத் தக்க கதையைக் கற்பனையில் எப்படியும் நகர்த்திச் செல்லும் இயல்பும் கொண்டவை கற்பனை வரலாற்று நாடகங்கள். இவ்வகை நாடகங்களில் நாடகாசிரியர் தம் சமகாலத்து நிகழ்வுகளைப் புகுத்தி மக்களிடம் தாம் சொல்ல நினைத்த செய்தியை மறைமுகமாகக் கொண்டு சேர்க்கும் உத்தி பெருமளவில் கையாளப்படும். நாடகச் செம்மல் பம்மல் சம்பந்த முதலியாரின் ‘இராஜபுத்திர வீரன்’ இவ்வகை நாடகத்தினுள் அடங்கும். இவ்வுத்தியை, நாடகக் கலையில் ஈடுபாடு கொண்ட திராவிட இயக்கத்தினர், தங்கள் கொள்கைகளைப் பரப்புவதற்குச்

சாதகமாய்ப் பயன்படுத்தியுள்ளனர். பாரதிதாசனின் புரட்சிக்கவி, புதுவைச்சிவத்தின் கோகிலராணி, அண்ணாவின் சந்திரோதயம் ஆகியவற்றைத் தமிழில் கற்பனை வரலாற்று நாடகங்களுக்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாகக் கூறலாம்.

**கோகிலராணி**

கருத்து: ஆரியர்களின் வருகையால் திராவிடர்களின் சீரிய வாழ்வும், கலைகளும் சிதைந்து போயின; திராவிடர்களின் சிறந்த பண்பாட்டைத் தமது என்று சொல்லி, ஆரியர்கள் வேதம் மற்றும் கடவுளின் பெயரால் செய்துவிட்ட ஏற்பாடுகளை நம்பிய திராவிடமக்கள் ஆரியதர்மத்திற்கு அடிமையாகி நால்வருணத்தை ஏற்று நலிவடைந்தனர்; தமிழைக் காக்க வேண்டிய தமிழ்நாட்டு மன்னர்களும் ஆரிய மாயையில் சிக்கித் தம் இன வீழ்ச்சிக்குக் காரணமாயினர் என்பதான கருத்துக்களை முதன்மைப்படுத்தி இயற்றப்பட்ட நாடகம் இது. திராவிட மக்கள் ஆரிய மாயையிலிருந்து மீண்டு, பண்டைக்காலத்திய தமிழரின் உயர்வான நிலையைப் பெற வேண்டும் என்கின்ற ஒரு கருத்தியல் திராவிட இயக்கப் படைப்பாளர்களிடம் ஊட்டம் பெற்று, அவர்களது எழுத்துக்களிலும் பிரதிபலித்தது. அவ்வகையிலான நாடகப் படைப்பில் முதலாவதாக வைத்துக் கருதப்படத் தகுதியுள்ளது கோகிலராணி.

கதை : சோழ மண்டல அரசனான சுகுணவர்மன் ஆரிய பிரம்ம குருவின் கட்டளைப்படி ஆட்சி நடத்தி வருகிறான். அரசன் ஆரியப் பெண்களிடம் மயங்கிக் கிடக்க, ஆட்சியைக் கைப்பற்றப் பிரம்ம குருவும், ஆரிய மந்திரியும் சூழ்ச்சி செய்கின்றனர். பிரம்ம குருவின் யோசனைப்படி அரசனின் பட்டத்தரசி பிரிக்கப்படுகிறாள். அவர்களின் குழந்தையைச் சோதிடத்தைக் காரணம் காட்டி ஆற்றில் விடும்படி பிரம்ம குரு கட்டளை இடுகிறான். தமிழர் தலைவனான சேனாதிபதி இச் சூழ்ச்சிகளைத் தடுக்கிறான். அவனை ஓர் ஆரிய நாட்டியக்காரி மூலம் மயக்க முற்படும் பிரம்ம குரு, அது முடியாததால் சேனாதிபதியைச் சூழ்ச்சியால் மரண தண்டனைக் குள்ளாக்குகின்றான். சுகுணவர்மனின் முதல் பட்டத்தரசியான

கோகிலராணி தவக்கோலம் பூண்டுத் தன்னுடைய தமிழர் பாதுகாப்புப் படை மூலம் சேனாதிபதியைக் காப்பாற்றுகிறாள். ஆற்றில் விடப்பட்ட மன்னனின் குழந்தை காப்பாற்றப்பட்டுக் கோகிலராணியிடமே வளர்கிறது. குழந்தைக்கு வீரவர்மன் என்று பெயரிட்டு அவனை வீரனாக வளர்க்கிறாள். தவப் பெண்ணாகவும், கறுப்புடை தரித்த தமிழர் பாதுகாப்புப் படையின் தலைவியாகவும் மாறுகின்ற பட்டத்தரசி கோகிலராணி, ஆரிய ஆட்சியின் கொடுங்கோலைக் களைய வேண்டி, சேனாதிபதி உதவியுடன் படைதிரட்டுகிறாள். ஆரியப் படை சோழ நாட்டைக் கைப்பற்றி, பிரம்ம குரு, ஆரிய மந்திரியிடம் ஒப்படைக்கக், கோகிலராணி, சேனாதிபதி உதவியுடன் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றி, தன் கணவனான சுகுணவர்மனிடமே ஒப்படைக்கிறாள். சகுனம் காட்டிப் பிரிக்கப்பட்ட அவர்களின் மகன் வீரவர்மன் மலைநாட்டு மங்கையைக் காதலித்து மணக்கிறான். பின்னர், சோழ மண்டல மன்னனாகவும் முடி சூட்டப்படுகிறான். தமிழர் பாதுகாப்பே தனது இலட்சியம் என்று வீரவர்மன் சூளுரைக்கிறான்.

**அமைப்பு:** பத்தொன்பது காட்சிகளாக இந்நாடகம் அமைக்கப்பட்டிருக்கிறது. இடம், காலம், கதைமாந்தர், கதை நிகழும் சூழல் ஆகியவை ஒவ்வொரு காட்சியிலும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. காட்சிகளின் இடையில் மெட்டுடன் கூடிய பாட்டுகள் உள்ளன. சில பாடல்கள் புதுவைச்சிவம் இயற்றிய, இன்ன கவிதை நூலில் இடம் பெற்றுள்ளன என்ற குறிப்போடும் காணப்படுகின்றன. பிரிந்தவர்கள் அனைவரும் முடிவில் ஒன்று சேர்வதும், இழந்த நாட்டைச் சோழமன்னன் மீண்டும் பெறுவதுமாக இந்நாடகம் அமைக்கப் பட்டிருப்பதால் இது இன்பியல் நாடக வகையைச் சேர்கிறது.

**சிறப்பு:** 'இந்தி எதிர்ப்பின் காரணமாகத் தமிழுணர்ச்சி தலையெடுத்த போது, அதாவது 1939 ஆம் ஆண்டு, எழுதப்பட்டதாகும் இது' என்று புதுவைச் சிவமே இந்நாடகம் உருவான ஆண்டைப் பற்றி இந்நூல் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். திராவிடர் - ஆரியர் பிரச்சினை, திராவிட இயக்கத்தால் கையாளப்பட்ட உச்சக்கட்ட நேரத்தில் இந்நாடகம் எழுதப்

பட்டுள்ளது. 'ஆரிய சூழ்ச்சியை விளக்கித் தமிழருக்குத் தன்மான உணர்ச்சியையும் எழுச்சியையும் உண்டுபண்ணும் வீரஞ்செறிந்த சீரிய செந்தமிழ் நாடகம்' என்று இந்நாடக நூலுக்கான விளம்பரம் கூறுகின்றது. இவ்விளம்பரம் 1946 ஆம் ஆண்டில் வெளியிடப் பெற்ற 'காதலும் கற்பும்' என்ற நூலின் உள்ளட்டையில் காணப்படுகிறது. மற்றுமோர் விளம்பரத்தில், 'ஆஸ்ரமங்களை அரசியல் சூழ்ச்சிக்கூடமாகக் கொண்டு, தமிழகத்தை ஆட்டிப் படைத்த ஆரிய அட்டகாசப் போக்கை விளக்குவது. காதல், வீரம், சோகம் முதலியவை நிறைந்தது' என்று ஞாயிறு நூற்பதிப்பக நூலான மகாகவி பாரதியார் (1948) பின்னட்டையில் இந்நாடகம் குறித்து விளம்பரப் படுத்தப்பட்டுள்ளது. பின்னாள்களில், திராவிட இயக்கத்தினர் உருவாக்கிய திரைப்படங்களில், குறிப்பாகக் கலைஞர் கருணாநிதி கதை வசனம் எழுதிய மந்திரிகுமாரி, மனோகரா போன்ற திரைப்படங்களில், கோகிலராணி நாடகக் காட்சிகளின் தாக்கத்தைக் காணலாம். மனோகரா திரைப்படக் கதை தொடர்பாகப் புதுவைச் சிவத்தைக் கருணாநிதி புதுச்சேரியில் சந்தித்து உரையாடியதாகச் செ. முத்து குறிப்பிடுகிறார்.[52]

புதுவைச்சிவத்தின் நாடகங்களில் இந்நாடகம் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுவதாக அமைந்திருக்கிறது. புதுச்சேரியிலும், தமிழகத்திலும் இந்நாடகம் பல இடங்களில் நடைபெற்றதற்கான தகவல்களும் துண்டறிக்கைகளும் கிடைத்திருக்கின்றன. இந்நாடகம் இலங்கையிலும் மேடையேற்றம் கண்டிருக்கிறது. மலேசியாவின் ஈப்போ நகரில் நடைபெற்ற தகவலை ஒரு மலேசியக் கடிதம் மூலமாக அறியமுடிகிறது. திராவிடர் கழகத்தின் நிதிக்காக இந்நாடகம் நடத்தப்பட்ட செய்திகளும் துண்டறிக்கை மூலமாகத் தெரியவருகின்றன.

**பதிப்பு:** 1939 ஆம் ஆண்டில் எழுதப்பட்ட இந்நாடகம், பலமுறை மேடையேற்றம் கண்ட பிறகு, பிற பகுதித் தோழர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க 1947 ஆம் ஆண்டில் நூலாக்கம் பெற்றது. இச்செய்தியைப் புதுவைச்சிவமே அந்நூல் முன்னுரையில் குறிப்பிட்டுத் தமது ஞாயிறு நூற்பதிப்பகம் மூலமாக அந்நூலைப் புதுச்சேரியிலிருந்து வெளியிட்டிருக்கிறார். 1947 ஏப்ரலில் வெளியிடப்பட்ட இந்நாடக நூலின் விலை ஒரு

ரூபாய் நான்கணா என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்குப் பிறகு இந்நாடகம், 2000 ஆவது ஆண்டில் புதுவை அரசு வெளியிட்டுள்ள 'புதுவைச்சிவம் நாடகங்கள்' தொகுதியில் சேர்க்கப்பட்டுள்ளது. 2007 ஆம் ஆண்டில் காவ்யா பதிப்பகம் வெளியிட்ட 'புதுவைச் சிவம் படைப்புகள்' தொகுப்பு நூலில், மேடை நாடகங்கள் பிரிவில் இந்நாடகம் இடம் பெற்றுள்ளது.

**சமூகச் சீர்திருத்த நாடகங்கள்**

இதிகாச, புராண நாடகங்கள் தங்களுடைய செல்வாக்கை இழக்கத் தொடங்கிய வேளையில் சமூக நாடகங்கள் தோன்றின. வடிவில் கூத்தையும், கற்பனையில் புராணக்கதைகளையும் மட்டுமே கண்டு கேட்டு வந்தவர்களுக்குத், தம்மைப் போன்ற மக்களின் வாழ்வு மேடையில் பிரதிபலிக்கச் செய்தபோது இயல்பாகவே அதில் ஆர்வம் எழுந்திருக்க வாய்ப்புண்டு. 'ஒவ்வொரு சமுதாயப் பிரச்சினையும் நாடகக் கருப்பொருளாக அமைய வாய்ப்புள்ளது' என்ற பெர்னார்ட் ஷாவின் கூற்றும், 'பிரெஞ்சுப்புரட்சியின் அடிப்படையே ஒரு சமூக நாடகம்தான்' என்று போமார்சின் (Pomarce) நாடகம் ஒன்றைச் சுட்டிக்காட்டும் மார்ட்டின் எர்சிலின் (Martin Erslin) கூற்றும் நோக்கத்தக்கன.[53] இப்படி வரவேற்புப் பெற்று உருவான சமூக நாடகங்களே இன்றைய நவீன நாடகங்களுக்கு அடித்தளமாக அமைந்திருக் கின்றன. சமூக நாடகப் படைப்பாளிகள் அதே சமுதாயத்தில் வாழ்ந்து, சமகாலத்திய நிகழ்வுகளின் தாக்கங்களை நாடகத்தினுள் புகுத்துவதால், அவை மக்களிடையே வரவேற்பைப் பெற்றன. இப்படிப்பட்ட நாடகங்களிலும் தங்கள் இலட்சியத்தை யும், கொள்கைகளையும் சமுதாயப் பிரச்சினைகளோடு இணையச் சேர்த்துப் பார்வையாளர்களைத் தமது இயக்கத்தின் பால் ஈர்க்க முயன்று வெற்றி பெற்ற திராவிட இயக்க நாடகப் படைப்பாளிகளுள் புதுவைச்சிவம் முதலாமவர் என்பதை அவரது சமூக நாடகங்களின் ஆய்வு நிரூபிக்கிறது.

இவரது நாடகங்கள் அனைத்துமே சீர்த்திருத்தக் கொள்கைகளில் மிக அதிகப் பிடிமானமும், அவையே நல்லவை என்று முடிந்த முடிபாகக் கூறி நாடகத்தின் முடிவை அவ்வகை யிலேயே கொண்டு செல்லும் தன்மையும் வாய்ந்தவையாக

உள்ளன. இயக்கத்தையே நாடகத்தினுள் கொண்டுவந்து, கதை மாந்தர்கள் இயக்கப்பணிகளை மேற்கொள்பவர்களாக வெளிப் படையாகவே சித்திரிக்கும் சமூக நாடகங்களும் இவரது படைப்புகளில் உள்ளன.

ரஞ்சித சுந்தரா (அ) ரகசியச்சுரங்கம், அமுதவல்லி (அ) அடிமையின் வீழ்ச்சி, சமூக சேவை, காந்திமதி (அ) கல்வியின் மேன்மை, மூன்று பெண்கள், புதிய வாழ்வு, சிதைந்த வாழ்வு, நிலம் யாருக்குச் சொந்தம் ஆகிய எட்டும் புதுவைச்சிவம் இயற்றிய இதுவரை அறியப்பட்ட சமூக மேடை நாடகங்கள் ஆகும்.

## ரஞ்சித சுந்தரா(அ) ரகசியச்சுரங்கம்

***கருத்து:*** ஆண் பெண் சமத்துவம், பெண்ணுக்கு மணவுரிமை, பெண்கல்வி, விதவை மறுமணம், காதல் திருமணம், சீர்த்திருத்தத் திருமணம், ஆகிய திராவிட இயக்கக் கொள்கைகளை அழுத்தந் திருத்தமாக வலியுறுத்தும் நாடகமாக இது படைக்கப் பட்டிருக்கிறது. சமுதாய வாழ்வில் ஒரு வைதிகக் குடும்பத்தில் காணப்படும் பிரச்சினைகளில் இயல்பாக இழையோடிக் கொண்டிருக்கும் சடங்குகள், மூட வழக்கங்களினால் ஏற்படும் இழப்புகளைக் களையச் சீர்திருத்தமும், பகுத்தறிவும் சீரிய வழிகள் என்று நிறுவும் நோக்கத்துடன் இந்நாடகப் படைப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது.

***கதை:*** விதவையான தன் மகள் சௌந்தரம் ஒருவனைக் காதலிப்பது தெரிந்து, ஆச்சாரம் கெட்டு விடுமே என்று கலங்கி, ஒரு மடாதிபதியின் நேரடிப் பாதுகாப்பில் தங்க வைக்கிறார் மாணிக்கச் செட்டி என்பவர். ஆனால், மடாதிபதி அவளை மயக்கிக் கெடுத்து அவள் தற்கொலை செய்து கொள்ளக் காரணமாகிறான். சௌந்தரத்தின் தங்கையும் படித்த பெண்ணுமான ரஞ்சிதம், தன் காதலன் சுந்தரத்தின் (கதைநாயகி மற்றும் கதைநாயகன்) உதவியுடன் இந்த உண்மைகளைக் கண்டுபிடித்து வெளிப்படுத்துவதுடன் காதல் கலப்பு மணத்தைச் சீர்திருத்த முறையில் புரிகின்றனர்.

***அமைப்பு:*** கதை வசனத்துடன் இருபது காட்சிகள் அடங்கிய மேடை நாடகமாக இது உருவாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு

காட்சியிலும் கதை மாந்தர்களும், நிகழிடமும் குறிப்பிடப்பட்டு, தேவைப்படும் காட்சிகளில் காலமும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நாடகத்தின் மிக முக்கியக் கதாபாத்திரமான சௌந்தரம், கொலையுண்டு போனாலும், கதையின் நாயகர்களான ரஞ்சிதமும், சுந்தரமும் பல இன்னல்களைக் கடந்து இறுதியில் மணம்புரிந்து தங்கள் காதலில் வெற்றி பெறுவதாக இக்கதை அமைக்கப்பட்டிருப்பதால், இதை இன்பியல் வகையைச் சேர்ந்த நாடகப் பிரிவில் அடக்கலாம்.

இந்நாடகத்திற்கென மொத்தம் நாற்பது பாடல்கள் இயற்றப் பட்டிருக்கின்றன. அனைத்துப் பாடல்களுக்கும் மெட்டுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. தரு, தர்க்கம் போன்ற கூத்துப்பாணி இசையிலும் பாடல்கள் உள்ளன.

சிறப்பு: புதுவைச்சிவம் இயற்றிய முதல் நாடகமாக இது கருதப்படுகிறது. 1935 ஆம் ஆண்டில் இது இயற்றப்பட்டதாக இதன் கையெழுத்துப்பிரதியில் நாடகாசிரியரே குறிப்பிட்டிருக் கிறார். இந்நாடகம் 15.08.1936 அன்று புதுச்சேரியில் ‘லாபிளேயாத்’ என்னும் சங்கத்தினரால் மேடையேற்றம் செய்யப்பட்டிருக்கிறது. மீண்டும் அதே சங்கத்தினரால் 12.09.1936 அன்று நடத்தப் பட்டதற்கான துண்டறிக்கைகளும் கிடைத்துள்ளன. (பின்னிணைப்பில் காண்க).

திராவிட இயக்கத்தின் முதல் சமூகச்சீர்திருத்த மேடை நாடகப் படைப்பாளியாக இவ்வாய்வில் புதுவைச்சிவம் குறிப்பிடப் படுவதற்குக் காரணம் 1935 ஆம் ஆண்டில் இயற்றப்பட்டு 1936 ஆம் ஆண்டில் மேடையேற்றம் கண்ட இந்த நாடகம்தான். இதனைத் தொடர்ந்து இவர் பல சமூக மேடை நாடகங்களை இயற்றி மேடையேற்றமும் நடத்திய பல்லாண்டுகளுக்குப் பின்னரே திராவிட இயக்கத்தின் பிற நாடகப் படைப்பாளர்கள் தங்கள் சமூக நாடகப் படைப்புகளை உருவாக்கி உள்ளனர். திராவிட இயக்க நாடகப் படைப்பாளிகளுள் தலையாய இடம்வைத்துக் குறிக்கப்பெறும் அறிஞர் அண்ணாவின் சமூக மேடை நாடகங்களான ஓர் இரவு, வேலைக்காரி போன்றவை கூட 1947 ஆம் ஆண்டில் தான் உருவாக்கம் பெற்றன. இதற்குப் பன்னிரெண்டு ஆண்டுக்காலம்

முன்பே புதுவைச்சிவம் சமூகச் சீர்திருத்த நாடகம் இயற்றி மேடையேற்றம் செய்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. புதுவைச்சிவம் மறைவிற்குப் பின்னர் அவரது பிறந்தநாள் அரசு விழாவாகப் புதுச்சேரி அரசால் அறிவிக்கப்பட்ட பிறகு இந்நாடகம் 30.10.1999 அன்று புதுவை அரசின் கலைபண்பாட்டுத் துறை நடத்திய கவிஞர் புதுவைச் சிவம் பிறந்த நாள் விழாவில் தஞ்சை ஃபைன் ஆர்ட்ஸ் குழுவினரால் மீண்டும் நடத்தப்பட்டது.

**பதிப்பு :** இம்மேடை நாடகம் முழுமையான கையெழுத்துப் பிரதியாகக் கிடைத்திருக்கிறது. இந்நாடகம் பலமுறை மேடையேற்றம் கண்டிருந்தாலும் அச்சில் வெளிவந்ததாகத் தெரியவில்லை. இந்நாடகப்பாட்டுகள் நாற்பதுடன் இரு வாழ்த்துப் பாடல்களுமாக மொத்தம் நாற்பத்திரண்டு பாடல்கள் 1936 ஆம் ஆண்டில் அச்சிடப்பட்டு நாடகம் நடைபெற்றபோது விநியோகிக்கப்பட்டிருக்கின்றன. புதுவைஅரசின் கலை பண்பாட்டுத்துறை 2000 ஆவது ஆண்டில் தொகுத்து வெளியிட்ட புதுவைச்சிவம் நாடகங்கள் நூலில் இந்நாடகமும், இந்நாடகப் பாட்டுகளும் இடம் பெற்றுள்ளன. 2007 ஆம் ஆண்டில் காவ்யா பதிப்பகம் வெளியிட்ட 'புதுவைச் சிவம் படைப்புகள்' தொகுப்பு நூலில், மேடை நாடகங்கள் பிரிவில் இந்நாடகம் இடம் பெற்றுள்ளது.

## அமுதவல்லி (அ) அடிமையின் வீழ்ச்சி

**கருத்து:** ஒரு ஜமீன்தாரின் மகன் சீர்திருத்தவாதியாகித் தாழ்த்தப் பட்ட குலப்பெண்ணை மணந்து அந்த ஜமீனின் மக்களுக்குக் கொத்தடிமைத்தனத்திலிருந்து விடுதலை கொடுக்கிறான். சாதிமறுப்புத் திருமணமும், காதல் மணமும், மக்களாட்சி மாண்பும் இந்நாடகத்தில் போற்றப்பட்டு நாடகக்கருத்தின் மூலமாய் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

**கதை:** குன்ற நகர் ஜமீன்தாரின் மகன் குணசேகரன் ஓர் சீர்திருத்தவாதி. அவனுக்காகவே வளர்கிறாள், மிதுனபுரி ஜமீன் வாரிசான இன்பவல்லி. ஆனால், குணசேகரன் தாழ்த்தப்பட்ட குலப் பெண்ணான அமுதவல்லியைக் காதலிக்கிறான். ஜமீனின் எதிர்ப்புக்காளாகி அமுதவல்லியும் அவளைச் சார்ந்த

சமூகத்தினரும் கொடுமைப் படுத்தப்படுகின்றனர். இறுதியில் ஜமீன் ஆட்சியின் அவலங்கள் ஒழியக் காதல் நிறைவேறி நல்லாட்சி மலர்கிறது.

*அமைப்பு:* இந்நாடகம் பதினேழு காட்சிகளுடன் முழுமேடை நாடகமாக இயற்றப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு காட்சியிலும் கதை நிகழ் இடமும், கதை மாந்தர் விவரங்களும், கதை நிகழும் சூழ்நிலையும் குறிப்பிடப்பட்டுள்ளன. இறுதியில் அனைவருக்கும் சுமுகமான முடிவு நிகழ்வதால் இது இன்பியல் நாடக வகையைச் சேர்கிறது. இந்நாடகத்திற்கெனப் பதினாறு பாடல்கள் எழுதப்பட்டுப் பின்னிணைப்பில் காணப்படுகின்றன. நாடகத்தின் இடையே எந்தெந்த இடங்களில் பாடல் முழுவது மாகவோ அல்லது இடைவெளி விட்டோ பாடப்பட வேண்டும் என்ற குறிப்புகளும் உள்ளன. நாடகம் உருவான காலத்தில் பிரபலமாயிருந்த திரைப்பட மெட்டுகள் மற்றும் கர்நாடக இசை மெட்டுகள் இப்பாடல்களுக்கு உபயோகப் படுத்தப்பட்டுள்ளன.

*சிறப்பு:* திராவிட இயக்கம் முழங்கிவந்த குடியாட்சித் தத்துவமும், சாதி மறுப்புத் திருமணமும் இந்நாடகத்தில் வலியுறுத்தப்படுவதுடன், அந்த இலட்சியங்கள் எட்டப்படுவன வாகவே காட்டப்படுகின்றன. தமிழ்நாட்டில் திரைப்படங்கள் தயாரிக்கப் பட்ட ஆரம்பக் காலத்தில் இந்நாடகம் முழுமேடை நாடகமாக இயற்றப் பட்டிருக்கிறது. இந்நாடகம் தமிழர் நாடக மன்றத்தினரால் 1953 ஆம் ஆண்டில் நடிக்கப்பட்டிருக்கிறது. புதுவைச்சிவம் மறைவிற்குப் பின்னர் அவரது பிறந்தநாள் அரசு விழாவாகப் புதுச்சேரி அரசால் அறிவிக்கப் பட்ட பிறகு இந்நாடகம் 19.11.2010 அன்று அரசு விழாவில் புதுவைக் கண்மணி கிரியேஷன்ஸ் குழுவினரால் நடத்தப்பட்டது.

*பதிப்பு:* இந்நாடகம் முழுவதுமாகத் கையெழுத்துப் பிரதியாகவே கிடைத்திருக்கிறது. 1937 ஆம் ஆண்டில் இயற்றப் பட்ட இந்நாடகம் அச்சில் வந்ததாகத் தெரியவில்லை. ஆனால் புதுவை அரசின் கலை பண்பாட்டுத் துறை 2000 ஆவது ஆண்டில் வெளியிட்ட புதுவைச்சிவம் நாடகங்கள் நூலில் இந்நாடகமும் உள்ளது. இந்நாடகத்தின் பதினாறு பாடல்களும் கூடப் புதுவைச்சிவம் நாடகப் பாடல் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.

2007 ஆம் ஆண்டில் காவ்யா பதிப்பகம் வெளியிட்ட 'புதுவைச் சிவம் படைப்புகள்' தொகுப்பு நூலில், மேடை நாடகங்கள் பிரிவில் இந்நாடகம் இடம் பெற்றுள்ளது.

## காந்திமதி (அ) கல்வியின் மேன்மை

*கருத்து:* கல்வியின் சிறப்பையும், ஒழுக்கத்தின் அவசியத்தையும் வலியுறுத்தும் வகையில் இந்நாடகத்தின் கருத்து அமைந்திருக்கிறது. நாகரிகம் என்ற போர்வையில் தீய ஒழுக்கங்களை ஒழுகுவதால் விளையும் தீமையைச் சுட்டிக்காட்டும் விதத்திலும் இந்நாடகக் கருத்து அமைகிறது. பகுத்தறிவின் அடிப்படை கல்வி என்பதால் அனைவருக்கும் கல்வி என்ற திராவிட இயக்கக் கருத்தியலும் இந்நாடகத்தின் மையமாக இழையோடுகிறது.

*கதை:* கோபால் ராம், புவனசுந்தரி தம்பதிகள் செல்வத்தில் திளைப்பவர்கள். வீண் ஆடம்பரம், பகட்டுக்கு அடிமையாகி, நண்பர்களோடு குடிப்பழக்கம், சூதாட்டம், குதிரைப்பந்தயம் என்று பணமும் வாழ்க்கையும் விரயமாகின்றன. தங்கள் பிள்ளையின் படிப்பைக் கவனியாது அவனைத் தங்கள் வழியிலேயே வளர்க்கின்றனர். அவர்களின் வேலைக்காரி காந்திமதி வசவுகளைப் பொறுத்துக் கொண்டு தன் மகனான பாலசுந்தரனை நன்றாகப் படிக்க வைக்கிறாள். நண்பர்களின் சகவாசத்தால் கோபால்ராம் குதிரைப் பந்தயம், தாசி என்று பழக்கப்பட்டுவிடப் புவனசுந்தரியோ கணவனின் நண்பனான வாசுவுடன் ஐக்கியமாகிறாள். வாசு, கோபால்ராமின் வீட்டில் கொள்ளை அடித்து விட்டுப் பழியைக் காந்திமதி மீது சுமத்துகிறான். காந்திமதியைக் கைது செய்யும் காவல் அதிகாரி அவளிடம் விசாரணை செய்து அவளைத் தனி வீட்டில் தங்க வைப்பதன் மூலமாகக் கோபால்ராமின் நண்பர்கள் கண்காணிக்கப் படுகின்றனர். வாசு-புவனசுந்தரி கூட்டணியால் புவனசுந்தரியின் எண்ணப்படி வாசு கோபால்ராமைக் கொன்று விடுகிறான். பின் வாசு புவனசுந்தரியையும் கொல்கிறான். அவனைப் பின் தொடரும் காவலர்கள் வாசுவைக் கைது செய்ய வாசுவிற்குத் தண்டனை கிடைக்கிறது. இறந்துவிட்ட பணக்காரத் தம்பதிகளின் பிள்ளையான தாமோதரன் சொத்துக்களை இழந்து, கல்வியும் கற்காததால் பட்டினியால் பிச்சை எடுக்கிறான். கல்வி கற்று

மேல்நிலையில் இருக்கும் வேலைக்காரி காந்திமதியின் மகனான பாலசுந்தரன் அவனைக் காப்பாற்றுகிறான்.

அமைப்பு: இந்நாடகத்திற்கான கதை உருவாக்கமும், வசனத்துடன் கூடிய இரண்டு முழுமையான காட்சிகளும் மட்டுமே கிடைத்திருக்கின்றன. கதை மொத்தம் பதினெட்டுக் காட்சிகளாகப் பிரித்து எழுதப்பட்டிருக்கிறது. இந்நாடக அமைப்பு, பல கேளிக்கை, நகைச்சுவைக் காட்சிகளைக் கொண்டதாக, ஆரம்பித்து, துரோகம், கொலை என விரிந்து, பல உயிரிழப்புகளுக்குப்பின் உச்சகட்டக் காட்சிகளைக் கொண்டு இறுதியில் இன்பியல் நாடகமாக முடிகிறது. ஒரு திரைப் படத்திற்குரிய அடிப்படைக் கதை இந்நாடகக்கதை அமைப்பிற்கு இருப்பதை இவை எடுத்தியம்புகின்றன. கிடைத்திருக்கும் இரண்டு காட்சி அமைப்புகளில் இடம், கதை மாந்தர் போன்ற விவ ரங்களும், அவ்வப்போது கதை நிகழும் சூழ்நிலையும் குறிப்பு களாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதற்கெனப் பாடல்கள் நாடகத்திலும் இல்லை; தனித் தொகுதியாகவும் இல்லை.

சிறப்பு: கல்வியின் மேன்மையை வலியுறுத்துவதற்காக மட்டுமே இந்நாடகம் உருவாக்கப்பட்டிருக்கிறது. மற்ற நாடகப் படைப்புகளில் திராவிட இயக்கக் கோட்பாடுகள் அனைத்துமோ அல்லது அதிக அளவிலோ காணப்படும் சூழலில் இந்நாடகம் அக்கோட்பாட்டின் ஓரியலை மட்டுமே விரிவு படுத்தி அமைந்திருக்கிறது. அனைவருக்கும் கல்வி என்ற கோட்பாட்டை, திராவிட இயக்கம் அதிகமாக வலியுறுத்தி, விழிப்புணர்வு ஏற்படுத்த முனைந்த காலத்தில் (1940 ஆம் ஆண்டுகளில்) இந்நாடகம் இயற்றப்பட்டிருக் கிறது. சுதந்திரம் பெறாத காலத்தில் பிரிட்டிஷ் ஆட்சியின் கல்விக்கூடங்கள் அதிகம் இல்லாமையைச் சுட்டிக் காட்டும் ஒரு படைப்பாகக் கூட இந்நாடகத்தைக் கொள்ள வாய்ப்பிருக்கிறது. இந்நாடகம் 23.10.2005 அன்று புதுவை அரசு கலை பண்பாட்டுத் துறையினரால் நிகழ்த்தப்பட்ட புதுவைச்சிவம் பிறந்தநாள் விழாவில் கானல் வரி கலைக் குழுவினரால் மேடையேற்றப்பட்டது.

பதிப்பு: இந்நாடகக்கதை அமைப்பும், முழுமையான வச னத்துடன் கூடிய இரண்டு காட்சிகளும் கையெழுத்துப் பிரதியாகக் கிடைத்திருக்கின்றன. இந்நாடகத்தைப் புதுவைச்சிவமோ,

அல்லது மற்ற பதிப்பகத்தினரோ பதிப்பித்தாகத் தகவல்கள் இல்லை. புதுவை அரசு 2000 ஆவது ஆண்டில் தொகுத்து வெளியிட்ட புதுவைச்சிவம் நாடகங்கள் தொகுப்பு நூலில் இந்நாடகம் அச்சாக்கம் பெற்றுள்ளது. 2007 ஆம் ஆண்டில் காவ்யா பதிப்பகம் வெளியிட்ட 'புதுவைச் சிவம் படைப்புகள்' தொகுப்பு நூலில், மேடை நாடகங் கள் பிரிவில் இந்நாடகம் இடம்பெற்றுள்ளது.

**சமூக சேவை**

*கருத்து:* உயர்வு தாழ்வு என்ற பேதம் நீக்கிச் சமத்துவ வாழ்வுக்கான வழியைப் பெண்கல்வி, பகுத்தறிவு, மூடநம்பிக்கை ஒழித்தல், சாதி ஒழிப்பு, பெண்ணுரிமை ஆகியவற்றின் மூலமாக அடையலாம் என்பதே இந்நாடகத்தின் கருத்தாக அமைகிறது. 'சீர்திருத்தம் நாட்டில் செழிப்புறுகிறது' என்ற வரியுடன் இந்நாடகம் முடிகின்றது. இதுவே இந்நாடகத்தின் முழுமைக் கருத்தையும் வெளிப்படுத்துவதாகக் கொள்ளலாம்.

*கதை: 1941*ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட 'சமூக சேவை நாடகப் பாட்டுகள்' என்னும் நூலில் இடம்பெற்றிருக்கும் கதைச் சுருக்கம், அதே நடையிலேயே தரப்பட்டுள்ளது.

> ஓர் ஜமீன் ஆட்சிக்குட்பட்ட பள்ளி மாணவ மாணவிகளிற் சிலர் ஒன்றுகூடிப் 'பகுத்தறிவுச் சங்கம்' தோற்றுவிக்கிறார்கள். அவர்கள் அச்சங்கத்தின் மூலம், மக்களின் மூட நம்பிக்கைகளையும் அறியாமைகளையும் போக்க ஞாயமான முறையில் முயல்கின்றனர். பள்ளிக்கூட மாணவியும், எதிர்காலத்தில் அந்த ஜமீனுக்குப் பட்ட மகிஷியாய் வரப்போகின்ற வளுமான பத்மா என்பவளுக்கும், பகுத்தறிவுச் சங்கத்தைச் சேர்ந்த சீதா என்பவளுக்கும் உயர்வு தாழ்வு பற்றிய வாதம் நடக்க, சீதா தன் சினேகிதையான ஆதிதிராவிடக் கமலா என்பவளைக் கொண்டு உன் ஜாதி உயர்வைப் போக்குகிறேன் என்கிறாள். அதற்குப் பத்மா உங்களிருவரையும் அதோகதியாக்கு கிறேன் எனச் சினந்து, தன் மாமியாகிய

ஜமீன்தாரணியிடம் தனக்கு நேர்ந்த அவமானத்தைக் கூறுகிறாள். உடனே ஜமீன்தாரணி பத்மாவுக்குத் தேறுதல் கூறி, அந்தச் சீதாவையும் கமலாவையும் அழைத்து வரச்செய்து, சவுக்கால் அடித்துச் சிறைவைக் கிறாள். இதைக் கேள்விப்பட்ட சங்கத்தார் வருந்திக் கொண்டிருக்கையில், அவர்கள் நண்பனும், ஜமீன்தார் மகனுமான சுகுணன், தன் செல்வாக்கினால் அவர்களைச் சிறை மீளும்படிச் செய்கிறான். இதையறிந்த ஜமீன்தாரணி ஆத்திரம் அடைகிறாள். மீண்டும் சங்கத்தார் யாவரும் சிறை வைக்கப் படுகின்றனர். பின் அவர்கட்குக் கொடிய தண்டனை விதிக்கின்றனர்.

அச்சமயம் சுகுணன் அவர்கள் குற்றமற்றவர்களென்றும், விசாரணை நடத்த வேண்டுமென்றும் தாய் தந்தையர்களைக் கேட்கிறான். அவர்கள் ஒருப்படவில்லை; பின், அவன் நானும் அக்கொள்கையை உடையவன்; ஆகையால் அத்தண்டனை எனக்கும் உண்டு; முதலில் அத்தண்டனையை என்னிடம் நிறைவேற்றுங்கள் என்கிறான். பெற்றோர்கள் பிள்ளையை இழக்கச் சம்மதிப்பார்களா? மைந்தன் வேண்டுகோட்படி விசாரணை நடைபெறுகிறது. பத்மாவின் வீண் துவேஷங் காரணமாக இச்சம்பவம் நடந்தது என்ற முடிவை அனைவரும் அறிந்தனர். குற்றவாளிகளெனக் கருதப்பட்டோர் விடுதலை பெற்றனர். பத்மா தன் மன்னிப்பைக் கூறிக் காதலனைத் தழுவினாள். சுகுணனுக்கும் பத்மாவுக்கும் திருமணமும் பட்டாபிஷேகமும் நடைபெறுகிறது. சீர்திருத்தம் நாட்டில் செழிப்புறுகிறது.[54]

அமைப்பு: இந்நாடகம் முழுமையான காட்சி அமைப்புகளுடன் மேடை நாடகமாக இயற்றப்பட்டு மேடையேற்றம்

நிகழ்ந்திருக்கிறது. ஆனால் இந்நாடகம் முழுமையாகவோ அல்லது ஒரு காட்சி அமைப்போ கூடக் கிடைக்கவில்லை. இந்நாடகத்தின் பாட்டுகள், அடங்கிய ஒரு வெளியீட்டில் இந்நாடகத்தின் கதைச்சுருக்கம் கிடைத்து, அக்கதைச் சுருக்கமே இங்குக் கையாளப் பட்டிருக்கிறது. இதனுடைய நாடக மூலப்பிரதி கிடைக்காததால், காட்சி அமைப்பு, இடம், காலம், கதை மாந்தர் பற்றிய விவரங்கள் குறித்து ஏதும் குறிப்பிட இயலவில்லை. ஆனால் இந்நாடகம் பலமுறை மேடையேற்றம் செய்யப்பட்டிருப்பதால் இது முழுமை யான காட்சி அமைப்புகளுடன் கூடிய மேடை நாடகமே என்ற முடிவுக்கு வரலாம்.

சிறப்பு: சமூகச் சீர்திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட இந்நாடகம், எதற்காக இயற்றப்பட்டதோ அந்தக் கொள்கைக்காகவே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. புதுவையில் ‘எத்துவால் துய் மத்தேன்’ என்னும் இரவுப் பாடசாலை ஒன்றின் நிதிக்காக இந்நாடகம் 1941 ஆம் ஆண்டில் பலமுறை மேடையேற்றப்பட்டிருக்கிறது. இந்நாடகப் பாட்டுகள் அடங்கிய ஒரு சிறு வெளியீட்டில் இரவுப் பாடசாலைக் கட்டட நிதிக்கான குழு உறுப்பினர் பட்டியலும் கட்டடம் குறித்த ஏனைய விவரங்களும் காணப்படுகின்றன. புதுவைச்சிவத்தின் பல நாடகங்கள் இயக்க நிதிக்காக வும், கல்வியைப் போதிக்கும் கட்டட நிதிக்காகவும் மேடை யேற்றப்பட்டிருக்கின்றன என்பது இந்நாடகம் தொடர்பான வெளியீடுகள் மூலமாகவும், நாடகத் துண்டறிக்கைகள் மூலமாகவும், அதில் நடித்தவர்களின் நினைவலைகளில் இருந்தும் அறிய முடிகிறது.[55]

பதிப்பு: சமூக சேவை என்னும் இந்நாடகம் பலமுறை மேடையேற்றம் கண்டிருந்தாலும் இது நூலாக வெளிவந்ததாகத் தெரியவில்லை. இந்நாடகத்தின் முப்பத்திரண்டு பாட்டுகள் மட்டும் கதைச்சுருக்கத்துடன் 1941 ஆம் ஆண்டில் இந்நாடகத்தை நடத்தியவர்களால் வெளியிடப்பட்டுள்ளன. பாடசாலைக் கட்டடக் குழுவினர்களும் இவர்களே. 2000 ஆவது ஆண்டில் புதுவை அரசின் கலை பண்பாட்டுத்துறை தொகுத்து வெளியிட்ட புதுவைச்சிவம் நாடகங்கள் நூலில் சமூகசேவை நாடகத்தின் கதைச்சுருக்கமும், நாடகப் பாடல்களும் முழுமையாக இடம் பெற்றுள்ளன. 2007 ஆம் ஆண்டில் காவ்யா பதிப்பகம்

வெளியிட்ட 'புதுவைச் சிவம் படைப்புகள் தொகுப்பு நூலில், மேடை நாடகங்கள் பிரிவில் இந்நாடகம் இடம்பெற்றுள்ளது.

## புதிய வாழ்வு

*கருத்து:* பழமையும், மடமையும் சாகடிக்கப்பட வேண்டும்; சாதிபேதங்கள் அழிய வேண்டும்: புது உலகம் காண வேண்டும்; அதில் பெண்களுக்கு முழு உரிமையும் அனைவருக்கும் கல்வியறிவும் நிலவ வேண்டும்; இவற்றை நிறைவேற்றச் சீர்திருத்த இயக்கம் எங்கணும் பரவவேண்டும் ஆகிய இலட்சியங்களை அடிப்படை யாகக் கொண்டு இந்நாடகம் இயற்றப்பட்டுள்ளது. 'எல்லோரும் புதுவாழ்வுபெற நாட்டிலே சீர்திருத்தத் தொண்டாற்றுவோம் வாருங்கள்' என்ற அழைப்புடன் இந்நாடகம் நிறைவுபெறுகிறது. 'புதியதோர் உலகம் செய்வோம்' என்ற பாரதிதாசனின் அழைப்பையும், 'இனியொரு விதி செய்வோம்' என்ற பாரதியாரின் சூளுரையும் சேர்ந்த ஒரு நாடகப் படைப்பாகப் புதிய வாழ்வு என்னும் இந்நாடகம் படைக்கப் பட்டிருக்கிறது.

*கதை:* படித்த இளைஞர்கள் ஒன்று கூடிப் பகுத்தறிவுக் கழகம் மூலமாகச் சீர்திருத்தப் பிரச்சாரம் செய்கிறார்கள். இக்கழகத்தைச் சேர்ந்த செழியனை இவ்வியக்கக் கொள்கையை ஏற்றுக் கொண்ட ஏழைப்பெண் பூங்கொடி காதலிக்கிறாள். பகுத்தறிவுக் கொள்கைக்கு எதிரானவரும், செழியனின் அண்ணனுமான சேர்மன் சிங்காரம் பிள்ளை இந்தக் காதலை எதிர்க்கிறார். பூங் கொடியை இரண்டாம் தாரமாக மணம் முடிக்க உலகநாத முதலி முயற்சி செய்து அது முடியாததால் சிங்காரம் பிள்ளையின் உதவியை நாடுகிறார். சிங்காரம் பிள்ளை பூங்கொடியின் தாயை அழைத்து உலகநாத முதலி-பூங்கொடி திருமணத்திற்கு வற்புறுத்துகிறார். திருமணம் பிடிக்காமல் பூங்கொடி, சுற்றுப்பயணத்தில் இருக்கும் செழியனுக்கு இத்தகவலைத் தெரிவிக்கிறாள். பூங்கொடியை அடியாட்கள் மூலமாகக் கவர்ந்து தம் இல்லத்தில் சிறை வைக்கிறார் உலகநாத முதலி. அவரது விதவை மகளான கோமதி பூங்கொடிக்கு ஆறுதல் கூறித் தேற் றுகிறாள். சீர்திருத்த இயக்கத்தைச் சேர்ந்த நெடுமாறனைத் தான் காதலிப்பதாகக் கோமதி தெரிவிக்கிறாள். பூங்கொடியும் அதை ஆதரிக்க இருவரும் தப்பிச் செல்ல முடிவெடுக்கின்றனர். சேர்மன்

சிங்காரம் பிள்ளையும், உலகநாதமுதலியும் ஏற்படுத்தும் பல்வித இன்னல்களை எதிர் கொண்டு, நண்பர்களின் துணையோடு செழியனும் பூங்கொடியும் இணைகின்றனர். நெடுமாறன் கோமதியை மறுமணம் செய்து கொள்கிறான். பகுத்தறிவுக் கழகத்தில் இவர்களது சீர்திருத்தத் திருமணத்தைக் கழகத்தின் தலைவர் நடத்தி வைக்கிறார்.

**அமைப்பு:** இந்நாடகம் இருபத்தைந்து காட்சி அமைப்புகளைக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு காட்சிக்கும் இடம், கதை மாந்தர் விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. கதை நிகழும் சூழ்நிலை ஒவ்வொரு காட்சியின் ஆரம்பத்திலும் மற்றும் தேவைப்பட்ட இடங்களிலும் குறிக்கப்பட்டுள்ளது. முழுவதும் மேடை நாடகமாகவே இயற்றப்பட்டுள்ள இந்நாடகத்தில் பாடல்கள் ஏதும் குறிப்பிடப்படவில்லை. தனித் தொகுதியாகவும் இல்லை.

**சிறப்பு:** முழு மேடை நாடகமாகவும், முழுமையான சமூகச் சீர்திருத்த நாடகமாகவும் இது இயற்றப்பட்டுள்ளது. இயக்கத்தைப் பற்றிய செய்திகள் நேரடியாகவே இதில் சொல்லப்பட்டிருக்கின்றன. ஏனைய நாடகங்களில் பகுத்தறிவுச் சங்கம், சீர்த்திருத்தச் சங்கம் என்று குறிப்புகள் வந்தாலும், இந்நாடகத்தின் நிகழிடங்களில் ஒன்று திராவிட முன்னேற்றக் கழகம் என்றே சுட்டப்படுகிறது. கையெழுத்துப் பிரதியில் அவ்வாறு சுட்டப்படுவது, 2000 ஆவது ஆண்டில் வெளியிடப்பட்ட புதுவைச்சிவம் நாடகத் தொகுப்பில் திருக்குறள் முன்னணிக் கழகமாகப் பெயர் மாற்றம் செய்யப் பட்டிருகிறது. இந்நாடகம் தமிழர் முன்னேற்ற நாடக மன்றத்தாரால் மேடையேற்றம் செய்யப்பட்ட தகவல்கள் கிடைத்திருக்கின்றன. இந்நாடகம் பின்னர் 23.10.2002 அன்று புது வை அரசு நடத்திய புதுவைச்சிவம் பிறந்த நாள் விழாவில், கட்டியக்காரன் கலைக்குழுவினரால் நடிக்கப்பட்டது.

**பதிப்பு:** இருபத்தைந்து காட்சி அமைப்புகளுடன் முழுமையான அளவில் இந்நாடகம் கையெழுத்துப் பிரதியாகவே கிடைத்துள்ளது. திராவிட முன்னேற்றக் கழகம் என் ற பெயர் காட்சி அமைப்புகளில் குறிக்கப்படுவதால் தி.மு.க. தோற்றம் பெற்ற 1949 ஆம் ஆண்டுக்குப் பிறகே இந்நாடகம்

இயற்றப்பட்டிருக்கக்கூடும். எனவே இதன் உருவாக்கக் காலம் 1949 - 1955 என்பதாக இருக்கக்கூடும். 2000 ஆவது ஆண்டில் புதுவை அரசின் கலை பண்பாட்டுத்துறை தொகுத்து வெளியிட்ட நூலில் புதிய வாழ்வு நாடகமும் இடம்பெற்றிருக்கிறது. இதற்கு முன்னர் இது அச்சில் வந்ததாகத் தெரியவில்லை. 2007 ஆம் ஆண்டில் காவ்யா பதிப்பகம் வெளியிட்ட 'புதுவைச் சிவம் படைப்புகள்' தொகுப்பு நூலில், மேடை நாடகங்கள் பிரிவில் இந்நாடகம் இடம் பெற்றுள்ளது.

**மூன்று பெண்கள்**

**கருத்து:** வைதீகத்தையும், குருட்டு நாகரிகத்தையும் விட, சீர்திருத்தப் பாதையே சிறந்தது என்னும் கருத்தே இந்நாடகத்தின் அடிப்படைக் கருத்து. பகுத்தறிவை முழுமையாகக் கடைப்பிடிக் கின்ற பெண்ணே வாழ்வில் வெற்றிபெறுகின்றாள் எனும் கருத்தமைத்து அதன் மூலம், பெண்ணுரிமை, பெண்கல்வி, மண உரிமை, வைதிக எதிர்ப்பு, சாதி, மத எதிர்ப்பு ஆகிய கொள்கைகளைப் பார்வையாளர்களிடம் கொண்டு சேர்க்கும் நோக்கத்தோடு இந்நாடகம் ஆக்கப்பட்டுள்ளது.

**கதை:** குருட்டு நாகரிகம், வைதீகம், சீர்திருத்தம் ஆகிய வழிகளைக் கடைப்பிடிக்கும் மூன்று மாணவிகள் தங்கள் வழியே சிறந்தது என்று சபதம் செய்து பிற்காலத்தில் மீண்டும் சந்திப்போம் என்று கூறிப் பிரிகிறார்கள். குருட்டு நாகரிகத்தைப் பின்பற்றும் லீலா காதலில் மூழ்கி, காதலனால் ஏமாற்றப்பட்டு, பிறகு தன் காதலன் பாஸ்கரனைக் கொலை செய்யவும் துணிகிறாள். வைதீகப் பெண்ணான பார்வதி ஒரு மருத்துவரை மணக்கிறாள். அவருடன் வேலை பார்க்கும் செவிலியின் மேல் சந்தேகமடைந்து தன் கணவனுடன் அடிக்கடி சண்டை போடுகிறாள். இதனால் கணவனும் மனைவியும் பிரிகின்றனர். மருத்துவர் செவிலியைத் திருமணம் செய்து கொள்கிறார். சீர்திருத்தப் பெண்ணான பொன்மணி, பகுத்தறிவு இதழ் நடத்தி வரும் நக்கீரனை மணந்து ஊரூராகச் சீர்திருத்தப் பிரச்சாரம் செய்து வருகிறாள். மாணவப் பருவத்தில் பேசிக் கொண்டபடி மூவரும் பிற்காலத்தில் சந்திக்கின்றனர். முடிவில் சீர்திருத்த வழியே

சிறந்தது என்று பொன்மணி கூற அனைவரும் அதை ஆமோதிக்கின்றனர்.

***அமைப்பு:*** இந்நாடகத்திற்கான காட்சி பிரிக்கப்பட்ட கதை அமைப்பும், நாடகத்தின் ஒரே ஒரு காட்சியும் கிடைத்துள்ளன. நாடகக் கதை மொத்தம் இருபத்தேழு காட்சிகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு காட்சிக்கும் உண்டான கதையமைப்பையும், சூழலையும், கதை மாந்தரையும் குறிப்பிட்டுச் செல்கிறது. மேடை நாடகமாக ஒரே ஒரு காட்சி மட்டும் முழுமையாகக் கிடைத்திருக்கிறது. அதில் இடம், கதை மாந்தர் குறிப்புகளும், வசனங்களும் ஒரு விரிவான மேடை நாடக ஆக்கத்தைப் புலப்படுத்துகின்றன. பாடல்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை. நாடகக்கதையில் மூன்று பெண்களாகக் குறிக்கப்படும் லீலா, பார்வதி, பொன்மணி ஆகியோர் நாடகக் காட்சியில் முறையே வசந்தா, பார்வதி, மதியழகி என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். பெயரைத்தவிர இவர்களுடைய தன்மைகளில் நாடகக் கதைக்கும், நாடகக் காட்சிக்கும் எந்தவித மாற்றமுமில்லை.

***சிறப்பு:*** காதல், சோகம், தனிமை, தன்னிரக்கம், பெருமிதம், எனப் பல்வேறு சுவைகளைக் கொண்டு இந்நாடகம் விளங்குகிறது. கொலைநிகழ்வும், அதைக் கண்டு பிடிக்கும் துப்பறிவாளரின் முயற்சிகளும், இந்நாடகத்தைத் திரைப்படக் கதையம்சம் கொண்டதாகக் கருதவைக்கின்றன. பகுத்தறிவுக் கருத்துக்களே சிறந்தவை என்று நிறுவ முயலும் அதே சமயத்தில், நாகரீகம் என்ற போர்வையில் சட்டத்திற்குப் புறம்பான செயல்கள் நிகழ்வதையும், வைதிகத்தின் பழமை மாறாத்தன்மையினால் பெண்களின் நிலை அவதிக்குள்ளாவதையும் கதையின் இரு முக்கியமான பாத்திரங்கள் மூலமாகப் புலப்படுத்துகிறார் ஆசிரியர். நாடகத்தின் இருபத்தேழு காட்சி அமைப்புகளையும் வைத்துக் காணும் பொழுது, இந்நாடகம் திரைப்படத்தை மனதிற்கொண்டு எழுதப் பட்டிருக்கலாம் என்று கொள்ளவே வாய்ப்பிருக்கிறது. இந்நாடகத்தின் மேடையேற்றம் குறித்த விவரங்கள் கிடைக்கவில்லை. இது 1945 ஆம் ஆண்டிலிருந்து 1950 ஆம் ஆண்டுக்குள் இயற்றப்பட்டிருக்கக்கூடும் என்று பதிப்பு நூல் மூலம் தெரியவருகிறது.

**பதிப்பு:** இந்நாடகத்தின் முழுக்கதை அமைப்பும், ஒரே ஒரு காட்சி அமைப்பும் கையெழுத்துப் பிரதியாகக் கிடைத்திருக் கின்றன. இது பதிப்பாக்கம் பெற்றது குறித்த விவரங்கள் காணப்படவில்லை. 2000 ஆவது ஆண்டில் புதுவைஅரசு தொகுத்து வெளியிட்ட புதுவைச்சிவம் நாடகங்களின் தொகுப்பு நூலில் இந்நாடகக்கதையும், ஒரே ஒரு காட்சி அமைப்பும் இடம் பெற்றுள்ளன. 2007 ஆம் ஆண்டில் காவ்யா பதிப்பகம் வெளியிட்ட 'புதுவைச் சிவம் படைப்புகள்' தொகுப்பு நூலில், மேடை நாடகங்கள் பிரிவில் இந்நாடகம் இடம் பெற்றுள்ளது.

## சிதைந்த வாழ்வு

**கருத்து:** மூட நம்பிக்கையினால் ஏற்படும் விளைவுகளைச் சுட்டிக் காட்டுவதே இந்நாடகத்தின் மையக் கருத்தாக அமைந்திருக்கிறது. சாதியும், பெண்ணடிமை போன்ற பிற சமூகக் கட்டுப்பாடுகளும் ஆதிக்கம் செலுத்துவதன் காரணமாகத் தன் காதல் நிறைவேறாமல் கொடுமைக்காளாகிக் கதைநாயகி இறந்து போவதாகவும், அதைச் சகியாது மனஞ்சிதைந்த கதைநாயகன் தற்கொலை செய்து கொள்வதாகவும் இந்நாடகக் கருத்து அமைந்திருக்கிறது. இவ்விருவரின் சோக முடிவுக்கும் சமூக அநீதியே காரணம் என்ற கருத்து இதில் வலியுறுத்தப் பட்டிருக்கிறது.

**கதை:** நான்கு வயதில் தன் தாயைப் பிரிந்த அஞ்சுகம் ஒரு வீட்டில் வேலை செய்து வருகிறாள். அவ்வீட்டு எஜமானனின் மகனான வேணுவும், அறிவழகனும் பாடசாலை நண்பர்கள். வேணுவைத் தேடி அவன் வீட்டுக்கு வரும் அறிவழகன் அஞ்சுகத்தின் மீது இரக்கம் காட்டிப் பேச நாளடைவில் காதல் வளர்கிறது. அஞ்சுகத்தை மணம் செய்ய விரும்பும் அறிவழகன், பெற்றோரிடம் கூற அவர்கள் சாதியைக் காரணம் காட்டி ஏற்க மறுக்கின்றனர். அதை எதிர்க்கும் அறிவழகனை, அஞ்சுகத்தின் தாய் விபச்சாரி என்று பொய்யாகக் கூறி அவனது பெற்றோர்கள் வேறொரு திருமணத்திற்கு வற்புறுத்துகின்றனர். ஒருநாள் தன்னைப் பலாத்காரம் செய்ய முயலும் வேணுவிடமிருந்து தப்பிவரும் அஞ்சுகத்தைச் சந்திக்கும் அறிவழகன், அவளது தாய்

பற்றிய உண்மையை அறிந்து அஞ்சுகத்தையே மணக்க முடிவெடுத்து அவளைத்தன் வீட்டுக்கு அழைத்துச் செல்கிறான். அறிவழகனின் பெற்றோர் அஞ்சுகத்தை அடித்து விரட்டி விட, அவளை ஒரு கிழவி, காப்பாற்றித் தன் வீட்டில் தங்க வைக்கிறாள். அவளைத் தேடி வரும் அறிவழகனையும், கிழவி வீட்டில் தங்கியிருக்கும் அஞ்சுகத்தையும் வேணு கடத்திச் சென்று வைக்கிறான். அங்கிருந்து தப்பும் இருவரும் ஒரு சோலையில் நின்று மணம் முடித்துக் கொள்ள உறுதி கொள்கின்றனர். ஆனால் அங்கு வரும் அறிவழகனின் தந்தையும் அவரது ஆட்களும் அஞ்சுகத்தை அடித்துப் போட்டுவிட்டு அறிவழகனைத் தூக்கிச் சென்று திருமணம் செய்து வைக்கின்றனர்.

பலத்த காயம்பட்டு மருத்துவமனையில் படுத்திருக்கும் அஞ்சுகத்தின் வாக்கு மூலத்தால் அறிவழகனின் தந்தை உட்பட அவரது அடியாட்களுக்கும் தண்டனை விதிக்கப்படுகிறது. மருத்துவமனையில் தன்னைக் கவனிக்கும் செவிலிதான் தன் தாய் என்றறிந்து அவளை அறிவழகனிடம் தூதனுப்புகிறாள் அஞ்சுகம். அறிவழகன் மருத்துவமனை வர அஞ்சுகம் இறந்து விடுகிறாள். இதனால் மனம் தாளாத அறிவழகன் மலையுச்சியில் இருந்து விழுந்து உயிர் துறக்கிறான்.

**அமைப்பு:** இருபத்தாறு காட்சிகளாக இந்நாடகம் அமைக்கப்பட்டிருக்கிறது. இடம், காலம், கதைமாந்தர், கதை நிகழும் சூழல், காட்சி அமைப்பு ஆகியவை ஒவ்வொரு காட்சியிலும் தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளன. நாடகத்தின் நிறைவில் ஒரே ஒரு பாடல் (மெட்டுடன் கூடியது) காணப்படுகிறது. இது தவிர, சிதைந்த வாழ்வு நாடகப் பாட்டுகள் என்னும் கையெழுத்துப் பிரதியில் இந்நாடகக் கதை மாந்தர் பெயர்கள் குறிப்பிடப்பட்டுப் பதினேழு பாடல்கள் அடங்கியுள்ளன. புதுவைச்சிவம் மேடை நாடகங்களில் துன்பியலில் முடிவதாக அமைக்கப்பட்டுள்ள நாடகம் இதுவேயாகும்.

**சிறப்பு:** இந்நாடகம் பலமுறை மேடையேற்றம் கண்டிருக்கிறது. மூடநம்பிக்கை ஒழிப்பை மையப்படுத்தும் கருத்தில் அமைந்த நாடகம் என்பதால் இயக்கத் தோழர்களால்

இந்நாடகம் பலமுறை புதுவை, தமிழகப் பகுதிகளில் மேடையேற்றப் பட்டிருக்கிறது. இதற்கான துண்டறிக்கைகளும் கிடைத்துள்ளன. இந்நாடகம் பலமுறை இயக்கத்தினரால் விழைந்து நடத்தப்பட்ட செய்திகள் மூலம், இது திராவிடஇயக்கக் கருத்தியிலைப் பரப்பும் பிரச்சார உத்தியில் அமைந்த மேடை நாடகம் என்று குறிப்பிடலாம்.

பதிப்பு: இந்நாடகம் புதுவைச்சிவத்தின் ஞாயிறு நூற்பதிப் பகத்தால் 1951 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டிருக்கிறது. ஆனால் இந்நாடகம் 2000 ஆவது ஆண்டு வரை கிடைக்காத நிலை புதுவைஅரசு கலை பண்பாட்டுத்துறை வெளியிட்ட 'புதுவைச் சிவம் நாடகங்கள்' நூல் மூலம் தெரியவருகிறது. இந்நாடக நூலுக்கான அட்டைப்படம் மட்டும் கிடைத்துள்ளது என்று புதுவைச்சிவம் நாடகங்கள் தொகுப்பு நூலின் பின் அட்டை தெரிவிக்கிறது. புதுவையின் பழம் பெரும் ஓவியர் ஏ. எஸ். வாசன் இந்த அட்டைப் படத்தை வரைந்திருக்கிறார். அதில் கண்ணீருடன் கதியற்றுத் தோன்றும் கதைநாயகியின் உருவமும், ஒரு பெண் மருத்துவமனையில் படுக்கையில் படுத்திருக்கும் காட்சியும், மின்னல் வெட்ட, மரக்கிளை முறிந்து வீழ, கிளை மீது இருந்த இரு புறாக்களும் கிளையின் அடியில் நசுங்கிக் கிடப்பதுபோன்ற காட்சியும், மலை உச்சியில் இருந்து ஒருவன் (கதைநாயகன்) குதிப்பது போன்ற காட்சியும் இவ்வட்டைப் படத்தில் காணப்படுகின்றன. இது ஏறக்குறைய இந்நாடகக் கதையமைப்பை விளக்குவதாக அமைந்திருக்கிறது. இவ்வாய்வுக்கான தேடலில் 2006 ஆம் ஆண்டில் இந்நாடகத்தின் முதல் பதிப்பு நூல் கிடைத்துப் புதுவைச்சிவம் நாடகங்கள் குறித்த ஆய்வைச் செழுமை பெற வைத்திருக்கிறது.[66] 2007 ஆம் ஆண்டில் காவ்யா பதிப்பகம் வெளியிட்ட 'புதுவைச் சிவம் படைப்புகள்' தொகுப்பு நூலில், மேடை நாடகங்கள் பிரிவில் இந்நாடகம் இடம் பெற்றுள்ளது.

**நிலம் யாருக்குச் சொந்தம்**

கருத்து: ஏழை மக்களின் தேவைகளைச் சுட்டிக் காட்டி அரசியல் கட்சிகள் போராட்டம் நடத்துகின்றன. ஆனால்

போராட்டம் என்ற பேரில் பலாத்காரமான வழிகளைக் கடைப்பிடித்தல் சட்டத்திற்குப் புறம்பான செயலாகும்; மேலும் அது பலத்காரப் பரவலுக்கே வழிவகுக்கும் என்ற கருத்தை வலியுறுத்தும் முகமாக இந்நாடகம் இயற்றப்பட்டுள்ளது.

**கதை:** ஓர் அரசியல் கட்சி நடத்துகின்ற நிலம் பறிப்பு இயக்கத்தில் கலந்து கொண்ட முனிசாமி, அதன் மூலம் தனக்கு ஒரு காணி நஞ்சை நிலம் கிடைத்த மகிழ்ச்சியைத் தன் மனைவி இராணியுடன் பங்கிட்டுக் கொள்கிறான். இராணி தன் மூக்குத்தியை அடகு வைத்துக் கொடுக்க நிலத்தை உழ ஆரம்பிக்கிறான் முனிசாமி. கந்தசாமி முதலியாரின் நிலமான அதைக் குத்தகைக்குப் பயிர் வைக்கும் காத்தான் அங்கு வந்து முனிசாமியைத் தடுக்கிறான். முனிசாமி தன் செயலை நியாயப்படுத்தக் காத்தான் தானும் தற்போது நிலமற்றவன்; எனவே இதை நான் பறித்துக் கொண்டேன் என்கிறான். இருவருக்கும் வாக்குவாதம் முற்றுகிறது. முடிவில் கை கலப்பு ஏற்பட்டுக் காத்தான் முனிசாமியை அடித்துத் துரத்தி விடுகிறான். தப்பி ஓடும் முனியன் மனைவி இராணியிடம் சேதியைச் சொல்ல அவளோ தன் மூக்குத்தியும் போனதை எண்ணிப் புலம்புகிறாள்.

**அமைப்பு:** இந்நாடகம் இரண்டே காட்சிகளில் விரிந்து முடிகின்றது. கதை மாந்தர், காலம், நிகழிடம் போன்றவை எவையும் காட்சி அமைப்பில் இடம் பெறவில்லை. திடீரென்று முனிசாமி, அவன் மனைவி இராணி ஆகியோருக்குள் நிகழும் உரையாடலாகத் தொடங்கும் இந்நாடகம், அடுத்த காட்சியில் முனிசாமி, காத்தான் உரையாடலுடன் முடிவடைகிறது. நாடக இலக்கணத்திற்குக் கட்டுப்படாத அமைப்பில், ஒரு நிகழ்வை அங்கத மதிப்பீடு செய்வதற்காக நாடகமாக வலிந்து எழுதப்பட்ட போக்கையே இதில் காணமுடிகிறது.

**சிறப்பு:** 1970 ஆம் ஆண்டில் இந்நாடகம் இயற்றப்பட்டுள்ளது. அப்போது புதுவைச்சிவம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினராக இருந்துள்ளார். அக்கட்சி புதுச்சேரியில் ஆளுங்கட்சியாக இருந்துள்ளது. அதனோடு கூட்டணி சேர்ந்து ஆட்சி அதிகாரத்திலும் பங்கு கொண்ட ஓர் அரசியல் கட்சி, 1970 ஆம்

ஆண்டில் அறிவித்த நிலம் பறிப்புப் போராட்டம் ஆளுங்கட்சிக்கு எதிரானது என்று தி.மு.க. கருதியது. அதனால் அப்போராட்டத்தை விமர்சித்து இந்நாடகம் எழுதப்பட்டுள்ளது. திராவிட இயக்கக் கருத்தியலை விளக்கும் இதற்கு முன்பான நாடக வரிசையில் இதைச் சேர்க்க முடியாத அளவில் இந்நாடகம் முழுமையான அரசியல் கண்ணோட்டத்தோடும், அங்கதத் தன்மையோடும் எழுதப்பட்ட எதிர்ப்போராட்ட முயற்சியே எனலாம்.

*பதிப்பு:* 1970 ஆம் ஆண்டுகளில் புதுச்சேரியில் இருந்து வெளிவந்த 'போர்வாள்' என்னும் மாதமிருமுறை இதழில் 1.9.1970, 15.9.1970 ஆகிய இதழ்களில் இந்நாடகம் தொடராக வெளிவந்தது. இவ்விதழின் சிறப்பாசிரியரான புதுவைச்சிவம், இந்நாடகத் தொடரைச் 'செஞ்சுடரோன்' என்ற புனைபெயரில் எழுதியுள்ளார். இந்நாடகம் இதுவரை நூலாக்கம் பெறவில்லை. 2007 ஆம் ஆண்டில் காவ்யா பதிப்பகம் வெளியிட்ட 'புதுவைச் சிவம் படைப்புகள்' தொகுப்பு நூலில், குறு நாடகங்கள் பிரிவில் இந்நாடகம் இடம்பெற்றுள்ளது.

## ஒவ்வா மணம்

*கருத்து:* இருபதாம் நூற்றாண்டின் முற்பாதியில் பெண்ணடிமைச் சீர்கேடுகள் இந்தியச் சமுதாயம் முழுமையும் பரவியிருந்தன. குழந்தை மனக் கண்டனம், விதவை மறுமணம் ஆகிய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் தீர்மானங்களை அரசியல் கட்சிகளில்கூட முன்வைக்க வேண்டிய கட்டாயத்தை இந்தியச் சமுதாயம் ஏற்படுத்தியிருந்தது. சமுதாயச் சீர்கேடுகளை முன்வைத்துப் போராடிய திராவிட இயக்கத்தினர் குழந்தை மணக் கொடுமைகளை எதிர்த்ததுடன் விதவை மறு மணங்களைப் பெரிதும் ஆதரித்துத் தங்கள் இயக்க மேடைகளிலேயே அது போன்ற திருமணங்களை நடத்தி வைத்தனர். மேலும், பொருந்தா மணக் கண்டனமும் திராவிட இயக்கத்தின் கொள்கையாகவே இருந்தது. இக்கருத்தை வலியுறுத்தும் வகையிலேயே இச் செய்யுள் நாடகம் புதுவைச் சிவத்தால் இயற்றப்பட்டுள்ளது.

*கதை:* ஒரு தாயும், தந்தையும் தங்களின் இளவயதுப் பெண்ணுக்கு வயது முதிர்ந்த மாப்பிள்ளையைத் தேர்ந்தெடுக்

கின்றனர். அவன் செல்வந்தன் ஆதலால் தங்கள் குடும்பத்தின் இன்னல் தீர்ந்து குடும்பம் நன்னிலையடையும் என்று மகளைத் தேற்றுகின்றனர். ஆனால் மகளோ தனக்குத் கிழவன் வேண்டாம்; இளமையும், அழகும் வாய்ந்த படித்த ஒருவனே தனக்கு மணாளனாக வேண்டும் என்ற தன் விருப்பத்தை முறையிடு கின்றாள். அதற்குத் தந்தை கோபமுற்று நரைத்த கிழவனே மணவாளன் என்று அறுதியிட்டுக் கூறுகின்றார். மணநாள் நெருங்குகிறது. மகளோ மண உரிமை மறுக்கப்பட்டதை எண்ணி மருகுகின்றாள். உலகப் பெண்கள் உரிமையுடன் வாழ, கடுமூட வழக்கங்கொண்ட இம்மண்ணில் மண உரிமை இல்லாத பெண்கள் மரணத்தைத் தழுவுதலன்றி வேறு மார்க்கமில்லை என்று கூறி இறப்பதேதான் தனக்கு இன்ப வாழ்வு என்று முடிக்கின்றாள்.

அமைப்பு: இச்செய்யுள் நாடகம் முழுவதும் ஒரு காட்சி அமைப்பில் இயற்றப்பட்டுள்ளது. இரண்டு அங்கமாகப் பிரிக்கப்பட வேண்டிய தேவை இருப்பினும் ஓரங்க நாடகமாகவே, காட்சிகள் குறிக்கப்படாமல், ஆசிரியப்பா வகையில் இந்நாடகம் அமைக்கப்பட்டுள்ளது. தாய், தந்தை, மகள் ஆகிய மூன்றே பேர் இடம் பெற்றுள்ள இக் காட்சியில் யாருக்கும் பெயர் சுட்டப் படாமல் அதேநேரம் தாய், தந்தையரின் கோபம், மகளின் அழுகை, தனிமை ஆகியவை நாடக அமைப்பில் தனியே சுட்டப்பட்டுள்ளன. பெற்றோர் சோபாவில் அமர்ந்திருத்தலும், மகள் நிற்பதுமான காட்சி அமைப்பும் சுட்டப்பட்டுள்ளது.

சிறப்பு: கவிதை இதழாகவே நடத்தப்பட்ட ஓரிதழுக்காகச் செய்யுள் நாடகமாக இது இயற்றப்பட்டுள்ளது. இதழின் தன்மைக்கும், இயக்கத்தின் கொள்கைக்கும் ஏற்ப ஒரு கதையைச் சுருக்கமாக, நாடக வடிவில், கவிதை நயத்தோடு சொல்லும் புதுமையைப் புதுவைச் சிவம் இதில் வெளிப்படுத்தியிருக்கிறார். பொருந்தா மணத்தை எதிர்க்கும் அதே நேரம், உலக நாடுகளில் உரிமை பெற்றுள்ள பிறநாட்டு மகளிரைப் போல் பெண்களுக்கு மண உரிமையை வலியுறுத்தும் வகையிலும், கல்வியை வலியுறுத்தும்

வகையிலும், மூட நம்பிக்கைகளை வெளிச்சம் போட்டுக் காட்டும் வகையிலும் இக்குறு செய்யுள் நாடகத்தைப் புதுவைச்சிவம் வடிவமைத்துள்ளார்.

**பதிப்பு:** இச்செய்யுள் நாடகம், பாரதிதாசனை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த 'ஸ்ரீசுப்ரமணிய பாரதி கவிதா மண்டலம்' என்னும் கவிதை மாத இதழில், 1935 ஆம் ஆண்டு சித்திரை மாத இதழில் வெளிவந்துள்ளது. இதற்குப் பிறகு 2007 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் காவ்யா பதிப்பகம் வெளியிட்ட 'புதுவைச்சிவம் படைப்புகள்' நூலில் செய்யுள் நாடகங்கள் பகுதியில் இச்செய்யுள் நாடகம் இடம் பெற்றுள்ளது.

## மோட்சப் பித்து

**கருத்து:** பொதுவாகச் சமூகச் சீர்திருத்தமும், பகுத்தறிவுப் பிரச்சாரமுமே தமது படைப்பின் நோக்கங்களாகப் புதுவைச் சிவம் கொண்டிருந்திருக்கிறார். இந்நிலையில் அவ்வப்போது ஏற்படும் சமூக நிகழ்வுகளையும், இயற்கை நிகழ்வுகளையும் தன்னிச்சையாகப் பதிவு செய்யும் போதும், அவற்றையும் சமூகச் சீர்திருத்தக் கண்ணோட்டத்தினோடேயே அவர் அணுகியிருப்பதை இச்செய்யுள் நாடகத்தின் கருத்து விளக்குகிறது. ஒரு பூகம்பத்தினால் பல்லாயிரம் உயிரிழப்பு ஏற்படும்போது அந்நிகழ்வை ஆண்டவன் சாபமாகப் பெரும்பாலானோர் கருதிய காலத்தில், ஊடகங்களும் அவ்வாறே கருத்துத் தெரிவித்த காலத்தில், அதே நிகழ்வைப் பகுத்தறிவின் அடிப்படையில் நோக்குவதால் விளையும் கருத்தின் வெளிப்பாடாக இச்செய்யுள் நாடகம் அமைந்துள்ளது.

**கதை:** ஒரு தந்தைக்கும் மகனுக்கும் உரையாடல் நடக்கிறது. நிறையத் தவங்கள் செய்து பெற்ற தன் மகனிடம், தான் செத்த பின் மோட்சம் போவதற்கான சடங்குகளைச் சரிவரச் செய்வாயோ எனத் தந்தை கேட்கிறார். தந்தையின் நோக்கம் அறிந்த தனயன், தந்தை மோட்சம் போகத் தான் சடங்குகள் செய்வது ஒருபுறம் இருக்க, குவட்டாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தினால் ஐம்பதாயிரம் மக்கள் இறந்து விட்டனரே,

அவர்களெல்லாம் மோட்சம் போக என்ன செய்வார்கள்? அவர்கள் அனைவரும் மோட்சம் போவதற்கான திதிகளை யார் அனுப்புவார்கள் என வினவுவதோடு நாடகம் முடிவடைகிறது.

**அமைப்பு:** இச்செய்யுள் நாடகம் ஓரங்க நாடகமாக இயற்றப்பட்டுள்ளது. தந்தை - மகன் சம்பாஷணை என்ற விவரமும், தந்தையின் உரையாடலும், மகனின் பதிலும் தனித்தனியே குறிப்புகளுடன் அமைக்கப்பட்டுள்ளன. அறுசீர் விருத்த அமைப்பில் நான்கடிகள் கொண்ட ஒரு விருத்தம் தந்தையின் கேள்வியாகவும், மேலும் நான்கடிகள் கொண்ட ஒரு விருத்தம் மகனின் பதிலாகவும் அமைக்கப்பட்டுள்ளது. வேறு விளக்கங்கள் ஏதும், காட்சி வரிசை உட்பட, குறிப்பிடப்படவில்லை.

**சிறப்பு:** 1935 ஆம் ஆண்டு சூன் மாதம் முதல் நாளன்று பலுசிஸ்தானத்தில் (பாகிஸ்தான்-ஆப்கானிஸ்தான் எல்லைப்பகுதி) உள்ள குவெட்டா நகரில் அதிகாலை ஏற்பட்ட நிலநடுக்கத்தினால் ஐம்பதினாயிரத்திற்கும் அதிகமான மக்கள் மாண்டனர். அது ஒரு பிரிட்டிஷ் இராணுவத் தளமாகவும் இருந்தது. ஆயிரக்கணக்கில் மாண்டுபோன பொதுமக்கள், இராணுவ வீரர்களின் உடல்கள் ஒரு வாரமாகியும் அகற்றப்படவில்லை. அன்றைய போக்குவரத்து, தொலைத் தொடர்புத் துறை வசதிகளைக் கொண்டு இச்செய்தி வெளி உலகத்திற்குத் தெரியவே பல நாள்கள் ஆயின. செய்தி பரவியபின் பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்திலிருந்த நாடுகளில் இச்செய்தி மிகப் பரபரப்பாகப் பேசப்பட்டது. இது அனைவரின் கவனத்தையும் ஈர்த்ததுடன், அக்கால வழக்கப்படி கடவுள், மோட்சம், நரகம் ஆகியவை இணைத்தும் பேசப்பட்டது. இந்தச் சூழ்நிலையில்தான், நில நடுக்கம் என்பது ஆண்டவனின் சாபமல்ல. அது வெறும் இயற்கை நிகழ்வே எனத் திராவிட இயக்கத்தினர் தங்கள் கருத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்தனர். அதில் தம் பங்காகப் புதுவைச் சிவம் இச்செய்யுள் நாடகத்தை இயற்றி நிலநடுக்க நிகழ்வை மூட நம்பிக்கைக் கண்கொண்டு பார்ப்பதைக்

கண்டனம் செய்திருக்கிறார். தவங்கள் செய்ததால்தான் மகன் பிறந்தான் என்ற தந்தையின் நம்பிக்கையையும், செத்தபின் நரகம் போகாமல் மோட்சம் போவதற்கான சடங்குகளை மகன் செய்தால்தான் மோட்சம் புக முடியும் என்ற நம்பிக்கையையும் மகனின் வாயிலாகவே கிண்டலும் செய்யும் வகையிலும் இந்நாடகத்தைப் புதுவைச் சிவம் அமைத்திருக்கிறார்.

**பதிப்பு:** இச்செய்யுள் நாடகமும் பாரதிதாசனின் 'ஸ்ரீ சுப்ரமணிய பாரதி கவிதாமண்டலம்', 1935 வைகாசி மாத இதழில் வெளிவந்துள்ளது. இதற்குப்பிறகு காவ்யா பதிப்பகம் 2007 ஆம் ஆண்டில் வெளியிட்ட 'புதுவைச்சிவம் படைப்புகள்' தொகுப்பு நூலில் கவிதை வரிசையில் பொதுப் பிரிவில், மறுமலர்ச்சிப் பகுதியில் இச்செய்யுள் நாடகம் இடம் பெற்றுள்ளது.

## கைகூடாக் காதல்

**கருத்து:** பெண்ணுரிமையை வலியுறுத்துவதும், சாதி மறுப்பு, மூடநம்பிக்கை ஒழிப்பு ஆகிவற்றை வலியுறுத்துவது மான கருத்துக்களே இந்நாடகத்தில் முதனிலை வகிக்கின்றன. காதலுக்குச் சாதி, பணபலம், உயர்தகுதி எதுவுமே ஒரு பொருட்டல்ல என்றாலும், சீர்திருத்தம் இல்லாத சமூகத்தில் உண்மையான காலதர்கள் வெற்றியடைய முடிவதில்லை என்னும் கருத்தமைக்கப்பட்ட நாடகமாகும் இது.

**கதை:** கமலா என்னுமோர் அனாதை இளம்பெண் ஒரு செல்வந்தர் வீட்டில் வேலை செய்து வருகிறாள். அவ்வீட்டு எசமானி பத்மா அவளைச் சிறிதும் ஈவிரக்கமின்றி நடத்தி அதிக வேலை வாங்குகிறாள். அதே ஊரில் உள்ள படித்த இளைஞனான சுந்தரனுக்கும் கமலாவிற்கும் காதல் ஏற்படுகிறது. தன் விருப்பத்தைப் பெற்றோரிடம் சுந்தரன் வெளிப்படுத்த அவனது தந்தை சாதி, தகுதிநிலை ஆகியவற்றைக் காரணம் காட்டி மறுத்துவிடுகிறார். மேலும் ஒரு பார்ப்பனத் தரகர் மூலம் வசதியுள்ள ஓரிடத்தில் சுந்தரனுக்குப் பெண் பார்க்கிறார். பெண்ணுக்குக் கல்வியும், உடற்தகுதியும் இல்லா

நிலையிலும் பணத்திற்காக வலிய அந்தச் சம்பந்தத்தை ஏற்படுத்துகிறார் சுந்தரனின் தகப்பனார். இந்நிலையில் கமலாவின் எசமானி மகனான வேணு கமலாவின் வனப்பைக் கண்டு அவளை அடைய முயற்சிக்கிறான். அதற்கவள் திருமணத்தைத் தீர்வாக வலியுறுத்த, வேணுவோ அவளை விபசாரி மகள் என்று கூறித் தன் ஆசையைத் தீர்க்க மட்டுமே கோருகிறான். அவள் சம்மதிக்காத நிலையில் வேலைக்காரன் மூலமாக அவளுக்கும் சுந்தரனுக்கும் உள்ள பழக்கத்தை வேணு அறிய நேர்கிறது. (கிடைத்துள்ள பகுதிகள் இவை மட்டுமே என்பதால் கதையும் இத்துடன் நிற்கிறது).

**அமைப்பு:** செய்யுள் நாடகமாக அமைக்கப்பட்டுள்ள இதில் ஐந்து காட்சிகள் மட்டுமே முழுமையாகக் கிடைத்துள்ளன. காட்சியமைப்பு பிரிக்கப்பட்டிருக்கிறதே தவிர நாடகப் பாத்திரங்கள் இன்னார் என்ற தகவலும், காலம் மற்றும் பொழுதுகளும் குறிப்பிடப்படவில்லை. ஆசிரியப்பா, பஃறொடை வெண்பா, எண்சீர் விருத்தம், அறுசீர் விருத்தம், கலி விருத்தம் ஆகிய பாவகைகளில் இச்செய்யுள் இந்நாடகம் இயற்றப் பட்டுள்ளது.

**சிறப்பு:** இயல்பாக உருவாகும் ஒரு காதலைக் கூறும் இந்நாடகத்தில், அக்காதலின் வளர்ச்சியும், வெற்றியும் சமுதாயச் சழக்குகளால் எப்படி மிதியுண்டு போகின்றன என்பதும் எடுத்துக் காட்டப்படுகிறது. சமுதாயச் சீர்கேட்டைக் கூறும்போது, திராவிட இயக்கக் கோட்பாடுகள் தாமாகவும், வலிந்தும் பல இடங்களில் கதையோடு பின்னப்படுகின்றன. சாதிமறுப்பு, பெண்ணுரிமை, சமத்துவம் ஆகிய கோட்பாடுகளை வலியுறுத்தும் இயல்பான பகுதிகளும், தரகராக வரும் பார்ப்பனர் மக்கள் சொத்தைச் சாத்திரம் சொல்லி நிதமும் அபகரிப்போர் என்றும், உறிஞ்சிடும் உள்ளத்தார் என்றும் இயக்கப் பிரச்சாரத்தின் அன்றைய நிலையையும், வேகத்தையும் இந்நாடகம் வெளிப்படுத்து கின்றது. ஐந்து காட்சிகள் மட்டுமே கிடைத்திருந்தாலும் இந்நாடகக் கதைப் போக்கைக் கூர்ந்து கவனிக்கையில் ‘சிதைந்த வாழ்வு’ என்ற நாடகத்தின் செய்யுள் வடிவமாகவே

இது படைக்கப்பட்டிருப்பதைக் காண முடிகிறது. கதையின் முக்கிய மாந்தர்களில் கதை நாயகி கமலாவும், கதைநாயகன் சுந்தரனும் 'சிதைந்த வாழ்வு' நாடகத்தில் அஞ்சுகமாகவும், அறிவழகனாகவும் பெயர் மாற்றம் செய்யப்பட, கதையின் வில்லன் வேணுவின் பெயர் மட்டும் இவ்விரு நாடகங்களிலும் ஒன்றாகவே சுட்டப்பட்டுள்ளது. முதலில் இதைச் செய்யுள் நாடகமாக இயற்ற நினைத்துப் பாதி முயற்சியில் அதைக் கைவிட்டிருக்கும் புதுவைச்சிவம், இது மேடை நாடகத்திற்கு ஏற்றவாறிருப்பதைக் கருத்தில் கொண்டு அவ்வாறே எழுதியிருக்கிறார் என்று கொள்ளவே வாய்ப்பிருக்கிறது. 'சிதைந்த வாழ்வு' நாடகம் 1951 ஆம் ஆண்டு அச்சில் வந்திருப்பதும், 'கைகூடாக் காதல்' கையெழுத்துப் பிரதி 1950 ஆம் ஆண்டு இயற்றப்பட்டதாக வரும் குறிப்பும் மேற்கூறிய கருத்தையே வலியுறுத்துகின்றன.

**பதிப்பு:** முற்றுப்பெறாத இச்செய்யுள் நாடகம் கையெழுத்துப் பிரதியாகக் கிடைத்து, 2007 ஆம் ஆண்டில் காவ்யா பதிப்பகம் வெளியிட்ட 'புதுவைச்சிவம் படைப்புகள்' நூலில், நாடக வரிசையில் செய்யுள் நாடகப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

## காதல் முன் கட்டுப்பாடு

**கருத்து:** உண்மைக் காதலுக்கு முன்னால் சமுதாயம் விதிக்கும் எந்தவிதக் கட்டுப்பாடும் தகர்த்தெறியப்படும் என்பதை வலியுறுத்தும் கருத்தமைந்த நாடகக் கதை இது. சமுதாயம் விதிக்கும் கட்டுப்பாடு என்பதில் சாதி, மதம், மூட நம்பிக்கை ஆகியவற்றை முதனிலைப் படுத்தி அவற்றைத் தகர்த்தெறிதல் மூலமாகச் சாதாரணக் காதலர்களை இலட்சிய வாதிகளாக மாற்றுகிற கருத்தமைக்கப்பட்ட நாடகமாக இது படைக்கப் பட்டிருக்கிறது.

**கதை:** ஆந்த்ரே எனும் கத்தோலிக்க இளைஞனுக்கும், யூத மதத்தைச் சேர்ந்த சாரா என்னும் இளம் பெண்ணுக்கும் காதல் அரும்புகிறது. இவர்கள் வாழ்க்கையில் ஒன்றிணைய மதம்

தடையாக அமைகிறது. இருவரும் தத்தமது மதத்தின் மேல் பற்று மிகுந்தவர்களாக உள்ளனர் என்றாலும் காதல் வேகத்தால் இருவருமே தங்களுக்குள் பரிமாறிக் கொள்ளாமல், காதலன் காதலியின் மதத்திற்கும், காதலி காதலனின் மதத்திற்கும் மாறிவிடுகின்றனர். இப்போதும் இருவரும் வேறு வேறு மதம் என்பதை உணர்ந்து மனம் உடைந்து போகின்றனர். இறுதியில் காதல் உள்ளங்கள் மதம் என்னும் தடையைக் கடக்கத் துணிகின்றன. மதத்தைப் பற்றிய நினைவைக் கடந்து இருவரும் ஒன்றிணை கின்றனர்

**அமைப்பு:** கதை சொல்லும் போக்கிலும், இடையிடையே கதைமாந்தரின் உரையாடலை நாட்கப் போக்கிலும் இணைந்த வகையில் நாடகம் அமைக்கப்பட்டுள்ளது. காட்சி என்று குறிப்பில்லாவிட்டாலும் மொத்தம் ஏழு காட்சிகளாகப் பிரிக்கப்பட்டு இன்பியல் நாடகமாக முடிவில் அமைக்கப் பட்டுள்ளது.

**சிறப்பு:** இக்கவிதையைப் பிரெஞ்சிலிருந்து மொழி பெயர்த்துள்ள புதுவைச்சிவம், கவிதையின் மூலத்தில் பெரிய மாற்றங்கள் ஏதும் செய்யவில்லை. கதை மாந்தர்களது பெயர்கள் ஆந்த்ரே, சாரா என்று இருப்பதிலிருந்தும், கதை நிகழிடம் பாரிஸ் நகரம், பிளாஸ் ரொய்யால் என்று குறிக்கப்படுவதில் இருந்தும், கத்தோலிக்க, யூத மதங்களைச் சேர்ந்த கதை மாந்தர்களாக இவர்கள் காட்டப்படுவதில் இருந்தும் மேற்கூறிய கூற்றை உறுதி செய்யலாம். முழுமையான மொழிபெயர்ப்பும் இவ்வாறாக இருக்க, இதே மொழிபெயர்ப்புப் பிரதியில் புதுவைச்சிவமே சில மாற்றங்களைத் தம் கைப்படச் செய்திருக்கிறார். அதில் கதை மாந்தர்களின் பெயர்கள் கண்ணன், பார்வதி என்றும், அவர்கள் சைவ, வைணவ மதங்களைச் சார்ந்தவர்கள் என்றும் மேலும் அவர்கள் வேறு வேறு சாதியைச் சேர்ந்தவர்களாகவும் குறிப்பிட்டுச் சாதி, மதங்களின் கட்டுப்பாட்டை மீறிக் காதலர்கள் ஒன்றிணைவதாகக் காட்டுகிறார். இத்திருத்தம் தமிழ்நாட்டுச் சூழலுக்கேற்ப மாற்றியமைக்கப் பட்டிருக்கிறது என்பதைத்தான் இதிலிருந்து தெளிய முடிகிறது.

இது நூலாக்கம் பெற்றிருக்குமானால், தமிழ்நாட்டுச் சூழலுக்கேற்ப மாற்றியமைக்கப்பட்ட வடிவமே அச்சில்

வந்திருக்கக் கூடும் என்பதை அப்பிரதியில் அவர் எழுதிய முன்னுரை தெரிவிக்கிறது.

கவிதையின் மூலச் சூழல் மாறாத ஒரு மொழிபெயர்ப்பும், அதையே தமிழ்ச் சூழலுக்குத் தகுந்தாற்போல இன்னொரு மொழிப்பெயர்ப்பும் என்று இரு நிலைகளில் இம்மொழி பெயர்ப்பு அமைந்திருக்கிறது. இது அவர் காலத்திலேயே அச்சில் வெளிவந் திருந்தால் அதற்குரிய சிறப்பை இக்குறுங் காவியம் பெற்றிருக்கக் கூடும்.

பதிப்பு: இம்மொழிபெயர்ப்புக் கதை நாடகத்தை நூலாக்கம் செய்யப் புதுவைச்சிவம் முயன்றிருப்பது இந்நாடகத்தின் கையெழுத்துப் பிரதியோடு இணைந்த முன்னுரை மூலம் தெரியவருகிறது. ஆனால் இது அச்சில் வந்த விவரம் இதுவரை கிடைக்கவில்லை. 2007 ஆம் ஆண்டில் காவ்யா பதிப்பகம் வெளியிட்ட 'புதுவைச் சிவம் படைப்புகள்' தொகுப்பு நூலில் காப்பிய நாடகங்கள் பிரிவில் இது இடம்பெற்றுள்ளது.

## ஈ. திராவிட இயக்க வளர்ச்சியில் புதுவைச் சிவத்தின் நாடகங்கள்

முதன் முதலாகத் தொகுக்கப்பட்டுள்ள புதுவைச்சிவம் நாடகங்களின் தன்மையையும், அவற்றின் நோக்கத்தையும் ஆய்வுக்குட்படுத்துவது அவசியமாகிறது. புதுவைச் சிவத்தின் பல நாடகங்கள் பலமுறை புதுச்சேரியிலும், தமிழகத்திலும் மேடையேற்றம் கண்டிருக்கின்றன. அவரது கோகிலராணி நாடகம் மலேசியாவிலும், இலங்கையிலும் நடத்தப் பட்டிருக்கிறது. இவற்றைத் திராவிட இயக்கத்தினரே முன்வந்து நடத்தியுள்ளனர். இவை கல்வி நிதிக்காகவும், இளைஞர் கழகக் கட்டட நிதிக்காகவும், திராவிடர் கழக நிதிக்காகவும் இயக்கத்தினரால் நடத்தப் பட்டிருக்கின்றன.

1930 ஆம் ஆண்டுகளில் ஆரம்பித்து 1960 ஆம் ஆண்டுகள் வரை நடைபெற்றிருந்த புதுவைச்சிவத்தின் நாடகங்கள் இதுவரை ஆய்வுக்குட்படுத்தப்படவில்லை. இதற்கு, இரண்டு நாடகங்கள் மட்டுமே அச்சில் வெளிவந்ததும், ஏனையவற்றில் ஒருசில கிடைக் காமல் போனதும் காரணமாக இருந்திருக்கலாம். இந்நிலையில் திராவிட இயக்கக் கொள்கைகளைப் பிரச்சார அடிப்படையில், நாடக வடிவில் கொண்டு சென்று பொதுமக்களிடம் பரப்புவதில் வரவேற் பைப் பெற்றிருந்த புதுவைச்சிவத்தின் நாடகங்கள், எத்தன்மையன எனபதையும், அவை உருவாக்கப்பட்ட நோக்கத்தை அடைந்தனவா என்பதையும் கண்டறிய இவ்வாய்வு அவசியமாகிறது.

இவ்வகையில் புதுவைச்சிவம் நாடகங்களின் கலைத் தன்மை, நாடக இலக்கண வரையறை, நாடக இலக்கியங்களுக் குண்டான தகுதிகள் குறித்தும் திராவிட இயக்கம் மிகவும் வலியுறுத்திய அதன் கொள்கைகளில் புதுவைச்சிவம் நாடகங்கள் எந்த அளவிற்குத் தோய்ந்திருந்தன என்பன குறித்தும்

பகுத்தாய்வது அவசியமாகிறது. நாடக இலக்கண வரையறைகளில் புதுவைச்சிவம் நாடகங்களின் பொருத்தப்பாடு குறித்துத் தொடங்கும் இவ்வாய்வு திராவிட இயக்கத்தின் அடிப்படைக் கோட்பாடுகளான இனவுணர்வு, மொழி உணர்வு, பெண்ணுரிமை, சமத்துவம், சாதிமத எதிர்ப்பு, சமூகச் சீர்திருத்தம் ஆகிய தலைப்புகளில் விரிவான ஆய்வை மேற்கொள்கிறது.

**நாடக இலக்கணம்**

இலக்கியங்கள் பெருகப் பெருக அவற்றின் வடிவங்களுக்கேற்ப இலக்கணங்கள் உருவாயின. நாடக இலக்கணத்தைப் பொறுத்த வரையில் மேலைநாட்டு இலக்கணங்களோடு தமிழ்ப் படைப்புகள் முழுமையாகப் பொருந்தாத நிலையில், அவ்விலக்கணங்களை ஒட்டிய தமிழ் நாடக இலக்கியத்திற்கான நாடக இலக்கணங்கள் உருவாக்கப்பட்டன.

அரிஸ்டாட்டில் காலத்தில் தொடக்கம், மையம், இறுதி என்று மூன்று நிலைகளாக நாடகத்தைப் பகுத்துப் பார்த்த நாடக இலக்கணம் பத்தொன்பதாம் நூற்றாண்டில், தொடக்கம், வளர்ச்சி, உச்சநிலை, வீழ்ச்சி, முடிவு என ஐவகை நிலைகளை வகுத்தது.[57] இவற்றையே பரிதிமாற்கலைஞர் முகம், பிரதி முகம், கருப்பம், விளைவு, துய்த்தல் என்ற ஐந்து பகுப்புகளாகச் சுட்டியுள்ளார்.[58] இந்நிலைகளைத் திட்டமிட்டு அமைக்கா விட்டாலும், பொதுவாகவே இந்த ஐவகை நிலைகளும் ஒரு நல்ல நாடகத்தில் இயல்பாகவே அமைந்திருப்பதைக் காணலாம். இந்த ஐவகை நிலைகளின் அடிப்படையில் ஆய்வு மேற்கொள்ளும் போது ஒரு நாடகத்தின் முழுப் பரிமாணமும் வெளிப்படும்.

புதுவைச்சிவத்தின் நாடகங்களில் மேடையேற்றம் கண்ட நாடகங்களும், ஒவ்வொரு காட்சிக்குமான கதையமைப்புக் கொண்ட நாடகக் கதைகளும், மேற்கூறிய நாடக இலக்கணத்தின் கட்டுக்கோப்புக்குள் அடங்குகின்றனவா என்பது ஆய்வுக்குரியது. இதற்குப் புதுவைச்சிவத்தின் பதினெட்டு நாடகங்களையும் தொடக்கம், வளர்ச்சி, உச்சநிலை, வீழ்ச்சி, முடிவு ஆகிய ஐவகை நிலைகளில் ஆய்விற்கு உட் படுத்தியாக வேண்டும். ஆனால்

விரிவு கருதி ஒரே ஒரு நாடகம் மட்டுமே மேற்குறிப்பிட்ட ஐவகை நிலைகளில் பொருத்தி ஆய்வு செய்யப்படுகிறது. புதுவைச்சிவம் நாடகங்களில் அச்சில் வெளிவந்ததும், புதுவை, தமிழகம் மட்டுமின்றி இலங்கை, மலேசியா ஆகிய நாடுகளிலும் மேடையேற்றம் கண்ட நாடகமாகவும் 'கோகிலராணி' விளங்குவதால் அந்நாடகம் மட்டும் இவ்வாய்விற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டது. மேற்கூறிய ஐவகை நிலைகளில் ஆய்வு மேற்கொள்ளுமுன்பாக இந்நாடகத்தின் நோக்கம் பற்றிக் குறிப்பிடுதல் அவசியமாகிறது. கோகிலரா்ணி நாடகத்தின் கதைச் சுருக்கம் முன் பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளது.

**நோக்கம்**

தமிழ்நாட்டில் குடியேறிய ஆரியர்கள் தங்கள் பெண்களையும், ஆரிய மூட நம்பிக்கைகளையும் கொண்டு தமிழ் மன்னர்களை மயக்கித் தங்கள் அதிகாரத்தை நிலைநிறுத்த முற்பட்டனர்; இதுவே ஆரியர்களின் அடிப்படைக் குணம் என்று விளக்கிக் காட்டுவதே இந்நாடகத்தின் நோக்கமாகக் கொள்ளப்பட்டிருக்கிறது.

> .... அந்தப் பாப்பார சாதி இங்க வந்த பிறகுதான் நம்மையெல்லாம் தாழ்ந்த ஜாதின்னும் சூத்திர ஆளுண்ணும் ஆக்கிவிட்டாங்களாம்..... அவங்கெல் லாம் இங்கே குடிவந்து நம்ம ராசாக்களை எல்லாம் மயக்கி, அவங்களுடைய அதர்மத்தை நம்மீது சுமத்திப் புட்டாங்க.... நாம் ஏதாவது மீறிச் சொன்னாலும், செய்தாலும் நம்ம ராசாவே நம்மை தண்டிச்சிப் புடுவாரு.....
>
> *(சிவப்பிரகாசம். ச 1947: 6)*

என்று பெயரிடப்படாத ஒரு கிழவன் பாத்திரம் மூலம் வெளிப்படுத்தப்படும் உரையாடல் நாடக நோக்கத்தைத் தெளிவுபடுத்துகிறது. கதையின் தலையாய பாத்திரமாக வரும் கோகிலராணி,

> ........ அறிஞர்களால் ஆக்கப்பட்ட தூய்மையறம் இருந்தும் அது புறக்கணிக்கப்படுகிறது. அறிவுக்

> கொவ்வா முறையே அறநெறியாகக் கருதப்படுகிறது. மக்களுக்குப் பகுத்தறிவிருந்தும் பயன்படவில்லை. சூழ்ச்சியும் புரட்டும் தோன்றிச் சுதந்திர உணர்வை மாய்க்கின்றன. தமிழர் மாண்பைக் காத்த செங்கோலும் கொடுங்கோலாகி விட்டது......
>
> *(சிவப்பிரகாசம். ச 1947: 23)*

என்று கூறுவதிலிருந்தும் தமிழர் அடிமைப்பட்ட காரணம் இதுதான் எனத் திராவிட இயக்கத்தினரின் பிரச்சார நோக்கம் வெளிப்படுத்தப் படுகிறது.

இந்நாடகத்தில் ஆரியர்களின் தலைவர்களாக வரும் பிரம்ம குருவும், மந்திரியும் சோழ மன்னனை, ஆடல் பாடலில் வல்ல அம்சா என்னும் பெண்ணின் மூலம் தங்கள் வயப்படுத்துகின்றனர். தமிழின உணர்வு கொண்ட கோகிலராணியைக் குழந்தையில்லை என்று குற்றம் சுமத்திச் சிறையிலடைக்கின்றனர். சோழ மன்னனின் இரண்டாவது மனைவிக்குப் பிறக்கும் ஆண் வாரிசைச் சகுனம் சரியில்லை என்று ஆற்றோடு போக விடுகின்றனர். தமிழர் தலைவனாக வரும் சேனாதிபதியைச், சந்த்ரா என்னும் ஆரியப் பெண்மூலம் தண்டனை அடையச் செய்கின்றனர். பின் தக்க தருணம் பார்த்துச் சோழ மன்னனையும் சிறையிலடைக்கின்றனர்.

தமிழ்ச் சமுதாயத்தைப் பாதுகாக்க நினைக்கும் கோகில ராணியும், ஆரியத்தை வேரறுக்க முயலும் சேனாதிபதியும், 'தமிழ்ப் பாதுகாப்புக் கழகம்' அமைத்து வீரர்களைத் திரட்டி மீண்டும் தமிழர்களின் ஆட்சியை நிறுவும் இனப் போராட்டக் கருவை நோக்கமாக வைத்து இந்நாடகம் பின்னப் பட்டிருக்கிறது.

### ஐவகை நிலை

தொடக்கம், வளர்ச்சி, உச்சநிலை, வீழ்ச்சி, முடிவு என்ற ஐவகை நிலைகளில் கோகிலராணி நாடகத்தைப் பொருத்தி ஆய்வு மேற்செல்கிறது.

### தொடக்கம்

நீண்ட நாள்களாகப் புத்திர பாக்கியம் இல்லாதிருந்த சோழ மண்டல அரசன் சுகுணவர்மனுக்கு ஆண்குழந்தை பிறக்கிறது.

சேத்தூர் மேல் படையெடுத்துச் சென்ற சேனாதிபதி வெற்றியுடன் திரும்புகிறான். மன்னன் மகிழ்கிறான். இந்த வெற்றிக்குப் பிரம்மகுருவின் தபோ வலிமையே காரணம் என்று ஆரிய மந்திரி கூறுகிறான். ஆரிய சூழ்ச்சிகளுக்கெல்லாம் தலையாட்டு பவனாகச் சோழ மன்னன் முதல் காட்சியிலேயே சித்திரிக்கப்பட்டு விடுகிறான். இளவரசன் பிறந்ததற்காகத் தானம் பெற வருவோரில் சிலர், 'ஓடிவந்து பிழைக்க வந்தவன் உயர்ந்த ஜாதி; ஒண்ட இடங்கொடுத்த இந்நாட்டினர் தாழ்ந்த ஜாதி' என்று கூறி மன்னனின் தான தர்மங்களை மறுத்து மானங்கெட்ட அதர்மம் என்று இகழ்கின்றனர். 'தமிழ்ப் பாதுகாப்புக் கழகமும்' தொடக்கத்திலேயே அறிமுகப்படுத்தப் படுகிறது.

சேத்தூர் சிற்றரசனைக் கொண்டு ஆரிய சாம்ராச்சியத்தை அமைக்க எண்ணமிடும் ஆரிய அமைச்சனின் சூழ்ச்சியும் தொடக்கத்திலேயே வெளிப்படுத்தப்படுகிறது.

> ..... நான் இந்தச் சோழ மண்டலத்தை ஒரு துளிரத்தம் கூடச் சிந்தாமல் கண நேரத்தில் கைப்பற்றி விடுவேன். ஆயினும் நான் அப்படிச் செய்தால் உம்போன்ற சிற்றரசர்களின் எதிர்ப்பு எனக்கு இடையூறாகவே இருக்கும். என்றாலும் அந்த எதிர்ப்புகளைச் சமாளிக்கும் சக்தி எனக்கு இல்லாமலில்லை. மேலும், எங்கள் பிரம்ம குருவோ நினைத்தால் எதிரியைச் சுட்டெரிக்கும் தபோ வலிமை வாய்ந்தவர். அவ்வளவு வலிமை எங்களுக் கிருந்தாலும் நாங்கள் ஆரிய வம்சத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் தமிழ் அரசர்களாகிய உங்களுக்கும் குடிமக்களுக்கும் என்றென்றும் எங்கள் மீது வெறுப்பு இருந்து வரும். இந்த வெறுப்பின் கீழ் எத்தனை காலத்திற்கு ஆட்சி நடத்துவது? அதனால்தான் ஒரு தமிழருக்குத் தலைமை ராஜ்யத்தைக் கொடுத்து நான் இதைச் சிற்றரசாக ஏற்றுக் கொண்டால் அவ்வெறுப்பு ஒருவாறு அடங்கிவிடும். இதை உத்தேசித்தே சந்தர்ப்பத்தை எதிர் பார்த்திருந்தேன்.....

*(சிவப்பிரகாசம். ச 1947: 10)*

என்று சேத்தூர் சிற்றரசனைத் தனது வஞ்சக வலையில் விழ வைக்கிறான் ஆரிய மந்திரி என்பதாக, ஆரியர்களின் அடிப்படை எண்ணமும், அதைச் செயல்படுத்தும் சூழ்ச்சியும் தொடக்கத்திலேயே வெளிப்படுத்தப்படுகின்றன.

**வளர்ச்சி**

சேத்தூர் சிற்றரசனின் படை உதவியுடன் சோழ நாட்டைக் கைப்பற்றுவதாகத் தொடக்கத்தில் அமைந்த ஆரிய சூழ்ச்சி அடுத்தடுத்த காட்சிகளில் அதிகாரத்தைக் கைப்பற்றச் சதித்திட்டம் தீட்டுகிறது. 'பேருக்கு அரசனே ஒழிய அதிகாரம் எல்லாம் நம்முடையதுதானே?' என்று கூறும் பிரம்மகுருவுக்கு,

> ....இந்த அதிகாரத்தால் சேனாதிபதியை என்ன செய்ய முடியும்? அவன் உயிரோடுயிருக்கும் வரை, நம்மைச் சூழ்ந்த ஆபத்து எப்படி நீங்க முடியும்? அம்சாவின் ஆடல் பாடலுக்கும் அழகுக்கும் அடிமைப்பட்ட அரசன் வேறு; சேனாதிபதி வேறு; அவனிடம் இதுபோன்ற சூழ்ச்சிகள் ஏதும் பலிக்காது....

*(சிவப்பிரகாசம். ச 1947: 15)*

என்ற மந்திரியின் பதிலின் மூலம் சேனாதிபதியைக் கவரவோ அல்லது கொலை செய்யவோ திட்டம் தீட்டுவதாகக் காட்சி நீள்கிறது.

இன்னொரு பக்கம், சோழ மன்னனின் வாரிசாகப் பிறந்த பச்சிளங்குழந்தையைச் சகுனம் சரியில்லை என்று கூறி ஆற்றில்விடச் செய்கிறான் பிரம்மகுரு. மலையடிவாரத்திலுள்ள ஒரு சிற்றூரில் இருக்கும் தவப்பெண் அக்குழந்தையைக் காப்பாற்றி வளர்ப்பதாகவும், அவன் வளர்ந்து வில்வித்தைகளில் தேர்ந்த வனாகவும் ஆகிறான். இதனிடையே சேனாதிபதியை மயக்கச் சந்த்ரா என்னும் ஆரியப் பெண்ணால் செய்யப்படும் முயற்சிகள் பலிக்காமல் போகின்றன. எனவே சேனாதிபதிமீது பலாத்காரக் குற்றம் சாட்ட சூழ்ச்சித் திட்டம் உருவாக்கப் படுகிறது.

ஆரியர்கள் தங்கள் சூழ்ச்சியால் தொடக்கத்தில் நினைத்ததை யெல்லாம் சாதித்துக் கொள்வதாகக் கதை, வளர்ச்சி நிலை

பெறுகிறது. கூடவே ஆரியத்தை எதிர்க்கும் தமிழர்கள் தங்களுக்குள் ஒற்றுமை கொண்டு தயாராகும் வளர்ச்சி நிலையும் சுட்டப்படுகிறது. சோழ மன்னனின் வாரிசான இளவரசன் வீரவர்மன் வீரனாகவும் வளர்ந்து பூங்கொடி என்னும் மலைநாட்டரசனின் மகளைக் காதலிக்கும் வளர்ச்சி நிலையும் இக்காட்சிகளின் கூடவே அமைக்கப்பட்டிருக்கிறது.

**உச்சநிலை**

ஆரியர்களின் சூழ்ச்சித் திட்டம் நிறைவேற்றப்பட்டுத் தமிழர் தலைவனான சேனாதிபதிக்குத் தண்டனை தரப்படுகிறது. தண்டனை நிறைவேற்றப்படும் வேளையில், தவப்பெண்ணும் சில வீரர்களும் சேனாதிபதியைக் காப்பாற்றித் தங்கள் பக்கம் சேர்க்கிறார்கள். ஆரிய சூழ்ச்சியை உணர்ந்து எதிர்க்கும் தமிழ்ப்பாதுகாப்புக்கழகம் தக்க தருணத்திற்காகக் காத்திருக்கிறது. சோழ மன்னன் தனிமைப் படுத்தப்படுகிறார். சோழ மண்டலத்தைக் கைப்பற்றும் வேளை நெருங்கிவிட்டதாக ஆரியர் உணர்கின்றனர். உயிருடன் தப்பிவிட்ட சேனாதிபதியின் தலைக்கு ஆயிரம் பொன் பரிசு என்று அறிவிக்கப்படுகிறது. வட நாட்டிலிருந்து ஆரிய ரிஷிகள் கும்பலாக வந்து குவிவதும், பிரம்மகுரு, மந்திரி ஆகியோரின் திட்டப்படி சோழ மண்டலம் கைப்பற்றப்படுவதான உச்ச நிலைக்குக் கதை தள்ளப்படுகிறது.

> ...போச்சு தமிழர் வாழ்வு! வீழ்ந்தது சோழ மண்டலம்! அந்த மந்திரியும் சேத்தூர் அரசனும் ஒன்று கூடிப் படையெடுத்து அரசைக் கைப்பற்றி விட்டனர். அரசரும் இளைய ராணியும் சிறையில் வைக்கப்பட்டனர்! ஏராளமான சேனா சைனியங்கள் நாட்டைக் காவல் புரிகின்றன.

*(சிவப்பிரகாசம். ச 1947: 81)*

என்று மாயன் மூலம் கோகிலராணிக்கும், சேனாதிபதிக்கும் சேதி தெரிகிறது. சோழமண்டலத்தை மீட்கத் திட்டம் தீட்டப்பட்டு அதற்குத் தமிழ்ப் பாதுகாப்புக் கழகத்தாரின் துணையும் கடிதம் மூலம் கோரப்படுகிறது. ஆரியர்களும், தமிழர்களும் வாழ்வா சாவா என்ற உச்சநிலையை எதிர்கொண்டிருக்கும் சூழல் போர் மூலம் உருவாக்கப்பட்டுவிடுகிறது.

**வீழ்ச்சி**

தமிழருக்கும் ஆரியருக்கும் நடைபெறும் போரில் ஆரியப்படை வீழ்ச்சியடைகிறது. கறுப்புடை அணிந்தவர்களால் சோழமன்னனும், இளையராணியும் விடுவிக்கப் படுகின்றனர். தன்நாட்டின் வீழ்ச்சிக்கு மனங்கலங்கிக் கொண்டிருந்த சோழ மன்னன், 'தமிழர் நெறியை மறந்ததற்குச் சரியான தண்டனை பெற்றேன்' என்று மகிழ்வுடன் வெளிவருகின்றான்.

...தந்திரத்தால் தமிழரின் உரிமையைப் பறித்துப்
பேடித்தனத்தால் இந்நாட்டையாளப் பார்த்தாய்....

*(சிவப்பிரகாசம். ச 1947: 88)*

என்று கூறி மந்திரி சிறையிலடைக்கப்படுகிறான். பின்னர், பிரம்மகுரு, சேத்தூர் சிற்றரசன் ஆகியோரும் சிறையிலடைக்கப் படுகின்றனர். அதிகாரத்தைக் கைப்பற்றச் சூழ்ச்சி செய்த அனைவரும் சிறையிலடைக்கப் படுவதால் ஆரியத்தின் நோக்கம் சிதைவுறுவதாகச் சித்திரிக்கப்படுகிறது. 'ஆரிய சூழ்ச்சி அழிக' என்றும், 'தமிழ்நாடு தமிழர்க்கே' என்றும் முழக்கங்கள் எழுப்பபப்படுகின்றன.

தனது வீழ்ச்சிக்கு ஆரிய சூழ்ச்சியும் சேனாதிபதியை இழந்ததுமே காரணம் என்று சோழ மன்னன் ஒப்புகிறான். தன் வாரிசை இழந்ததற்கும் ஆரிய சூழ்ச்சியே காரணம் என்கிறான் மன்னன். ஆரியத்தை உச்சத்தில் வைத்துப் புகழ்ந்து கொண்டிருந்த சோழ மன்னன் அவர்களைப் பாவிகள் என்கிறான். தான் ஆற்றில் விட்டு இழந்த இளவரசனைத்தான் கறுப்புடை அணிந்த தவப்பெண் வளர்த்ததாக மன்னன் அறிகிறான். மேலும், தவப்பெண்தான் தன் முதல் மனைவியான கோகிலராணி என்று அறிந்து அவளைப் பிரிந்ததற்குக் காரணமும் ஆரிய சூழ்ச்சியே என்கிறான். அதிகாரத்தைப் பிடிக்கத் திட்டம் தீட்டி, நிறைவேற்றி, உச்ச நிலையிலிருந்த ஆரியம் வீழ்ச்சியடைகிறது. வீழ்ச்சி நிலையிலிருந்த தமிழ் நாடு மீட்கப்படுகிறது.

**முடிவு**

சோழ மண்டலம் மீட்கப்பட்டவுடன் மன்னன், தான் கடமை தவறியதை உணர்ந்து தன் வாரிசிடமே நாட்டை ஒப்படைக்க

முடிவெடுக்கிறான். இளவரசன் வீரவர்மனுக்கும், அவனது காதலி பூங்கொடிக்கும் திருமணமும், இளவரசனுக்கு முடி சூட்டு விழாவும் நடைபெறுகின்றன. கைது செய்யப்பட்ட ஆரியர்கள் மன்னித்து விடுதலை செய்யப்படுகின்றனர். இன்றியமையாத சீர்திருத்தத் திட்டங்கள் நடைமுறைக்கு வரும் என்ற அறிவிப்பைத் தமிழர் தலைவனான சேனாதிபதி வெளியிடுகிறான். ஆரிய சூழ்ச்சி முறியடிக்கப்பட்டதும், மீண்டும் தமிழ்நாடு தமிழர்க்கே என்று நிலைபெறுவதும், சீர்திருத்தத் திட்டங்கள் நடைமுறைக்கு வருவதுமே கதையின் முடிவாகின்றன.

நாடக இலக்கணத்தின் ஐவகை நிலைகளான தொடக்கம், வளர்ச்சி, உச்சநிலை, வீழ்ச்சி, முடிவு ஆகியவற்றுடன் நோக்கம் என்னும் நிலையும் சேர்த்துப் புதுவைச்சிவத்தின் கோகிலராணி நாடகம் இங்கு ஆய்வுக்குட்படுத்தப்பட்டது. அவரது ஏனைய நாடகங்களும் இந்த ஐவகை நிலைகளின் பொருத்தப்பாட்டுக்கு உட்பட்டே அமைந்திருக்கின்றன.

ஒரு சிக்கலை ஏற்படுத்தி அதில் முன்னும் பின்னும் ஆர்வ நிலையைச் சேர்த்துப்பின் அவற்றை விடுவிப்பதே பொதுவாக அனைத்து நாடகக் கதைகளிலும் மேற்கொள்ளப்படும். இந்தச் சிக்கல் நன்மைக்கும் தீமைக்கும் இடையில் நடப்பதாக அமைகிறது. இதை மீறிய நாடகங்கள் இன்னும் நுட்பமாக அமைகின்றன என்பது மு.வ.வின் கருத்து. அவை மேலைநாட்டார் குறிப்பிடும் முரண் உள்ள நாடகங்களாக அமைகின்றன. தமிழில் முரணுமில்லாத, போராட்டமும் இல்லாத நாடகங்களே மிகுதி என்ற எண்ணமும் நிலவுகிறது.[22]

இந்நிலையில் புதுவைச்சிவத்தின் நாடகங்கள் அனைத்தும் போராட்டம் உள்ளவையாகவே அமைந்திருக்கின்றன. சாதி, மதம், பெண்ணுரிமை, பகுத்தறிவு, தீண்டாமை, சமத்துவம், பொதுவுடைமை, தமிழின் பெருமை, திராவிட-ஆரியர் ஆகிய பொருண்மைகளை அடிப்படையாகக் கொண்ட போராட்டங்களின் நிகழ்வு களாகவே அவரது நாடகங்கள் படைக்கப்பட்டுத் தனிமனிதப் போராட்டங்களைவிடச் சமூகப் போராட்டங்களின் களங்களாகத் திகழ்கின்றன.

## அங்கம் - காட்சி அமைப்பு

நாடகத்தின் பெரும் பிரிவு அங்கம் என்றும், சிறுபிரிவு காட்சி என்றும் அழைக்கப்படுகின்றன. புதுவைச்சிவம் அங்கம் காட்சி அமைப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தே தம் நாடகங்களைப் படைத்திருக்கிறார். அவருடைய பதினான்கு நாடகங்களில் வீரத்தாய் மட்டுமே அங்கம் பிரிக்கப்பட்டுப் பல களங்களின் நிகழ்வைக்கொண்ட இரண்டு அங்கங்களில் நிறைவுறுகிறது. தமிழச்சியின் தேசபக்தி பல களங்களில் நிகழும் ஓரங்க நாடகமாகப் படைக்கப்பட்டுள்ளது. ஏனைய நாடகங்கள் அனைத்தும் காட்சிகள் பிரிக்கப்பட்டு நாடகங்களாகவும், நாடகக் கதைகளாகவும் இயற்றப்பட்டுள்ளன. இவற்றுள் அதிகக் காட்சிகளைக் கொண்டதாகத் தமிழர் வீழ்ச்சி (அ) இராமாயண சாரம் (இருபத்தெட்டுக் காட்சிகள்) நாடகமும், குறைவான காட்சிகள் கொண்டதாக நிலம் யாருக்குச் சொந்தம் (இரண்டு காட்சிகள்) நாடகமும் அமைந்திருக்கின்றன. சமூக சேவை, நாடகத்தின் வசனங்கள் கிடைக்காததாலும், கோவலன் கண்ணகி ஆறு காட்சிகள் ஒரே ஒரு பக்கம் மட்டுமே கிடைத்திருப்பதாலும், அவை எத்தனை காட்சிகள் கொண்டவையாகப் படைக்கப்பட்டன என்பது தெளிவாக வில்லை.

## காட்சி விளக்கம்

நிகழிடம், காலம், காட்சி உறுப்பினர் ஆகிய விவரங்கள் அடங்கியதே காட்சி விளக்கம். புதுவைச் சிவத்தின் வசனங்களோடு கூடிய நாடகங்கள் அனைத்திலும் காட்சி விளக்கங்கள் காணப்படுகின்றன. எந்த நாடகத்திலும் எந்தக் காட்சிக்கும் தலைப்புகள் தரப்படவில்லை. அவரது நாடகங்களிலும், நாடகக் கதைகளிலும் முதல் காட்சியிலேயே நாடகத்தின் தன்மையும் போக்கும் புலப்படுத்தப் பட்டு விடுகின்றன.

## நாடக முடிவுகள்

நாடகங்கள் பொதுவாக இன்பியல் அல்லது துன்பியல் முடிவுகளைக் கொண்டிருக்கின்றன. இவற்றை நற்பொருள் இறுதி, தீப்பொருள் இறுதி என்றும் அதற்கான விளக்கங்களையும் நாடகவியல் சுட்டுகிறது.[60] தமிழ்க் காப்பியங்களும், நாடகங்களும்

இன்பியல் ஆதிக்கம் மிக்கவையாகவே காணப்படுகின்றன. நாடகத் தலைமைப் பாத்திரத்திற்கு ஏற்படும் முடிவுகளை வைத்தே இன்பியல், துன்பியல் ஆகியவை கணிக்கப்படுகின்றன. நாடகத்தலைவனுக்கு ஏற்படும் சுகமான முடிவு மட்டுமல்லாது கதைக் கருவின் மையத்தின் மேல் எழும் போராட்டத்தில் வெற்றி பெறுவதே இன்பியல் என்பதாகவும், அப்போராட்டத்தில் வீழ்ச்சியுறுவது துன்பியல் என்பதாகவும் அமைகின்றன.[61]

புதுவைச்சிவம் நாடகங்கள் பெரும்பாலும் இன்பியல் முடிவுகளைக் கொண்டே அமைந்திருக்கின்றன. அமுதவல்லி, சமூகசேவை, கோகிலராணி ஆகியவை கதாநாயகனின் முடிசூட்டு விழாவிலும், அவர்கள் காதலியைத் திருமணம் புரிவதிலும் முடிகின்றன. ரஞ்சித சுந்தரா, புதியவாழ்வு, மூன்று பெண்கள் ஆகியவை காதல் மணம் நிறைவேறுவதான முடிவுகளைக் கொண்டிருக்கின்றன. காந்திமதி நாடகத்தில் பல மரணங்கள் நிகழ்ந்தாலும், கல்வியின் உயர்வினால் காந்திமதியின் மகன் நல்வாழ்வை அடைகிறான் என்று இன்பியலைக் கொண்டே முடிகிறது. தமிழர் வீழ்ச்சி நாடகத்தில் இராவணன் கதைத் தலைவனாக ஆக்கப்படுவதால் அவனது வீழ்ச்சியைக் கொண்டு நோக்கும்பொழுது துன்பியல் நாடகமாகக் கொள்ளலாம். வீரநந்தன் நாடகத்தில், நந்தன் வேதியர்களால் அக்கினிக் குண்டத்தில் தள்ளப்பட்டுக் கொலை செய்யப்படுவதால் துன்பியல் முடிவைக் கொண்டதாகிறது. புதுவைச் சிவம் நாடகங்களில் முழுமையான துன்பியல் நாடகமாகக் கொள்ளக்கூடியது சிதைந்த வாழ்வு நாடகம். இதில் கதாநாயகியின் இறப்பும், அதனால் கதாநாயகன் தற்கொலை செய்து கொள்வதும் மட்டுமன்றி, சாதி மதத்திற்கெதிராக நடத்தும் சமூகப் போராட்டங்களில் இருவரும் தோற்பதும் துன்பியல் நாடக இலக்கணத்தின்படி இந்நாடகம் அமைந்திருப்பதைக் காட்டுகிறது.

> ....நாடகத்தின் முடிவில் பாத்திரங்களிடத்தில் நமக்கு இரக்கம் ஏற்படவேண்டும். அந்த மாந்தர்களின் துன்பியல் முடிவுக்குக் காரணமான சமுதாயத்தில் உள்ள குறையைக் களைய வேண்டும். தடையைத் தவிர்க்க வேண்டும். அத்தகைய துன்பச் சூழலில் வாழும் மக்களுக்கு இதைப்போன்ற துன்பியல் முடிவு

ஏற்படாமல் காக்க வேண்டும் என்பன போன்ற உணர்ச்சியைத் தட்டி எழுப்புவதாகத் துன்பியல் நாடகங்கள் அமைய வேண்டும்.... [62]

என்ற கருத்துப்படி 'சிதைந்த வாழ்வு' நாடகம் சமூக விளைவுகளை ஏற்படுத்தும் விதத்தில் துன்பியல் நாடகமாகப் படைக்கப் பட்டிருக்கிறது.[63]

## இடம், காலம், செயல் ஒருமைப்பாடு

ஒரு நாடகத்தின் சிறப்பு அது நிகழும் இடம், காலம், செயல் ஆகிய மூன்றிற்கும் அடிப்படை முரண் இல்லாமல் ஒத்துப்போவதில் இருக்கிறது. இது மேலை நாட்டுக் கோட்பாடு எனப் பரிதிமாற் கலைஞர் குறிப்பிடுகிறார்.[64] புதுவைச் சிவம் நாடகங்களில் இம்மூவகைப் பொருத்தமும் பெரும்பாலும் முரண் இல்லாமல் பொருந்தி வருவதைக் காண முடிகிறது.

## நாடக உத்திகள்

### இணைவு உத்தி

நாடக நீதிக்கு இணையாக வேறு ஒரு நிகழ்ச்சி அதே நாடகத்தில் இணையாக வருவது நாடக உத்திகளுள் ஒன்று. இந்த இணைவு உத்தி ரஞ்சிதசுந்தரா நாடகத்தில் நகைச்சுவைக் காட்சிகளில் ஓரளவு மேற்கொள்ளப்படுகிறது. புதுவைச்சிவத்தின் ஏனைய நாடகங்களில் இவ்வுத்தி மேற்கொள்ளப்பட வில்லை.

### முரண் உத்தி

நாடகக்கருவுடன் மாறுபட்ட ஒரு நிகழ்ச்சியை அமைப்பதன் மூலம் கதைக்கருவை மேலும் வளப்படுத்திச் செறிவூட்டுவது மற்றொரு உத்தி. இந்த முரண் உத்தி புதுவைச்சிவம் நாடகங்களில் மூன்று பெண்கள் நாடகத்தில் மட்டுமே அமைந்துள்ளது. வைதிகத்தைப்போற்றும் பார்வதியை மணந்து கொள்ளும் மருத்துவர் அவளது கட்டுப்பாடுகள் பிடிக்காமல் தன்னுடன் பணிபுரியும் வேற்று மதத்தினளான செவிலியைக் காதலிப்பதும், செவிலியை மருத்துவர் மணப்பதற்காகவே இக்கதையில் பார்வதி தேவையில்லாமல் சாகடிக்கப்படுவதும் முரணாகப் பட்டாலும்,

சாதி மதத்தைக் கடந்து செவிலியை மருத்துவர் சீர்திருத்த மணம் புரிவதால் காதலுக்கும், சீர்திருத்தத்திற்கும் செறிவூட்டும் வகையில் இம்முரணையும், முடிவையும் புதுவைச்சிவம் புகுத்தியிருக்கிறார் எனலாம். தமிழர் வீழ்ச்சி (அ) இராமாயண சாரம் நாடகத்தில் அவ்வப்போது முரண் தோன்றினாலும் பழங்கதையைப் புதிய பார்வை பார்ப்பதிலும், திராவிடர் - ஆரியர் பிரச்சினையில் திராவிடர்க்கு ஆதரவான நிலையைப் புதுவைச்சிவம் மேற்கொள்வதாலும் இம்முரண்கள் நாடக உத்தியைக் காட்டிலும் தேவையான திருப்பங்கள் ஆகிவிடுகின்றன.

## மாறுவேட உத்தி

கதை மாந்தர், மாறுவேடம் புனைவதும் நாடக உத்திகளில் ஒன்று. புதுவைச்சிவம் நாடகங்களில் இவ்வுத்தி நிறையவே உண்டு. ரஞ்சித சுந்தரா நாடகத்தில் கதாநாயகனின் நண்பன் ஊமைச்சாமி வேடத்தில் வந்து துப்பறிகிறான். அந்நாடகத்தில் வரும் மடாதிபதி இறுதிவரை போலிச்சாமியாராகவே வந்து இறுதிக்காட்சியில் தம் சாமியார் வேடத்தைக் களைகிறார். அமுதவல்லியில் கதாநாயகனே முகமூடி உருவில் கதாநாயகியைக் காப்பாற்றுவதும், வியாபாரி வேடமிட்டுக் கதாநாயகியை மணப்பதும், ஜமீன்தார் முகமூடி வேடம்போட்டுக் கதாநாயகியைப் பாலியல் வற்புறுத்தல் செய்வதும் ஆகக் கதைத் திருப்பங்கள் மாறு வேடத்தாலேயே நிகழ்கின்றன. கோகிலராணியில் நாடகம் முழுவதிலும் கோகிலராணி தவப்பெண்ணாகவே மாறுவேடமிட்டு வருகிறாள். தவப்பெண்ணாக ஒரு வேடத்தில் இருக்கும்போதே முகமூடி வேடமிட்டுச் சேனாதிபதியைக் காப்பாற்றுகிறாள். சேனாதிபதியும் தமிழ்ப் பாதுகாப்புக் கழகத்தினரும் முகமூடி வேடமிட்டுச் சோழ மன்னரைக் காப்பாற்றுகின்றனர். மூன்று பெண்கள் நாடகத்தில் லீலாவின் காதலன் பாஸ்கரை, அவளது இரண்டாவது காதலன் லோகு முகமூடி அணிந்து கொலை செய்கிறான். இதைத் துப்புத் துலக்கும் காவலர், குடுகுடுப்பைக் காரன், சாமியார், குறிசொல்பவன் எனப் பல்வேறு மாறுவேடங்களில் வந்து உண்மையைக் கண்டு பிடிக்கிறார்.

இப்படி மாறுவேட உத்தியைத் தமது பல நாடகங்களில் புகுத்தி நாடகத்தின் விறுவிறுப்பைக் கூட்டியிருக்கிறார் புதுவைச்சிவம்.

## நினைவுகூர்தல் உத்தி

ஏற்கெனவே இடம்பெறாத நிகழ்ச்சிகளின் தொகுப்பே நினைவு கூர்தல் உத்தி. காரணம் கருதிச் சொல்லாமல் விடப்பட்ட முந்தைய நிகழ்ச்சிகள், தேவைகருதி இவ்வுத்தி மூலம் விவரிக்கப் படுகின்றன. இவை மீண்டும் கூறல் தன்மையிலமையா.[65] கோகிலராணியின் இறுதிக்காட்சியில்தான் கோகிலராணி என வெளிப்படுத்தும் தவப்பெண் தன் கதையை நினைவுகூர்வதன் மூலம் அதுவரை யாரும் அறிந்திராத அவள் கதை வெளிப்படுத்தப் படுகிறது. இந்நாடகத்தில் இந்த நினைவுகூர்தல் உத்தி மிகச் சிறப்பாகக் கையாளப் பட்டிருக்கிறது.[66] அதேபோல் சிதைந்த வாழ்வு நாடகத்தில் நாயகி அஞ்சுகம் இறுதியில் மரணப்படுக் கையில் தன் வரலாற்றை நினைவு கூர்கிறாள். ஏற்கெனவே இடம் பெறாத நிகழ்ச்சிகளின் தொகுப்பாக இது அமைந்து, இவ்வுத்தி, சிறப்பாகக் கையாளப்பட்டுள்ளதை உணர்த்துகிறது.[67]

## தனிமொழி

நாடக அமைப்பில் தனிமொழி ஒரு சிறந்த உத்தியாகக் கருதப்படுகிறது. நாடகக் கதை மாந்தரின் மனச்சாட்சி பேசுவது போன்றும், தனிமொழி அமையலாம். நாடக மாந்தர் ஓர் எதிர்ப்புக்காளாகும் போது தம் திட்டத்தையும், மன உணர்வையும் வெளிப்படுத்துவதாகவும் தனிமொழி அமையலாம். புதுவைச்சிவம் இவ்வுத்தியைத் தம் பல நாடகங்களிலும் பயன்படுத்தியிருக்கிறார். ரஞ்சித சுந்தரா நாடகத்தில் விதவையான சௌந்தரம் தன்நிலைக்குத் தானே இரங்கித் தனிமொழியிலேயே அவள் கதை முழுவதையும் சொல்கிறாள். சிதைந்த வாழ்வு நாட கத்தின் கதை நாயகனும்; நாயகியும் தனித்திருக்கும் நேரங்களில் தங்களுக்குள் தனி மொழியாகப் பேசித் தங்கள் கருத்தை வெளிப்படுத்துகின்றனர்.[68] இந்தத் தனி மொழி அவரது சில நாடகங்களில் பாடலாகவும் வெளிப்படுத்தப்படுகிறது.

(கோகிலராணி - சாதியும் பேதமும் வீணாகுமே பாட்டு/ சிவப்பிரகாசம். ச 1947: 32).

### தன் கருத்தேற்றல்

நாடக ஆசிரியர்கள் நேரடியாகக் கருத்துக் கூறும் உரிமையற்றவர்கள். அதனால் தங்கள் இயக்கத்தின் கருத்துக்களை நாடகப் பாத்திரங்கள் வாயிலாகவே புதுவைச்சிவம் வெளிப்படுத்தியிருக்கிறார். ஆயினும் பல நாடகங்களில் அவரது குரல் இணைந்து வெளிப்படுவதை மறுப்பதற்கில்லை. ஒவ்வொரு நாடகத்திலும் சுயமரியாதைச் சங்கம், பகுத்தறிவுச் சங்கம், தமிழ்ப் பாதுகாப்புக் கழகம், தி.மு.கழகம் என்று ஏதாவது ஓர் அமைப்பு இடம் பெறுவதும், அதன் மூலம் செய்யப்படும் பகுத்தறிவுப் பிரச்சாரங்களிலும், ஒரு கருத்தை சொல்லிவிட்டு இது 'பெரியார்' சொன்னது என்று பொதுவாகக் குறிப்பிட்டுத் தங்கள் இயக்கத் தலைவரைச் சுட்டிக் குறிப்பிடும் இடங்களிலும் புதுவைச்சிவத்தின் குரலும் இணைகிறது. புதிய வாழ்வு நாடகத்தில் திராவிட நாடு பற்றிய விளக்கங்களில் தம் கருத்தேற்றியே வசனங்களை அமைத்திருக்கிறார் புதுவைச்சிவம்.[69] அந்நாடகத்தின் முதல் காட்சியில் தலைவரின் சொற்பொழிவில்,

> .... நாம் நாடு சாதி பேதங்களாலும் சமுதாய மூடவழக்கங்களாலும் மிகவும் சீர்கேடுற்றிருக்கிறது. இத்தகைய சீர்கேட்டை மாற்றி அமைக்க அறிவுள்ள வாலிபர்கள் தேவை. அவர்களால் தான் இந்நாட்டில் மலிந்துள்ள மூடப்பழக்க வழக்கங்களையும் வறுமை முதலிய கொடுமைகளையும் ஒழித்துக் கட்ட முடியும். அத்தகைய ஒரு சிறந்த நிலையை அமைக்க, இந்நால்வரும் புத்துலகச் சிற்பிகளாக அமைய வேண்டும் என்பதே என் பேரவா...

(புதுவைச்சிவம் 2000: 274)

என்று வெளிப்படும் கருத்துகளில் திராவிட இயக்கத் தலைவர்களைச் சுட்டி வாழ்த்தும் புதுவைச்சிவத்தின் குரல் முழுவீச்சில் வெளிப்படுவதைக் காணமுடிகிறது. திராவிட

இயக்கத் தலைவர்களான அண்ணா, நெடுஞ்செழியன், மதியழகன், அன்பழகன் ஆகியோரது பெயர்களையொட்டியே இந்நாடகப் பாத்திரங்களின் பெயர்களைப் பொன்னரங்கம், செழியன், நெடுமாறன், மதியழகன், அழகரசன் என்று புதுவைச்சிவம் அமைத்திருப்பதும், மேற்சொன்னவற்றை உறுதி செய்கிறது.

## கட்டுக் கோப்பு

கட்டுக்கோப்பு, நாடகத்தின் இன்றியமையாத அம்சமாகும். இது காலம், இடம் போன்ற வழுக்கள் அமையாமல் செறிவாக அமைவதைப் பொறுத்தே நாடகத்தின் வெற்றி தோல்வி அமைகின்றன. புதுவைச்சிவத்தின் முழுமையான மேடை நாடகங்களில் இக்கட்டுக்கோப்பு சிதையாமல் இருப்பதிலிருந்து, புதுவைச்சிவம் இதில் மிகுந்த கவனம் செலுத்தியிருக்கிறார் என்று கொள்ளலாம்.

## நாடகப்பயன்

மனிதர் பண்பட்டுத் திகழத் துணைசெய்வதே நாடகத்தின் பயன் ஆகும். கற்பவனை நன்னெறிப்படுத்துதலே நல்ல இலக்கியமென்று தொல்காப்பியரும், நல்லொழுக்கத்தை வலியுறுத்துவதே நல்ல நாடகமென்று பரிதிமாற்கலைஞரும் குறிப்பிட்டுள்ளனர்.[70] ஒரு நல்ல நாடகம் எழுதுவது கடினமானது என்றாலும் நாடகமே மக்களுக்கு மிகுந்த பயனளிப்பது என்றும், வாழ்க்கையைப் பிரதிபலிப்பதே நாடகம் என்றும் கூறப்படுகிறது. இதையே, 'நாடகம் உண்மை வாழ்க்கையை வெளிப்படுத்த வேண்டும்' என்று ஆண்டன் செகாவ் கூறுகிறார். 'உலகமே நாடக மேடை; நாமெல்லோரும் நடிகர்கள்' என்று ஷேக்ஸ்பியரும் கூறுகிறார். 'உயர்ந்த எண்ணங்களும், சிறந்த கருத்துக்களும் கொண்டவையே நல்ல நாடகம்' என்பது பெர்னார்ட் ஷாவின் கருத்து.[71]

ஆக, ஒரு நாடகத்தின் பயன் பகுத்தறிவு பெறுவதும், தீமையை எதிர்த்துப் போராடும் உறுதிக்குப் பார்ப்பவர்களைக் கொண்டு செல்வதுமாகும் என்று தொகுத்துக் கூறலாம். இந்த வகையில் புதுவைச்சிவத்தின் நாடகங்கள் அனைத்துமே

பகுத்தறிவை வலியுறுத்துவனவாகவும், தீமையை எதிர்த்துப் போராடும் குணத்தைப் பரப்புவனவாகவுமே அமைந்துள்ளன. தனி மனிதப் போராட்டங்களைப் பற்றித் தமது நாடகங்களில் அவர் அமைக்கவில்லை. மனப்போராட்டங்களை விளக்கி நற்பண்பு வெல்லும் என்று இறுதியில் முடிப்பதும் பிரச்சாரமே என்றொரு கருத்தும் உண்டு.[72] புதுவைச்சிவம் நாடகங்களும் பிரச்சாரமே என்பதால், சமூக நலன் சார்ந்த கருத்துகளுக்கே புதுவைச்சிவம் முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார் என்றும், ஆகவே போராட்டம் என்று வரும்போது கொள்கை சார்ந்த போராட்டங்களையே புதுவைச்சிவம் முன்னிலைப் படுத்திப் பிரச்சாரமாக ஆக்கியிருக்கிறார் என்றும் கூறவே வாய்ப்பிருக்கிறது.

நாடகக் கலையில் பிரச்சாரம் கூடாது என்று மேலை நாட்டில் எழுந்த கருத்துக்களை ஷெல்லி, எமர்சன் போன்றோர் ஏற்காமல் கலை வாழ்க்கைக்காக, மக்களுக்காக என்று வாதிட்டனர். இறுதியில் இலக்கியம் மக்கள் வாழ்க்கைக்குப் பயன்படும் பாங்கில் உருவாக்கப் படுதல் வேண்டும் என்ற கருத்து செல்வாக்குப் பெற்றது.[73] சமூகச் சீர்த்திருத்தக் கருத்துக்களை வலியுறுத்தி இயற்றப்படும் நாடகங்கள் குறிப்பிட்ட இலக்கை அடைந்தவுடன் பயனின்றிப்போய் விடுகின்றன என்றும், அதனால் அவை இலக்கியத்தகுதியை இழந்து விடுகின்றன என்றும் இப்சனின் நாடகங்களைச் சுட்டிக் காட்டிக் கூறப்பட்டது. ஆனால் குறிப்பிட்ட இலக்கை எட்டுவதே சிறந்த இலக்கிய மென்றும் மறுப்புக் கருத்துக் கூறப்பட்டது.[74]

இந்த வகையில் புதுவைச்சிவத்தின் நாடகங்கள் அனைத்துமே அரசியல் சமூகப் பொருளாதார விடுதலையையே அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. சுதந்திர வாழ்வும் சமத்துவச் சமுதாயமுமே அவரது இலட்சியங்களாக அமைந்து, அவரது அனைத்து நாடகங்களிலும் பரவி நிற்கின்றன. மேலும், மனிதனை முன்னேற விடாமல் அடிமைச் சங்கிலியாகப் பிணைத்துள்ள சாதி, மதம், மூடநம்பிக்கை முதலிய சீர்கேடுகளை உணரவைத்துக் காலங்காலமாக இருந்து வந்த அடிமை உணர்ச்சியையும், பழமைப் போக்கையும் அடியோடு மாற்றிப்

புத்துலகை நோக்கி நடைபோடச் சமுதாயத்தைத் தயார்படுத்தும் அளவில் சக்தி வாய்ந்ததாகப் புதுவைச்சிவம் நாடகங்கள் அமைந்திருக்கின்றன என்பது சரியான அளவுகோலில் அடங்குவதே.

'மக்களை உடனடியாகச் செயலில் இறங்கச் செய்வது நாடகக் கலைதான்' என்று கலைவாணர் கிருஷ்ணன் கூறியது போல்,[75] புதுவைச் சிவத்தின் நாடகங்கள் பார்ப்பவர்களிடம் பாதிப்பையும், விளைவையும் ஏற்படுத்தியிருக்கின்றன என்பதைத் திராவிட இயக்கக் கொள்கைகள் தமிழ் நாடெங்கணும் பரவி, ஆட்சி அதிகாரத்தைப் பிடித்ததோடல்லாமல், நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக அதில் நிலைத்து வரும் திராவிட இயக்க வரலாறு மூலம் அறிந்துகொள்ள முடிகிறது.

## நாடகங்களின் உள்ளடக்கம்

### இன உணர்வு

திராவிட இனம் என்பதை முன்னிறுத்தியே திராவிட இயக்கங்களின் பிரச்சாரம் அமைந்திருந்தது. புராணங்களிலிருந்து தற்கால இலக்கியம் வரையில் ஆரிய ஆதிக்கம் நிலை பெற்றிருப்பதாகவும், ஆரிய வழிவந்த பார்ப்பனரால்தான் திராவிடர்கள் திட்டமிட்டு வீழ்த்தப்பட்டனர் என்பதாகவும் திராவிட இயக்கத்தினரின் பேச்சுகளும், படைப்புகளும் அமைந்தன. இந்தப் பிரச்சினையில், பெரியாரின் கருத்தோட்டமே முழுமையாகத் திராவிட இயக்கத்தினரால் பிரதிபலிக்கப் பட்டுவந்தது.

திராவிட இயக்கத்தின் ஆரியர் எதிர்ப்புக் கொள்கை, முதலாம் இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டக் காலத்தில் (1938) தீவிரம் அடைந்த போது, அவர்களது பிரச்சார ஊடகங்கள் அனைத்திலும் அவ்வெதிர்ப்பு உச்சநிலையை அடைந்தது. ஆரியத்தின் திரிந்த வடிவமாகப் பார்ப்பனீயத்தைப் பெரியார் மதிப்பிட்டார். இவற்றையே திராவிட இயக்கக் கவிஞர்களும், கலைஞர்களும் தங்கள் படைப்புகளில் பிரதிபலித்தனர். புதுவைச்சிவத்தின் நாடகங்கள் அனைத்துமே ஆதிக்க எதிர்ப்பை வலியுறுத்துவதுடன், புரட்சியை நோக்கிய போராட்டங்களைத் தடையின்றித்

திணிக்கின்றன. இவை பார்ப்பனீய எதிர்ப்பைச் சுட்ட, ஒருசில நாடகங்கள் ஆரியர் எதிர்ப்பில் உழல்கின்றன. அதற்கான கூறுகள் அதிகம் இருப்பதாலேயே பழங்கதைகளைப் புதிய பார்வை பார்க்கும் நோக்கில் நந்தனார் வரலாற்றையும், இராமாயணக் கதையையும் புதுவைச்சிவம் தேர்ந்தெடுத்திருக்கிறார். அந்த நோக்கிலேயே கற்பனை வரலாற்று நாடகமான கோகிலராணியை அவர் இயற்றி இருக்கிறார் என்பதும் ஏற்புடைத்தே.

திராவிடர்-ஆரியர் பிரச்சினையை மையப்படுத்திப் புதுவைச்சிவம் இயற்றிய நாடகங்களுள் முதலிடம் வகிப்பது கோகிலராணி நாடகம். 'ஆரியச் சூழ்ச்சியை விளக்கித் தமிழருக்குத் தன்மான உணர்ச்சியையும் எழுச்சியையும் உண்டுபண்ணும் வீரஞ்செறிந்த சீரிய செந்தமிழ் நாடகம்' என்று புதுவைச் சிவத்தாலேயே இந்நாடகம் விளம்பரப் படுத்தப்பட்டுள்ளது.[76] 1947ஆம் ஆண்டில் இந்நாடகம் தமிழ் நாட்டில் போளூரில் நடத்தப்பட்டபோது, 'ஆரியத்திற் கடிமைப்பட்ட அரசனின் வீழ்ச்சி, ஆரிய மந்திரியின் சூழ்ச்சி, தமிழ்ப்பெண்ணின் பண்பும் வீரமும், தமிழர் தலைவன் ஒப்பற்ற சேனாதிபதியின் தீரம், ஆரியப் பெண்ணின் கபடக் காதல் காணத்தக்கவை' என்று விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது.[77] இவ்விளம்பரங்களே நாடகத்தைப் பற்றிய ஒரு கருத்துருவாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் இருப்பன நோக்கத் தக்கது.

கோகிலராணி நாடகத்தில் தவப்பெண்ணாக வரும் கோகில ராணி, ஆரியருக்கு அடிமைப்பட்டு விட்ட தமிழ்நாட்டின் நிலையை எண்ணி,

*1. ஆரியர் சேர்க்கையால் - உன்*
*ஆர்ந்த நற்புகழெலாம் போச்சே! - மிகத்*
*தேர்ந்த நல் அறிவெலாம் போச்சே!*

*(சிவப்பிரகாசம். ச 1947: 23)*

என்று தனிமையில் பாடி வருந்துகிறாள். ஆரிய மந்திரியின் சூழ்ச்சியால் சிறையில் அடைக்கப்படும் தமிழர் தலைவனான சேனாதிபதி,

.... அந்தோ! அரசன் ஆரிய மதுவையருந்தினான்! அறிவிழந்தான்! தன்மானம் இழந்தான்! அநீதியைத் தழுவினான்! இனி நீங்கள் என்றென்றும் சூத்திரர்களாய்- ஆரியருக்கு வேசி மக்களாய் இருக்கப் போகிறீர்கள்! ... இதுவரை சிம்ம சொப்பனம் கண்டு வந்த இந்த ஆரியக் கூட்டம் இனி மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்திக் களிக்கும்...

(சிவப்பிரகாசம். ச 1947: 63)

என்று புலம்புவதுடன்,

...ஏ, தமிழ்நாடே! ... ஆரியர் சூழ்ச்சியை இவ்வுலகம் அறிந்து கொள்வதற்காக, என் ஆவியை அர்ப்பணிக் கின்றேன்! 'ஈனனுக்கு இடம் விட்டால் இல்லிடம் பாழ்' என்னும் பழமொழிக்கிணங்க, நீ பிறருக்கு இடம் கொடுத்ததன் விளைவை அறிந்து, இனியாவது திருந்து! திருந்து!! ....

(சிவப்பிரகாசம். ச 1947: 64)

என்றும் கொலைக்களத்தில் நின்று உரைப்பதாக அமைக்கப் பட்டிருக்கும் காட்சியில் ஆரிய எதிர்ப்பு முழுமையாகக் காட்டப்படுகிறது.

மேலும், சோழ மண்டலத்தின் மன்னனாக முடி சூட்டிக் கொள்ளும் வீரவர்மன் நாட்டு மக்களுக்கு ஆற்றும் தனது உரையில்,

.... இனி, இந்நாட்டிலோ, பொதுவாகத் தமிழகத்திலோ ஆரியர் சூழ்ச்சிக்கு இடமே இருக்காது. மக்கள் வாழ்வும் முன்னேற்றம் நோக்கி மாறுதல் அடையும்... தமிழர் உயர்வே என் உயர்வு! ...

(சிவப்பிரகாசம். ச 1947: 104)

என்று அறிவிக்கிறான். அன்றைய திராவிட இயக்கத்தின் உள்ளார்ந்த எதிர்பார்ப்பாக இவை இருந்திருக்கின்றன என்பதே பெரியாரின் சொற்பொழிவுகளும், இந்நாடக வசனங்களும் எடுத்தியம்புகின்றன.

ஆரியர் இங்கு வருமுன்பு இந்நாட்டில் சாதிபேதம் இல்லை; ஆரியர் அறியாமையைப் புகுத்திச் சூழ்ச்சியைக் கையாள்பவர்; ஆரியம் அறிவுக் கொவ்வா முறை; ஆரியர் சேர்க்கையால் ஆர்ந்த நற்புகழ் போனது; ஆரியர்கள் ஈவிரக்கமற்ற பாதகர்கள் ; ஆரியம் கொடிய விஷம்; விஞ்சுபுகழ்த் தமிழருக்கு நஞ்செனவாய்த்தவர்கள்; அழிவைச் செய்யும் ஆரியம்; மக்களை ஏமாற்றி மானமற்று வாழும் கூட்டம்; ஆரியர் பேடித்தனமும், பிறவிச் சூழ்ச்சியும் உடையவர்கள் என்று இந்நாடகம் முழுவதும் ஆரியரைப் பற்றிய மதிப்பீடு மலிந்து காணப்படுகிறது. மேலும், வஞ்சகர்; சண்டாளர்; பேடிகள்; ஈனன் என்று ஆரியர்களைக் கடுமையான சொற்களால் சுட்டும் புதுவைச்சிவம், ஆரியர்க்கு அடிமைப்பட்டால் என்றென்றும் சூத்திரர்களாய், வேசி மக்களாய்த் தமிழர்கள் இருப்பார்கள் என்றும் கடுமையாகக் குறிப்பிடுகிறார்.[78]

இத்தனை எதிர்ப்புக்கும், கடுமைக்கும் காரணமாக 1937 ஆம் ஆண்டு நிகழ்வான இந்தித்திணிப்பு எதிர்ப்புப் போராட்டம் அமைகிறது. இந்தித் திணிப்பைக் கடுமையாக எதிர்த்த திராவிட இயக்கம், தமிழ் மறுமலர்ச்சியை முன்னிறுத்தியது. தமிழ் நாடெங்கும் 'திராவிட இனம்' என்ற புதுவேகம் பரவியிருந்த காலத்தில் இந்நாடகம் எழுதப்பட்டிருக்கிறது. 'இந்தி எதிர்ப்பின் காரணமாகத் தமிழுணர்ச்சி, தலையெடுத்த போது, அதாவது 1939ஆம் ஆண்டு - எழுதப்பட்ட தாகும் இது' என்று கோகிலராணி நூலின் முன்னுரையில் புதுவைச்சிவம் குறிப்பிட்டுள்ளார்.[79]

தமிழரின் வீழ்ச்சி (அ) இராமாயண சாரம் நாடகத்தில் தமிழரை அழிக்கவும், தமிழ்நாட்டைத் தம் வசமாக்கவும் விசுவாமித்திரர் போன்ற ஆரியச் சந்நியாசிகள் திட்டமிட்டு இராமனைத் தென்னிந்தியப் பகுதிக்கு அனுப்பித் தமிழர் தலைவனான இராவணனை வீழ்த்துகின்றனர் என்ற போக்கை நாடகக் கதைப் பாங்கோடு படைத்திருக்கிறார் புதுவைச்சிவம் (கையெழுத்துப்பிரதி பின்னிணைப்பில் காண்க). இராமாயணத்தைப் புதிய பார்வையில் கண்ட பாரதிதாசன், கைகேயி சூழ்வினைப் படலத்தை மட்டும் 'டெலிபோன் படலம்' என்ற தலைப்பில் நாடகக் கதையாக எழுதியுள்ளார். 'தமிழர்

வாழும் இந்தியாவை எதிர்காலத்தில் ஆரியர் ஆள இராமனுக்கு முடிசூட்ட வேண்டும்' என்ற கருத்தோட்டம் இக்கதையின் கருவாக விளங்குகிறது. இக்கருவையே புதுவைச் சிவம் இராமாயணக்கதை முழுமைக்கும் விரித்து நாடகக்கதையாகப் படைத்துள்ளார். பாரதிதாசன் 1934 ஆம் ஆண்டில் இயற்றிய 'இரணியன் அல்லது இணையற்ற வீரன்' நாடகம் பழங்கதைகளைப் புதிய பார்வை பார்க்கும் முதல் முயற்சியாகக் கருதப்படுகிறது. அதற்கடுத்த முயற்சியாகப் புதுவைச்சிவத்தின் 'தமிழரின் வீழ்ச்சி (அ) இராமாயண சாரம்' நாடகம் அமைகிறது. பெரியாரின் இராமாயணம் குறித்த சொற்பொழிவுகளும், கட்டுரைகளும், குடிஅரசு இதழில் பெருமளவில் வெளியிடப் பட்டுள்ளன. அவை நூலாகவும் வெளிவந்து திராவிட இயக்கத்தினரின் இந்தப் பழங்கதைகளைப் பற்றிய புதிய பார்வைக்கு மூலமாக அமைகின்றன. பாரதிதாசன், புதுவைச்சிவம் ஆகியோரின் இம்முயற்சிகளுக்குப்பிறகே, மாணிக்க நாயகர், சந்திரசேகரப்பாவலர், அறிஞர் அண்ணா, ஏ.கே. வேலன், ஜலகண்டபுரம் கண்ணன், பூரணலிங்கம்பிள்ளை, ந.சி. கந்தையா போன்றோர் புராணங்கள் குறித்த தங்கள் புதிய பார்வையை நூல்களாக வெளியிட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது .[80]

வீர நந்தன் நாடகத்தில், நந்தனும் அவரைச் சேர்ந்தவர்களும் தீண்டாமையால் துன்புறுத்தப்படுவதற்கும், பின் நந்தன் வஞ்சகமாகக் கோவிலுக்குள் தனியாக வரவழைக்கப்பட்டு அக்கினிக்குண்டத்தில் தள்ளப்படுவதற்கும் ஆரியப் பார்ப்பனர்களே காரணம் என்று மிக வெளிப்படையான நோக்கில் நாடகக் கதை அமைக்கப்பட்டுள்ளது. இதுதான் உண்மைக்கதை என்றும், புராணத்தில் வரும் நந்தன் கதை ஆரியப் பார்ப்பனரின் கபட நாடக 'அக்கிரமக்கதை' என்றும் நாடக இறுதிக் காட்சி அமைப்பில் விளக்கமும் தரப்பட்டுள்ளன.[81]

அமுதவல்லி (அ) அடிமையின் வீழ்ச்சி நாடகத்தில் ஜமீன்தாரின் ஆலோசகராக வரும் சாஸ்திரி என்னும் பாத்திரமும் ஆரியப் பார்ப்பனரின் கபடத்தை வெளிப்படுத்தும் ஒரு பாத்திரப் படைப்பாகவே ஆக்கப்பட்டிருக்கிறது .[82]

சிதைந்த வாழ்வு நாடகத்திலும் தமிழ்நாடு தன் பெருமையை இழந்ததற்குப் பிற்காலத்தில் ஆரியர் புகுத்திய தீய நெறிகளை ஏற்றதே காரணம் என்று கதாநாயகன் அறிவழகன் கூறுகிறான்.

> ... ஏ, தமிழ்நாடே! உன் பழம் பெரும் கீர்த்தி எங்கே? பிறபொக்கும் எல்லா உயிர்க்கும் என்று பேசிய உன் பெருமை எங்கே?... அந்தோ! தூய நெறியை இழந்து தீய நெறியை மேற்கொண்டாயே!...உண்மைக்கு உறைவிடமாய் இருந்த நீ, எங்கே ஓடி ஒளிந்தனை? நன்மைக்கு நாயகமான நீ, நாச முறைகளை ஏன் மேற்கொண்டாய்?...
>
> (ச. சிவப்பிரகாசம் 1951: 76)

சீர்திருத்த இயக்கத்திற்கு எதிராக இருப்பவர்கள் எல்லாம் கூட ஆரியத்திற்கு அடிமைப்பட்டவர்கள் என்ற கருத்திலும் பாத்திரங்களைப் புதுவைச்சிவம் படைத்துள்ளார். புதியவாழ்வு நாடகத்தில் சேர்மன், ரஞ்சித சுந்தரா (அ) ரகசியச் சுரங்கம் நாடகத்தில் மாணிக்கச்செட்டி, அமுதவல்லி (அ) அடிமையின் வீழ்ச்சி நாடகத்தில் ஜமீன்தார் ஆகியோரெல்லாம் பார்ப்பனர் (ஆரியர்) சொல் கேட்டுத் தவறான முடிவு எடுப்பவர்களாகவே காட்டப் பட்டுள்ளனர்.[83]

## திராவிடநாடு கோரிக்கை

தமிழினத்தின் பெருமை புதுவைச்சிவம் நாடகங்களில் பல இடங்களில் சுட்டிக் காட்டப்படுகிறது. பண்டைத் தமிழர் பெருமைபட வாழ்ந்தனர் என்பதும், தற்காலத் தமிழர் ஆரியத்தால் கேடுற்றனர் என்பதும், புதுவைச்சிவத்தின் ஆழமான நம்பிக்கையாக இருப்பதை அவரது நாடகங்களின் பல பகுதிகள் உணர்த்துகின்றன. தமிழ்ச் சமுதாய நலனையே மனதில் கொண்ட தமிழர் தலைவனாகக் கோகிலராணியில் சேனாதிபதியின் பாத்திரப்படைப்பு விளங்குகிறது. 'வாழ்விற்கு இலக்கணம் வகுத்த வளநாடே இன்று வஞ்சகரின் மதச் சண்டையில் ஆழ்ந்து விட்டாயே' என்று தமிழ்நாட்டைப்பார்த்துப் புலம்பும் சேனாதிபதி, தமிழ்நாடு தமிழர்க்கே என்ற நிலையை உண்டு பண்ண, தன் ஆவியை அர்ப்பணிக்க முன்வருவதாகச் சூளுரைக்

கின்றான். தமிழ்நாடு தமிழர்க்கே என்ற நிலைக்காகத் தமிழ்ப் பாதுகாப்புக் கழகம் போராடுகிறது. 'தமிழ்நாடு தமிழர்க்கே' என்ற முழக்கம் நாடகத்தின் பல இடங்களில் இடம்பெற்று, இறுதியில் அதே வாழ்த்தொலியுடன் இனிது முடிவடைவதாக அமைகிறது.[84] புதுவைச்சிவம் நாடகப்போக்கில் ஆரியர்-திராவிடர் பிரச்சினையை ஆரியர் - தமிழராகக் கொண்டுவந்து முடிப்பதும் நோக்கத்தக்கது. 1950 ஆம் ஆண்டுகளில் எழுதப்பட்ட புதிய வாழ்வு நாடகத்தில் திராவிடநாடு கோரும் பிரச்சாரம் வெகுவாகப் போற்றப்படுகிறது. கதாநாயகனும் அவனது நண்பர்களும் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் திராவிடத்தில் சமதர்மக் குடியரசை நாட்டப் பிரச்சாரம் செய்கின்றனர். 'திராவிடநாடு திராவிடர்க்கே' எனும் முழக்கங்களும் எழுப்பப்படுகின்றன. திராவிடநாடு பற்றிய புதுவைச் சிவத்தின் விளக்கமும் இச்சொற்பொழிவு மூலம் தரப்பட்டுள்ளது.

> ... நாம் கோரும் திராவிடநாடு சமதர்மக் குடியரசாகவே விளங்கும். திராவிடநாட்டு ஆட்சியில் வறுமை இருக்காது! பசி பட்டினி தலைகாட்டா! வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற கொடுமைகள் விரண்டோடும்! அறிவுப் பஞ்சம் அணுகாது! சுருங்கச் சொன்னால் பிற நாட்டினர் போற்றக்கூடிய அளவில் நம் நாடும் மக்கள் வாழ்வும் சிறந்தொளிரும்...

(புதுவைச்சிவம் 2000: 311)

என்ற புதுவைச் சிவத்தின் விளக்கம், திராவிட இயக்கத்தினரின் திராவிட நாட்டுப் பிரகடனத்தை ஒட்டிய கனவாகவே அமைந் திருப்பதைக் காண முடிகிறது.

புதிய வாழ்வு நாடகத்தில் 'திராவிடநாடு திராவிடர்க்கே' என்ற முழக்கமும், திராவிடர் என்ற கருத்து மேலோங்கியிருந்த காலமான 1939 ஆம் ஆண்டில் எழுதப்பட்ட கோகிலராணியில் 'தமிழ்நாடு தமிழர்க்கே' என்ற முழக்கமும் இந்நாடகங்களில் மேலோங்கிருப்பதும் நோக்கத்தக்கது.

**கறுஞ்சட்டைத் தொண்டர் படை**

திராவிட இயக்கத்தின் அடிப்படை உரிமை கோரும் போராட்டங்களுக்காகவே திராவிடர் கழகத்தில் கறுஞ்சட்டைத்

தொண்டர் படை என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. இந்த அமைப்பை வரவேற்று, வாழ்த்தி, அவர்களது கடமைகளைக் கவிதைகளில் விளக்கியிருக்கிறார் புதுவைச்சிவம். நாடகங்களிலும் தேவையான இடங்களில் இவ்வமைப்பைக் கோடிட்டுக் காட்டுவதுடன், கோகிலராணி நாடகத்தில் காட்சி அமைப்பிலேயே புகுத்தியும் விடுகிறார். தமிழர் தலைவனான சேனாதிபதி, ஆரிய பிரம்ம குருவின் சூழ்ச்சியால் மரண தண்டனைக்கு ஆளாகி, கொலைக் களத்தில் நிற்கும் போது அவனைக் காப்பாற்றுகிறது கறுப்புடை தரித்த கூட்டம் ஒன்று. அவர்களது நோக்கம் என்ன என்று சேனாதிபதி கேட்க, ஆரிய சூழ்ச்சியினின்றும் தமிழர்களைக் காப்பது தான் என்கின்றனர் அவர்கள்.[85]

நாடகத்தின் இறுதியில் தமிழர் பாதுகாப்புக் கழகத்தாரின் துணையுடன் கறுப்புடை தரித்த கூட்டம் ஆரிய பிரம்ம குருவிடம் இருந்து ஆட்சியைக் கைப்பற்றிச் சிறைப்பட்ட சோழ மன்னனையும் மீட்கிறது. தமிழ்நாடு தமிழருக்கே என்று அக்கூட்டத்தினர் முழங்க நாடகம் முடிவடைகிறது.[86]

தமிழ் நாட்டை ஆரியர்களின் பிடியினின்று மீட்பது திராவிட இயக்கமே என்று தங்கள் கொள்கையை நாடகம் முழுவதும் வலியுறுத்தி இருக்கிறார் புதுவைச்சிவம். திராவிடர் கழகம் விடுதலைப் படையாக, கருஞ்சட்டைத் தொண்டர் படையை உருவாக்கிய நோக்கத்தைத் தமது நாடகத்தில் முழுமையாகப் பயன்படுத்தித் தமிழ்நாட்டை மீட்பதாக இறுதி செய்வதன் மூலம் இந்நாடகத்தை முழுமையான இயக்கப் பிரச்சார நாடகமாகவே ஆக்கியிருக்கிறார் புதுவைச்சிவம். இந்நாடகம் திராவிட இயக்கத்தினர் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றதும், புதுவை தமிழகப் பகுதிகள் மட்டுமின்றி இலங்கை, மலேசியா போன்ற திராவிடஇயக்கத் தாக்கம் கொண்ட தமிழர்கள் வாழும் நாடுகளிலும் நடத்தப்பெற்றதும் நோக்கத்தக்கது.[87]

## மொழி உணர்வு

1937 ஆம் ஆண்டில் இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டக் காலத்தில், திராவிட இயக்கத்தினரின் மொழி சார்ந்த உணர்வுகள்

பெரிதும் தூண்டப்பெற்ற நிலையில் இருந்தன. தமிழ் மொழியின் உயர்வு குறித்துப் பல கவிதைகளைப் புதுவைச்சிவம் இயற்றியிருந் தாலும், நாடகங்களில் தமிழ் மொழியின் உயர்வு குறித்து நேரடியான வசனங்களும், காட்சிகளும் அமைக்கப்படவில்லை. ஆனால், தமிழினம், தமிழ்நாடு என்ற இன உணர்வு அவரது பல நாடகங்களில் நேரடியாகச் சுட்டப்பெற்றிருப்பதுடன், அனைத்து நாடகங்களிலுமே இழையோடிச் செல்கிறது. கிடைத்திருக்கின்ற நான்கு நாடகப் பாடல் தொகுப்பிலும், கோகிலராணி நாடகப் பாடல்களிலும் நாடகப் போக்கை வெளிப்படுத்தும் பாடல்களை விடத் திராவிட இயக்கக் கருத்தியலை வலியுறுத்தும் பாடல்களும், இன உணர்வுப் பாடல்களுமே மிகுந்திருக்கின்றன. அமுதவல்லி (அ) அடிமையின் வீழ்ச்சி என்னும் நாடகப் பாடல் ஒன்றில்

*2. தமிழர் வாழும் நாடு*
*தமிழ் வளர்த்த நாடு*
*சகத்திற் சிறந்த நாடு!*

*(புதுவைச்சிவம் 2000: 397)*

என்று தமிழ் மொழியின் உணர்வு சுட்டப்படுகிறது.

இந்தித் திணிப்பு எதிர்ப்புப் பற்றிய நிகழ்வுகளும், கருத்துகளும் நேரடியாக நாடகங்களில் சுட்டப்படவில்லை என்றாலும் இந்தித் திணிப்பு எதிர்ப்பின் விளைவாகத் தமிழரின் வீர வரலாறு கூறும் நாடகங்கள் பலவற்றை இயற்றியிருப்பதாகப் புதுவைச்சிவமே குறிப்பிட்டுள்ளார். 'வீரத்தாய்', 'தமிழச்சியின் தேசபக்தி' ஆகிய அவரது வசன நாடகங்கள், கவிதை இயலில் குறுங்காவியமாகவும் இயற்றப்பட்டு நூலாகவும் வெளி வந்துள்ளன. 'மறக்குடி மகளிர்' எனும் அந்நூலின் முன்னுரையில்,

> ...தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி தோன்றியதிலிருந்து, தமிழர்க்குத் தம் தாய்மொழியாம், தமிழில் உணர்ச்சி பிறந்தது! அதைக் கற்க வேண்டுமென்பதில் ஆர்வம் எழுந்தது! தமிழிற் கலைகளென்றால், புராணேதிகாசங்கள் தவிர வேறொன்றுமில்லை என்ற எண்ணம் மிகுதியாக

> நிலைபெற்றிருந்த இந்நாட்டிலே, பெரியார் தொடுத்த அப்போருக்குப் பின்னர்ச், சங்க இலக்கியங்கள் வெளிவந்துலாவின! அவற்றின் கருத்தை மக்களிடம் விளக்கப், பலரும் வேலை செய்தனர். அந்த நோக்கத் தோடு, அப்பொழுது எழுதப்பட்டதே 'மறக்குடி மகளிர்' என்னும் இச்சிறு நூலாகும்.
>
> (சிவப்பிரகாசம். எஸ் 1946: முன்னுரை)

என்று புதுவைச்சிவம் குறிப்பிடுவதில் இருந்து, இந்தித்திணிப்பு எதிர்ப்பின் விளைவே தமிழ்மொழி, தமிழினம், தமிழ்நாடு ஆகியவற்றை உயர்த்தும் படைப்புகள் உருவாகக் காரணம் என்பது தெளிவாகிறது. மேலும், தமிழின மேன்மை, ஆரியர் எதிர்ப்பு ஆகியவற்றையே கதைக் கருவாகக் கொண்ட 'கோகிலராணி' நாடக நூலின் முன்னுரையில்,

> ... இந்தி எதிர்ப்பின் காரணமாகத் தமிழுணர்ச்சி தலையெடுத்த போது - அதாவது 1939 ஆம் ஆண்டு - எழுதப்பட்டதாகும் இது ...
>
> (புதுவைச்சிவம் 1947: பதிப்புரை)

என்று புதுவைச்சிவம் குறிப்பிடுகிறார். இதனால், நேரடியாகச் சுட்டப்படாவிட்டாலும், இந்தித் திணிப்பு எதிர்ப்புணர்வு புதுவைச்சிவத்தின் பல நாடகங்களுக்கு அடிப்படைக் கருவாக அமைந்திருந்தது என்று துணிதல் சரியானதாகவே அமையும்.

### பெண்ணுரிமை

பெண்கள் கல்வி கற்கும் உரிமை, மணம் மற்றும் மறுமணம் செய்து கொள்ளும் உரிமை, சொத்துரிமை உட்பட ஆண் பெண் சம உரிமையைத் திராவிட இயக்கத்தினர் தங்களின் முக்கியக் கொள்கைகளாகக் கொண்டதுடன் அவற்றைப் பெருமளவில் பிரச்சாரம் செய்து வந்தனர். திராவிட இயக்கத்தில் பெண்ணுரிமையை வலியுறுத்தி அதிகப் படைப்புகளை இயற்றியவர்களாகப் பாரதிதாசனையும், புதுவைச்சிவத்தையும் குறிப்பிடலாம்.

புதுவைச் சிவத்தின் அனைத்து நாடகங்களுமே ஆண் பெண் சம உரிமையை வலியுறுத்துகின்றன. 'ஆணுக்கு ஒரு நீதியும்

பெண்ணுக்கு ஒரு நீதியும் உள்ள அநியாய சமூகத்தில் பிறக்கச் செய்ததற்காகக்' கடவுளைப் 'பாழுந் தெய்வமே' என்று சாடவும் துணிகிறாள் ரஞ்சித சுந்தரா (அ) ரகசியச்சுரங்கம் நாடகத்தில் விதவையாக வரும் சௌந்தரவல்லி. அவளது தங்கையான ரஞ்சிதம் பெண்ணுரிமைப் போராளியாகவே இந்நாடகத்தில் படைக்கப்பட்டிருக்கிறாள்.

> ...பெண்கள் சமூகம் அடையும் கொடுமைகளை ஒழிப்பதற்கும், அவர்களின் முன்னேற்றத்திற்கும் உழைக்க வேண்டுமென நான் தீவிர எண்ணங் கொண்டுள்ளேன்...
>
> (புதுவைச்சிவம் 2000: 39)

என்ற ரஞ்சிதத்தின் வசனமாக வரும் வரிகள் பெண்ணுரிமை குறித்துப் புதுவைச் சிவம் மேற்கொண்ட நிலைப்பாட்டை விளக்குவதாகவே அமைந்திருப்பதை நோக்கலாம். அமுதவல்லி (அ) அடிமையின் வீழ்ச்சி நாடகத்தின் கதாநாயகி அமுதவல்லியும் அவளது தோழியுமான சந்திராவும் தங்களின் மணம் செய் உரிமையை நிலைநாட்டி விரும்பியவனையே திருமணம் புரிகின்றனர். சோழ மண்டலத்தின் உரிமையை ஒரு பெண் மீட்டுத் தருவதாக அமைந்திருக்கிறது கோகிலராணி நாடகம். சமூக சேவை நாடகத்தில் தாழ்த்தப்பட்ட பெண்ணான கமலாவும், பகுத்தறிவுச்சங்கத்தைச் சேர்ந்த சீதாவும் ஜமீனின் கொடுமைக்கு ஆளாகிப் பின் தங்கள் உரிமையை நிலைநாட்டுகின்றனர். காந்திமதி (அ) கல்வியின் மேன்மையில் காந்திமதி இறுதிவரை தன்மானத்தையும் கௌரவத்தையும் விட்டுக் கொடுக்காமல் உரிமையை நிலைநாட்டுவதாகக் காட்சிகள் அமைக்கப் பட்டுள்ளன. மூன்று பெண்கள் நாடகத்தில் வரும் முக்கியக் கதா பாத்திரங்களான லீலா, பார்வதி, பொன்மணி மூவரும் கல்வி கற்றவர்களாகக் காட்டப்பட்டாலும் சீர்திருத்தப்பாதையைத் தேர்ந்தெடுத்த பொன்மணி மற்றவர்களை விட வாழ்வில் பல சிறப்புகள் பெற்று மேலோங்கி இருப்பதாகக் காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளன.[88] சிதைந்த வாழ்வு நாடகக் கதாநாயகி அஞ்சுகம் பலவித இன்னல்களுக்கு ஆளாகி இறுதியில் மரணப் படுக்கையில் இருக்கும் போது மருத்துவரிடம்,

> ... இந்த நாட்டில் பெண்கள் சமுதாயமே குற்றமுடையதாகத்தான் கருதப்படுகிறது. அவர்களுக்கு, வாழ்வில் எவ்வித உரிமையும் இல்லை. ஆண்களின் போகப்பொருள் பெண்கள் என்ற நிலைதான் இருந்து வருகிறது. ஆண்களைப் போன்று பெண்களும், உரிமையோடு வாழ வேண்டும்...
>
> (புதுவைச்சிவம் 1951: 127)

என்று வேண்டுவதாகவும், அதற்கு அம்மருத்துவர்,

> ... பெண்கள் சமுதாயம் முன்னேற்றம் அடையாத வரை, இந்த நாடும் முன்னேற்றம் அடையாது ...
>
> (புதுவைச்சிவம் 1951: 127)

என்று சமாதானம் கூறுவதாகவும் அமைக்கப்பட்டிருக்கும் வசனங்கள் பெண்ணுரிமையின் இன்றியமையாமையைத் தீர்க்கமாக வலியுறுத்து கின்றன. புதிய வாழ்வு நாடகத்தின் கதாநாயகி பூங்கொடி,

> "....நம் பெண் சமூகம் மானமற்று உரிமையற்று, அடிமையுற்றுத்தான் உழல வேண்டுமா? பிற நாட்டுப் பெண்கள் மானத்தோடும் உரிமையோடும் வாழவில்லையா?...."
>
> (புதுவைச்சிவம் 2000: 330)

என்று பெண்ணுரிமைக்காகக் குரல் கொடுத்துப் போராடும் புரட்சிப் பாத்திரமாகவே படைக்கப் பட்டிருக்கிறாள். நாடகத்தின் இறுதிக் காட்சியில் 'ஆணுக்கொரு நீதி பெண்ணுக்கு ஒரு நீதி பேசுவது நேர்மையான செயலல்ல' என்று நெடுமாறன் கூறுவதாகவும், அனைவரும் அதை ஏற்ற பின்னர், கழகத்தின் தலைவர்,

> ...இதுகாறும் அடக்கி ஒடுக்கி வைக்கப்பட்டிருந்த பெண்கள் உரிமைபெற்று ,சரிநிகர் சமானமாக வாழ்வு . பெறும் தொடக்கத்தைக் கண்டு இறும்பூது எய்துகிறேன்...
>
> (புதுவைச்சிவம் 2000: 363)

என்று சொற்பொழிவாற்றுவதாகவும் காட்சிகள் அமைக்கப் பட்டுள்ளன. இதே போன்று நாடகப் பாட்டுகளிலும் பெண்ணுரிமையை வலியுறுத்தும் எண்ணற்ற பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

## பெண்கல்வி

பெண் கல்விக்குப் புதுவைச் சிவம் நாடகங்களில் மிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவரது நாடகக் கதாநாயகிகள் அனைவருமே கல்வியறிவு பெற்றவர்களாக உள்ளனர். பதின்மூன்று வயதிலேயே சாதியாசாரத்தை முன்னிட்டுக் கல்யாணம் செய்ய முயன்ற பெற்றோரை எதிர்த்துத் தான் பி.ஏ. படித்து முடிக்கும் வரையில் கல்யாணம் செய்து கொள்வது இல்லை என்றும், கல்வியே தன் வாழ்க்கையின் வழிகாட்டி என்றும் இலட்சியப் பெண்ணாக உறுதியுடன் இருக்கும் இரஞ்சிதம், ரஞ்சித சுந்தரா (அ) ரகசியச்சுரங்கம் நாடக நாயகியாகப் படைக்கப்பட்டுள்ளாள். தன்னுடன் படித்த ஜமீன் வாரிசான குணசேகரனைக் காதலித்துக் கைப்பிடிக்கிறாள், அமுதவல்லி (அ) அடிமையின் வீழ்ச்சி நாயகி. அவளது தோழி சந்திராவும் 'படித்தவள்; அறிவுள்ளவள்; அதனால் தன் தோழனின் வாழ்வு சிறக்கும்' என்று கதாநாயகன் கூற்றாக அதே நாடகத்தில் சுட்டப்படுகிறாள். கோகிலராணி நாடகத்தில் வரும் மிக முக்கியப் பாத்திரங்களான கோகிலராணியும், கதாநாயகி பூங்கொடியும் கல்வி கேள்விகளிற் சிறந்தவர்களாகப் படைக்கப்பட்டுள்ளனர். மூன்று பெண்கள் நாடகத்தில் முதல் காட்சியிலேயே படித்த பெண்கள் தங்களுக்குள் சண்டை போட்டுக் கொள்ளக் கூடாது என்ற அறிவுரையுடன் மூன்று பெண்களும் அறிமுகமாகின்றனர். புதிய வாழ்வு நாயகி பூங்கொடியும் கற்றவளாகவே படைக்கப் பட்டிருக்கிறாள். சிதைந்த வாழ்வு நாயகியான அஞ்சுகமும் படித்த பெண்ணாகவே படைக்கப்பட்டிருப்பதை வைத்துப் பார்க்கும் பொழுது, புதுவைச்சிவம் பெண்கல்வியைப் போற்றி யிருப்பதும், தன் நாடகப் பெண் மாந்தர்களைக் கல்வி கற்றவர்களாகவே படைத்திருப்பதும் நோக்கத்தக்கது.[30]

## வீரம்

புதுவைச்சிவத்தின் அனைத்து நாடகங்களிலும் பெண்களின் பாத்திரப்படைப்பு வீரம் நிறைந்ததாகவே அமைக்கப்

பட்டிருக்கிறது. ரஞ்சித சுந்தரா நாடகத்தின் நாயகி ரஞ்சிதம் தன் காதலனின் துணையுடன் தன் சகோதரியின் மரணத்தில் உள்ள மர்மத்தைக் கண்டுபிடிக்கிறாள். மேலும், பெற்றோர்கள் எதிர்த்தாலும் அவர்கள் இருவரின் திருமணம் காதல் திருமணமாகவும், சாதி மறுப்புத் திருமணமாகவும், சீர்திருத்தத் திருமணமாகவும் நடைபெறுகிறது. அமுதவல்லி நாடக நாயகி அமுதவல்லி துணிவுடன் சீர்திருத்தச் சங்கத்தின் நடவடிக்கைகளில் ஈடுபடுகிறாள். அவளுடைய காதல் திருமணம் மிகுந்த போராட்டத்திற்குப் பிறகே நிறைவேறுகிறது. கோகிலராணியின் நாயகி தமிழ்ப் பாதுகாப்புக் கழகம் என்ற அமைப்புக்குத் தலைவியாகிப் போரில் ஈடுபட்டு, சோழ மண்டலத்தை ஆரியர்களின் பிடியிருந்து காப்பாற்றுகிறாள். வாள் பயிற்சி, வில் வித்தை முதலிய அனைத்து வீர விளையாட்டுகளிலும் தேர்ந்த பாத்திரப் படைப்பாகக் கோகிலராணியின் படைப்பு ஆக்கப்பட்டிருக்கிறது.

சமூக சேவை நாடகத்தில் கமலா என்னும் ஆதிதிராவிடப் பெண் பகுத்தறிவுச் சங்கம் மூலமாகப் பொதுத் தொண்டாற்று கின்றாள். இதனால் அப்பகுதி ஜமீனின் கோபத்திற்கு ஆளாகித் தண்டனை பெற்றாலும், தன் கொள்கைக்காகப் போராடி வெற்றி பெறுகிறாள். மூன்று பெண்கள் நாடகத்தில் சீர்திருத்தம் பேசும் பெண்ணான பொன்மணி, பகுத்தறிவுப் பிரச்சாரம் மேற்கொள் வதும், சீர்திருத்தப் பாதையைத் தேர்ந்தெடுத்ததால் தான் வாழ்க்கையில் வெற்றி அடைந்ததாகக் கூறும் பெண்ணாகவும் படைக்கப்பட்டிருக்கிறாள். புதிய வாழ்வு நாடகத்தின் நாயகி பூங்கொடி மிகவும் துணிச்சலான பாத்திரப் படைப்பாக ஆக்கப்பட்டுப் பொதுச் சேவை செய்பவளாகவும், பின்னர்த் தன் காதலனையே சீர்திருத்தத் திருமணம் செய்துகொள்பவளாகவும் படைக்கப்பட்டிருக்கிறாள். இதே நாடகத்தில் வரும் கோமதி என்னும் விதவை, தன்னுடைய தந்தையின் எதிர்ப்பையும் மீறி மறுமணம் செய்து கொள்ளும் வீரப் பெண்ணாகப் படைக்கப் பட்டிருக்கிறாள்.

சிதைந்த வாழ்வு நாடகத்தின் கதாநாயகி சமூக மூட நம்பிக்கையின் காரணமாகக் கொடுமைக்காளாகி மாண்டு

போகிறாள். இந்த ஒரு நாடகத்தைத் தவிர மற்ற நாடகப் பெண் கதை மாந்தர்கள் யாவரும் மூடநம்பிக்கைகளை எதிர்த்துப் போராடுபவர்களாகவும், இறுதியில் தங்கள் காதல் நிறைவேறிச் சீர்திருத்த மணம் புரிந்து கொள்பவர்களாகவும் படைக்கப் பட்டுள்ளனர்.

வீரத்தாய், தமிழச்சியின் தேசபக்தி ஆகிய இரு நாடகங்களிலும் வரும் பெண் கதை மாந்தர்கள் பண்டைய தமிழ்நாட்டில் பெண்கள் வீரம் செறிந்த மகளிராக வாழ்ந்திருந்ததை விவரிக்கும் போக்கில் படைக்கப்பட்டுள்ளனர். பொதுவாகப் புதுவைச் சிவத்தின் நாடகங்களில் வரும் பெண் கதை மாந்தர்கள் வீரம் செறிந்தவர்களாகவே படைக்கப் பட்டிருப்பது நோக்கத்தக்கது.

**மணவுரிமை**

ரஞ்சித சுந்தரா (அ) ரகசியச் சுரங்கம் நாயகி ரஞ்சிதம், அமுதவல்லி(அ) அடிமையின் வீழ்ச்சி நாயகி அமுதவல்லி, மூன்று பெண்கள் நாடகத்தில் வரும் செவிலி, புதிய வாழ்வு நாயகி பூங்கொடி, அதே நாடகத்தில் வரும் விதவைப்பாத்திரமான கோமதி, சிதைந்த வாழ்வு நாடக நாயகி அஞ்சுகம் அனைவரும் தாங்கள் விரும்பியவனை மணம் செய்யப் போராடும் பெண்களாகவே படைக்கப் பட்டுள்ளனர். இவர்களில் சிதைந்த வாழ்வு நாடக நாயகி அஞ்சுகத்தைத் தவிர அனைவரும் தங்கள் காதலில் வெற்றியடைகின்றனர். சமூகக் கட்டுப்பாட்டின் கொடுமை தாளாமல் அஞ்சுகம் இறந்து விடுவதாகச் சிதைந்த வாழ்வு நாடகம் மட்டும் துன்பியல் நாடகமாக முடிகிறது. அஞ்சுகம் இறுதியில் இறந்து போனாலும், அதுவரையில் தன் உரிமையை நிலைநாட்டப் போராடும் பாத்திரமாகவே படைக்கப்பட்டிருப்பது நோக்கத்தக்கது.

**விதவை மறுமணம்**

மறுமணம் செய்ய உரிமை வேண்டுவோர் விதவைகளாகத்தான் இருக்கின்றனர். ஆண்களுக்கு அந்த நிலை எந்தக் காலத்திய சமுதாயத்திலும் இல்லாததால் பெண்கள்

மட்டுமே இவ்வுரிமைக்குப் போராடுபவர்களாகின்றனர். விதவைத்தன்மையின் வேதனையைப் பொறுக்காத பெண்களும், அவர்களின் துன்பத்தைக் கண்டு சகியாத பொதுநல நோக்குடைய ஆண்களும் விதவை மறுமணம் குறித்துப் பிரச்சாரம் மேற்கொண்டனர். விதவைகள் பெருகுவதற்குக் குழந்தை மணமே முதல் காரணம் என்று கூறி அதற்கும் எதிர்ப்புத் தெரிவித்தனர். இந்நிலை, திராவிட இயக்கப் பிரச்சாரத்தில் தலையாய இடம் வகித்தது.

குழந்தை மணத்தை எதிர்க்கும் வகையில் புதுவைச் சிவத்தின் ரஞ்சித சுந்தரா (அ) ரகசியச்சுரங்கம் நாடகப் பாத்திரமான சௌந்தரம் அமைந்திருக்கிறது. மிகச் சிறு வயதில் மணஞ்செய்துகொடுத்துச் சில நாள்களுக்குள் மணவாளன் இறந்ததால் விதவையானதாகக் கூறி, 'என்னை ஏன் விதவையாக்கினாய்?' என்று கடவுளைச் சௌந்தரம் நிந்திப்பதாகக் காட்சி அமைக்கப்பட்டிருக்கிறது.[90]

> ...இந்த உலகத்திலுள்ள துன்பங்கள் அத்தனையிலும் ஏக காலத்தில் சிக்கியிருப்பவர்கள் இளம்விதவைகள் தான்...
>
> (புதுவைச்சிவம் 2000: 19)

என்று சௌந்தரத்திற்கு ஆறுதல் கூறப்படுகிறது. இதைக் கூறும் மடாதிபதியே அவளது தாபத்துக்கு ஆறுதல் அளிப்பதாகவும் நாடகம் செல்கிறது. விதவை மறுமணத்தை வலியுறுத்தியும், குழந்தை மணத்தை எதிர்த்தும் குரல் கொடுக்கும் புதிய வாழ்வு நாயகி பூங்கொடி,

> ... உன் போன்ற இளம் விதவையர் ஆயிரக் கணக்கானவர் அக்கா இந்நாட்டில்! அவர்கட்கு வாழ்வு மறுக்கப்படுகிறது! அதனால் இந்தக் கொடிய சமூகத்திற்கு அவர்கள் பலியாகின்றனர். இதைத் தடுக்க வேண்டாமா நாம்?...
>
> (புதுவைச்சிவம் 2000: 330)

என்று கூறி இளம்விதவையான கோமதியை மறுமணத்திற்கு இணங்கவைப்பதாகக் காட்சி அமைக்கப்பட்டிருக்கிறது.

3. *வீணே சிறு விதவைகட்கே துயர்*
*ஏனோ புரிந்திருக்கின்றார் புவியோர்*

*(புதுவைச்சிவம் 2000: 378)*

என்று அந்நாடகப்பாட்டிலும் குழந்தை மண எதிர்ப்பைக் கைக் கொள்கின்றார் புதுவைச்சிவம்.

விதவைத் தன்மை 'விதி வசம்' என்று[91] வைதிகத்தை நம்பும் பெற்றோர்கள் தம்மைச் சமாதானப்படுத்திக் கொண்டாலும், 'பெற்றவர்களுக்கே பெருஞ்சனியனாய்த் தோற்றுவிக்கும் கொடிய வைதவ்யமே உன் கொடுமைக்கு இணையுண்டா' என்று[92] ரஞ்சித சுந்தரா (அ) ரகசியச் சுரங்கம் நாடகத்தில் சௌந்தரம் அரற்றுகிறாள். விதவையின் துயரை வெளிச்சம் போட்டுக் காட்டுவதற்காகவே இப்பாத்திரப் படைப்பைப் புதுவைச் சிவம் உருவாக்கியிருக்கிறார் என்றே கொள்ளத் தோன்றுகிறது.

> *...என்னைச் சிறு வயதில் மணஞ்செய்து கொடுத்தார்கள். சில நாட்களுக்குள் மணவாளன் இறந்தார். அன்று முதல் நான் விதவையானேன். பிறகு என் மங்கைப் பருவத்தில் மனத்தில் எழும் இன்ப உணர்ச்சிகளை அடக்க முடியாதவளாய்த் திகைத்தேன்!... பாழுந் தெய்வமே! இந்த அநியாய உலகில் என்னை ஏன் பிறக்கச் செய்தாய்? பிறந்தபின் இன்பத்தை அனுபவிக்கச் செய்யாமல் என்னை எதற்காகச் சிறுவயதில் விதவையாக்கினாய்? விதவையாக்கியும் விரக தாபத்தை ஏன் தந்தாய்? ... இன்னும் எத்தனை இளமங்கையர்கள் இத்துன்பக் கடலிலாழ்ந்து துடிக்கின்றனரோ? ...மனிதப் பிறவியெடுத்தும் இன்பத்தை அடைய முடிவில்லையென்றால் பெருத்த அவமானம்! அவ்வின்பத்தை அடைய வொட்டாமல் தடுக்கும் ஆஸ்திகம், நம் நாட்டிற்கேற்பட்ட ஓர் சாபக்கேடு! ...வைதவ்யம் என்னும் பாழும் அனாசார வழக்கம் என் ஆயுளை அநியாயமாகக் கொள்ளை கொண்டு விட்டது...*

*(புதுவைச்சிவம் 2000: 24,38)*

என்று செளந்தரம் அரற்றுவதாக வரும் வரிகளில் விதவைத் தன்மையின் கோர உருவத்தை முழுமையாகப் படம் பிடித்துக் காட்டப் புதுவைச் சிவம் முயன்றிருப்பதைக் காணமுடிகிறது. 'மனிதப் பிறவியெடுத்தும் இன்பத்தை அடைய முடியவில்லை' என்னும் கூற்று பிறவியில் மனிதப் பிறவியே உயர்ந்தது; அது இன்பத்தை அடைவதே நோக்கம் என்று அறிவியல், வாழ்வியல் சிந்தனைகளின் வெளிப்பாடாகவும், 'இன்பத்தை அடைய முடியவில்லை என்றால் பெருத்த அவமானம்' என்னும் கூற்று பெரியார் கூறிய சுயமரியாதை உணர்வுகளின் வெளிப்பாடாகவும் அமைந்திருப்பதைக் காண முடிகிறது. இல்லற இன்பத்துடன் தனிமனித, சமூக மதிப்புக்காகவும் ஏங்குகின்ற செளந்தரத்தின் விதவைத் துயரின் எல்லை மற்ற இளம் விதவைகளுக்காகவும் விரிகின்ற இடத்தில் திராவிட இயக்கத்தின் பிரச்சார வேகம் உண்மையாகவும், உள்ளுறையாகவும் படிந்திருப்பதைக் காண முடிகிறது.

இதேபோல், புதிய வாழ்வு நாடகத்தில் கோமதி என்னும் பாத்திரப் படைப்பு மூலமாக விதவைத் தன்மையின் வேதனையை வெளிப்படுத்தியிருக்கிறார் புதுவைச்சிவம். 'விதவையானவள் ஆதரவற்றவள்; அண்டிப் பிழைக்க வேண்டியவள்' என்றும், 'எது நேரினும் அனுபவிக்கக் கடமைப்பட்டவள்' என்றும் தன்னைத்தானே நொந்து கொள்ளும் கோமதியிடம் அந்நாடக நாயகியான பூங்கொடி,

> .... பொதுவாகப் பெண்களே பாவ ஜென்மம் என்று கருதப்படுகிற நாடு இது. அதிலும் விதவை நிலை எய்திவிட்டாலோ சொல்ல வேண்டிய தில்லை. நரக வாழ்க்கைதான் அவர்கட்கு... வாழ்வின் சுவையறியாத உன்போன்ற இளம் பெண்களை மீண்டும் வாழ வைக்க இந்தச் சமுதாயம் மறுக்கிறது. இனியும் இக்கொடுமை இச்சமுதாயத்தில் நிலைபெற்றிருக்க வேண்டுமா?... உன்போன்ற இளம் விதவையர் ஆயிரக்கணக்கானவர் அக்கா இந்நாட்டில்! அவர்கட்கு வாழ்வு மறுக்கப் படுகிறது. அதனால் இந்தக் கொடிய சமூகத்திற்கு அவர்கள்

பலியாகின்றனர்... அவர்கள் சாவும் பெரும் பாலும் இந்த நரக வேதனையிலிருந்து மீளுவதற்கு வலிந்து தேடிக்கொள்ளும் நிகழ்ச்சியாகவே இருக்கும்.. வீணே உயிரை இழக்கத் துணிகிறாயே! அந்த உயிர் உன்போன்ற ஆயிரக் கணக்கான விதவையரின் வேதனையைத் தீர்க்கப் பயன்பட்டாவது மறையட்டுமே... நீ புதுவாழ்வு பெறுவது சமுதாயக் கொடுஞ் சட்டத்தைக் குழிதோண்டிப் புதைப்ப தாகாதா?...

(புதுவைச்சிவம் 2000: 328-331)

என்று கூறி விதவைத்தன்மையை ஒழித்துச் சீர்த்திருத்தத்தை நிலை நாட்டப் பெரிதும் முயற்சி மேற்கொண்டு வெற்றியடைவதாக நாடகப் போக்கு அமைகிறது. என்றாலும், 'தாலியறுத்தவளுக்கு மறுதாலியா? விதவைக்கு மறுமணம் என்றால் வீண்பழிகூறி இகழும் உலகம்; இது அநியாயம்' [93] என்று மறுக்கும், அவ்விதவையின் தந்தையைச் சம்மதிக்கவைத்து மறுமணம் செய்து கொள்ளும் நெடுமாறன், 'வைதவ்ய மோகத்தால் மறைபட்டு மங்கிக்கிடக்கும் முழுநிலவுதான் என் வாழ்க்கைத்துணை' [94] என்று நாடகத் தொடக்கத்திலேயே வெளிப்படுத்துவதன் மூலம் விதவை மறுமணத்தை வலியுறுத்தவே இப்பாத்திரப்படைப்புகள் உருவாக்கப் பட்டுள்ளன என்று கொள்ளலாம்.

ஆண்களுக்கு மட்டும் மறுமண உரிமை இருப்பதைச் சாடி, [95] ஆனால் வஞ்சிக்கப்பட்டு உயிரிழக்கும் விதவைப் பாத்திரப் படைப்பாகச் சௌந்தரமும், பகுத்தறிவியக்க நண்பர்கள் மூலம் தெளிவடைந்து மறுமணம் செய்து கொள்ளும் விதவைப் பாத்திரமாகக் கோமதியும் படைக்கப்பட்டுள்ளனர். விதவைத் துயரை வெளிப்படுத்த மட்டுமல்லாது, அதன் காரணத்தைக் கூறித் தன்மானமிழக்காமல் வாழ மறுமணத்தைத் தீர்வாக வலியுறுத்தும் போக்கைப் புதுவைச்சிவம் தம் நாடகங்களில் பரவலாகக் குறிப்பிடுவதைக் காணமுடிகிறது.

**பொருந்தா மண எதிர்ப்பு**

பொருந்தா மணத்தை எதிர்க்கும் நிலையும் புதுவைச்சிவம் நாடகங்களில் நிலவுகிறது. ரஞ்சித சுந்தரா நாயகி ரஞ்சிதத்தை

அவளது மாமன் இரண்டாந்தாரமாக மணக்க முனைவதைப் 'பொருந்தாமணமிதைப் புகன்றிட வேண்டாம்' என்று பழமையில் ஊறிய மாணிக்கச் செட்டியே (ரஞ்சிதத்தின் தந்தை) எதிர்ப்பதாகக் காட்சி அமைக்கப்பட்டுள்ளது.[96] புதிய வாழ்வு நாயகி பூங்கொடியை மூன்றாம் தாரமாக உலகநாத முதலி மணக்க முனைவதையும் பொருந்தாமணம் என்று பூங்கொடியின் நண்பர்கள் தடுத்து நிறுத்துகின்றனர்.

மணம் செய்து கொள்ளவும், மறுமணம் செய்து கொள்ளவும் பெண்களுக்கு முழுஉரிமை கொடுக்க வேண்டும் என்பதைப் புதுவைச் சிவத்தின் நாடகங்கள் மிக அழுத்தமாக வலியுறுத்துகின்றன என்பது நோக்கத்தக்கது.

## சமத்துவம், பொதுவுடைமை

திராவிட இயக்கத்தினரின் சமதர்மக் கொள்கையும், பெரியாரின் ரஷ்யப் பயணத்திற்குப்பின் இயக்கத்தில் பொதுவுடைமைக் கருத்துக்கள் முன்னைவிட முக்கியத்துவம் பெற்றதும், சுயமரியாதை சமதர்மக் கட்சி என்று இயக்கமே பெயர்மாற்றம் பெற்றதும் இயக்கப் படைப்பாளிகளின் படைப்புகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தின. 'இலக்கியவாணர்கள் தாங்கள் வாழும் சமுதாயத்தின் ஆன்மாவைப் படைப்புகளில் வெளிப்படுத்துகின்றனர்' என்னும் ஷெல்லியின் கூற்றுப்படி[97] சுயமரியாதை இயக்கத்தின் மீது ஏற்பட்ட சமதர்மப், பொதுவுடைமைத் தாக்கங்கள் அவ்வியக்கத்தினரின் படைப்புகளில் குறைவர எதிரொலித்தன. ஆண்டான் - அடிமை, பணக்காரன் - ஏழை, முதலாளி - தொழிலாளி இடையிலான வர்க்கப் போராட்டங்களைத் தமிழ்ச் சமுதாயப் பின்னணியில் இலக்கிய வடிவ வெளிப்பாடுகளாக முதன் முதலாக அவ்வியக்கத்தில் பாரதிதாசனும், புதுவைச்சிவமும் படைத்தனர் என்று கூறலாம்.

புதுவைச்சிவத்தின் அமுதவல்லி (அ) அடிமையின் வீழ்ச்சி நாடகம் ஜமீந்தார் - விவசாயிகள் கதையை அடிப்படையாகக் கொண்டு விவசாயக் கூலிகளின் அவலநிலையைச் சுட்டிக்காட்டு கிறது. விவசாயிகள் விளைச்சலை வரியாகக் கொடுத்துவிட்டுத் தங்கள் பழங்கலத்திலே ஒரு மணி கூட இல்லாமல் கண்ணீர் வடிப்பதையும், அவர்களின் பிள்ளைகள் பசியால் துடிப்பதையும்

கண்டு, வெகுண் டெழும் சீர்த்திருத்தச் சங்கத்தினர் ஜமீன்தாரின் கொடுங்கோலாட்சி ஒழியப் பாடுபடுவோம் என்று சூளுரைப்பதும், ஆயிரக்கணக்கான ஏழைச் சகோதரிகள் உண்ண உணவும், உடுக்க உடையும் இல்லாமல் கஷ்டப்படுவதாகக்கூறி அவர்களுக்காக நிதி வசூலித்துத் தருவதும் இறுதியில் ஜமீந்தாரின் ஆதிக்கம் ஒழிந்து அப்பகுதியில் சுபிட்சம் நிலவுவதாகவும் நாடகம் முடிகிறது. வர்க்கப் போராட்டமும், இலட்சியக் கனவான சமதர்மத்தை எட்டிவிடும் நிறைவு நிலையும் இந்நாடகம் மூலம் தீவிரப் பிரச்சாரம் செய்யப்பட்டுள்ளதைக் காண முடிகிறது.[98]

வரலாற்று நாடகமான கோகிலராணியிலும் சமத்துவக் கொள்கைகள் போதிக்கப் படுகின்றன. தமிழர்கள் சமதர்மம் விரும்புவர்கள் என்ற கருத்தும், 'தமிழர் நெறியாகிய சமதர்ம முறையில் தழைத்தோங்கி வாழுங்கள்' என்று வாழ்த்துவதன் மூலம் சமதர்மம் தமிழர் நெறி என்ற கருத்தும் வலியுறுத்தப் படுகின்றன. ஆரிய வருகைக்கு முன்பான தமிழர் சமுதாயம் சாதிகளற்ற சமுதாயம் என்று கருதப்பட்டாலும், அச்சமுதாயம் சமதர்மக் கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டது என்ற புதிய சிந்தனையைப் புதுவைச்சிவம் வெளிப்படுத்தியமை நோக்கத்தக்கது.[99]

புதிய வாழ்வு நாடகத்தில் சீர்கேடுற்ற சமுதாய நிலையும், ஏற்றத் தாழ்வான பொருளாதார நிலையும் சுட்டிக் காட்டப்படுவதோடு, வறுமை, பசி, பட்டினி, வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவற் றிற்குத் தீர்வாகச் 'சமதர்மக் குடியரசு' வலியுறுத்தப்படுகிறது.[100]

சமூகசேவை நாடகத்தில் உழைப்போர் பெருமையும், அதேசமயம் அவர்கள் வறுமையும், ஏகாதிபத்தியம் ஏழைமக்களை இம்சிக்கும் போக்கும், சமத்துவத்தின் அவசியமும் சுட்டிக் காட்டப்படுகின்றன.[101]

சமதர்மம் ஒன்றுதான் ஊணும், உடையும், இல்லிடமும் தரும் என்று சிதைந்த வாழ்வு நாடகமும் போதிக்கிறது. வீரநந்தன் நாடகத்தில் ஆண்டான் - அடிமை நிலை அதன் பின்னணியோடு எடுத்துக்காட்டப்படுகிறது .[102]

புதுவைச்சிவத்தின் பெரும்பான்மையான நாடகப் பாட்டுகளில் முதல் பாடலும் இறுதிப் பாடலும் திராவிட

இயக்கத்தின் கொள்கை முழக்கமாகவே விளங்குகின்றன. 'சமதர்மமதை வாழ்த்திடுவோம்' என்று சமதர்மத்தை உயர்வாக வைத்துப் போற்றுவதை இப்பாடல்களில் காணமுடிகிறது.[103] தங்களின் சமதர்மப் பார்வையோடு பொது வுடைமைக் கண்ணோட்டத்தையும் சேர்த்தே திராவிட இயக்கத்தினர் செலுத்தி வந்தனர். பொதுவுடைமை என்பது சமதர்மமே என்று திராவிட இயக்க மேடைகளில் முழங்கப்பட்டது. புதுவைச்சிவம் தமது கவிதைகள் மட்டுமன்றி நாடகங்களிலும் தொழிலாளர், விவசாயிகள் ஆகியோரின் இன்னல்களுக்குத் தீர்வாகச் சமதர்மத்தை வலியுறுத்தியிருப்பதும் நோக்கத்தக்கது.

## சாதி, தீண்டாமை எதிர்ப்பு

சாதி, தீண்டாமை ஆகியவை வருணாசிரம தருமப்படி தமிழர்களிடம் திணிக்கப்பட்டவை என்று திராவிட இயக்கங்கள் கூறிச் சாதி ஒழிப்பையும், தீண்டாமை ஒழிப்பையும் தங்கள் கொள்கையாகக் கொண்டிருந்தன. திராவிட இயக்கப் பேச்சாளர் களும், படைப்பாளர்களும் இவற்றைத் தீவிரமாகப் பிரச்சாரம் செய்து வந்தனர். புதுவைச்சிவத்தின் நாடகங்கள் அனைத்தும் சாதிய நோக்கையும் அதன் அடிப்படையையும் மறுப்பவை யாகப் படைக்கப்பட்டுள்ளன.

ரஞ்சித சுந்தரா (அ) ரகசியச் சுரங்கம் நாடகத்தில் சாதி ஆசாரத்தைக் கூறித் தங்கள் விதவைப் பெண்ணின் காதலை மறுப்பவர்களாகக் கதாநாயகியின் தாயும் தந்தையும் படைக்கப் பட்டுள்ளனர். கதாநாயகி தன்னுடன் படித்த வேற்றுச் சாதி கதாநாய கனைக் காதலிப்பதை அவளது பெற்றோர் சாதி ஆச்சாரம் சொல்லியே ஏற்க மறுக்கின்றனர். கதாநாயகியின் விதவைத் தமக்கை, 'சாதியாசாரத்திற்கும் பழக்க வழக்கத்திற்கும் அடிமைப் படுவாயானால், நீ என்னைப்போல் துன்பக் கடலில் மூழ்குவது நிச்சயம்' என்று கடிதமெழுதித் தன் தங்கையைச் சாதியை ஏற்காமலிருக்கத் தூண்டுகிறாள். வேற்றுச் சாதியைச் சேர்ந்தவனை மணப்பது தவறு என்று மடாதிபதியும் வக்கீலும் வாதிட்டாலும் கதாநாயகி தான் காதலித்தவனையே மணக்கிறாள். இவர்கள் திருமணத்தை நீதிபதி தவறல்ல என்று தன் தீர்ப்பில் குறிப்பிடுவதாகக் காட்சிகள் அமைக்கப்பட்டுச் சாதி மறுப்புத்

திருமணத்தைச் சட்ட ரீதியாகச் சரி என்று கூறிப் பிரச்சாரம் செய்யும் நாடகமாக இது அமைந்துள்ளது.[104]

அமுதவல்லி (அ) அடிமையின் வீழ்ச்சி நாடகத்தில், ஜமீன்தாரின் மகனும், ஏழைத் தையற்காரரின் மகளும் காதலிக்கின்றனர். சாதியும், அந்தஸ்தும் அவர்களின் காதலுக்குத் தடையாக இருக்கின்றன. 'நமது குலத்துக்கும் சாதிக்கும் தகுதிக்கும் ஈடாகாத ஒருவளைக் காதலித்தேன் என்று சொல்லலாமா?' என்று கேட்கும் ஜமீன்தார் இறுதிக் காட்சியில் மனம் மாறி அத்திருமணத்தை ஏற்றுக் கொள்வதாகக் கதை இன்பியலில் முடிகிறது.[105]

கோகிலராணி வரலாற்று நாடகமாகப் படைக்கப்பட்டாலும் அரசனின் தானதர்மங்கள் சாதிக்குத் தக்க மாறுவதை நாடக மாந்தர் சிலர் எதிர்க்கின்றனர். 'ஓடிவந்து பிழைக்க வந்தவன் உயர்ந்த ஜாதி; ஒண்ட இடங்கொடுத்த இந்நாட்டினர் தாழ்ந்த சாதி' என்றும், இந்தச் சாதிப்பிரிவுகள் ஆரியர் வருகைக்குப் பின்னரே திராவிட நாட்டில் பரவின என்றும் திராவிட இயக்கக் கொள்கைகள் நேரடியாகவே இந்நாடகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

> ...அவர்கள் உம்மைத் தாழ்ந்த சாதியென்றும் சூத்திரன் என்றும் அழைத்தால் நீங்கள் அவர்களை மிலேச்சன் என்றும் அநாகரிகன் என்றும் அழையுங்களேன். நாம் அப்படிச் சொல்வதற்காவது ஆதாரமுண்டு. அவர்களுக்குத் துவேஷம் தவிர வேறென்ன இருக்கிறது?...

(சிவப்பிரகாசம் . ச 1947: 6)

என்று நாடகப் பாத்திரம் மூலமாகப் பெரியாரின் பிரச்சாரத்தை அப்படியே மேற்கொள்ளும் காட்சிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

சிதைந்த வாழ்வு நாடகத்தின் நாயகனும், நாயகியும் சாதி வேற்றுமையினால் பிரிக்கப்பட்டுப் பலவித இன்னல்களுக்கு ஆளாகின்றனர். நாயகன் தன் தந்தையிடம்,

> ...தமிழர்க்குச் சாதி பேதம் ஏது? பிறவியில் யாவரும் சமம் என்பதே, அவர்கள் கோட்பாடாயிற்றே! இடைக்காலத்தே நுழைந்த சுயநலச் சூழ்ச்சிக் காரர்களால் திணிக்கப்பட்ட முறைகளே இவை.

*இந்தச் சாதி பேத முறைகளை, அறிஞர்களெல்லாம் மறுத்துரைக்கின்றனரே...*

*(சிவப்பிரகாசம் . ச 1951: 25)*

என்று தந்தையிடம் வாதாடுகிறான். ஆனாலும் அவனால் வெல்ல முடியவில்லை. இதனால் மனம் வெறுத்துப்போகும் நாயகன்,

*...புனிதமான காதலைப் போற்றாத அந்தச் சாதியும் சமூகமும் நாசமாய்ப் போகட்டும்!...*

*(சிவப்பிரகாசம் . ச 1951: 75)*

என்று சினந்து கூறுகிறான். சாதிவேற்றுமையால் காதல் நிறைவேறாது நாயகியும், நாயகனும் உயிர் துறந்த பின்னர் நாயகனின் நண்பனான இளவழகன் சாதிக்கெதிரான பிரச்சாரத்தைத் தொடங்குகிறான். 'சாதி பேதம் ஒழிக! சமூகக் கொடுமை ஒழிக' என்று இளவழகனும் அவன் நண்பர்களும் முழக்கமிட்டு,

*4.* *வாழ்க காதல் வாழ்க காதல்*
*வாழ்க காதல் மாமணம்!*
*வீழ்க சாதி! வீழ்க பேதம்!*
*வீழ்க மூட வைதிகம்!*

*(சிவப்பிரகாசம் . ச 1951: 146)*

என்று பாடிக் கொண்டு ஊர் ஊராகச் செல்கின்றனர். சாதி எதிர்ப்பின் உச்ச நிலைமை இந்நாடகம் முழுவதும் விரவிக் கிடப்பதைக் காணமுடிகிறது.

புதிய வாழ்வு நாடகத்தில் கதாநாயகியின் தாயும், கதாநாயகனின் அண்ணனும் சாதி ஆச்சார முறையைக் கடைப்பிடித்துக் காதலைக் கைவிடச் சொன்னாலும் கதாநாயகன், நாயகி இருவரும் காதலில் உறுதியாக நின்று இறுதியில் சீர்திருத்தத் திருமணம் புரிந்து கொள்கின்றனர். 'பழங்காலத்தில் சாதி, பேதம் இருந்ததில்லை; பிற்காலத்தில் சாதி முறையை ஏற்றதால் தமிழர் சமுதாயம் சீரழிந்தது; இன்பவாழ்வுக்காகச் சாஸ்திர சம்பிரதாயங்களை மீறலாம்; சாதி என்பது கற்பனை; சாதி, பேதம் அழியக்கூடியவை' என்ற கருத்துக்களும் இந்நாடக வசனங்களில் பொதிந்துள்ளன.[106]

'தீதான மூட சாதி பேத வாழ்வால் ஏதமே கொண்டு நலிந்தேன்' என்றும், 'பேதங்கள் சாதிமதம் என்றோதிடும் பீடைகள் மாய வேண்டும்' என்றும், சாதிக்கு எதிரான கருத்தமைந்த இன்னும் பல பாடல்களும் இந் நாடகப் பாட்டுகளில் உள்ளன.[107]

சமூக சேவை நாடகம் தீண்டாமையின் இழிவை விளக்குகிறது. ஆதிதிராவிடப் பெண்ணான கமலா படித்த பகுத்தறிவுள்ள பாத்திரப் படைப்பாக வருகிறாள். 'ஆதிதிராவிடக் குலத்திற்பிறந்தும் அகங்காரம் கொள்ளலாமா?' என்று கேட்கும் சீதாவே, கமலாவின் போதனை யை ஏற்று, 'ஏழைமக்கள் தன்னை இம்சை செய்து வாழும் ஏகாதிபத்திய உள்ளங்கொண்டோரை' இனங்காணுகிறாள்.[108] பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்யும் சுந்தரன்,

**சரணம்**

5. *பிறவியிலுயர்வு தாழ்வுகளேது?*
*பேதைமதியோர் கூறும் வாது- மிகவும்*
*பீடையதனை ஓடச் செயவே (பேதம்)*
*மக்களில் உயர்ந்தோர் உருவமும் வேறோ?*
*மதிப்பின்றித் தாழ்ந்தோரும் வேறோ? - அந்த*
*மாதர் மணப்பின் கருவாகாதோ? (பேதம்)*
*மலத்தினுங் கேடாய் மதிப்பதால் நாமே*
*மாபெருஞ் சமூகமிழந்தோமே! - நாட்டில்*
*மாசுகொண்ட மதங்கள் கூறும் (பேதம்)*

(புதுவைச்சிவம் 2000: 407)

என்று பாடும் பாடலின் மூலம் திராவிட இயக்கத்தின் தீண்டாமைப் பிரச்சாரத்தின் முழுவேகத்தையும் காணமுடிகிறது.

வீரநந்தன் என்னும் நாடகம் முழுமையான தீண்டாமை ஒழிப்புப் பிரச்சார நாடகமாகவே படைக்கப் பட்டிருக்கிறது. ஊர்க்குளத்தில் குளித்த நந்தனை வேதியர்கள் மரத்தில் கட்டி மிளாறால் அடிப்பதும், 'மனிதன் தாழ்ந்தவனல்ல' என்று நந்தன் வாதிடுவதும், ஊர் மக்களிடம் நந்தன் சாதியை மறுத்துப் பேசுவதும், 'தெய்வத்தின் முன் அனைவரும் சமம்' என நந்தன்

கூறுவதும், நாடகம் முழுமையும் தீண்டாமை ஒழிப்புக் கருத்துகளால் பிணையப் பட்டிருப்பதையே காட்டுகின்றன. நந்தன் புத்ததர்மப் போதனையை ஏற்பதும், கடவுளுக்குப் பலியிடுவதைப் பலாத்காரத்தால் தடை செய்வதும், தில்லையில் நந்தனைத் தீட்சிதர்கள் அக்கினிக் குண்டத்தில் தள்ளி விடுவதும், நந்தனார் சரித்திரத்தில் ஒரு புதிய பார்வையைக் கொடுக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன.[109]

தீண்டாமை ஒழிப்பு என்னும் திராவிட இயக்கப் பிரச்சாரம் புதுவைச்சிவம் நாடகங்களில் முழுமையாகப் படர்ந்திருப்பதை இந்நாடகங்கள் எடுத்தியம்புகின்றன.

## சமூகச் சீர்திருத்தம்

மனிதச் சமுதாயமாக இருந்தாலும், பெரும்பாலோர் பகுத்தறி விழந்து மூட நம்பிக்கைகளை மேற்கொள்வதால் பொருளையும் தன்மானத்தையும் இழந்து, அடிமை வாழ்வுக்கு ஆளாகின்றனர் என்பதும், அறிவுப்புரட்சி ஏற்பட்டு அனைவரும் கல்வி கற்றுப் பகுத்தறிவுச் சிந்தனை பெற்று விட்டால் சமுதாயச் சீர்திருத்தம் நிகழ்ந்து விடும் என்பதும், அதற்காகப் பகுத்தறிவைத் தமிழ் மக்களுக்கு ஊட்டுவதே தமது தொண்டு என்பதும் திராவிட இயக்கத்தினரின் கருத்தாக அமைந்திருந்தது. இந்தக் கருத்தியலைப் பின்னணியாகக் கொண்டே புதுவைச்சிவத்தின் அனைத்து நாடகங்களும் சீர்திருத்தத்தை மிகவும் வலியுறுத்தும் வகையில் அமைந்திருக்கின்றன.

மக்கள் பகுத்தறிவடையத் தடையாக இருப்பது மூட நம்பிக்கையே என்றும், பெரும்பாலான சடங்குகள், சம்பிரதாயங்கள், சொர்க்கம், நரகம், மறுபிறவி, ஆவியுலக நம்பிக்கைகள் இவையெல்லாம் மூட நம்பிக்கைக்கு உட்பட்டவை என்றும், இந்த மூடநம்பிக்கைகள், கடவுள், மதம் என்ற அடிப்படையின் மீது கட்டப்பட்டிருப்பதால் அவையும் மூடநம்பிக்கையே என்றும் திராவிட இயக்கத்தினர் பிரச்சாரம் செய்தனர். தங்கள் பிரச்சாரத்திற்குப் பன்முகப் பரிமாணங்களைப் பயன்படுத்திக் கொண்ட திராவிட இயக்கக் கவிஞர்கள் மற்றும் கலைஞர்களுள் நாடக முன்னோடியாகக் கருதப்படக் கூடியவர் புதுவைச் சிவம் என்பது முன்னியலில் சுட்டிக் காட்டப் பட்டுள்ளது.

இந்தப் பிரச்சாரத்தை நாடக வடிவில் முழுமையாகப் புகுத்திய புதுவைச்சிவம், தமது அனைத்து நாடகங்களிலும் இதைக் குறைவறவும், சில நாடகங்களில் அதிகமாகவும் கையாண்டிருக்கிறார். ரஞ்சித சுந்தரா (அ) ரகசியச் சுரங்கம் எனும் நாடகத்தில்,

> ...மனிதப் பிறவியின் இன்பத்தை அடைய வொட்டா மல் தடுக்கும் ஆஸ்திகம் நம் நாட்டிற்கேற்பட்ட ஓர் சாபக்கேடு

என்று சௌந்தரவல்லி என்னும் நாடகப்பாத்திரத்தின் வாயிலாகக் குறிப்பிடும் அவர், 'ஜாதியாசாரத்திற்கும் பழக்க வழக்கத்திற்கும் அடிமைப்படுவாயானால், நீ என்னைப்போல் துன்பக் கடலில் மூழ்குவது நிச்சயம்' என்று சௌந்தரவல்லி தன் தங்கைக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடுவதாக அமைத்திருக்கிறார்.[110]

## சடங்கு, புரோகித எதிர்ப்பு

சடங்குகள் செய்யும் வைதீகப் புரோகிதர்களுக்கு வருமானம் அதிகம் என்பதை எடுத்துக் காட்டும் வகையில் ஒரு புரோகிதரைப் பார்த்துச் சோதிடர் ஒருவர்,

> "....உங்களுக்காவது பலவிதத்திலும் வருமானமிருக்கு, கோயில் வருமானமே போதும்! அல்லாமலும் திதி, திவசம், கல்யாணம், கருமாதி, எழவு, எட்டு என்னென்னமோ இருக்கு...."

என்று கூறுவதாகவும், மேலும் ஒரு பெண்ணைப்பார்த்துத் திருமணம் செய்யும்போதுகூட, பொருத்தம் பார்க்காததால் தங்கள் வருமானம் குறைந்து வருவதாக ஜோசியர் ஒருவர் மனம் பொறாது அரற்றும் வகையிலும் மேற்குறிப்பிட்ட நாடகத்தில் வசனங்களை அமைத்திருக் கிறார் புதுவைச்சிவம் .[111]

கோகிலராணி நாடகத்தில் மன்னனின் குழந்தையால் மகுடத்திற்கு ஆபத்து என்று பிரம்ம குரு சொல்லும் வேளை, நிவர்த்தி மார்க்கம் கேட்கும் மன்னனிடம், 'மகான்களாலும் ரிஷீஸ்வரர் களாலும் கூறப்பட்ட இச்சாதகப்பலன் பொய்க்குமா?' என்று மன்னனை மிரட்டி மூடநம்பிக்கையினால் குழந்தையைக் கொல்லத் துணியும் அவல நிலைக்கு அரசனை ஆளாக்குவதாகக் காட்சி அமைக்கப்பட்டுள்ளது.[112]

> ...கோயிலில் இருக்கிற கல்லுச்சாமிக்கு ஆறுவேளை நெய்வேத்திய மாகுது...
>
> (சிவப்பிரகாசம் . ச 1947: 12)

என்று கடவுள் நம்பிக்கையையும் மூட நம்பிக்கையாகக் கருதும் காட்சி கோகிலராணி நாடகத்தில் இடம்பெறுகிறது.

வீரநந்தன் நாடகத்தில் நந்தனும் அவரது நண்பர்களும் தங்கள் கிராமத்தில் மூடநம்பிக்கை கொண்ட பழக்க வழக்கங்களை ஒழித்துக்கட்ட முடிவெடுப்பதாகக் காட்சி அமைப்பு கூறுகிறது (புதுவைச்சிவம் 2000: 236). புதிய வாழ்வு நாடகத்தில் ஒருபொதுக் கூட்டத்தில் பேசும் தலைவர்,

> ...இன்று நம் நாட்டு நிலையை எடுத்துக் கொண்டால் ஒரு பக்கம் மூடநம்பிக்கை காரணமாக ஏற்பட்டுள்ள அறியாச் சடங்குகளுக்கும், பழக்க வழக்கங்களுக்கும் மக்கள் ஆட்பட்டு எவ்விதத் துன்பங்களுக்கும் அவன் செயல், விதி என்பன போன்ற கற்பனை வார்த்தை களைக் கூறி நலிகின்றார்கள்...
>
> (புதுவைச்சிவம் 2000: 310).

எனக் கூறுவதாக அமைக்கப்பட்டுள்ள காட்சியில் மூடநம்பிக்கை களின் விளைவுகளும், அன்றைய சமுதாயத்தின் நிலையும் சுட்டப்படுவதைக் காணலாம். மேலும், தம்பியின் திருமணத்திற்கு ஏற்பாடு செய்யும் சேர்மன் அதை எதிர்க்கும் தமது தம்பியிடம், 'பார்ப்பான் காலில் விழ இருக்கும் நீ அவனைப் பற்றித் தாறுமாறாகப் பேசாதே' என்று கூறுகிறார். புரோகிதர் (பார்ப்பனர்) அனைவரையும் இடக்கரத்தைத் தூக்கிச் சயமஸ்து என ஆசீர்வதிப்பதாக வசனம் அமைத்து இவையெல்லாம் மூட நம்பிக்கையின் பாற்பட்டவையே எனும் கருத்து வெளிப்படும் விதத்தில் காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளன.[113]

மூடநம்பிக்கை ஒழிந்தால்தான் மனித முன்னேற்றம் பகுத்தறிவு சார்ந்ததாக அமையும் என்னும் நோக்கத்தில் பாரதிதாசனின் பல நாடகங்கள் அமைந்திருக்கின்றன. 'செத்துப் பொசுக்கப்பட்டு அந்தச் சாம்பலைத் தண்ணீரில் கரைத்து விடப்பட்ட மனிதனுக்குப் பசிதீரவும், அகம் மகிழவும், அரிசி,

பருப்பு, காய்கறி, செருப்பு பார்ப்பான் மூலம் பரலோகத்துக்கு அனுப்பி வைத்தால் அங்குள்ளவனைச் சென்றடையுமா? அவன் வாங்கிக் கொண்டதாய்ப் பதில் எங்களுக்கு எப்போது வரும்?' என்று திதியின் போது கேள்வி கேட்பதாய் 'ஐயர்வாக்குப் பலித்தது' என்னும் பாரதிதாசன் நாடகத்தில் காட்சி வருகிறது. இந்நாடகம் 1929 ஆம் ஆண்டில் சுயமரியாதைத் தொண்டன் என்னும் இதழில் வெளியானது.[114] இந்தக் காலம் தொடங்கி இதற்குப் பிறகான பல காலங்களில் மூடநம்பிக்கை எதிர்ப்பையும், அதற்கு அரண் பார்ப்பன ஆதிக்கமே என்று கூறி அதை எதிர்த்தும் பாரதிதாசன் பல நாடகங்களில் வலியுறுத்தியிருப்பதைக் காண முடிகிறது. அவரது கற்கண்டு, நல்ல முத்துக்கதை, படித்த பெண்கள், அம்மைச்சி ஆகிய நாடகங்களில் பார்ப்பனிய எதிர்ப்பின் பல பரிமாணங்களைப் பார்க்க முடிகிறது.

மூடநம்பிக்கையை எதிர்க்கும் போக்கைத் தமது முதல் சமூக நாடகத்திலிருந்தே தொடங்குகிறார் புதுவைச்சிவம். நாட்டில் மூடநம்பிக்கை எதிர்ப்பு வளர்வதால்,

6. *எங்குமிந்த நாஸ்திகந்தான் ஐயையோ!*
*இனி பிழைக்க என்ன செய்வேன் ஐயையோ!*

(புதுவைச்சிவம் 2000:383)

என்று புலம்பும் ஒரு ஜோசியன், ஆனாலும் நாஸ்திகத்தால், புரோகிதர்களின் வருமானம் குறையவில்லை என்றும்,

7. *மன்னும் கோயில் வருமான முண்டு*
*மாபெரும் கொள்ளைக்கே ஏதுவுண்டு*
*கல்யாணம் கருமாதி கல்லெடுப்பே*
*கணக்கற்ற வருமானம் உமது வசம்*

(புதுவைச்சிவம் 2000:382)

என்றும் ஒரு புரோகிதனிடமே மேற்குறித்தவாறு பாடுவதாக ரஞ்சித சுந்தரா (அ) ரகசியச் சுரங்கம் நாடகப்பாடலில் அமைக்கப் பட்டுள்ளது. சிதைந்த வாழ்வு நாடகத்தில்,

8. *வைதீகம் ஆண்டிடும் இந்நாட்டில் நானும் நல்*
*வாழ்வு காண்பதுண்டோ?*

(புதுவைச்சிவம் 2000:419)

என்று கதாநாயகி பாடுவதாக அமைத்திருக்கும் பாங்கு அவரது அனைத்து நாடகங்களும் மூட நம்பிக்கையை எதிர்க்கும் நோக்கிலேயே அமைந்திருப்பதை முதற்பார்வையிலேயே வெளிப்படுத்துகின்றன.

## கடவுள் மறுப்பு,போலி மடங்கள்

கடவுள் நம்பிக்கையை அடிப்படையாக வைத்து அப்பாவி மக்களை ஆன்மீகத்தின் பெயராலும், பக்தியின் பெயராலும் மடங்களும் சாமியார்களும் சுரண்டுகின்றனர் என்று திராவிட இயக்கத்தினர் இயக்கத் தொடக்கக் காலம் முதலே குற்றம் சாட்டி வந்தனர். பெரியாரின் மேடைப் பிரச்சாரத்தில் இதன் வீச்சு மிக அதிகமிருந்தது.

திராவிட இயக்கத்தின் இந்தக் கருத்தைத் தமது கவிதைகளில் மட்டுமின்றி நாடகங்களிலும் பதித்துப் பரவச் செய்திருக்கிறார் புதுவைச்சிவம். அவருடைய முதல் நாடகமான ரஞ்சித சுந்தரா (அ) ரகசியச் சுரங்கத்தின் முக்கியக் கதாபாத்திரமாக ஒரு போலிச் சாமியார் படைக்கப்பட்டிருக்கிறார். அவரால் கற்பழிக்கப்பட்ட அக்கதை நாயகியின் அக்கா சௌந்தரம் தன் தங்கைக்கு எழுதிய கடிதத்தில்,

> ...இவ்வூர் மடாதிபதி ஓர் திருடன், மாறு வேடங்கொண்டவன், மடத்திற்குள் ரகசியச் சுரங்கம் ஒன்றுண்டு, அதில் அனேக இளம் பெண்கள் களவாடப்பட்டுக் கற்பிழந்து வருகிறார்கள். உன்னால் கூடுமானல் அந்த மடாதிபதியையும் சுரங்கத்தையும் ஒழித்துப் பெண்களின் மானத்தைக் காப்பாற்று...
>
> (புதுவைச்சிவம் 2000: 38)

என்று குறிப்பிடுவதன் மூலம் போலிச்சாமியார்களால் நிகழும் விபரீதங்களைச் சுட்டிக் காட்டுகிறாள்.

> ...இத்தனைக் காலம் நாம் புலித்தோல் போர்த்திய பசுப்போல ஊர்விளைச்சலாகிய மக்களின் உழைப்பின் பயனை உண்டு சுகித்து வந்தோம்...
>
> (புதுவைச்சிவம் 2000: 41)

என்று சாமியாரே தன்னைப்பற்றிக் கூறுவதாக ஒரு காட்சியில் வருவதும்,

> ... மதப் போர்வை போர்த்திய அந்த மடாதிபதியை, மக்களின் பகுத்தறிவை மாய்த்துவரும் அந்த மடாதிபதியை, மாதர்களின் கற்பை அழித்துவரும் அந்த மடாதிபதியை, மாறுவேடம் பூண்ட அந்த மடாதிபதியை...
>
> (புதுவைச்சிவம் 2000:32)

பழிவாங்கப் போவதாகக் கதாநாயகி வேறொரு காட்சியில் கூறுவதும், 'கொள்ளைக் கார மடாதிபதி' என்றும் 'மடாதிபதி என்னை மான பங்கப்படுத்த இருந்தான்' என்று வருணிக்கும் காட்சி அமைப்புகளும், இறுதியில் போலிச் சாமியாருக்கு அவர் செய்த குற்றங்களுக்காக நீதிமன்றம் ஆயுள் தண்டனை வழங்குவதாக வரும்[115] இறுதிக் காட்சியும், இந்நாடகம் முழுக்கப் போலிச் சாமியார் புரிந்து வரும் விபரீதங்களை எடுத்துக் காட்டும் விதத்திலும், பகுத்தறிவை இழப்பதால் மக்கள் மூடநம்பிக்கைக்கு ஆளாகித் துன்பத்தில் உழல்கின்றனர் என்பதை வலியுறுத்தும் விதத்திலும் அமைந்திருக்கின்றன.

இதேபோலக் கோகிலராணி நாடகத்தில் வரும் பிரம்மகுரு பாத்திரம் அரசனையும் தமிழர்களையும் வஞ்சிப்பதாகவும், பிரம்ம குருவின் தபோவலிமை போலியானது என்பதைப் பிரம்மகுருவும் சீடர்களும் உரையாடல் மூலம் வெளிப்படுத்துவ தாகவும்[116] அமைந்திருக்கின்றன. 'மருட்டுகின்ற மதத்தலைவர் வாழ்கின்றாரே' என்று கவிதையில் கூறிய பாரதிதாசன், உலக வரலாற்றில் இடம்பெற்ற 'ரஸ்புடீன்' எனும் மதவாதியின் வாழ்க்கையையே நாடகமாக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. மடங்கள் மற்றும் போலிச் சாமியார்களின் முறைகேடுகள் குறித்துப் பின்னாள்களில் திராவிட இயக்கத்தினரின் ஈடுபாட்டால் வெளிவந்த அறிஞர் அண்ணாவின் வேலைக்காரி, புதிய மடாதிப திகள் என்னும் நாடகங்கள், கருணாநிதியின் மனோகரா, பராசக்தி திரைப்படங்கள் ஆகியவற்றிற்கு[117] முன்பாகவே புதுவைச் சிவத்தின் மேற்குறித்த நாடகங்கள் இயற்றப்பட்டு மேடையேற்றம் கண்டன என்பது குறிப்பிடத்தக்கது.

**பகுத்தறிவு**

நாட்டுமக்கள் அனைவரும் பகுத்தறிவு பெறுவதென்பதே சுய மரியாதை இயக்கத்தின் நோக்கம் என்பது முன்னியலில் விளக்கப்பட்டுள்ளது. திராவிட இயக்கத்தினரின் அனைத்துப் படைப்புகள் மற்றும் சொற்பொழிவுகளின் பிழிவாகப் பகுத்தறிவு என்ற தன்மையே குறிக்கப்படுகிறது. 'பாரிலுண்மையான கொள்கை பகுத்தறிவேயாகும் அறிவீர்' என்று[118] சமூக சேவை நாடகப்பாடலில் (பாடல் இருபத்தெட்டு) புதுவைச்சிவம் குறிப்பிடுவது அவ்வியக்கங்களின் ஒட்டுமொத்த தன்மையைக் குறிப்பதாகவே கொள்ளலாம்.

9. *பொறுமை வாய்ந்த நாட்டில் தோன்றும்*
*பீடையாவும் போக்குவோம்*
*பேசும் உரிமை யாவும் பெறுவோம்*
*சாதிபேதம் போக்கி வாழ்வோம்*
*சமத்துவம் நிலை நிறுத்துவோம்*

(*புதுவைச்சிவம் 2000: 398*)

என்ற அமுதவல்லி (அ) அடிமையின் வீழ்ச்சி நாடக இறுதிப் பாடலும், அது குறிப்பிடும் அனைத்தும் பகுத்தறிவினால் பெறக்கூடியவை என்ற அடிப்படையிலேயே அமைந்திருப் பதைக் காண முடிகிறது.

புதிய வாழ்வு என்னும் நாடகத்தில், 'நாட்டுக்கு அறிவொளி தேவை என்பதற்காக, மூலை முடுக்கெங்கும் சென்று பகுத்தறிவுத் தீயைப் பரவச்செய்வோம்' என்றும், தங்களின் சுற்றுப் பிரயாணத்தின் நோக்கமே பகுத்தறிவுப் பிரச்சாரம்தான் என்றும் திருக்குறள் முன்னணிக் கழகத் தோழர்கள் சொல்லுவது பகுத்தறிவை விதைப்பதில் திராவிட இயக்கத்தினர் காட்டிய முனைப்பை அளவிடத்தகுந்த வரிகளாக அமைந்திருப்பதைக் காண முடிகிறது.[119]

'மூன்று பெண்கள்' நாடகத்தில் வரும் பொன்மணி என்னும் கதாபாத்திரம், நாடகம் முழுவதும் பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்வதாகவே படைக்கப்பட்டிருப்பதையும், அவளுடைய கணவன் நக்கீரன், 'பகுத்தறிவு' என்னும் இதழ் ஆசிரியனாக அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதும், இங்குக் குறிப்பிடத்தக்கவை.[120]

திராவிட இயக்கத்தின் தன்மையே பகுத்தறிவுப் பிரச்சாரம்தான் என்று அவ்வியக்கத்தினராலேயே பெரும்பகுதி படைப்புகளில் குறிக்கப்படுவதை வைத்துப் பார்க்கும் போது, புதுவைச்சிவத்தின் அனைத்து நாடகங்களும் பகுத்தறிவுப் பிரச்சாரத்தையே அடிப்படையானதும் முழுமையானதுமாகக் கொண்டிருப்பதைக் காண முடிகிறது.

**கல்வி**

புதுவைச்சிவத்தின் சமூக நாடகங்கள் அனைத்திலும் கல்வி மிக இன்றியமையாத ஒன்றாக வலியுறுத்தப்படுகிறது. அனைவருக்கும் கல்வி என்ற நிலைப்பாட்டைத் திராவிட இயக்கத்தினர் வலியுறுத்தி வந்தது போலவே, புதுவைச்சிவத்தின் நாடக மாந்தர்கள் பலரும் கல்வியின் அவசியத்தை வலியுறுத் துவதுடன் கல்வி கற்றவர் களாகவும் உருவாக்கப்பட்டுள்ளனர்.

ரஞ்சித சுந்தரா (அ) ரகசியச்சுரங்கம் நாடகத்தில் கதாநாயகன், கதாநாயகி, அவர்களின் தோழன் ஆகிய இவர்களெல்லாம் சர்வ கலாசாலையில் படிக்கின்றவர்களாகவும் படித்தவர்களாகவுமே படைக்கப்பட்டுள்ளனர். அமுதவல்லி(அ) அடிமையின் வீழ்ச்சி கதாநாயகன் குணசேகரன், கல்வி பயில்வதற்காகத் தனது ஜமீன் முடிசூடும் உரிமையை ஓராண்டு ஒத்தி வைப்பதாக நாடகப் போக்கு நிகழ்கிறது. மூன்று பெண்கள் நாடகத்தில் வரும் மூன்று பெண்களும் கற்றவர்களாகக் காட்டப்பட்டாலும் அதில் கற்றவழி நிற்பவர்கள் பகுத்தறிவுப் பாதையைத் தேர்ந்தெடுப்பர் என்று பொன்மணி என்ற பாத்திரப் படைப்பு மூலம் வலியுறுத்தப் படுகிறது. காந்திமதி (அ) கல்வியின் மேன்மை நாடகம் முழுக்க முழுக்கக் கல்வியின் அவசியத்தைப் பற்றியும் அதனால் ஏற்படும் உயர்வைப் பற்றியும் குறிப்பிட்டுச் செல்கிறது. கற்றவர்களா னாலும் ஒழுக்கத்துடன் வாழ வேண்டிய தேவையையும் அந்நாடகம் மிக வலியுறுத்துவதாக அமைந்துள்ளது. சிதைந்த வாழ்வு நாடகத்தின் நாயகனும் அவன் நண்பர்களும் கல்வி கற்றவர்களாகவே படைக்கப்பட்டுள்ளனர். புதிய வாழ்வு நாடகத்தின் கதாநாயகனும் அவனது தோழர்களும் முதுகலைப் பட்டப்படிப்புப் படித்தவர்களாவும், அதற்காக அவர்களைப்

பாராட்டி ஒரு விழா நடப்பதாகவும் காட்சி அமைக்கப் பட்டுள்ளது. 'கல்வி வாசனையற்று எழுதப்படிக்கும் எண்ணமுமின்றித் தற்குறிகளாய் நூற்றுக்குத் தொண்ணூற்று மூன்று பேர்கள் வாழும் நம் நாட்டில் இதுபோன்ற பட்டதாரிகளைப் பாராட்ட வேண்டியது மிகமிக அவசியமாகும்' என்று அவ்விழாவின் தலைவர் கூறுவதாக நாடகத்தின் தொடக்கக் காட்சியிலேயே அமைக்கப்பட்டிருக்கிறது.[121]

சமூக சேவை நாடகத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் ஒன்று கூடிப் பகுத்தறிவுச் சங்கம் ஆரம்பித்துக் கல்வியின் பயனை வலியுறுத்திப் பிரச்சாரம் மேற்கொள்வதாகக் காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளன. தங்கள் பிரச்சாரத்திற்காக அவர்கள் பாடும் பாடலொன்று, கல்வியின் தன்மையையும் பயனையும் வெளிப்படுத்தும் நோக்கில் கிளிக் கண்ணியில், சாகித்தியத்திலும், கீர்த்தனை இசையிலும் பாடுவதற்காக அமைக்கப்பட்டிருக்கிறது.

**(பாட்டு -18)**

**கிளிக் கண்ணி மெட்டு**

*10. கண்ணன்:*

*கல்வியே மாந்தருக்குக் கண்ணது போலவாகும்*
*செல்வம் சிதைந்துவிடும் - உலகே*
*தீமைக்குள் ஆழ்த்திவிடும்!*

*கல்வியே செல்வமாகும் கதிதனை உயர்த்திடும்!*
*வெல்லும் விதிதனையே - உலகே*
*மேன்மை நமக்களிக்கும்!*

*கல்வியறி விலாதார் கருந்தனம் பெற்றாலென்ன?*
*பல்லோர் பழிதூற்றுவார் - உலகே*
*பாவியென வாழலாமோ?*

*கற்றோர்புகழை யிங்கே கழறிட முடியுமோ?*
*மற்றோர் மனிதராமோ? - உலகே*
*மாண்பின்றி வாழலாமோ?*

*விஞ்ஞானக்கல் விதன்னை விரும்பி நீ கற்றிடலோ*
*அஞ்ஞானந் தீர்ந்திடுவாய் - உலகே*
*அறிவுடன் வாழ்ந்திடுவாய்!*

*(புதுவைச்சிவம் 2000: 408)*

**காதல் மணம்**

காதல் மணம் பகுத்தறிவின் வழி அமைவது என்பதும், அதனால் சாதி, மதம் ஒழியும் என்பதும், பெண்ணுரிமையை நிலைநாட்டும் என்பதும் திராவிட இயக்கத்தின் கருத்தாக வலியுறுத்தப்பட்டு வந்தன. காதல் மணமே சீர்திருத்தத்திற்கு அடிப்படையாக அமையும் என்பதும், காதல் மணத்திற்குக் கல்வி அவசியம் என்பதும் புதுவைச்சிவம் நாடகங்களில் வலியுறுத்தப் பட்டுள்ளன.

*11. கல்வியில்லாப் பெண்ணைக் கற்றவனும் - மிகக்*
*கற்றவளை ஒரு மூடனுந்தான்*
*கல்யாணம் செய்வது ஞாயமாகுமோ? - அது*
*கருத்திற்கிசைந்த நல் வாழ்வாகுமோ?*

*(புதுவைச்சிவம் 2000: 411)*

என்று சமூக சேவை நாடகப்பாட்டில், ஒத்த குணமும் கல்வியும் இல்லாவிட்டால் கணவன் மனைவியிடையே வாழ்வின்பம் உண்டாகாது என்று வலியுறுத்தப்படுகிறது.

'காதலற்ற வாழ்வில் களிப்பில்லை-இன்பமில்லை' என்று காதலைத் தத்துவமாகவே வைத்துப்பார்க்கும் புதுவைச்சிவம், 'காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம்' என்னும் கருத்தை உணராத அநியாய உலகத்தை ரஞ்சிதசுந்தரா(அ) ரகசியச் சுரங்கம் நாடகக் கதைநாயகி மதிப்பிட்டு வருந்துவதாகக் காட்சியினை அமைத்துள்ளார். காதல் மணத்தைக் குற்றமல்ல என்று வழக்கறிஞர் வாதிடுவதும், காதல் மணம் சட்டப்படி குற்றமல்ல என்று நீதிபதி தீர்ப்புக்கூறுவதும், மக்களிடம் காதல் மணத்தைப் பற்றிய சட்டரீதியான பயத்தைப் போக்கவே இக்காட்சிகள் இந்நாடகத்தில் அமைக்கப் பட்டிருக்கின்றன என்று கொள்ளலாம்.[122]

அமுதவல்லி (அ) அடிமையின் வீழ்ச்சி நாடகத்தில் கதைநாயகி அமுதம், 'தன் தோழி சந்திரா காதல் மணம் கொண்டதால் இன்ப வாழ்வின் எல்லையில் அடிவைத்து விட்டாள்; நான் அது போன்ற இன்ப வாழ்வை என்று அடைவேன்' என்று ஏங்குவதாயும்[123] பின் வேறொரு காட்சியில் அமுதம் தன் காதலனை அடையச் சாதி தடை என்பதற்காக,

... இந்த நாட்டின் உயர்வு தாழ்வுக்காக - சமூகத்தின் அறியாமைக்காக - மக்களின் மூடநம்பிக்கைக்காக - என் உயிரை அர்ப்பணம் செய்கிறேன். காதலின் மகத்துவத்தை மக்கள் உணர்வதற்காக நீ என் உயிரைப் பிரித்து விடு... (புதுவைச்சிவம் 2000:136)

என்று காதலுக்காகத் தன்னுயிரையே தியாகம் செய்ய முன்வருவதாகவும், பின்காதல் நிறைவேறும் இறுதிக் காட்சியில் 'உண்மைக் காதலுக்கு உயர்வு தாழ்வில்லை' என்று மற்றவர்கள் வாழ்த்துவதாகவும் நாடகம் முடிவடைகிறது.

வேட்டுவக் குலப் பெண்ணொருத்தியிடம் காதல் கொண்ட தன் வளர்ப்பு மகனும், இளவரசனுமான வீரவர்மனைப் பார்த்துத் தவக்கோலம் பூண்ட கோகிலராணி,

...ஒத்த அன்பால் ஒருவனும் ஒருத்தியும் கொள்ளும் காதலே உயர்வானது! இதுவே தமிழர் முறை! உங்கள் காதல் நீடுழி வாழ்க!... (புதுவைச்சிவம் 2000: 209)

என்று வாழ்த்துவதன் மூலம் கோகிலராணி நாடகமும் காதலின் உயர்வைக் கூறும் வகையிலேயே படைக்கப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது. மூன்று பெண்கள் நாடகத்தில் வேறு வேறு மதங்களைச் சேர்ந்த டாக்டரும் நர்சும் காதலிப்பதாகவும், உள்ளம் ஒத்த காதலைத் தடைசெய்ய மதத்தால் ஆகாது என்று உறுதியுடன் ஒன்றுபடுவதாகவும் காதலுக்கு ஏற்றம் கொடுத்தே காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளன.[124]

'புதிய வாழ்வு' நாடகம் முழுக்க முழுக்கக் காதல் மணத்தின் பல பரிமாணங்களை வெளிப்படுத்துகிறது. சாதி ஏற்றத் தாழ்வினால் பிரிக்கப்படும் கதைமாந்தர்களின் காதல் இறுதியில் நிறைவேறுகிறது. கதாநாயகனின் நண்பன் விதவையை விரும்பி மறுமணம் செய்து கொள்கிறான். இவையெல்லாம் சுய மரியாதைத் திருமணங்களாகச் சீர்திருத்தச் சங்கத்தில் நடத்தி வைக்கப்படுகின்றன.[125]

சிதைந்த வாழ்வு நாடகத்தில் காதலர்கள் இறுதியில் இணையாமல் துன்பியலாக முடிந்தாலும், நாயகனின் நண்பர்கள்

12. வாழ்க காதல் வாழ்க காதல்
வாழ்க காதல் மாமணம்
(புதுவைச்சிவம் 1951: 146)

என்று பாடி ஊர் ஊராகச் சென்று பிரச்சாரம் செய்வதாக நாடகத்தின் இறுதிக் காட்சி அமைக்கப் பட்டிருக்கிறது.

*13. தூயதோர் காதல் வாழ்வினை மறுத்தே*
*துயர்தரும் தமிழ்நாடே - நீயே*
*ஆய உன் கீர்த்தி காதலாலன்றோ?*
*அந்தோ அதை மறந்தாய் - ஏனோ?*

(புதுவைச்சிவம் 2000: 397)

என்று தமிழ்நாட்டின் கீர்த்தியே காதலால்தான் என நாடகப் பாட்டில் துணிந்து கூறும் புதுவைச்சிவம், தம் பெரும்பாலான நாடகங்களில் காதலை நிறைவேற்றும் வகையில் இன்பியல் நாடகமாகவே முடிப்பதிலிருந்து, தமிழ்நாட்டின் கீர்த்தியைத் தம் படைப்புகளில் வற்புறுத்தி இருப்பதைக் காண முடிகிறது.

*14. காதல் மண மோங்கிடவே*
*காதலர்கள் வாழ்ந்திடவே*
*மேதினியில் வாழ்வுமிக*
*மேனிலையாமே! நலமாமே! சுகமாமே!*

(புதுவைச்சிவம் 2000: 386)

என்று காதல் மணத்தை மிக ஆதரிக்கும் நிலையையே புதுவைச் சிவத்தின் அனைத்து நாடகங்களும் வலியுறுத்துகின்றன.

## சீர்திருத்தத் திருமணங்கள்

சீர்திருத்த முறையில் திருமணங்கள் செய்யப்பட வேண்டிய அவசியத்தைத் திராவிட இயக்கங்கள் பெரிதும் வலியுறுத்தின. இவை சுயமரியாதைத் திருமணங்கள் எனப்பட்டன. இயக்கத்தினர் பலர் இயக்கத் தலைவர்களைக் கொண்டே அவர்களது தலைமையில் திருமணம் செய்து கொண்டனர். இப்படிப்பட்ட திருமணங்களை ஊக்குவிக்கும் முறையிலேயே திராவிட இயக்கத் தலைவர்களின் பேச்சுக்களும் எழுத்துக்களும் அமைந்திருந்தன.

சீர்திருத்தத் திருமணங்களை மிகவும் வலியுறுத்திப் பாடிய புதுவைச்சிவம் தமது நாடகங்களிலும் இத்திருமணங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார். அவரது முதல்

நாடகமான ரஞ்சித சுந்தரா (அ) ரகசியச் சுரங்கம் கதைநாயகனும், நாயகியும் காதல் புரிந்து இறுதிக் காட்சியில் சீர்திருத்தத் திருமணம் புரிகின்றனர். அமுதவல்லி (அ) அடிமையின் வீழ்ச்சி நாடகத்தின் ஜமீன்தார் வாரிசான கதைநாயகனும் ஏழையான அமுதவல்லியும் காதலித்துச் சீர்திருத்தச் சங்கத்தில் தங்கள் திருமணத்தை முடித்துக் கொள்கின்றனர். வரலாற்று நாடகமான கோகிலராணியில், இளவரசனும் வேட்டுவக்குலப் பெண்ணும் மக்கள் மன்றத்தின் முன்பாக நின்று அவர்கள் வாழ்த்தொலியுடன் மாலை மாற்றிக் கொள்வதாகச் சீர்திருத்தத் திருமண முறையில் அமைந்திருப்பதும் நோக்கத்தக்கது. சமூக சேவை நாடக நாயகனும் நாயகியும் இறுதியில் சீர்திருத்தத் திருமணம் செய்து கொள்வதாகவே காட்சி அமைக்கப்பட்டுள்ளது. மூன்று பெண்கள் நாடகத்தில் வரும் வெவ்வேறு மதங்களைச் சேர்ந்த டாக்டரும் செவிலியும், பதிவுத் திருமணத்தைச் சீர்திருத்தத் திருமண முறையில் செய்துகொள்ள, மற்றவர்கள் அவர்களைப் பாராட்டியும் வாழ்த்தியும் பேசுகின்றனர். புதிய வாழ்வு நாடகத்தின் நாயகன், நாயகி இவர்களின் திருமணத்தை இயக்கத் தலைவரே சீர்திருத்தத் திருமணமாக நடத்தி வைக்கிறார். அவரும் அதே காட்சியில் ஒரு விதவைப் பெண்ணைச் சீர்திருத்த முறையிலேயே மறுமணம் செய்து கொள்கிறார். இந்நாடகங்களின் காட்சி அமைப்பிற்குத் துணை செய்வதாக நாடகப் பாட்டுகளும் சீர்திருத்தத் திருமணத்தை வலியுறுத்தி இயற்றப்பட்டுள்ளன.[126]

## இயக்கம் குறித்த பிரச்சாரம்

கலை கலைக்காகவே என்ற வாதமும், கலை மக்களுக்காகவே என்ற எதிர்வாதமும் நாடக உலகிலும் உண்டு. கலை பிரச்சாரமாகப் பயன்படுத்தப்படக் கூடாது என்ற வாதம் 'மக்கள் அதனால் எழுச்சி பெற்று விடுவார்கள்' என்ற பயத்தினால் எழுந்தது என்பது அறிஞர் அண்ணாவின் கருத்து. 'சிறந்த கருத்துக்கள் மற்றும் உயர்ந்த எண்ணங்களின் அடிப்படையில் படைக்கப்பட்ட நாடகங்கள் தாம் நீடித்து நிலைக்கும்' என்று பெர்னார்ட் ஷாவும், 'மக்கள் உணர்வுகளைத் தூண்டுவதே சிறந்த நாடகம்' என்று ஆண்டன் செக்காவும், 'நல்ல நாடகம் சமூக

எதிரிகளை அடையாளம் காட்ட வேண்டும்' என்று சீன் ஓ கேசியும் கூறியிருப்பதை நோக்கும்போது பகுத்தறிவு, சீர்திருத்த அடிப்படையில் உருவான நாடகங்கள் நல்ல நாடகங்களாகவே கருதப்பெறும் என்று கொள்வதுவே தகும்.[127] புதுவைச்சிவத்தின் நாடகங்கள் பிரச்சார உத்திகளோடு விளங்கினாலும், உயர்ந்த கருத்துக்களை நாடகக் கருவாகக் கொண்டிருந்தன என்று கொள்ளவே வாய்ப்பிருக்கிறது. தம் பிரச்சார நோக்கத்தோடு தாம் சார்ந்திருந்த இயக்கத்தையே, நாடகக் காட்சிகளில் காட்சியின் தன்மை மாறாமல் அவர் புகுத்தியிருப்பது நோக்கத்தக்கது.

## ரஞ்சித சுந்தரா (அ) ரகசியச்சுரங்கம்

ரஞ்சித சுந்தரா (அ) ரகசியச் சுரங்கம் நாடகத்தில் கதைநாயகனும் அவன் நண்பனும் சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தவர்களாக அறிமுகப்படுத்தப்படுகிறார்கள். கதைநாயகன் தன் போதனையால், நாயகியையும் சுயமரியாதை இயக்கக் கருத்துக்களை ஏற்றுக் கொள்பவளாக ஆக்கிவிடுகிறான்.

> ... நான் சுயமரியாதை இயக்கத்தின் நன்மைகளையும் பெருமைகளையும் பூரணமாக உணர்கிறேன். அன்றியும் மக்கள் சமூகம் நன்மையடைய வேண்டுமானால் சுயமரியாதை இயக்கத்தினரால்தான் முடியும் என்பதைத் தூக்கு மேடையிலும் துணிந்து கூறுவேன்... (புதுவைச்சிவம் 2000: 35)

என்று கதாநாயகியின் கூற்றாக வரும் வரிகள் வெளிப்படையானவை மட்டுமின்றித் தாம் சார்ந்திருக்கும் இயக்கத்தைக் கதையின் ஓர் அங்கமாகவே நாடகம் முழுவதும் கொண்டு செல்லும் இயக்கவாதத் தனத்தை உணர்த்துவதாகவே அமைந்திருக்கின்றன. இந்நாடகத்தில் வரும் பழமைவாதிகளாகச் சித்திரிக்கப்பட்ட கதைமாந்தர்கள் சுயமரியாதை இயக்கத்தை வெளிப்படையாகவே மதிப்பிடுகின்றனர். விதவை மறுமணத்தை வலியுறுத்துவதால் 'பாழும் சுயமரியாதைக் காரர்கள்' என்று விதவையின் தந்தையும், பெண்ணுரிமை பேசுவதால் 'நாட்டைக் கெடுக்க வந்த சுயமரியாதை இயக்கம்' என்று கதாநாயகியின் தாயும், சாதிக்கடுக்காத காரியத்தைச் செய்வதால், சுயமரியாதை இயக்கத்தையே கருவறுக்கக் கங்கணம் கட்டிக் கொண்டிருப்பதாக

மடாதிபதியும் கூறுகின்றனர். மேலும் ஒரு காட்சி முழுவதும் (காட்சி பதினாறு) ஒரு புரோகிதனும், ஜோசியனும் சுயமரியாதை இயக்கத்தால் தங்கள் வருமானம் குறைந்து வரும் நிலையைப் பகிர்ந்து கொள்வதாக, நகைச்சுவைக் காட்சியாகப் (காமிக் பார்ட்) பிரச்சார உத்தியோடு அமைக்கப்பட்டிருக்கிறது. நீதிமன்றக் காட்சியில், சாதி கேட்கும்போது 'எனக்கு ஜாதியில்லை' என்று கூறும் கதைநாயகனை, 'சுயமரியாதைக் காரரோ?' என்று மொழிபெயர்ப்பாளர் வினவுவதாகவும், சுயமரியாதைக் காரராக இருப்பதில் தவறில்லை என்று கதைநாயகனின் வக்கீல் வாதம் புரிவதுமாகக் காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளன. நாடக இறுதியில் கதைநாயகன், நாயகி இருவரும் சீர்திருத்தத் திருமணத்தைச் சுயமரியாதைச் சங்கத்தில் நடத்திக் கொள்கின்றனர்.[128]

இந்நாடகத்தில் பெண்ணுரிமை, பெண்கல்வி, காதல் மணம், விதவை மறுமணம், சீர்த்திருத்தத் திருமணம், பகுத்தறிவு ஆகியவை வலியுறுத்தப்படுகின்றன. காதல், கற்பழிப்பு, தற்கொலை, கொலை, கொள்ளை, காவல்மன்றம், நீதிமன்றம், துப்பறிவோர், போலிச்சாமியார், பாதாளஅறை என்று கதையைச் சுவாரசியமாக நகர்த்தும் திருப்பங்களோடு, இயக்க உணர்வையும் கதை முழுவதிலும் பரவலாக்கும் போக்கையும் புதுவைச்சிவம் பயன்படுத்தியிருக்கிறார்.

## அமுதவல்லி (அ) அடிமையின் வீழ்ச்சி

அமுத வல்லி (அ) அடிமையின் வீழ்ச்சி நாடகம் ஒரு ஜமீன் எல்லைக்குட்பட்ட பகுதியில் நடக்கும் கதை. இந்நாடகத்திலும் கதைநாயகனும் அவன் நண்பர்களும் சீர்திருத்தச் சங்கத்தைச் சேர்ந்தவர்களாக அறிமுகமாகின்றனர்.

> ...சீர்திருத்தச் சங்கத்தாராகிய நாங்கள் - ஏழைமக்களின் நன்மையைக் கோரிய நாங்கள், இந்தக் கொடுங் கோலாட்சி ஒழியப் பாடு படுவோம்...
>
> (புதுவைச்சிவம் 2000: 93)

என்று கதைநாயகனின் நண்பன் கூறுகின்றான். 'இச்சங்கத்தினர் சாதி இல்லை என்கிறார்கள்; மதம் வேண்டாம் என்கிறார்கள்' என்று குற்றம் சாட்டும், நாடகத்தில் ஜமீன்தாருக்கு ஆலோசகராக

வரும் சாஸ்திரி, 'பிரம்மா முகத்தில் பிறந்த எங்கள் பிராமணக் குலத்தையுமல்லவா தூஷிக்கின்றார்கள்' என்று கூறுவதாகக் காட்சி அமைக்கப்பட்டுள்ளது. இறுதியில் ஜமீன் குடியாட்சியாக மாற்றப்படுவதாக அமையும் காட்சியில் கதைநாயகன் ஆற்றும் சொற்பொழிவில், திராவிட இயக்கத்தின் கருத்துக்கள் முன்மொழியப்படுகின்றன. இந்நாடகம், பெண்ணுரிமை, சமத்துவம், குடிஅரசு, பொதுவுடைமை, உழைப்போர் மேன்மை, காதல் மணம், சீர்திருத்தத் திருமணம் ஆகிய திராவிட இயக்கக் கொள்கைகளை அழுத்தமாக மக்களிடம் கொண்டு சேர்க்கும் முயற்சியில் எழுதப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது.[129]

**கோகிலராணி**

கோகிலராணி வரலாற்று நாடகமாகப் புனையப்பட்டிருந் தாலும் குறைவில்லாத இயக்கப் பிச்சாரம் மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. ஆரிய ஆதிக்கத்தைத் தடுக்கவும், எதிர்கொள்ளவும் 'தமிழ்ப் பாதுகாப்புக் கழகம்' இந்நாடகத்தில் ஒரு முக்கிய இடத்தைப் பெறுகிறது.[130] சோழ மன்னர் ஆட்சிக் காலத்தின் பின்னணியில் அமைக்கப்பட்டிருக்கும் இந்நாடகத்தில் அதற் கேற்றாற்போல் 'தமிழ்ச்சங்கம்' போன்ற பொருத்தமான அமைப்புகளை உருவாக்காமல், தம் சமகாலத்திய நிகழ்வான 'தமிழ்ப் பாதுகாப்புக் கழகம்' போன்ற அமைப்பை வரலாற்று நாடகத்தில் அமைத்திருப்பது முழுமையான பிரச்சாரமே என்றாலும், இவ்வமைப்பு நாடகத்தில் முக்கிய அங்கத்தைப் பெறுகிறது; தமிழர் தலைவனாக விளங்கும் சேனாதிபதியின் உயிரைக் காப்பாற்றுகிறது; நாடகத்தின் தலைவியான கோகில ராணியின் கீழ் இயங்கும் அமைப்பாகவும் இது காட்டப் பட்டுள்ளது. 'தமிழ்நாடு தமிழர்க்கே' என்ற முழக்கமும் இவ்வியக்கத்தால் எழுப்பப்படுகிறது. சேர, சோழ, பாண்டியன், மற்றும் குறுநில மன்னர்கள் தாங்கள் தங்கள் ஆதிக்கத்திலிருக்கும் பகுதியை மட்டும் தங்கள் நாடாகப்போற்றிய காலத்துக் கதையில் 'தமிழ்நாடு தமிழர்க்கே' என்பது பொருத்தமாக இல்லா விட்டாலும், அந்த முழக்கத்தையே முக்கியமாக வைத்துக் கதை பின்னப்பட்டு இறுதியில் அதே முழக்கத்துடனேயே நாடகம் முடிவடைகிறது. தமிழ், தமிழ்ப்பண்பாடு, தமிழின உயர்வு,

திராவிடர் - ஆரியர் போராட்டம், பெண்ணுரிமை, காதல் மணம், சீர்திருத்தத் திருமணம், பகுத்தறிவு ஆகியவை இந்நாடகத்தின் மையக் கொள்கைகளாக வலியுறுத்தப்படுகின்றன.[131]

## சமூக சேவை

சமூக சேவை ஜமீன் காலத்தில் நிகழும் அதே நேரம் ஒரு சமூகச் சீர்திருத்த நாடகம். இதிலும் பள்ளி மாணவ, மாணவிகள் ஒன்று கூடிப் 'பகுத்தறிவுச் சங்கம்' தோற்றுவிக்கிறார்கள். இந்தப் பகுத்தறிவுச் சங்கம் ஜமீனால் எதிர்க்கப்பட்டு அச்சங்கத்தினர் சிறை வைக்கப்படுகின்றனர். ஜமீன்தாரின் மகன், தானும் அச்சங்கத்தைச் சேர்ந்தவன் என்று தன்னையும் சிறை வைக்கக் கோருகிறான். பின்னர் விசாரணை நடைபெறுகிறது. பகுத்தறிவுச் சங்கத்தினர் அனைவரும் குற்றமற்றவர் என்று விடுதலை செய்யப் படுகின்றனர். ஜமீன்தாரின் மகன் ஆட்சிப் பொறுப்பேற்க நாட்டில் சீர்திருத்தம் செழிப்புறுவ தாகக் கதை முடிகிறது. இந்நாடகத்தில் பகுத்தறிவுச் சங்கம் ஒரு இன்றியமையாத பாத்திரத்தின் தன்மையை வகிப்பதைக் காணலாம். 'மக்கள் பேதம் நீங்கிச் சிக்கலின்றி வாழ, மார்க்கங் காண வேண்டி நாமே தினம் தக்க தொண்டு செய்து வாழ்வோம்' என்று கதைநாயகன் பிரகடனப்படுத்துவதும், பகுத்தறிவுச் சங்கத்தை எதிர்க்கும் பத்மா என்னும் பாத்திரம் இறுதியில், 'மாநிலம் போற்றிடும் பாதை அது மாண்புறும் சுயமரியாதை' என்று இயக்கத்தை ஏற்றுக் கொள்வதும், நாடகத்தின் கதையமைப்பு, வசனம், பாடல்கள் என்று அனைத்தும் இயக்கத்தன்மை மிகுந்தும், அதன் பிரச்சாரமாகவும் ஆக்கப்பட்டி ருப்பதைக் காண முடிகிறது.[132]

சாதி மறுப்பு, தீண்டாமை ஒழிப்பு, பெண்கல்வி, பெண் ணுரிமை, ஆதிக்க எதிர்ப்பு, பொதுவுடைமை, சமத்துவம், பகுத்தறிவு, சுயமரியாதை ஆகிய திராவிட இயக்கக் கொள்கைகள் இந்நாடகத்தில் அதிகமாக வலியுறுத்தப்பட்டுள்ளன.

## வீர நந்தன்

வீரநந்தன் நாடகம் நந்தனார் சரித்திரத்தை ஒரு புதிய பார்வையாகவும், மறுவாசிப்பிற்கும் உட்படுத்துகிறது. இந்நாடகக் கதையில் நந்தனும் அவர் நண்பர்களும் ஒரு குழுவாக

இயங்குகின்றனர். ஓர் இயக்கத்தின் வேலையை அவர்கள் செய்கின்றனர். மூடநம்பிக்கை கொண்ட வழக்கங்களைத் தங்கள் ஊரில் ஒழிக்க அவர்கள் எடுக்கும் முயற்சியும், ஆடு, கோழி, பலியிடுவதைத் தடை செய்யச் சொல்லி வாதாடுவதும், ஒரு தெய்வ வழிபாட்டின்போது, நந்தன் வரவைக் கேள்விப்பட்டுப் பூசாரி ஓடிவிடுவதும், கடவுள்களைப் பற்றிய வாதமும், தில்லைக் கடவுளைத் தரிசிக்க ஒரு குழுவாக முடிவெடுப்பதும், அதற்காக வேதியனிடம் வாதாடுவதும், வேதியன் சொல்லை மறுத்துத் தில்லை செல்ல உறுதி காட்டுவதும் ஆகச் சுயமரியாதை இயக்கத்தின் பிரச்சாரத்தையெல்லாம் நந்தனார் சரித்திரத்தில் முழுவதுமாக ஏற்றிக் காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளன. தாழ்த்தப்பட்டவர்களை ஒடுக்க ஆரியப் பார்ப்பனர்கள் செய்த சூழ்ச்சியே நந்தனைத் தில்லை அக்கினிக் குண்டத்தில் தள்ளிக் கொல்வது என்று வரலாற்று நிகழ்வுக்குத் தம் இயக்கக் கருத்தை ஏற்றி, இக்கதையை முழுவதுமாகத் திராவிடர்-ஆரியர் பிரச்சினையாகப் புதுவைச்சிவம் மாற்றி விடுகிறார். நந்தனைக் கொலை செய்வது மட்டுமல்லாமல் நந்தனைப் புஷ்பப்பல்லக்கு வந்து கயிலைக்கு அழைத்துச் செல்வதாகச் சேரிமக்களிடம் கூறி அவர்களை நம்பவைப்பதும், இக்கதையையே காலங்காலமாகக் கூறி வருவதும், 'ஆரியப் பார்ப்பனரின் கபட நாடகமே' என்று இறுதியில் புதுவைச்சிவம் நாடகக் காட்சியாகவே அமைத்திருக்கிறார்.[133]

இதன் மூலம் சாதிமறுப்பு, தீண்டாமை ஒழிப்பு, மூட நம்பிக்கை ஒழிப்பு, பகுத்தறிவு, சமத்துவம், பொதுவுடைமை, திராவிடர்-ஆரியர் பிரச்சினை ஆகிய திராவிட இயக்கக் கொள்கைகளை விளக்கவும் பரப்பவுமே நந்தனார் கதையைத் தேர்ந்தெடுத்து அதைப் புதிய பார்வையாக மாற்றிக் கொடுத்திருக்கிறார் புதுவைச்சிவம் என்ற முடிவுக்கே வரமுடியும்.

## மூன்று பெண்கள்

மூன்று பெண்கள் நாடகத்தில் அம்மூன்று பெண்களும் குருட்டு நாகரீகம், வைதீகம், சீர்திருத்தம் ஆகிய மூன்று பாதைகளைத் தேர்ந்தெடுப்பவர்களாக முதல் காட்சியில் அறிமுகப்படுத்தப்படுகின்றனர். சீர்திருத்தப்பாதையைத் தேர்ந்தெடுக்கும் பொன்மணியும் அவள் கணவனும் இந்நாடகத்தில் இயக்கவாதிகளாகச் சித்திரிக்கப்படுகின்றனர்.

பொன்மணியின் கணவன் 'பகுத்தறிவு' இதழ் ஆசிரியனாக வருகிறான். அவர்களுக்குள் சமூகச் சீர்திருத்தமா? பொருளாதாரமா? என்ற விவாதம் நடக்கிறது. இரண்டும் இருகண்கள் போல என்று பொன்மணி சொல்வதை அவள் கணவன் வியந்து பாராட்டுகிறான். பகுத்தறிவுப் பிரச்சாரத்தை மேற்கொண்டிருக்கும் அவர்கள் கதை இறுதியில் நடைபெறும் சீர்திருத்தத் திருமணத்திற்கு வந்து வாழ்த்துகின்றனர். பெண்ணுரிமை, பகுத்தறிவு ஆகியவை குறித்துப் பொன்மணி அம்மேடையை இயக்கப்பிரச்சார மேடையாகவே மாற்றி விடுகிறாள். திராவிட இயக்கத்தினரின் வழக்கத்தையே இது பிரதிபலிப்பதாகக் கொள்ளலாம். சுயமரியாதை இயக்க இதழாக வெளிவந்த 'பகுத்தறிவு' என்னும் இதழின் பெயரையே இந்நாடகத்தில் சுட்டப்படும் இதழுக்கும் புதுவைச்சிவம் சூட்டி யிருக்கிறார். சமூகச் சீர்த்திருத்தத்தின் வழியாகவே சமத்துவத்தை அடையமுடியும் என்ற திராவிட இயக்கத்தின் கொள்கையையும், வர்க்கப் போராட்டம் மூலம் அடையும் பொதுவுடைமை, பொருளாதாரச் சீர்த்திருத்தமே சமூகச் சீர்திருத்தத்தை அடையும் வழி என்று பொதுவுடைமை இயக்கம் மேற்கொண்டிருந்த கொள்கையையும் விவாதப் பொருள்களாக்கி இறுதியில் இரண்டையும் இருகண்கள் என வலியுறுத்துவதைப் புதுவைச்சிவம் மேற்கொண்ட 'காலத்தின் பிரதிபலிப்பாகக்' கொள்ளலாம். நாடகம் எழுதப்பட்ட காலக்கட்டத்தில் இவ்விரு இயக்கங்களுக்குள் நடந்து கொண்டிருந்த இந்தப் போராட்டத்தையே இந்நாடகத்தில் கொண்டு வந்து யாருக்கும் பழுதில்லாமல் தீர்வு சொல்லும் வழியைப் புதுவைச்சிவம் மேற்கொண்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.[134]

இந்நாடகம் மூடநம்பிக்கை ஒழிப்பு, பகுத்தறிவு, சாதிஎதிர்ப்பு, பெண்கல்வி, பெண்ணுரிமை, காதல் மணம், சீர்திருத்தத் திருமணம், சமதர்மம், பொதுவுடைமை ஆகியவற்றின் பிரச்சாரக் களமாகவே ஆக்கப்பட்டிருப்பதைக் காண முடிகிறது.

## புதிய வாழ்வு

புதிய வாழ்வு நாடகம் முழுமையான இயக்கப் பிரச்சாரமாக அமைந்திருக்கிறது. புதுவைச்சிவத்தின் ஏனைய நாடகங்களில் இயக்கப் பிரச்சாரம் புகுத்தப்பட்டிருக்க, இந்நாடகத்தைப்

பொறுத்தவரை இயக்கப் பிரச்சாரத்தில் நாடகக் கதை புகுத்தப் பட்டிருக்கிறது என்று சொல்லும் அளவில் இதன் பிரச்சாரத்தன்மை அமைந்துள்ளது. நாடகத்தின் முதல் காட்சி தொடங்கும் இடமே தி.மு.கழகம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது (கையெழுத்துப்பிரதி). 2000ஆவது ஆண்டில் இந்நாடகம் நூலாக்கம் பெற்றபோது கையெழுத்துப்பிரதியில் குறிப்பிட்ட தி.மு.கழகம், அச்சில் திருக்குறள் முன்ணணிக் கழகமாக மாற்றம் பெற்றிருக்கிறது. புதுவைச்சிவம் கையெழுத்துப் பிரதியில் தி.மு.கழகம் என்றே குறிப்பிட்டிருக்கிறார். கழகத்தலைவர், செயலாளர் ஆகியோர் கதை மாந்தர்களாகவே வருகின்றனர். கதைநாயகன் அவனது நண்பர்கள் ஆகியோரின் பெயர்கள் செழியன், நெடுமாறன், மதியழகன், அழகரசன் என்று குறிப்பிடப்பட்டுள்ளன. திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னணித் தலைவர்களாக இருந்த நெடுஞ்செழியன், அன்பழகன், மதியழகன் ஆகியோர்கள் பெயர்களை ஒட்டியே இக்கதை மாந்தர்களுக்குப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. மேலும் நாடகத்தில் இந்நால்வரும் எம்.ஏ. படித்ததற்காகப் பாராட்டுவிழா நடத்தப்படுகிறது. தி.மு.க. முன்னணித் தலைவர்களாக இங்குக் குறிப்பிடப்பட்ட மூவரும், அறிஞர் அண்ணாவும் எம்.ஏ. பட்டம் பெற்றவர்கள். இயக்கத் தலைவர்களைச் சார்ந்தே நாடகப் பாத்திரங்களும் அவர்களின் பெயர்களும் கூட உருவாக்கப் பட்டிருப்பதைக் காண முடிகிறது. நாடகத்தில் இவர்களுக்கான பாராட்டுக் கூட்டத்தில்,

> ..... நம்நாடு, சாதிபேதங்களாலும் சமுதாய மூட வழக்கங்களாலும் மிகவும் சீர்கேடுற்றிருக்கிறது. இத்தகைய சீர்கேட்டை மாற்றியமைக்க, அறிவுள்ள வாலிபர்கள் தேவை. அவர்களால்தான், இந்நாட்டில் மலிந்துள்ள மூடப் பழக்க வழக்கங்களையும், வறுமை முதலிய கொடுமைகளையும் ஒழித்துக் கட்ட முடியும். அத்தகைய ஒரு சிறந்த நிலையை அமைக்க இந்நால்வரும் புத்துலகச் சிற்பிகளாக அமைய வேண்டும் என்பதே என் பேரவா...!....
>
> (புதுவைச்சிவம் 2000: 274)

என்று கூறும் கழகத் தலைவரின் உரையில் முழுமையான இயக்கப் பிரச்சாரமும், புதுவைச் சிவத்தின் சொந்தக் கருத்தும் வெளிப்படையாக அமைந்திருப்பதைக் காணமுடிகிறது. கதைநாயகனும், தோழர்களும் இயக்கப் பணியாகப் பல ஊர்களுக்கும் சென்று பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்வதும், கதைநாயகன் 'முன்னேற்றக் கழகத்தில்' ஈடுபாடு கொண்டிருப்பது குறித்து அவனது குடும்பத்தில் விவாதங்கள் நடப்பதும், கதைநாயகி தன் வீட்டில் 'திராவிடநாடு' (தி.மு.க. நிறுவனரான அறிஞர் அண்ணா நடத்திய வார இதழ்) படித்துக் கொண்டிருப்பதும், கழகத் தலைமையகத்திலும், செயலகத்திலும் நாடகம் நடைபெறுவதாகக் காட்சிகள் அமைக்கப்பட்டிருப்பதும், நாடகத்தில் வரும் பொதுக்கூட்டங்களில் தி.மு.க.வின் முக்கியக் கோரிக்கையாக இருந்த திராவிடநாடு கோரிக்கை வலியுறுத்தப் பெறுவதும், கழகத்திட்டங்கள் நடைமுறை, அரசியல் ஈடுபாடு போன்ற அன்றைய காலத் தி.மு.க.வின் பிரச்சினைகளை நாடகத்தில் கொண்டுவருவதும், இயக்கத்தைப் பற்றிய விவாதம் அனைத்துக் காட்சிகளிலும் இடம்பெறுவதும், கழகத் தலைமையகத்தில் தொடங்கும் நாடகம் கழக அலுவலகத்தில் முடிவதும், அங்கேயே சீர்திருத்தத் திருமணம் செய்து வைக்கப்பட்டுச் சொற்பொழிவாற்றுவதும் ஆக இயக்கத்தை நாடகத்தில் தலையாய பாத்திரமல்லாத பாத்திரமாக ஆக்கி வைத்திருப்பதைக் காணமுடிகிறது.[135]

மூடநம்பிக்கை ஒழிப்பு, பகுத்தறிவு, அனைவருக்கும் கல்வி, பெண்ணுரிமை, காதல் மணம், விதவை மறுமணம், பொருந்தா மணக் கண்டனம், சீர்திருத்தத் திருமணம், சாதிமறுப்புத் திருமணம், சாதிமறுப்பு, தீண்டாமை ஒழிப்பு, சமத்துவம், திராவிட நாடு கோரிக்கை, தமிழர் மறுமலர்ச்சி ஆகிய திராவிட இயக்கம் வலியுறுத்திய அனைத்துக் கொள்கைகளையும், பிரச்சினைகளையும் இந்நாடகம் தன்னுள் கொண்டு பிரச்சாரத்திற்காகவே படைக்கப்பட்டிருப்பதாகக் கூறவேண்டிய நிலையைக் கொண்டிருக்கிறது.

## சிதைந்த வாழ்வு

சிதைந்த வாழ்வு நாடகத்திலும் இயக்கம் இடம்பெறுகிறது. சாதி எதிர்ப்பையும், சமூகச் சீர்திருத்தத்தையும் பெரிதும்

வலியுறுத்தும் இந்நாடகத் தொடக்கத்தில் நாயகனும் அவன் நண்பனும் 'கழகம்' தொடங்குவது குறித்து ஆலோசிக்கிறார்கள். சமுதாயத்தின் அறியாமையைப் போக்கக் 'கழகம்' தொடங்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றிப் பேசும் அவர்கள்,

.... ஒவ்வொரு நாடும் இதுபோன்ற கழகங்களால்
தானே முற்போக்கடைய முடிந்தது....

(புதுவைச்சிவம் 1951: 6)

என்று தங்களுக்குள் விவாதித்துக் கொள்வதாக நாடகத்தில் தொடக்கக் காட்சி அமைக்கப்பட்டுள்ளது. எந்த அடைமொழியும் கொடுக்கப்படாமல் அவர்கள் தொடங்க இருக்கும் அமைப்பைக் 'கழகம்' என்று மட்டுமே குறிப்பிடுகிறார் புதுவைச்சிவம். இந்நாடக நூல் வெளியான காலத்தில் அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் புதுவை அமைப்பாளராகப் பொறுப்பு வகித்து வந்தார். தங்கள் அமைப்பைப் பொதுவாகக் 'கழகம்' என்று குறிப்பிடும் வழக்கத்தைத் திராவிட இயக்கத்தினர் கொண்டிருந்தனர் என்பது அவ்வியக்க இதழ்கள் பலவற்றின் மூலமாகத் தெரியவருகிறது. அதையே நாடகத்திலும் பயன்படுத்தும் புதுவைச்சிவம், அவர் குறிப்பிடும் 'கழகம்' திராவிட முன்னேற்றக் கழகமே என்று உள்ளுறையாகக் குறிப்பிடுகிறார் என்று கொள்வது ஏற்புடையதே.

திராவிட இயக்கக் கொள்கைகளான, சாதிமறுப்பு, மத எதிர்ப்பு, சமதர்மம், காதல் மணம், பெண்ணுரிமை, மூடநம்பிக்கை எதிர்ப்பு ஆகியவற்றை மிக வலியுறுத்தி இருப்பதை இந்நாடகமும், நாடகப்பாட்டுகளும் உணர்த்துகின்றன.[136]

## தமிழரின் வீழ்ச்சி (அ) இராமாயண சாரம்

பழங்கதைகளையும் புராணங்களையும் திராவிடர் - ஆரியர் பிரச்சினைக்குள் உட்படுத்திப் புதிய பார்வை பார்க்கும் திராவிட இயக்கத்தினரின் முயற்சிகளுக்கு இந்நாடகம் ஒரு முன்னோடியாகவே அமைந்துள்ளது. இதற்கு முன்னரே பாரதிதாசன் இம்முயற்சியில் ஈடுபட்டிருந்தாலும் அவர் இராமாயண முழுக் கதையையும் புதிய பார்வைக்குள் உட்படுத்தவில்லை.

அயோத்தியா காண்டத்தில் உள்ள கைகேயி சூழ்வினைப் படலத்தை மட்டுமே 'டெலிபோன் படலம்' என்ற தலைப்பில் திருத்தி எழுதியுள்ளார்.[137] இம்முயற்சியை முழுமையாக மேற்கொண்ட புதுவைச்சிவம், இராமாயண முழுக்கதையைத் தாம் வாழ்ந்த காலத்திற்கும், திராவிட இயக்கக் கருத்தியலுக்கும் இயைந்த வகையில் புதிய பார்வையாகவும், பகுத்தறிவுப் பார்வையாகவும் இந்நாடகத்தை உருவாக்கியுள்ளார்.

இராவணனைத் தமிழர்களின் தலைவனாகவும், இராமன், விசுவாமித்திரன் போன்ற ஆரியர்கள் ஒன்றுசேர்ந்து சூழ்ச்சியால் இராவணனை வீழ்த்தித் தமிழ்நாட்டில் ஆரியத்தை நிலைநாட்ட முயலுவதாகவும் இந்நாடகம் புதுவைச் சிவத்தால் புனையப் பட்டிருக்கிறது. முழுமையான திராவிட இயக்கப் பார்வையே இந்நாடகம் முழுவதும் இழையோடியிருக்கிறது. நாடகத்தின் இறுதியில், இவ்வரலாறு இந்நாட்டு மக்களால் எழுதப் படாதவாறு பார்த்துக் கொள்ள விபீஷணனுக்கு இராமன் அறிவுரை கூறுவதாகக் காட்சி அமைக்கப்பட்டுள்ளது. தமிழன் இதை எழுதாததால்தான் ஆரியருக்கு ஏற்றம் கொடுக்கப்பட்டு இது ஆரியர்களால் எழுதப் பட்டது என்பதாகப் புதுவைச்சிவத்தின் கருத்து அமைந்திருக்கிறது. அதனால்தான் திராவிட இயக்கத்தினர் இராமாயணத்தைத் திருத்தி எழுத முயற்சிக்கின்றனர் என்று கருதுவதற்கேற்பவும் அக்கருத்து அமைந்திருக்கிறது. கம்பரின் தமிழ்ப்புலமையை வியந்த திராவிட இயக்கத்தினர், ஆனால் ஆரியக்கதையை அவர் தமிழில் திணித்ததாகக் கூறிக் கம்பராமாயணத்தைத் தீ பரவவேண்டிய புராண இதிகாசப் பட்டியலில் சேர்த்துவிட்டனர்.[138] இந்நாடகத்தின் மையக் கருத்தையும் காட்சி அமைப்புகளையும் வைத்துப் பார்க்கும்போது தமிழருக்கு எதிராகத் திட்டமிட்டுச் சூழ்ச்சி செய்வதே ஆரியர்களின் நோக்கம் என்ற திராவிட இயக்கத்தினரின் கருதுகோளைப் பரப்பவே இந்நாடகம் புதுவைச் சிவத்தால் படைக்கப் பட்டிருக்கிறது என்பது தெள்ளத்தெளிவாகிறது.

### பிற நாடகங்கள்

காந்திமதி (அ) கல்வியின் மேன்மை என்னும் நாடகம் திராவிட இயக்க நோக்கிலும், பொதுவான அறநெறி நோக்கிலும் கல்வியின் அவசியத்தையும், ஒழுக்கத்தையும் வலியுறுத்துவதாகப் படைக்கப்பட்டுள்ளது.

வீரத்தாய், தமிழச்சியின் தேசபக்தி ஆகிய நாடகங்கள் பண்டைய தமிழ்ப் பெண்களின் வீரவுணர்வையும், மானவுணர்வையும் தற்காலப் பெண்கள் பெற்று அச்சமின்றி வாழ வேண்டும் என்ற நோக்கில் சங்க இலக்கியப்பாடலின் விளக்கங் களாகவும் அமைந்துள்ளன. பெண்கள் சமூக, அரசியல் பிரச்சினைகளில் அக்கறையும் ஈடுபாடும் கொள்ள வேண்டும் என்ற திராவிட இயக்கத்தின் நோக்கமே இந்நாடகங்களின் மையக் கருத்தாக அமைந்திருப்பதைக் காணமுடிகிறது.

கோவலன் - கண்ணகி நாடகக் கையெழுத்துப் பிரதியின் சில பக்கங்களே கிடைத்திருப்பதால் இந்நாடகத்தின் தன்மை, போக்கு பற்றி விரித்துக் கூற வாய்ப்பில்லை. எனினும் கோவலன் திருமணம் தொடர்பாக அவனது தாயும் தந்தையும் கூடிப்பேசி முடிவு செய்வதாக வரும் முதல் காட்சி, பெண்களுக்குரிய உரிமை மதிக்கப்படும் நோக்கில் அமைக்கப்பட்டிருப்பதைக் காண முடிகிறது. தமிழின மறுமலர்ச்சியைத் தங்கள் நோக்கமாகக் கொண்டிருந்த திராவிட இயக்கத்தினர்க்குத் தமிழ் இலக்கியங்களிலிருந்து தங்களின் பண்பாட்டை, அவை பகுத்தறிவுடையவை, என்று அடையாளங்காட்ட வேண்டிய தேவை, முதலாம் இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டக் காலந்தொட்டு ஏற்பட்டிருந்தது. பழந்தமிழ்நாடு பகுத்தறிவோடு இருந்தது என்று திராவிட இயக்கத்தினர் நம்பியதால் சங்க இலக்கியங்களிலிருந்து இதற்குச் சான்றுகள் எடுக்க வேண்டிய அவசியமும், கட்டாயமும் கூட அவர்களுக்கு ஏற்பட்டிருந்தது. அதனால் மூடநம்பிக்கைகளை நீக்கிய சங்க இலக்கியங்கள், காப்பியங்கள் கூட அவர்களின் கனவாக இருந்திருக்கக்கூடும் என்றுதான் கொள்ள வேண்டும். மீட்டுருவாக்கம் செய்து முற்றிலும் பகுத்தறிவின் பாற்பட்ட பழந்தமிழ்க் காவியமாக அறிமுகப்படுத்தும் முயற்சியே புதுவைச்சிவம் மேற்கொண்ட கோவலன்-கண்ணகி நாடக முயற்சி என்று கொள்ளவே வாய்ப்பிருக்கிறது.

புதுவைச்சிவத்தாலேயே வெளியிடப்பட்ட அவரது இறுதி நூலான 'சிதைந்த வாழ்வு' நூலின் இறுதிப் பக்கத்தில் பின்வரும் அறிவிப்பு காணப்படுகிறது.

*எமது அடுத்த நாட்கங்கள்!*

*-----*

*சாதிப்பீடைகளையும்,*
*சமுதாய மூட வழக்கங்களையும்,*
*வறுமை நோய்களையும்,*
*எதேச்சாதிகார ஆணவங்களையும்,*
*இந்நாட்டை விட்டு அகற்ற எழுச்சியூட்டுவன!*
*விரைவில் வெளிவரும்!*

*(புதுவைச்சிவம் 1951: 148)*

இதன் மூலம் இன்னும் பல நாடகங்களை அவர் இயற்றி யிருக்கக்கூடும் என்றும், அவை அச்சில் வெளிவரும் முயற்சிகள் எடுக்கப்பட்டன என்றும் தெரியவருகிறது. ஆனால் அப்படி யெதுவும் நூலாக்கம் பெற்றதாகத் தெரியவில்லை. கையெழுத்துப் பிரதிகளாகவும் கிடைக்கவில்லை. எனினும் அவர் எத்தனை நாடகங்கள் இயற்றியிருந்தாலும் அவை அத்தனையும் திராவிட இயக்கக் கொள்கைகளைப் பரப்பும் நோக்கிலேயே இயற்றப்பட்டு இருந்திருக்கக்கூடும் என்பதையே மேற்சொன்ன அறிவிப்பு உணர்த்துவதாகக் கொள்ளலாம்.

புதுவைச்சிவத்தின் பதினெட்டு நாடகங்களும் திராவிட இயக்கக் கருத்தியலுக்கும், கோட்பாடுகளுக்கும் சிறிதும் பிசகாமல், அவற்றைப் பரப்பும் நோக்கிலேயே முழுமையாகப் படைக்கப்பட்டிருக்கின்றன என்பதும், அவற்றுள் சில நாடகங்கள் திராவிட இயக்கத்தினரின் நாடகத்துறை முயற்சிகளுக்கு முன்னோடியாக அமைந்திருக்கின்றன என்பதும் விளக்கப்பட்டன.

## உ. நாடகப் பாடல்கள்

திரைப்படங்கள் தோன்றாத காலத்தில் மக்களின் பொழுதுபோக்கு அம்சங்களாக இசையரங்குகள், தெருக்கூத்து, நாடகம், இதர நாட்டுப்புறக் கலைகள் போன்றவை இருந்தன. இவை இரவு முழுவதும் நிகழ்த்தப்பெற்று மிக நீண்ட கால அளவைக் கொண்டிருந்தன. இவற்றுள் அன்றைய நாடகம் என்பது இசை நாடகமாகவே இருந்தது. சங்கரதாஸ் சுவாமிகள் நாடக மேடைக்குள் நுழைந்த 1891 ஆம் ஆண்டுதான் உரைநடை மேடைக்கு வந்த காலமாகக் கருதப்படுகிறது.[139] அதுவரையில் பெரும்பகுதி இசை வடிவமாகவே இருந்த நாடகங்கள், சங்கரதாஸ் சுவாமி, பம்மல் சம்பந்தம் ஆகியோரின் காலத்தில் வசனமும், பாடலும் இணைந்த நாடகங்களாக மாற்றம் பெற்றன. இவர்களைத் தொடர்ந்து வந்த நாடகக் குழுக்களும் இந்த முறையையே பின்பற்றின.

தெருக்கூத்து, கீர்த்தனை நாடகங்கள் ஆகியவற்றின் பிடியிலிருந்த தமிழ் நாடகங்கள், பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில், மேலும் பலவிதத் தாக்கங்களுக்கு உள்ளாயின. பார்சி நாடகங்கள், ஆங்கில நாடகங்கள், கதாகாலட்சேபங்கள், செவ்விசை அரங்குகள் ஆகியவற்றின் தாக்கங்கள் தமிழ் நாடகங்களில் கலந்து இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், இவை அனைத்தும் சேர்ந்த மேடை நாடகங்களாகப் பரிணமித்தன. இதே போல நாடக இசையிலும் கர்நாடக இசை[140] என்னும் தமிழிசையும், நாட்டுப்புற இசையும், சிந்துப் பாடல்களும், இந்துஸ்தானி இசையும், மேற்கத்திய இசையும் ஆதிக்கம் செலுத்தின. இவற்றையெல்லாம் தமிழ்ச் சூழலுக்குத் தகுந்தாற்போல் மாற்றியமைத்துத் தந்த சங்கரதாஸ் சுவாமிகளைப் போன்ற நாடக முன்னோடிகளைப் பின்பற்றியே புதுவைச்சிவமும் தமது நாடகங்களை உருவாக்கியிருக்கிறார்.

இந்நாடகங்களுக்கான பாட்டுகளிலும் நாடக இசையின் வளர்ச்சியை நன்கு உள்வாங்கி நாடகப் பாட்டுகளை இயற்றியிருக்கிறார்.

நாடகம் என்பது இயலையும் இசையையும் தன்னுள் கொண்டதாயிருக்க வேண்டும் என்பார் எம்.கே. தியாகராஜ பாகவதர்.[141] இசையுடன் கூடிய நாடகப்பாடல்கள் வெண்டுறை எனப்படுகின்றன.[142] நாடகக்கலை தமிழ்நாட்டில் மறுமலர்ச்சி பெற்று அதற்கான சமூக மதிப்பு உயரத் தொடங்கிய காலத்தில்தான் புதுவைச்சிவத்தின் நாடகங்கள் உருவாக்கம் பெறத் தொடங்கின. திரைப்படங்களின் தொடக்கக் காலக்கட்டமான 1930களில் நாடகங்கள் பெரும் செல்வாக்கோடு நடைபெற்று வந்தன. பெரும்பாலும் புராண நாடகங்களைப் பார்த்திருந்த மக்கள் மாற்றத்தை எதிர்பார்த்திருந்த நேரமாகவும் அக்காலக்கட்டம் இருந்தது. அச்சூழலில்தான் சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்ப முனைந்த புதுவைச்சிவம் பிரபலமாயிருந்த நாடகக் கலை வடிவத்தைப் பயன்படுத்தத் தொடங்கினார். அக்கால நிலைமைக்குத் தகுந்தாற்போல் தமது நாடகங்களுக்கான நாடகப் பாடல்களை மிகுதியாக இயற்றிய புதுவைச்சிவம் அவற்றையும் இயக்கக் கருத்துப்பரவலுக்கே பயன்படுத்தியிருக்கிறார். அவருடைய நாடகங்களில் ரஞ்சித சுந்தரா(அ) ரகசியச் சுரங்கம், அமுதவல்லி (அ) அடிமையின் வீழ்ச்சி, சமூக சேவை, கோகிலராணி, சிதைந்த வாழ்வு ஆகியவற்றின் நாடகப் பாடல்கள் மட்டுமே கிடைத்துள்ளதால், அவை மட்டுமே ஆய்வுக்கு எடுத்தாளப்படுகின்றன.

### i) ரஞ்சித சுந்தரா(அ) ரகசியச்சுரங்கம்

1935 இல் எழுதப்பட்டதாகக் கையெழுத்துப் பிரதியில் குறிப்பிடப்பட்டுள்ள இந்நாடகம் 1936இல் மேடையேற்றம் கண்டது. புதுவை, உப்பளம் வாலிபர் சங்கத்தினரால் பலமுறை நடத்திக் காண்பிக்கப்பட்ட இந்நாடகத்தின் பாடல்கள் அச்சியற்றப்பட்டு அவை அந்நாடகம் நடைபெற்ற போது வழங்கப்பட்டுள்ளன. எண் குறிப்பிடப்பட்ட நாற்பது பாடல்களும், எண் குறிக்கப் பெறாமல் தொடக்கத்தில்

இருபாடல்களுமாக மொத்தம் நாற்பத்திரண்டு பாடல்கள் இத்தொகுப்பில் அடங்கியுள்ளன.

தமது முன்னோடிகளின் கருத்துக்களையும் கலை வடிவங் களையும் உள்வாங்கித் தமது பாணியில் புத்துருவாக்கம் செய்தல் என்பது நாடக இலக்கணத்தில் அடங்குவதாகக் குறிப்பிடப் படுகிறது. அதுபோல் முற்கால, சமகாலக் கலை வடிவங்களின் தாக்கம் நிலவுவதும் இயல்பாகவே கருதப்படுகிறது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலத் தமிழ் நாடகங்களில் கீர்த்தனை நாடகங்கள், பார்சி நாடகங்கள், ஆங்கில நாடகங்கள், கதாகாலட்சேபங்கள், செவ்விசை அரங்குகள், தெருக்கூத்து ஆகியவற்றின் தாக்கங்கள் நிறைந்திருந்தன.[143]

மேற்கூறிய தாக்கங்கள் ரஞ்சித சுந்தரா (அ) ரகசியச் சுரங்கம் நாடகப் பாடல்களிலும் பெருமளவில் காணப்படுகின்றன. தமது முன்னோடிகளின் கருத்து வடிவங்களிலிருந்து (புராண நாடகங்கள் போன்றவை) முற்றாக விலகி நாடகப் பாடல்களில் சீர்திருத்தக் கருத்துக்களைப் புகுத்தியிருக்கும் புதுவைச்சிவம், கலை வடிவங்களைப் பொறுத்தவரை தமது முன்னோடிகளின் பாணியை அப்படியே பின்பற்றியிருக்கிறார். இந்தத் தொகுப்பில் வரும் பெரும்பாலான பாடல்கள் கண்ணிகளாகவும், கண்ணிகளால் மட்டுமே அமைந்த திபதைகளாகவும்,[144] பல்லவி, சரணம் அடங்கிய உருப்படிகளாகவும், தர்க்கமாகவும், தொகையரா, பாட்டு அடங்கிய பாடல்களாகவும் காணப்படுகின்றன. தேவைப்படும் இசை வடிவங்களுக்கேற்பப் பாடலின் வடிவங்கள் தேர்ந்தெடுத்து அமைக்கப்பட்டுள்ளன. அனைத்துப் பாடல்களுக்கும் தலைப்பில் இன்னின்ன மெட்டு என்ற குறிப்பு காணப்படுகின்றது. ஒன்பது பாடல்களின் மெட்டுகளில் மட்டும் ★ என்ற குறியிடப்பட்டு, அடிக்குறிப்பாக, அப்படி குறியிடப்பட்டுள்ள பாடல்மெட்டுகள், தேசிங்குராஜன் கிராமபோன் செட்டில் உள்ளவை என்று குறிப்பிடப் பட்டுள்ளன.[145] இவை தவிர, ஏனைய பதினெட்டுப் பாடல்களின் மெட்டுகள் அப்போது பிரபலமான பிற நாடக மற்றும் இசையரங்க மெட்டுகளே. தரு, தர்க்கம் போன்ற தெருக்கூத்துப் பாணியைப் பின்னணியாகக் கொண்டு கேள்வி-பதிலாக வரும்

பன்னிரண்டு தர்க்கப் பாடல்களும் இதில் உள்ளன. கண்ணியிலமைந்த ஒரு தர்க்கப் பாடல்:

**(பாட்டு 32 தர்க்கம்)**

**15. (கண்ணாட்டியே கற்பகமே எ. மெட்டு)**

*புரோகிதன்:*

*என்னாங்காணும் என்னைக் கேலி பண்ணியே*
*இழுப்பதுவோ வலிய சண்டைக் கென்னையே!*

*ஜோசியன்:*

*சண்டை சாடி இழுக்கவில்லை சாமியே - நான்*
*சஞ்சலமிகுத்தேன் மனம் வாடியே!*

*புரோகிதன்:*

*உங்களுடைய சங்கதியும் போச்சுதா? - இந்த*
*உலகத்திலே நாஸ்திகன்தான் ஆச்சுதா!*

*ஜோசியன்:*

*எங்குமிந்த நாஸ்திகன்தான் ஐயையோ!*
*இனிபிழைக்க என்ன செய்வேன் ஐயையோ!*

என்ற பாடல் நாத்திகக் கருத்துகள் பரவி வருவதை விரும்பாத ஜோசியரும், புரோகிதரும் தங்களுக்குள் வாதம் செய்து கொள்வதாக அமைக்கப்பட்டுள்ளது.

இவற்றுடன் இந்துஸ்தானி மெட்டில் அமைந்த நான்கு பாடல்களும் உள்ளன. முகமதியர் ஆட்சிக் காலத்தில் இந்திய இசையும், அராபிய இசையும் கலந்த இந்துஸ்தானி இசை வடிவம் தோன்றியது. 1852இலிருந்து பம்பாயில் வளர்ச்சி பெற்ற பார்சி நாடகங்களில் இந்துஸ்தானி இசையே ஆதிக்கம் செலுத்தியது. இந்த ஆதிக்கம் தமிழ் நாடகங்களிலும் பாதிப்பை ஏற்படுத்தியது. எந்த வட்டாரத்து நாடக மேடையும் பார்சி நாடகங்களின் தாக்கத்தினின்றும் தப்பமுடியவில்லை என்று சில ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.[146] சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பல இந்துஸ்தானி வர்ண மெட்டுகளும், விருத்தங்கள் பாடும்பாணியில் அவர் ஏற்படுத்திய

மாற்றங்களும் பார்சி நாடகங்கள் ஏற்படுத்திய தாக்கங்களே என்பது முதுபெரும் இசைக் கலைஞர்களின் கருத்து.[147] இசை வடிவங்களில் தமிழ் நாடக முன்னோடிகளைப் பின்பற்றி இருக்கும் புதுவைச்சிவம், தமிழ் நாடக அரங்கங்களில் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்த இந்துஸ்தானி இசையிலும் நாடகப் பாடல்களை இயற்றியிருக்கிறார்.

## (பாட்டு 21)

*16. (இந்துஸ்தான்மெட்டு)*

**சுந்தரன்:**

*அந்தோ பரிதாபமே - விதவை*
*யானோர் நிலை மோசமே! - நாளும்*
*சிந்தை மிகத் தாபமே - கொண்டு*
*தீர்ந்தார் நலம் யாவுமே!*
*நிந்தை யடைந் தாரிந்தப் புவியில்*
*நொந்தே மனம் வாடி வருந்தினரே! (அந்)*

காவடிச்சிந்து வடிவில் அமைந்த மேற்குறித்த பாடல் இந்துஸ்தான் மெட்டில் இந்நாடகத்தில் பயன்படுத்தப் பட்டுள்ளது. நாடக மேடைகளில் பிரபலமடைந்த இசை வடிவங்களை விதவையரின் துயர நிலையை மாற்ற வலியுறுத்தும் திராவிட இயக்கக் கொள்கைகளுக்காகப் புதுவைச்சிவம் பயன்படுத்தி யுள்ளமை நோக்கத்தக்கது.

மேலும், இந்நாடகப் பாட்டுகளில் இங்கிலீஷ் நோட் என்று குறிப்பிடப்பட்ட ஒரு பாடலும் இருக்கிறது. ஆங்கிலேயர் ஆட்சியின் மூலம் அவர்களின் இசை முறைமையும் நம் நாட்டில் பரவலாயிற்று. சங்கரதாஸ் சுவாமிகளும் மேற்கத்திய இசை வர்ண மெட்டிற்கேற்பப் பல தமிழ்ப் பாடல்களை எழுதியுள்ளார். அவரது நாடகங்களில் மேற்கத்திய இசையின் தாக்கம் அதிகமாக இருந்ததாக ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.[148] அவரை அடுத்து வந்த காலத்திலும் இம்முறைமை பின்பற்றப்பட்டுள்ளது. ஒரு நாடகத்தில் ஒரு பாடலாவது 'இங்கிலீஷ் நோட்' என்று குறிப்பிடப்பட்டு மேற்கத்திய பாணியிலான இசையில்

அமைப்பது அன்றைய ஈர்ப்பாக இருந்து வந்திருக்கிறது. ஆள்பவர்கள் ஐரோப்பியர்களாக இருந்தது இந்த ஈர்ப்புக்குக் காரணமாகவும் இருந்திருக்கலாம். பாரதிதாசனும் இந்த நவீன மரபுக்கு ஆட்பட்டிருக்கிறார். புதுவைச்சிவமும் தமது முதல் நாடகத்திலேயே மேற்கத்திய இசை முறைமையைப் பயன்படுத்தியுள்ளார். இங்கிலீஷ் நோட் என்று குறிப்பிட்டால் சுரங்கள் யாவும் சிறிது கூட அசைவின்றி (கமகமின்றி)ப் பாடப்படும். இப்படிபாடுவதன் மூலமே மேற்கத்திய இசைத்தன்மை நமது செவ்விசை இராகத்தில் பொருந்தி அமைகிறது.[149]

## (பாட்டு 26 (தர்க்கம்))

## 17. (இங்கிலீஷ் நோட்)

**ரஞ்சிதம்:** *இதந்தரும் நல் எனது துரை*
*ராஜனே எனை மறந்திடாதீர்!*

**சுந்தரன்:** *சுதந்திரியே உனை மறவேன்!*
*தூய வாழ்வின் இலக்கியமே!*

**ரஞ்சிதம்:** *சோகந் தீர்ப்பீர் எனை மணந்தே!*

**சுந்தரன்:** *ஆவிபோகும் உனைப் பிரிந்தால்!*

**ரஞ்சிதம்:** *காதல் வாழ்க புவிதனிலே!*

**சுந்தரன்:** *மனமகிழ்ந்தேன்!*

**ரஞ்சிதம்:** *மறந்திடாதீர்!*

**சுந்தரன்:** *மறந்திடேனே!*

மேற்குறித்த பாடல் காதல்மணத்தை ஆதரிக்கும் விதத்தில், கண்ணி வடிவில், மேற்கத்திய இசையில் அமைக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய வகையிலான பாடல் வடிவங்களையும், இசை வடிவங்களையும் மரபுவழி பயன்படுத்திக் கொள்ளும் புதுவைச் சிவம், பாடல்களின் கருத்தமைப்பில் முழுக்க முழுக்கப் புதுமையைக் கையாளுகிறார். பெரும்பான்மையும் புராண நாடகங்களே மிகுந்திருந்த அக்காலச் சூழலில் சமூக நாடகங்களை, அதிலும் முற்றிலும் பகுத்தறிவுக் கருத்தமைந்த

நாடகங்களை அவர் இயற்றி மேடையேற்றம் செய்திருக்கிறார். நாடகத்தின் நாற்பத் திரண்டு பாடல்களும் கதையின் போக்கைத் தெளிவாக எடுத்துச் சொல்கின்றன. வசனமில்லாமல், இப்பாடல்கள் மட்டுமே கொண்டு இந்நாடகக் கதையினை எளிதாகக் கூறி விடலாம். விதவைத்துயரை மிக உருக்கமாக வெளிப்படுத்தும் இந்நாடகப் பாடல்கள், பொருந்தாமணக் கொடுமை, பெண் கல்வி, பெண்ணுரிமை, மணம்செய் உரிமை, மூடநம்பிக்கை ஒழிப்பு, சமதர்மம் ஆகிய திராவிட இயக்கக் கொள்கைகளை உள்ளடக்கி மேடை நாடகம் மூலமாக மக்களைச் சென்றடையும் வகையில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

## ii) அமுதவல்லி(அ) அடிமையின் வீழ்ச்சி

இந்நாடகம் *1937* ஆம் ஆண்டில் அக்காலத்திய நோட்டுப் புத்தகம் ஒன்றில் தெளிவான கையெழுத்தில் எழுதப்பட்ட கையெழுத்துப் படியாகவே கிடைத்துள்ளது. நாடகத்தைத் தொடர்ந்து நாடகப் பாட்டுகளும் எழுதப்பட்டுள்ளன. புதுவைச்சிவமே இவற்றைத் தம் கைப்பட எழுதி இருக்கிறார். மொத்தம் பதினாறு பாடல்கள் மட்டுமே கொண்ட இத்தொகுப்பில் உருப்படி வகைகளும், தொகையரா, பாட்டு, தர்க்கம், குழுப் பாடல் (கோரஸ்) வகைப் பாடல்களும் உள்ளன. மூன்று பாடல்கள் தவிர ஏனைய அனைத்திற்கும் மெட்டுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றுள் திரைப்படமெட்டில் அமைந்த பாடல்களும் உண்டு. பெரும்பாலும் கண்ணிகளாகவே பாடல்கள் அமைக்கப் பட்டுள்ளன. மூன்று அடிகளைப் பெற்றுக் கிளியைத் தூதனுப்பும் கிளிக்கண்ணியில் அமைந்த ஒரு பாடலும் இதில் இடம் பெற்றுள்ளது. உருப்படியாக அமைந்த பல பாடல்கள் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்று குறிப்பிடப் படாமல் கண்ணிகள் அமைப்பிலேயே உள்ளன. அப்படி அமையப்பெற்ற ஒரு பாடல்:

### (பாட்டு - 3)

18. (வானுயர் கீர்த்தி எ. மெட்டு)

**அமுதம்:**

*ஏனிந்தக் கோலம் என் தமிழ் நாடே?*
*இருகண்க ளிலொன்றை வஞ்சித்தாய் நீயே!*

*மானங்கு லைந்தும் மாண்பிழந்தும் தீய*
*மறச் செயல் கைவிடா திருக்கின்றாய் இன்னும்*
*(ஏனிந்த)*

**தொகையரா:**

*மானிலந் தன்னிலெங்கும் மாதரை இழிவு செய்யும்*
*மடமையைக் கண்டதில்லை!*
*வானுயர் கீர்த்தி நாடே மங்கையர் உரிமைபோக்கி*
*வாழ்வினில் தந்தாய் தொல்லை! (ஏனிந்த)*

என்று பெண்ணுரிமை மறுக்கப்படும் தமிழ்நாட்டை மாண்பிழந்த தாகக் குறிப்பிடுகின்றார் புதுவைச்சிவம்.

மேலும், திராவிட இயக்கம் ஆதரித்த பெண்ணுரிமை, காதல்மண உரிமை, சமத்துவம், சாதிமத எதிர்ப்பு, பெண்கல்வி ஆகியவற்றை வலியுறுத்தி இந்நாடகப் பாடல்கள் அமைந்துள்ளன. அக்கால நாடகங்களில் பாடல்கள் மிகுதியாய் இடம்பெற்றிருக்கும் மரபை மீறி இதில் பதினாறு பாடல்கள் மட்டுமே இடம் பெற்றிருக்கின்றன.[150]

### iii) சமூக சேவை

1941 ஆம் ஆண்டில் புதுச்சேரியைச் சேர்ந்த உப்பளம் பகுதியில் 'கிரான் சீன் ரெக்ரியேட்டிவ்' (Grande Sceane Recreative) என்னும் அமைப்பினர், ஓர் இரவுப் பாடசாலைக் கட்டட நிதிக்காக இந் நாடகத்தைப் பன்முறை புதுச்சேரிப் பகுதிகளில் நடத்தியுள்ளனர். இந்நாடகத்தின் கதைச் சுருக்கமும், 32 பாடல்களும் அடங்கிய அச்சிடப்பட்ட சிறு வெளியீடு ஒன்றை இந்நாடகம் நடைபெற்ற போது இவர்கள் விநியோகம் அல்லது விற்பனை செய்துள்ளனர். அனைத்திற்கும் இன்னின்ன மெட்டு என்று குறிப்பிடப்பட்டுள்ள மொத்தம் 32 பாடல்கள் இடம் பெற்றுள்ள இத்தொகுப்பில் கீர்த்தனை வடிவிலான உருப்படிகள் அதிகம் உள்ளன. தெருக்கூத்துக்களாக நடத்தப்பட்டு வந்த தமிழ் மரபு வழி நாடகங்கள் இசை நாடகங்களாக உருப்பெற மூலமாக விளங்கியவை கீர்த்தனை நாடகங்களே. இக்கீர்த்தனை நாடகத்தின் முன்னோடியாக இராம நாடகம் இயற்றிய அருணாசலக்கவிராயர் குறிக்கப்படுகிறார்.[151] காலப்போக்கில்

இக்கீர்த்தனை நாடகங்கள் வசனங்கள் சேர்ந்த மேடை நாடகங்களாக மாற்றம் பெற்றன. ஆனாலும் அவற்றில் கீர்த்தனை வடிவிலான பாடல்கள் இடம் பெற்றிருப்பதே மரபாகவும் இருந்தது.

சமூக சேவை நாடகத்தில் கீர்த்தனை வகையிலான உருப் படிகள் பன்னிரண்டு அமைந்து உள்ளன. பொதுவாக இவ்வுருப் படிகள் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற கட்டமைப்புகளைக் கொண்டிருக்கும். ஆனால் இந்நாடகத்தின் சில கீர்த்தனைகளில் அனுபல்லவி இடம்பெறவில்லை. அவ்வடிவில் பல்லவி அல்லது பல்லவி, சரணம் மட்டும் இடம்பெற்ற பாடல்கள் அமைந்துள்ளன. சாகித்தியத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் இதுபோன்ற கீர்த்தனைகள் தவிர, இசை வடிவத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் கிருதி என்னும் உருப்படிகளும் இந்நாடகத் தொகுப்பில் உள்ளன. மிகவும் சுருக்கமான சொற்கள், எழுத்துக்கள் கொண்டு பாடுபவரால் பாடல்அடிகளுக்கிடையில் விரிவாக்கம் செய்யப்பட்டு நிறையச் சங்கதிகள் அடங்கிய இவ்வகைக் கிருதி என்னும் உருப்படிகள், ஓர் இசைக் கலைஞனின் முழு இசை ஞானத்தையும் பாடுதிறத்தையும் வெளிப்படுத்துவனவாக அமைந்திருக்கும். இவ்வகைக் கிருதியில் அமைந்த பாடல் ஒன்றில் நாடக நாயகன், ஜமீந்தாரான தன் தந்தையைப் பகுத்தறிவுக் கொள்கையை ஏற்குமாறு ஆற்றுப் படுத்துகிறான்.

## (பாட்டு - 28)

19. (ராஜயோக ஞானகுருவே - என்ற மெட்டு)

**பல்லவி**

**சுகுணன்:**

*பாரிலுண்மையான கொள்கை*
*பகுத்தறிவேயாகும் அறிவே!* (பா)

**அநுபல்லவி**

*சீருஞ்சிறப்பும் வாய்ந்த என்தந்தையே!*
*சிந்தனை செய்வீர் நிந்தை ஏனோ?* (பா)

**சரணம்**

*மக்கள் யாவரும் மாண்புடன் வாழ*
*மார்க்கமே அளித்திடும் கீர்த்தியளித்திடும்!*
*சிக்கல் வைதீகம் தீர்ந்திடும் சுகமாமே!*
*தேசத்தோர் புகழ வாழ்வோ மெந்நாளும்! (பா)*

இந்நாடகப் பாடல்களுள் கிருதி, கீர்த்தனை வடிவிலான உருப்படிகளே அதிகம் இடம்பெற்றிருப்பதால் பா வகைகளில் கண்ணிகளே அதிகம் இடம்பெறுகின்றன. மேலும் கிளிக் கண்ணிகளும், சிந்தடிகளும், தொகையரா - பாடல் முறையும் சில பாடல் அமைப்பில் காணப்படுகின்றன. முதலிலும் முடிவிலும் மெட்டமைந்த இரு குழுப் (கோரஸ்) பாடல்களும் உண்டு. கிளிக்கண்ணியில் அமைந்த ஒரு பாடல் கல்வியின் மேன்மையைப் பறை சாற்றுகிறது.

**(பாட்டு - 18)**

20. *(கிளிக்கண்ணி மெட்டு)*

**கண்ணன்:**

*கல்வியே மாந்தருக்குக் கண்ணது போலவாகும்*
*செல்வம் சிதைந்து விடும் - உலகே*
*தீமைக்குள் ஆழ்த்திவிடும்*
*கல்வியே செல்வமாகும் கதிதனை உயர்த்திடும்*
*வெல்லும் விதிதனையே - உலகே*
*மேன்மை நமக்களிக்கும்!*

அன்றைய மேடை நாடகத்தின் கலை வடிவக் கூறுகளை முழுமையாகக் கொண்டிருக்கும் இந்நாடகம் இதன் தலைப்பிற் கேற்ப மறுமலர்ச்சிக் கருத்துக்களைக் கொண்ட சமூக நாடக மாகவே அமைந்திருக்கிறது. கல்வியின் மேன்மை, சாதி எதிர்ப்பு, தீண்டாமை ஒழிப்பு, பெண்ணுரிமை, பெண்கல்வி, மண உரிமை, காதல் மணம், மூடநம்பிக்கை ஒழிப்பு போன்ற சமூகப் பிரச்சினைகளில் திராவிட இயக்கக் கருத்துக்களைப் புகுத்தி இயற்றப்பட்ட பாடல்களைக் கொண்டதாக இந்நாடகத் தொகுப்பு விளங்குகிறது.

### iv) கோகிலராணி

*1939 ஆம் ஆண்டில், இந்தித்திணிப்பு எதிர்ப்புப் போராட்டம் தீவிர நிலையில் இருந்தபோது இந்நாடகம் இயற்றப் பட்டதாகப் புதுவைச்சிவமே அந்நாடக நூலின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். அச்சூழலுக்கேற்பத் திராவிடர்-ஆரியர் போராட்டமே நாடகம் முழுவதிலும் மையப்படுத்தப்பட்டுள்ளது. அந்த வகையிலேயே இந்நாடகப்பாட்டுகளும் அமைந்துள்ளன. புதுவைச் சிவத்தின் நாடகங்களுள் முதன் முதலில் 1947இல் அச்சில் வந்த நாடகமும் இதுவே. இந்நாடகப் பாட்டுகள் தனியாகவோ பின்னிணைப்பாகவோ இல்லாமல் நாடகக் காட்சிகளின் இடையிலேயே காணப்படுகின்றன. மொத்தமுள்ள பதினாறு பாடல்களுக்கும் மெட்டுக்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றுள் நான்கு திரைப்பட மெட்டுகளென்று திரைப்படப் பெயருடன் குறிக்கப்பெற்றுள்ளன. கீர்த்தனை வடிவ உருப்படிகளும், சரணம் இல்லாத உருப்படிகளும் காணப்படுகின்றன. சிந்துக் கண்ணிகளும், கிளிக்கண்ணிகளும் இடம் பெற்றுள்ளன. இவை தவிர இரண்டு பாடல்கள் (காட்சி எட்டு மற்றும் காட்சி பத்து-கோகிலராணி:1947:32-38) புதுவைச்சிவத்தின் தமிழர் தன்மதிப்புப் பாடல் தொகுப்பிலிருந்து பாடப்பட வேண்டும் என்ற குறிப்பும் காணப்படுகிறது. இவ்விரு பாடல்களுமே இசை வடிவத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் கிருதி வகை உருப்படிகளாக அமைந்திருக்கின்றன. இந்நாடகத்தில் நடித்த, இந்நாடகத்தைப் பார்த்த சிலரிடம் இவ்வாய்வுக்காக நேர்காணல் நிகழ்த்தியபோது, அவர்களில் சிலர் குறிப்பாக இப்பாடல்களைப் பாடிக்காட்டினர் என்பது குறிப்பிடத்தக்கது.[152] இக்கிருதி வகையில் அமைந்த ஒரு பாடல் சாதி எதிர்ப்புக் கொள்கையை வலியுறுத்துவதுடன், தமிழ்நாட்டில் சாதி நிலவக் காரணம் ஆரியமே என்றும் விளக்குகின்றது.*

21. *(ஆதி பரம்பொருளை ஏ. மெட்டு)*

*சாதியும் பேதமும் வீணாகுமே!*
*தாரணி மாந்தர்கள் யாவரும் சமமே!* (சாதி)

*நீதியில் பேதம் வகுத்திடல் ஏனோ?*
*நேர்மையிலாமத போதனை வீணே!*

*தீதுமிக விளைக்கும் உணர்வாய்!*
*சிறியவர் செயலது நீவிடு தமிழா!* (சாதி)

*ஆரிய போத மதுவருந் தாதே!*
*அறிவினை மாய்க்கும் அதைவி ரும்பாதே!*
*வீர மறவாதே தமிழா!*
*விழிப்புடன் எழுந்திரு நீயுறங்காதே!* (சாதி)

சாதியில்லாத சமுதாயமாகத் தமிழினம் பெருமையுடன் வாழ்ந்திருந்தது என்றும், ஆரியர் வருகையால் தமிழரின் ஒற்றுமையும் பெருமையும் குலைந்ததென்றும், மீண்டும் தமிழர்கள் ஒற்றுமைபெற்றுத் தமிழின மாண்பைக் காத்திட வேண்டும் என்றும் மக்களிடம் எழுச்சி யூட்டும் வகையிலேயே இந்நாடகப் பாட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன.

## V) சிதைந்த வாழ்வு

1951ஆம் ஆண்டில் அச்சில் வெளிவந்த இந்நாடக நூலின் இறுதியில் ஒரு பாட்டு மட்டுமே இடம்பெற்றுள்ளது. மேலும் சிதைந்த வாழ்வு நாடகப் பாட்டுகள் என்று எழுதப்பட்ட தொகுப்பு ஒன்று கையெழுத்துப் பிரதியாகக் கிடைத்து அது புதுவை அரசின் கலை பண்பாட்டுத் துறையால் 2000 ஆவது ஆண்டில் வெளியிடப்பட்ட புதுவைச்சிவம் நாடகங்கள் தொகுப்பில் நாடகப்பாட்டுகள் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளது. மொத்தம் பதினொரு பாடல்களே உள்ள இத்தொகுப்பில் தமிழ், தெலுங்கு, இந்தித் திரைப்பட மெட்டுகள் பயன்படுத்தப் பட்டுள்ளன. ‘பராசக்தி’ என்னும் திரைப்படத்தின் பாடல்கள் அப்போது மிகவும் பிரபலமடைந்ததால் அம்மெட்டுகளில் நான்கு பாடல்களைப் புதுவைச்சிவம் இயற்றியுள்ளார். இத்திரைப்படம் 1952 ஆம் ஆண்டில் தான் திரைக்கு வந்தது.[153] ஆனால் சிதைந்த வாழ்வு நாடக நூல் 1951ஆம் ஆண்டில் அச்சில் வெளிவந்துள்ளது. 1953ஆம் ஆண்டில் இந்நாடகம் நடைபெற்றதற்கான துண்டறிக்கைகள் கிடைத்துள்ளன.[154] ஆகவே பராசக்தி திரைப்படம் வெளியான பின்னர் அதில் உள்ள பாட்டுக்கள் பிரபலமானதை அடுத்து, அந்தப் பாடல் மெட்டுக்களில் தனது நாடகத்திற்கும் புதுவைச்சிவம் பாடல்களை அமைத்திருக்கக் கூடும்.

இந்நாடகம் திராவிட முன்னேற்றக் கழகம் துவங்கப்பட்ட பின்னர் இயற்றப்பட்டிருப்பதால் அக்கட்சியின் கொள்கைகள் அனைத்தும் பிரதிபலிக்கும் வகையில் இந்நாடகப் பாட்டுகள் அமைந்துள்ளன. திராவிடர் கழகத்தின் கொள்கைகளே தங்கள் கட்சியின் கொள்கைகள் என்று அறிஞர் அண்ணா அறிவித்திருந்த நிலையில்,[155] திராவிடர் கழகத்தில் இருந்தபோது ஏற்றுக் கொண்ட கொள்கைகளில் இன்னும் அதிக தீவிரத்தோடு தி.மு.க.வினர் ஈடுபட்டிருந்தனர் என்பதற்கு இந்நாடகப் பாட்டையும் ஓர் எடுத்துக் காட்டாகச் சொல்லும் அளவிற்கு இதில் திராவிட நாட்டுப் பிரிவினைப் பிரச்சாரம் வலியுறுத்தப் பட்டிருக்கிறது. இந்நாடகத்தின் ஒரு பாடல்:

### 22. கோரஸ்

*(எல்லோரும் வாழ வேண்டும்) (பராசக்தி மெட்டு)*

*அன்பாக வாழ வேண்டும் - தமிழர்*
*ஆர்ந்த புகழில் நாளும்!*
*நன்றாக வாழ வேண்டும் - திராவிட*
*நாடு பெற்றாள வேண்டும்!* (அன்)

*பேதங்கள் சாதிமதம் - என்றோதிடும்*
*பீடைகள் மாய வேண்டும்!*
*நீதி எல்லோருக்கும் வேண்டும் -உரிமைகள்*
*நிலவிட வேண்டு மெங்கும்!* (அன்)

*ஊணும் உடையுடனே - இல்லிடமும்*
*உதவும் சமதர்மமே*
*வேணும்; அந்த ஆட்சி ஒன்றே - நம்வாழ்வின்*
*வேதனை போக்கிடுமே!* (அன்)

மேற்குறித்த பாடலில் திராவிட நாடு கோரிக்கை, சாதி மத எதிர்ப்பு அடிப்படை உரிமைகள், சமதர்மம், பொதுவுடைமை ஆகிய திராவிட இயக்கக் கொள்கைகள் வலியுறுத்தப்பட்டுள்ளன. இவற்றுடன் பெண்ணுரிமை, வைதிக எதிர்ப்பு, ஆரிய எதிர்ப்பு, காதல் மணம் ஆகிய கொள்கைகளும் இந்நாடகத்தின் மற்ற பாடல்களிலும் வலியுறுத்தப்பட்டுள்ளன.

## ஊ. தொகுப்புரை

மனிதனின் பரிணாம வளர்ச்சியில் உணர்ச்சிகளின் வெளிப்பாடுகளாகக் கலைகள் பிறந்தன. அவற்றுள் 'போலச் செய்தல்' என்னும் ஆதிகால நிகழ்வே பின்னர் நாடகக் கலையாகப் பரிணாமம் பெற்றது. உலகின் பழைமையான நாகரிகங்களில் இக்கலை வளர்ந்ததைப் போலவே தமிழிலும் இக்கலை வளர்ந்து இலக்கிய, இலக்கணங்கள் உருவாக்கம் பெற்றன.

சமுதாயத்தின் தாக்கம் கலைகளில் ஊடுருவுதல் இயல்பான படியால், தமிழ்நாட்டில் இருபதாம் நூற்றாண்டின் முற்பாதியில் திராவிட இயக்கத்தின் தாக்கம் நாடகக் கலையில் பெருமளவில் ஊடுருவியது. பாரதிதாசனின் முதல் புராண மறு சிந்தனை நாடகம் 1934 ஆம் ஆண்டிலும், புதுவைச்சிவத்தின் முதல் சமூகச் சீர்திருத்த நாடகம் 1936 ஆம் ஆண்டிலும் மேடையேறின. திராவிட இயக்கக் கொள்கை வெளிப்பாடாக அமைந்த சமூக நாடகங்களை முதன் முதல் இயற்றி மேடையேற்றியவராக, புதுவைச்சிவம் அமைகிறார். திராவிட இயக்கத்தின் கலைத்துறை ஈடுபாட்டின் முன்னோடி என்று குறிப்பிடுமளவுக்கு இவருடைய ஆக்கங்கள் காலவரிசையிலும், திராவிட இயக்கக் கொள்கைப் பரப்பிலும் முன்னிற்பதை இவ்வாய்வு சான்றுகளுடன் முன்வைத்துள்ளது. புதுச்சேரி நாடக வரலாற்றிலும் தமக்கென்று குறிப்பிடத்தக்க இடத்தைப் பிடித்தவராகப் புதுவைச்சிவம் விளங்குகிறார். அவரது நாடகங்களும் அவற்றின் இயக்கங்களும் முழுமையாக இயக்கம் சார்ந்ததாகவும், சமுதாயம் சார்ந்ததாகவுமே அமைந்திருக் கின்றன. இந்த வகையில் புதுவைச் சிவம் இயற்றிக் கிடைத்திருக்கும் பதினெட்டு நாடகங்களின் அறிமுகமும், வகைப்பாடும் இவ்வாய்வில் விளக்கப்பட்டுள்ளன. ஒரு

கவிஞராகவும், எழுத்தாளராகவும் இருந்த புதுவைச்சிவம் நாடகப் படைப்பாளராகவும், நாடக இயக்குநராகவும் அளித்திருக்கும் பங்களிப்புக்கு உரித்தான செய்திகள் பெரும்பான்மையும் இவ்வாய்வில் வெளிப்படுத்தப் பட்டுள்ளன. தமிழிலக்கியத்தில் பயிற்சியும் ஈடுபாடும் கொண்டதன் காரணமாகப் புதுவைச்சிவத்தின் படைப்புகளில் நாடகங்களும் மிகுந்திருந்தன.

அவரது நாடகங்கள் திராவிட இயக்கம் முன்மொழிந்த கோட்பாடுகளான இனவுணர்வு, மொழியுணர்வு, பெண்ணுரிமை, சமத்துவம், பொதுவுடைமை, சாதி மத எதிர்ப்பு, சமூகச் சீர்திருத்தம் ஆகியவை உள்ளிட்ட அனைத்தையும் வலியுறுத்திய படைப்புகளாகவே இருக்கின்றன என்பதும், இயக்கச் சார்பு மட்டுமன்றி இயக்கத்தை நேரடியாகப் படைப்பில் கொண்டுவரும் வகையிலும் இயற்றப்பட்டிருக்கின்றன என்பதும் தெரிகின்றது.

நாடக இலக்கண விதிகளின் படியும், நாடக உத்திகளின் படியும் புதுவைச்சிவத்தின் நாடகங்கள் ஆராயப்பெற்று நாடக இலக்கண விதிகளுக்குப் பெரிதும் முரண்படாத நிலையையே புதுவைச்சிவம் மேற்கொண்டிருக்கிறார் என்பதும் வெளிப்படுத்தப் பட்டுள்ளது. பண்பாட்டுவழி புகுத்தப் பட்டுவிட்ட, பழமை வழக்கங்களுக்கு எதிரான, பொதுமக்களால் சுலபத்தில் ஏற்றுக் கொள்ள முடியாத புதுமையான கருத்துக்களை யெல்லாம் நாடகத்தின் வழி புகுத்தி அவற்றின் மூலம் புதுவைச்சிவத்தின் நாடகங்கள் சமூக மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. திராவிட இயக்கம் ஆட்சி அதிகாரத்தைத் தமிழகத்திலும், புதுச்சேரியிலும் கைப்பற்றியதால் அவ்வியக்கக் கொள்கைப் பிரச்சாரத்தில் முனைந்து நின்ற புதுவைச் சிவத்தின் நாடகங்கள் வெற்றி பெற்றன என்பதும், அவரது நாடகங்களால் இயக்கம் பெற்ற வெற்றி, இலட்சியத்தை எட்டிய நிலையையே குறிக்கின்றது என்பதும் வெளிப் படுத்தப்பட்டுள்ளன.

நாடகவியல் நூல்களையும், தமிழ் நாடக வளர்ச்சியையும் கொண்டு புதுவைச்சிவம் இயற்றிய நாடகங்கள் சிறந்த நாடகக் கூறுகளைக் கொண்டு விளங்கினாலும், அவையாவும் பிரச்சார நாடகங்களே என்னும் கருத்தையும் தவிர்க்க இயலாது. இயக்கக் கொள்கைகளையும், குறிக்கோள்களையும் புகுத்தி எழுதப்படும்

பிரச்சார நாடகங்கள் அக்குறிக்கோள்கள் நிறைவேறும் நிலையில் பழமையாகி விடுகின்றன என்று பிரச்சார நாடகங்களைப்பற்றிய குற்றச்சாட்டும் உள்ளது. இது மில்டனின் நாடகங்களின் மீது கூடச் சுமத்தப்பட்டது. ஆனால் நல்ல கருத்துக்களைப் பிரச்சாரம் செய்வது என்பதும் ஒரு நாடக உத்தியே; அது நல்ல நாடக ஆசிரியரைக் குறிக்கும் என்று பெர்னார்டு ஷா குறிப்பிட்டிருப்பது நோக்கத்தக்கது.

இதேபோல் புதுவைச்சிவமும் நாடகவியலிலும், நாடகப்பாட்டு இசையிலும் போதிய அறிவும் தேர்ச்சியும் பெற்றிருந்தும்கூட அவரது அனைத்து நாடகங்களும் தாம் சார்ந்திருந்த இயக்கத்தின் பிரச்சாரத்திற்காகவே அவர் இயற்றியிருக்கின்றார் என்றே கொள்ள வேண்டியுள்ளது.

மேற்குறித்த தன்மையினால் திராவிட இயக்கப் பிரச்சாரம் என்ற நிலையிலிருந்து அவரது நாடகம் ஒன்றைக்கூடப் பிரித்துப் பார்க்க முடியாவிடினும், அவை அனைத்துமே பகுத்தறிவு சார்ந்த சமூகப் போராட்டங்களை அடிப்படையாக வைத்துப் பின்னப்பட்டுப் பார்ப்போரிடம் இலட்சிய உணர்வை ஏற்படுத்தும் படைப்புகளாகவே அமைந்திருக்கின்றன. மேலும் புதுவைச்சிவத்தின் நாடகங்கள் இலட்சியத்தை எட்டிய படைப்புகளாக மாறியிருக்கின்றன என்பதும் இவ்வாய்வில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. சமூக மாறுதல் என்னும் உயர்ந்த இலட்சிய அடிப்படையைப் புதுவைச்சிவத்தின் நாடகங்கள் பின்னணியாகக் கொண்டு புரட்சியான சிந்தனைகளுடன் உலகளாவிய பார்வையான சமத்துவச் சமுதாயத்திற்கு அடிகோலியுள்ளன. அதனால் மேலை நாட்டு நாடக இலக்கணப்படியும் அவரது நாடகங்கள் இலக்கியமாகக் கருதப்படும் நிலையையே எட்டியுள்ளன.

## அடிக்குறிப்புகள்

1. பக்தவத்சலம். கி.மா, 1956, மலர் மணம், சென்னை, அருணோதயம், ப. 48.
2. வரதராசன். மு, 1975, மொழி வரலாறு, சென்னை, திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், பக். 30 - 32.
3. இளங்கோ. ச. சு, 1990, பாரதிதாசன் நாடகங்கள் ஓர் ஆய்வு, சென்னை, ஐந்திணைப் பதிப்பகம், பக். 4 -5.
4. மேலது, பக். 10 - 37.
5. அப்பாத்துரைப்பிள்ளை. கா, 1946, பண்டைத்தமிழ் நாடகம், முல்லை, ஐந்தாவது வெளியீடு, ப. 5.
6. அழகப்பன். ஆறு, 1987, தமிழ் நாடகம் தோற்றமும் வளர்ச்சியும், சிதம்பரம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், ப. 24.
7. இளங்கோ. ச. சு, 1990: 37 - 46.
8. அப்பாத்துரைப்பிள்ளை. கா, 1946: 5.
9. இளங்கோ. ச. சு, 1990: 59.
10. அருணாசலம்.மு, 1972, தமிழிலக்கிய வரலாறு-பத்தாம் நூற்றாண்டு,சென்னை, முன்னுரை.
11. முத்துசாமி. மா, 1968, உலகத்தமிழ் மாநாடு விழா மலர், சென்னை, உலகத் தமிழ் மாநாடு. பக் . 21 - 22.
12. ஆனைமுத்து.வே, (பதி.), 1974, பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள், திருச்சிராப்பள்ளி, சிந்தனையாளர் கழகம், ப. 1282.
13. சுப்பையா. வ, 1984, சுதந்திரம் 1934-1984 பொன்விழா மலர், புதுச்சேரி, ப. 144.
14. முத்துசாமி. மா, 1968: 21.
15. சுப்பையா. வ, 1984: 44 - 45.
16. முத்துசாமி. மா, 1968: 22.
17. இளங்கோ. ச. சு, 1990: 86 - 94.

18. ஆனைமுத்து.வே, (பதி..), 1974: 128.
19. மேலது, பக். 1281 - 84.
20. இளங்கோ. ச. சு, 1990: 97.
21. மேலது, பக். 99 - 100.
22. பத்மநாபன் அரிமளம். சு, 2000, *தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகங்களில் இசைக்கூறுகள்*, புதுச்சேரி, இசைத் தென்றல், ப. 12.
23. Antony, Francis Cyril (ed), 1982, *Gazetteer of India - Union Territory of Pondicherry,* Pondicherry, Government of Pondicherry, p.1239.
24. சச்சிதானந்தம். க, 1996 , *பிரெஞ்சு ஆட்சியில் தமிழின் நிலை*, புதுச்சேரி, சாரதா பதிப்பகம், ப. 138.
25. Antony, Francis Cyril (ed), 1982: 1239 - 1246.
26. Ibid., p.1246.
27. சச்சிதானந்தம். க, 1996: 137.
28. மேலது, ப. 134.
29. பத்மநாபன் அரிமளம். சு, 2000: 9 - 10.
30. குடிஅரசு (1925), ஈரோடு, சென்னை, 10.02.1935.
31. Antony, Francis Cyril (ed), 1982: 1250 - 1254.
32. Ibid., p.1251.
33. இளங்கோ. சிவ, 2000, *பிரெஞ்சிந்தியாவும் திராவிட இயக்கமும்*, புதுச்சேரி, ஞாயிறு நூற் பதிப்பகம், பக். 126-127.
34. நெல்லைராஜன் மற்றும் பலர், 1997, *வெள்ளி விழா மலர்*, புதுவை, ஆதவன் பைன் ஆர்ட்ஸ், ப. 57.
35. Antony, Francis Cyril (ed), 1982: p.1252.
36. புதுவை முரசு (1930-1932), புதுச்சேரி, 07.12.1931.
37. புதுவைச்சிவம், 2000 , *புதுவைச்சிவம் நாடகங்கள்*, புதுச்சேரி, புதுச்சேரி அரசு கலைபண்பாட்டுத்துறை, பக். 433 - 439.
38. Antony, Francis Cyril (ed), 1982: p.1291 , புதுவைச்சிவம், 2000: 434.

39. சிவப்பிரகாசம்.எஸ்,1944, பெரியார் பெருந்தொண்டு, புதுச்சேரி, பூங்கொடிப் பதிப்பகம், முன்னுரை.

40. சச்சிதானந்தம். க, 1996 : 106 / புதுவைச்சிவம், 2000: 434.

41. சிவப்பிரகாசம்.ச, 1945, மறக்குடி மகளிர், புதுச்சேரி, தொழிலாளர் மித்திரன், முன்னுரை.

42. சிவப்பிரகாசம்.எஸ்,1944: முன்னுரை.

43. சிவப்பிரகாசம்.எஸ்,1944: பாயிரம், முன்னுரை.

44. சிவப்பிரகாசம்.எஸ்,1945: முன்னுரை.

45. சிவப்பிரகாசம்.எஸ்,1946, காதலும் கற்பும், புதுச்சேரி, ஞாயிறு நூற்பதிப்பகம், சிறப்புரை.

46. புதுவைச்சிவத்தின் தமிழ் இலக்கியப்புலமை, ஈடுபாடு ஆகியவை குறித்தும், அவர் இயற்றிய நூல்களின் இலக்கியத் தரம் குறித்தும் திராவிட இயக்க இதழ்களின் நூல் மதிப்புரைப் பகுதிகள் குறிப்பிட்டுள்ளன. இம்மதிப்புரையின் சில முக்கியப் பகுதிகள் சிலவற்றைப் புதுவைச்சிவமே தமது நூல்களில் வெளியிட்டிருக்கிறார். நூல்களின் அணிந்துரையிலும் இம்மதிப்பீடுகள் காணப்படுகின்றன. அவற்றின் ஒரு தொகுப்பு, அடிக்குறிப்புகளைத் தொடர்ந்து வரும் பகுதியில் 'புதுவைச்சிவம் நூல் மதிப்புரைகளின் சில பகுதிகள்' என்ற தலைப்பில் தரப்பட்டிருக்கிறது.

47. சிவப்பிரகாசம்.எஸ், 1945, கைம்மை வெறுத்த காரிகை, புதுச்சேரி, பூங்கொடிப் பதிப்பகம், முன்னுரை.

48. சிவப்பிரகாசம்.எஸ், 1946, மறக்குடி மகளிர், புதுச்சேரி, பூங்கொடிப் பதிப்பகம், முன்னுரை.

49. ஜெகதாம்பாள். சி. (கவிஞர் புதுவைச்சிவம் துணைவியார்), நேர்காணல், 31.08.2000.

50. Padmananaban. A. Dr, 1986, *Saint Nandanaar,* Madras, Poompuhar Pathippagam, p.11.

51. புதுவைச்சிவம், 2000: 234.

52. செ.முத்து (புதுவைத் தி.மு.க.வின் தொழிற்சங்கத் தலைவராகப் பதவி வகித்தவர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்), முதலியார்பேட்டை, நேர்காணல், 31.08.2000.

53. இளங்கோ. ச. சு, *1990:* ப.*177.*

54. இந்தக் கதைச்சுருக்கம் சமூக சேவை நாடகப் பாடல்கள் என்ற நூலில் இருந்து எடுக்கப்பட்டது. நாடகப் பிரதி கிடைக்காத நிலையில் இக்கதைச் சுருக்கமே நாடக வடிவமாகக் கொள்ளப்பட்டுப் புதுவை அரசு வெளியிட்டுள்ள புதுவைச்சிவம் நாடகங்கள் நூலில் பதிப்பிக்கப்பட்டுள்ளது (புதுவைச்சிவம் *2000:* பக்.*231 - 232*).

55. புதுவைச்சிவம், *2000:* பக்.*434 - 441.*

56. சிவப்பிரகாசம். ச, *1951,* சிதைந்த வாழ்வு, புதுச்சேரி, ஞாயிறு நூற்பதிப்பகம், பக். *1 - 147.*

57. இளங்கோ. ச. சு, *1990:* பக்.*397 - 398.*

58. சூரியநாராயண சாஸ்திரியார். வி. கோ, *1934,* நாடகவியல், மதுரை - திருநெல்வேலி, வி. சூ. சுவாமிநாதன், பக். *33 - 37.*

59. இளங்கோ. ச. சு, *1990:* ப.*395.*

60. சூரியநாராயண சாஸ்திரியார். வி. கோ, *1934:* பக்.*111 - 112.*

61. இளங்கோ. ச. சு, *1990:* ப.*435.*

62. நீலகண்டன். ப, *1981,* நாடக மேடை, சென்னை, பக். *33 - 34.*

63. இளங்கோ. ச. சு, *1990:* ப.*436.*

64. சூரியநாராயண சாஸ்திரியார். வி. கோ, *1934:* ப.*61.*

65. இளங்கோ. ச. சு, *1990:* ப.*492.*

66. புதுவைச்சிவம், *2000:* ப.*223.*

67. சிவப்பிரகாசம். ச, *1951: 123 - 127.*

68. சிவப்பிரகாசம். ச, *1951:* பக்.*60, 77, 81.*

69. புதுவைச்சிவம், *2000:* பக்.*310 - 311.*

70. இளங்கோ. ச. சு, *1990:* ப.*516.*

71. மேலது, ப. *518.*

72. மேலது, ப. *317.*

73. மேலது, ப. *520.*

74. ப.மருதநாயகம் (புதுவைத் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற புதுவைச்சிவம் அறக்கட்டளைச் சொற்பொழிவு நிகழ்வில் வரவேற்புரை, *24.2.2004*).

75. அழகப்பன்.ஆறு, 1987: ப.756.
76. சிவப்பிரகாசம். ச, 1946, மறுமலர்ச்சிக் கவிதைகள், புதுச்சேரி, ஞாயிறு நூற்பதிப்பகம், உள்பக்க அட்டை.
77. புதுவைச்சிவம், 2000: ப.441.
78. மேலது, பக். 146 - 198.
79. சிவப்பிரகாசம். ச, 1947, கோகிலராணி, புதுச்சேரி, ஞாயிறு நூற்பதிப்பகம், முன்னுரை.
80. இளங்கோ. ச. சு, 1990: பக்.305 - 308.
81. புதுவைச்சிவம், 2000: ப.236.
82. மேலது, ப. 198.
83. மேலது, பக். 4, 76, 80 - 137, 293.
84. மேலது, பக். 213 - 228.
85. மேலது, ப. 200.
86. மேலது, பக். 215 - 228.
87. மேலது, பின்னட்டை.
88. மேலது, பக். 25, 229, 241.
89. மேலது, பக். 14, 95, 268, 417.
90. மேலது, பக். 24 - 25.
91. மேலது, ப. 6.
92. மேலது, ப. 10.
93. மேலது, ப. 358.
94. மேலது, ப. 277.
95. மேலது, ப. 25.
96. மேலது, ப. 370.
97. இளங்கோ. ச. சு, 1990: ப.328.
98. புதுவைச்சிவம், 2000: பக்.83 - 117.
99. மேலது, பக். 147 - 220.
100. மேலது, பக். 311.

101. மேலது, பக். 401 - 414.

102. மேலது, பக். 237 - 422.

103. மேலது, பக். 401, 369.

104. மேலது, பக். 34, 38, 61, 69, 75, 88.

105. மேலது, பக். 90, 101.

106. மேலது, பக். 304 - 363.

107. மேலது, பக். 418, 422.

108. மேலது, பக். 231, 405 - 406.

109. மேலது, பக். 235 - 237.

110. மேலது, ப. 38.

111. மேலது, ப. 53.

112. மேலது, ப. 161.

113. மேலது, பக். 286, 306.

114. இளங்கோ. ச. சு, 1990: ப.332.

115. புதுவைச்சிவம், 2000: பக்.61 - 75.

116. மேலது, ப. 176.

117. இளங்கோ. ச. சு, 1990: ப.315.

118. புதுவைச்சிவம், 2000: ப.412.

119. மேலது, பக். 277 - 279.

120. மேலது, பக். 259 - 266.

121. மேலது, ப. 274.

122. மேலது, பக். 28, 61, 70, 75.

123. மேலது, பக். 104.

124. மேலது, பக். 264.

125. மேலது, பக். 309 -363.

126. மேலது, பக். 76, 129,227,232, 266, 363, 414.

127. இளங்கோ. ச. சு, 1990: ப.518.

128. புதுவைச்சிவம், 2000: பக்.11, 15, 35, 51 - 55, 66, 70, 75.

129. மேலது, பக் 91 - 137.

130. மேலது, ப. 144.

131. மேலது, பக். 228 - 344.

132. மேலது, பக். 402, 413.

133. மேலது, பக். 235 - 238.

134. மேலது, பக். 259 - 266.

135. மேலது, பக். 273 - 363.

136. சிவப்பிரகாசம். ச, 1951: பக்.1 - 146.

137. இளங்கோ. ச. சு, 1990: ப.306.

138. அண்ணாத்துரை. சி.என், மற்றும் மூவர், 1950, தீ பரவட்டும், புதுச்சேரி, ஞாயிறு நூற்பதிப்பகம், பக். 7 - 25.

139. பத்மநாபன் அரிமளம். சு, 2000: ப.14.

140. இது தென்னகச் செவ்விசை என்றும் குறிக்கப்பெறுகிறது; அதேநேரம் தென்னிசைச் செவ்விசையும், தமிழ்த்திருமுறை இசையும் வேறுபட்டு விளங்குகின்றன என்றும் ஆய்வாளர் களால் குறிப்பிடப்படுகிறது (சு. பத்மநாபன் 2000:ப.49).

141. பத்மநாபன் அரிமளம். சு, 2000: ப.14.

142. திருமுருகன். இரா., 1993, சிந்துப் பாடல்களின் யாப்பிலக்கணம், புதுச்சேரி, பாவலர் பண்ணை, ப. 64.

143. பத்மநாபன் அரிமளம். சு, 2000: ப.20.

144. திபதை என்பது, அருணாசலக்கவிராயரால் இயற்றப்பட்ட இராம நாடகத்தில் இடம் பெறும் வெறும் கண்ணிகள் மட்டுமே கொண்ட கீர்த்தனை வடிவிலான பாடல் அமைப்பு (சு. பத்மநாபன் 2000: பக்.20 - 62).

145. தேசிங்குராஜன் கதை என்று பாரதிதாசன் எழுதிய இசைக் காவியம் 1935 ஆம் ஆண்டில் பெங்களூர் அட்கின்ஸ் கம்பெனி யாரால் இசைத்தட்டாக வெளியிடப் பட்டது (ஸ்ரீ சுப்ரமணிய பாரதி கவிதா மண்டலம் 1935: பின்னட்டை விளம்பரம்). அதில் அடங்கிய பாடல்களின் மெட்டுகளில் பிரபல மானவைதாம் இந்நாடகப்பாடல்களின் மெட்டுகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளன (புதுவைச்சிவம் 2000: ப.368).

146. "பதின்மூன்றாம் நூற்றாண்டு வரை ஒன்றெனத் திகழ்ந்து வந்த இந்திய சங்கீதம் டில்லியில் முஸ்லீம் மன்னர்கள் ஆதிக்கம் பெற்ற காலத்தில் பர்ஷியா, அரேபியா போன்ற முஸ்லீம் நாடுகளில் இருந்து வந்த சங்கீத முறைகள் இந்திய சங்கீதத்தில் கலந்தன. இதன் காரணமாக இந்திய சங்கீதமானது வட இந்தியாவில் மாறுதல் பெற்றது. எனவே அயல் நாட்டு முறை கலந்த வடஇந்திய சங்கீதம் 'இந்துஸ்தானி சங்கீதம்' எனவும், பூர்வீகப் பத்ததியையே கடைப்பிடித்த தென்னிந்திய சங்கீதம் கர்னாடக சங்கீதம் எனவும் அழைக்கப்பட்டன. பதினான்காம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் எழுதப்பட்ட 'சங்கீத சுதாகரம்' என்னும் ஹரிபாலரின் கிரந்தத்தில் முதன் முறையாக இந்திய சங்கீதத்தில் ஏற்பட்ட இரு பிரிவுகளின் குறிப்பு காணப்படு கின்றது. அவை (1) கர்னாடக சங்கீதம் (2) இந்துஸ்தானி சங்கீதம் என்பன." (சு. பத்மநாபன் 2000: ப.51).

147. பத்மநாபன் அரிமளம். சு, 2000: பக்.23 - 24.

148. மேலது, ப. 24.

149. மேலது, ப. 115.

150. இரண்டாம் உலகப் போர்க்காலத்தில் (1939-1944) நெருக்கடியின் பொருட்டுத் திரைப்படங்கள் மிகக் குறைவான படச்சுருள் களையே கொண்டிருந்தன. நீண்டநேர நாடகங்களும் குறுகிய கால அளவுகளில் சுருக்கப்பட்டன. அதனால் பாடல்களும் குறைந்தன. உலகப்போர் மூள்வதற்கு முன்பே இயற்றப்பட்ட இந்நாடகத்தின் பாடல்கள், பின்னர்ப் போர்க்காலக் கட்டுப்பாடுகளின்படி பதினாறு பாடல்களாகக் குறைக்கப்பட்டிருக்கலாம்.

151. பத்மநாபன் அரிமளம். சு, 2000: ப.20.

152. புதுவைச்சிவம், 2000: ப.435.

153. நாராயணன்.அறந்தை, 1994, திராவிடம் பாடிய திரைப் படங்கள், சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், ப. 149.

154. புதுவைச்சிவம், 2000: ப.442.

155. இளங்கோ. சிவ, 2000: ப.152.

# புதுவைச்சிவம் நூல் மதிப்புரைகள் சுருக்கத் தொகுப்பு

*1.* புதுவைச்சிவத்தின் தமிழ் இலக்கியப்புலமை, ஈடுபாடு ஆகியவை குறித்தும், அவர் இயற்றிய நூல்களின் இலக்கியத் தரம் குறித்தும் திராவிட இயக்க இதழ்களின் நூல் மதிப்புரைப் பகுதிகள் குறிப்பிட்டுள்ளன. இம்மதிப்புரையின் சில முக்கியப் பகுதிகள் சிலவற்றைப் புதுவைச்சிவமே தமது நூல்களில் வெளியிட்டிருக் கிறார். நூல்களின் அணிந்துரையிலும் இம்மதிப்பீடுகள் காணப் படுகின்றன. அவற்றின் ஒரு தொகுப்பு இங்கே தரப்பட்டிருக்கிறது.

## அ) மறக்குடி மகளிர் நூல் பற்றிய மதிப்பீடு

*(i)* "...'மறக்குடி மகளிர்' என்னும் நூலின் நூலாசிரியர், புதுவை, புரட்சிக் கவி பாரதிதாசன் அவர்களின் மாணவர் சிவப்பிரகாசமாவார்கள். பாக்கள் எல்லாம் எளிய இனிய தமிழில் யாக்கப்பட்டுள்ளன. புறநானூற்றில் மறக்குடி மகளிர் செயலிவையெனப் பண்டைப் புலவர்கள் வரைந்து காட்டிய காட்சிகளைப் பல விருத்தப்பாக்களால் சிவப்பிரகாசனார் மாற்றணியணிந்து வரைந்து கட்டுகிறார்... திருவாளர் சிவப்பிரகாசனார், பல்லாண்டுகளாகத் தமிழ் வெறி பிடித்துப் பற்பல பாடல்களைப் பாடித் தமிழ் மக்களை மகிழ்வுறுத்தியுள்ளார். இவர் பாடல்கள், தனி நூலாக வருதல் மிகுதியும் போற்றத் தக்கதாகும். சங்க நூல்களையே புரட்டிப் பார்க்காதிருக்குஞ் சிலர்க்கும், புரட்டிப் படித்தவர்களுக்கும் இந்நூல் நல்விருந்தெனத் திகழ்கிறது. எளிமையும் இனிமையுங் கலந்த பாக்களை விரும்பும் இக்காலத்தவர்க்கு, இந்நூல் மிகுதியும் பயன்றருமென்னுந் துணிபுடையேன்..."

-'தமிழ்ப் பொழில்' ஆசிரியர், வித்வான் கோ.சி. பெரியசாமிப் புலவர்.

(ii) "...தோழர் சிவப்பிரகாசம், புரட்சிக் கவி பாரதிதாஸனவர்களிடம் முறையாகப் பயின்ற நூற்றுக்கணக்கான மாணவர்களுள், முதலிடம் பெற்றவர். கவிபுனையும் ஆற்றலில் மட்டுமல்ல; சமுதாயப் புரட்சிக் கருத்துக்களிலுங் கூட, குருவைப் பின்பற்றி நடக்கும் சீடர் இவர். இவரது இதரக் கவிதைளையும் கட்டுரைகளையும் படிப்பவர்கள், இதை நன்குணரலாம்... 'மறக்குடி மகளிர்' தமிழ்ப் பெண்களுக்கு உறுதியையும், ஊக்கத்தையும் தரக்கூடியது. செய்யுட்கள் எளிய நடையில் இருப்பதால், சிறுமிகளுக்குப் பாடப்புத்தகமாக வைப்பதற்குத் தகுதி வாய்ந்தவை. தமிழ்ச் சிறுமிகளுக்கு இன்று கற்பிக்கப்படும் பாடங்களில், பெரும்பகுதி பொய்க்கதைகள் நிரம்பியவை. பழந்தமிழர் வீரத்தை உணர்த்தக் கூடிய புறநானூறு போன்ற நூல்களிலிருந்து திரட்டப்படும் இம்மாதிரி வரலாறுகளை, நம் சிறுமிகளுக்குக் கற்பிப்பது நல்ல பயனைத் தரும்...".

-திருமதி டி.எஸ். குஞ்சிதம் அம்மையார்.

(iii) "...ஆசிரியர் சிவப்பிரகாசம் அவர்களைத் தமிழர் அறிவர். புரட்சிக் கவிஞர் கனகசுப்புரத்தினம் அவர்களிடம் கற்றவர்களில், தோழர் சிவப்பிரகாசம் தலைசிறந்தவர். அவருடைய கவிபுனையும் ஆற்றலுக்கு, இந்நூல் ஓர் அளவையாகும்".

-காஞ்சி கல்யாணசுந்தரன், ஆசிரியன், தொழிலாளர் மித்திரன்.

(iv) "...புறநானூற்றுப் பாடல்களிற் சிலவற்றை ஆதாரமாகக் கொண்டு பண்டைத் தமிழ்ப் பெண்டிரின் வீரத்தையும் சீரிய பண்புகளையும், அழகான எளிய தமிழ்நடையி லியன்றுள்ள சுமார் நூறு விருத்தப்பாக்களின் வாயிலாய் வெளிக்காட்டுகின்றார் கவி கனக-சுப்புரத்தினத்தின் தலை சிறந்த மாணவராகிய தோழர் சிவப்பிரகாசம் அவர்கள்" -குடிஅரசு, ஈரோடு.

(v) "சங்க இலக்கியச் செய்யுட்களைத் தழுவி, புதுவைத் தோழர் எஸ். சிவப்பிரகாசம் அவர்கள், இனிய நடையில் இக்கவிதை நூலை ஆக்கியிருக்கிறார்... தமிழரின் வீரத்தைக் குறிப்பாக மகளிரின் மாண்பை இந்நூல் அழகுற எடுத்துக் காட்டுகிறது." - திராவிட நாடு, காஞ்சிபுரம்.

((i), (ii), (iii) மூன்றும் - மறக்குடி மகளிர் 1945: முன்னுரைகள்)

((iv),(v) இரண்டும் - தமிழர் தன்மதிப்புப் பாடல்கள் 1945: உள்ளட்டை)

## ஆ) 'கைம்மை வெறுத்த காரிகை' நூல் பற்றிய மதிப்பீடு

(i) "...ஒப்புவமை கூறவியலாத புரட்சிக் கவிஞர், கனக. சுப்புரத்தினம் (பாரதிதாசன்) அவர்களுடைய மாணவரே தோழர் எஸ். சிவப்பிரகாசம். இவர், தம் ஆசிரியர் வழி பற்றி அழகிய நடையில் இனிய தமிழில் அனைவரும் எளிதிற் படித்துக் கருத்தை உணர்ந்து கொள்ளும் வகையில் பாக்கள் புனைய முன் வந்திருப்பது கண்டு, தமிழகம் கழிபேறுவகை யடையுமென்பது எமது துணிபு... கைம்மைக் கொடுமை உள்ளக் கிளர்ச்சியூட்டும் வண்ணம் தெள்ளிய தமிழ்ப் பாக்களால் சித்திரிக்கப்பட்டுள்ளது. இச்சிறுநூல் ஒவ்வொரு தமிழரகத்திலும் இடம் பெற வேண்டிய அருமை வாய்ந்ததாகும்." -'புதுவிடுதலை' சென்னை.

(ii) "கைம்மையின் கொடுமையையும், தமிழ்ப் பெண்ணின் வீரமும் நன்கு சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. கவிதையோட்டமும் கற்பனைத் திறமும் தமிழார்வமும் ஆசிரியருக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறதென்பதை அறிவுறுத்துகின்றன."

-'குமரன்' காரைக்குடி.

(iii) " இதில் விதவையர் துயரமும், சமூகம் அவர்களுக்குச் செய்யும் சதிச் செயலும் நன்கு சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. செய்யுட்கள்யாவும் எளிய நடையில் இன்னோசை பெற்றுச் செல்வது போற்றற்குரியது."

-'தொழிலாளர் மித்திரன்' புதுவை.

(iv) "...என் நண்பர் எஸ். சிவப்பிரகாசம் அவர்களும், யானும், புரட்சிக் கவிஞர் கனக-சுப்புரத்தினம் அவர்களிடம் ஒரு சேரத் தமிழ் பயின்றவராவோம். மற்றும் பலர் உண்டு அவரிடம் தமிழ் பயின்றவர்கள். அவர்களுள் தமிழாசிரியராக இருந்து வருபவர் பலர். செய்யுள் எழுதும் திறன் பெற்றவர்களும் பலர்... நண்பர் சிவப்பிரகாசம் அவர்கள், எம் ஆசிரியரின் எளிய நடையைப் பின் பற்றிக் கவிதை எழுதும் ஆற்றல் பெற்றவர். 'கைம்மை வெறுத்த காரிகை' என்னும் இச்சிறுநூல், புறநானூற்றுச் செய்யுளொன்றின் விளக்கமாகும்."

- வி. பொன்னம்பலம்.

(v) "...இதுபோன்ற நூற்களால், பழைய இலக்கியச் செய்யுட்களைச் சிறிது தமிழறிந்தோரும் படித்துணர்ந்து கொள்ள

முடியும்.... இதுபோன்ற கவிதை நூற்கள் பல உண்டாதல் வேண்டும், தமிழ் நாட்டில்- தமிழர் நலனுக்காக!.''

- பூங்கொடி பதிப்பக உரிமையாளர்

((i), (ii), (iii) மூன்றும் - தமிழர் தன்மதிப்புப் பாடல்கள் 1945: பின்அட்டை உள்பக்கம்)

((iv), (v) இரண்டும் - கைம்மை வெறுத்த காரிகை 1945: வெளியிடுவோர் குறிப்பு, சிறப்புரை)

## இ) பெரியார் பெருந்தொண்டு நூல் பற்றிய மதிப்பீடு

(i) ''...கல்லார்க்கும் எல்லார்க்கும் எளிதில் பொருள் விளங்கக் கூடிய இனிமையான கவிதை நடையிலே ஆக்கப்பட்ட சிறுநூல். பெரியார் செய்த பெருந்தொண்டுகளில் ஒரு சிலவற்றைப் பல பிரிவாக்கி, ஒவ்வொரு பிரிவையும் சுருக்கமாக - ஆனால் விளக்கமாக விவரிக்கின்றார் ஆசிரியர்...''

-'பால்யன்', காரைக்கால்.

(ii)''...புத்தகத்திலுள்ள பாடல்கள் பலருக்குக் கருத்து மாறுபாட்டை உண்டு பண்ணினாலும், எழுத்தாளரின் உள்ள வேகத்தையும் கவிபுனையும் மேதைமையையும் நன்கு வெளிப்படுத்துகிறது.'' -'வீரசக்தி', கோவை.

(iii)''...சிவப்பிரகாசம் சிறுவயது முதல், நம் சுயமரியாதை இயக்கத்தில் பற்று மிக்குடையார். அதனால் அவர், அந்நாள் முதல் இந்நாள் வரைக்கும் உற்றுவரும் இன்னல் - எதிர்ப்புப்- பன்னற்கரியவை. சிவப்பிரகாசத்துக்கு, இயக்கம் வானுற ஓங்குதல் வேண்டும், நாடு அதனால் நலனுற வேண்டும். இதுவே வெறி... சிவப்பிரகாசம் இலக்கிய இலக்கணம் முறையே படித்தவர். அவர் பழைய கவிதை நூல்களைப் பின்பற்றி எழுதுவதன் மூலம், தம்மை ஒரு படித்தவர் என்று விளம்பரப் படுத்திக்கொள்ளலாம். அந்த வீதியே சென்று, பிழைப்புக்கு வழிதேடலாம். அவர் அப்பக்கம் எட்டிப்பார்க்கவும் நினைப்பதில்லை. தமக்குப்பட்ட கருத்துக்களை- கொள்கையை - ஏனையோர்க்கும் புலப்படுத்த வேண்டும் என்ற அவருடைய உயர் நோக்கத்தை, அவர் எழுதியுள்ள இந்நூலின் ஒவ்வொரு வரியும் நமக்குப்

புலப்படுத்தும்...பெரியார் பெருந்தொண்டு பற்றிச் சிவப்பிரகாசம் ஆற்றியது, சிறிய தொண்டு என்று கருதப்படலாம். ஆனால் அது, கற்றார்க்கே சுலபமல்லாத அரிய தொண்டு என்பது எனக்குத் தெரியும்...'' -புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

*(iv)* ''...உண்மைத் தமிழன் என்ற உரிமையில் யான் எனது நன்றியைப் பெரியாருக்குத் தெரிவித்துக் கொள்வதற்கறிகுறியாகவும், ஆசிரியர் எஸ்.சிவப்பிரகாசம் அவர்கள் எனக்கு முதன் முதல் உயர் தமிழில் ஊக்க மூட்டிப் போதித்து வந்தமைக்கு நான் என்றென்றும் அவர்க்குக் கடமைப்பட்டிருக்கிறேன் என்பதை உணர்த்துவதற்காகவும், அவரால் எழுதப் பெற்ற 'பெரியார் பெருந்தொண்டு' என்னும் இந்நூலைப் 'பூங்கொடி'ப் பதிப்பகத்தின் பேரால் முதல் வெளியீடாக வெளியிட முன்வந்தேன்.'' - ப. சுந்தர வேலன்.

*((i), (ii) இரண்டும் - தமிழர் தன்மதிப்புப் பாடல்கள் 1945: பின்அட்டை)*

*((iii), (iv) இரண்டும் - பெரியார் பெருந்தொண்டு 1944: பாயிரம் , வெளியிடுவோர் முன்னுரை)*

## ஈ) தமிழர் தன்மதிப்புப் பாடல்கள் நூல் பற்றிய மதிப்பீடு

*(i)*''... உணர்ச்சி கொப்பளிக்கும் பாடல்கள் பல பகுதி வாரியாகப் பிரிக்கப்பட்டுக் கூட்டங்களில் பாடுவதற்கேற்ற முறையில், தமிழர் தன் மதிப்புப் பாடல்களாக வெளிவந்துள்ளன... தமிழாறு பெருக்கெடுத்தோடுகிறது. திராவிட வீரம் பண்ணோடு கலந்து உள்ளத்தைத் தடவுகிறது.''

-குடிஅரசு

*(ii)* ''...இப்பாடல்கள்... தமிழர் எழுச்சிக்கு வேண்டிய கருத்துக்கள் நிறைந்து பல மெட்டுக்களில் பாடப்பட்டுள்ள ஒரு தொகுதி. பொது மேடைகளிலும், நாடகங்களிலும், இசையரங்கிலும் பாடுவதற்குத் தகுதி வாய்ந்தவை...''. -குமரன்

*(iii)* ''... இந்நூலில் பொறிக்கப்பட்ட பாடல்கள் ஒவ்வொன்றும், நாட்டுப் பகுதி முதல் பெரியார் பகுதிவரை, ஒவ்வொரு தமிழனையும் எழுச்சியடையச் செய்யும்

என்பதற்கையமில்லை. இது ஒவ்வொரு தமிழரிடமும் அவசியமிருக்க வேண்டிய நூலாகும்.''
-சமத்துவம்

(iv)''... தமிழருக்குச் சீர்திருத்த மனோபாவத்தையும், புரட்சி மனோபாவத்தையும் கொடுக்கச் சில பாட்டுக்கள் இசைக்கப் பட்டுள்ளன. சில பாட்டுக்கள் கம்பராமாயணத்தைத் தாக்குகின்றன. சில பாடல்கள் சுமாராகப் பாடுவதற்கு ஏற்றதாக உள்ளன...''
-பிரசண்ட விகடன்

(v)''... தற்காலத்திற்கு ஏற்றவாறு பாடல்களெல்லாம் சினிமாப் பாட்டுகளின் இராகங்களில் அமைந்துள்ளன. நம் நாட்டு மாதர்களின் குறைகளையும் மக்களின் மூடப்பழக்க வழக்கங்களையும் ஆசிரியர் கண்டிக்கிறார். தொழிலாளர் பகுதியில், உழைப்பாளர்களின் பரிதாப நிலை விளக்கப் படுகிறது.''
-புது உலகம்

(vi)''.... உணர்ச்சி ததும்பும் பாடல்கள்! உள்ளத்தை அள்ளும் விழுமிய கருத்துக்கள்....! திராவிடரின் தன்மான உணர்ச்சியை வெளிப்படுத்தும் முறையில், எளியநடையில் இனிய மெட்டுக்களில் அமைந்துள்ளன...''

-தொழிலாளர் மித்திரன்

( (i) (vi) ஆறும்-தமிழர் தன்மதிப்புப் பாடல்கள்: 1946: முன்னுரைக்கு அடுத்த பக்கம்)

## உ) 'மறுமலர்ச்சிக் கவிதைகள்' நூல் பற்றிய மதிப்பீடு

(i)''...புதுவைத் தோழர் சிவப்பிரகாசம் அவர்கள் எழுதிய 'மறுமலர்ச்சி' என்ற கவிதை நூல் ஒன்று, எமது பார்வையைக் கவர்ந்தது. தோழர் புதுவைச்சிவம், தமிழ் மக்கட்குப் புதியவரல்லர். இதற்கு முன்னர்ப் பலநூல்களைக் கவிதை வடிவில் எழுதி வெளியிட்டுத், தமிழ் மக்களின் மதிப்பைப் பெற்றுள்ளவர். இவருடைய பாடல்கள் எப்பொழுதுமே சீர்திருத்தக் கருத்துக்களோடு கூடியவையென்றாலும், 'மறுமலர்ச்சி' என்னும் இந்நூல் சீர்திருத்தத் துறையில் ஒரு தனிமதிப்பைப் பெறக்கூடிய முறையில் அமைந்துள்ளது என்று கூறின், அது மிகையன்று... மக்களின் அறிவுக்கு இட்ட வேலியை வெட்டி வீழ்த்தினாலன்றி எந்த அரசியல் விடுதலையாலும்

பயன்பெற முடியாதென்ற உண்மையினைக் கவி, மிகவும் அழகாக - ஆணித்தரமாக எடுத்து விளக்கியிருக்கிறார். மற்றும் காதல், கற்பு, அன்பு, அறிவு, வறுமை, உரிமை, இனம், மொழி முதலிய துறைகள் ஒவ்வொன்றும் இந்நூலாசிரியரின் அறிவுத் திறனுக்கு அரண் செய்வது போல, பொருட்கள் விளக்கப்பட்டுள்ளன. படிப்பவர் மனதைப் பக்குவப்படுத்தும் முறையில் அமைந்துள்ள இந்நூல் ஒவ்வொரு தமிழ் மக்கள் கையிலும் இருக்க வேண்டியது இன்றியமையாததாகும்.'' -திராவிட நாடு.

(ii)''...மறுமலர்ச்சி இயக்கம் ஆல்போல் தழைத்து வளர்ந்து வரும் இந்த நேரத்தில், 'மறுமலர்ச்சிக் கவிதைகள்' புதுமையில் ஆர்வம் கொண்ட அனைவராலும் வரவேற்கப்படும் என்பதில் எத்துணையும் ஐயமில்லை...தோழர். சிவப்பிரகாசம் அவர்களது எளிய இனிய நடையைப் 'பெரியார் பெருந்தொண்டு', 'திராவிடப்பண்' போன்ற நூல்கள் மூலம் தமிழகம் அறியும்...''

- ஏ.பி. சனார்த்தனம்.

(iii)''...'மறுமலர்ச்சிக் கவிதைகள்' என்னும் நூலானது மொழித் தொண்டு நாட்டுத் தொண்டே யன்றி, சமூகத் தொண்டிலும் ஈடுபடச் செய்வதற்குரிய ஒரு வழிகாட்டியாக அமைந்துள்ளது. அஃதேயன்றி, இந்நூலின் சீரிய நோக்கமானது, பெண்ணுலகத்தில் நிறைந்துள்ள இருளைக் களைந்து ஒளியைத் தர வல்லதென்பது பல கதைகளினின்றும் நன்கு விளங்குகின்றது. நம் நாட்டிலுள்ள குறைபாடுகளைச் சுட்டிக் காட்டு வதோடமையாது, அவைகளை நீக்குதற்குரிய உபாயங்களையும், கூறாமற் கூறும் சிறப்பும் போற்றத் தக்கதே. இது போன்ற நூல்கள் இன்னும் பல எழுந்தால்தான், இன்னலுற்ற தமிழ்த் தாய் இன்புற்றிருக்க ஏதுவாகும்...''

-ஆர். இராஜரத்தினம் அம்மையார்.

(iv) '' மறுமலர்ச்சிக் கவிதைகள்' என் மாண்பெயர்
பெறுமொரு நூலினைப் பெட்டபி னீந்தனன்
மறுவறு சிவப்பிர காச மாக்கவி
சிறுவருங் கற்றினிச் சிறப்பி னோங்கவே!''

-புலவர். மே.வீ. வேணுகோபாலர்.

(v) "...திராவிடத்தின் மறுமலர்ச்சியை மனதில் கொண்டு, நாடு, இனம், மொழி, சமூகம் ஆகியவை எத்தகைய சீர்திருத்தத்தை வேண்டி நிற்கின்றன என்பதை, இனிய எளிய தெளிந்த தமிழ் நடையில், கவிதை வடிவில் தந்துரைக்கின்றார் ஆசிரியர் சிவப்பிரகாசம். 'தொழிலுலகு', 'பெண்ணுலகு' படித்துப் பயன்பெறத் தக்கவை. சீர்திருத்தப் பகுதியில் ஆசிரியர் கூறும் கருத்துக்கள் அப்படியே ஏற்றுக் கொள்ளத் தக்கவை...பொதுவாகத் தமிழ், தமிழர் நலம் நாடுவோர், சிறப்பாகச் சீர்திருத்த விரும்பிகள் ஒவ்வொருவருடைய கையிலுமிருக்க வேண்டிய அரியதொரு நூல். அதுதான் 'மறுமலர்ச்சிக் கவிதைகள்...'' -விடுதலை

((i) புதுவைச்சிவம் 1996: 64)

((ii), (iii), (iv) மூன்றும் - மறுமலர்ச்சிக் கவிதைகள் 1946:முன்னுரை, முகவுரை, அணிந்துரை)

((v) ஆரிய மாயை 1947: 114)

**ஊ) 'காதலும் கற்பும்' நூல் பற்றிய மதிப்பீடு**

(i) "....காதலும்- கற்பும் என்ற இவை, கதைகளே இலக்கியம் என எண்ணும் இந்நாள் எழுத்தாளர் உலகிலேயே பெரிதுங்காணப்படுவனவாகும். இவை தமிழன் வாழ்வில் அமைய வேண்டும் என விரும்புகிறார் தோழர் புதுவைச்சிவம் அவர்கள்.... காதலே அறநெறியென்றும் அந்நெறியைக் கடைப்பிடித்தொழுகுதலே தமிழன் வாழ்விற்கு உறுதியென்றும் விளக்குகின்றார் தோழர் கவிஞர் அவர்கள். ...இலக்கிய அமைப்பு முறையிலே இவ்வமைப்பே தமிழுக்குப் புதிதெனலாம். முதனூல் வழி நூல் சார்புநூல் என்று இலக்கணம் கற்பினும், தமிழிலக்கிய வரிசையில் புராணங்கள் ஒழிய வேறு எத்துறையிலும் இலக்கணம் இலக்கியமாகவின்று எனல் தெளிவு. இலக்கியப் புலவர்களுக்கு-தமிழ் இலக்கிய வளர்ச்சியில் நாட்டமுடைய அறிஞர்களுக்கு-இச்சிறு நூலை ஒரு வழிகாட்டி யென்றே கூறலாம்...நண்பர் புதுவைச்சிவம் அவர்கள், புரட்சிக் கவிஞர் அவர்களின் சிறந்த மாணவர் என்பதைத் தமிழுலகு அறிந்ததேயாகும். அவர்களின் தமிழறிவு - சங்கநூற் பயிற்சி - எத்துணை அழுத்தமானது என்பதனை, இச்சிறுநூல் தெள்ளிதின்

வெளிப்படுத்துகின்றது... தமிழ் உலகம் இத்தகைய கவிஞர்களையே பெரிதும் விரும்புகின்றது. விரும்ப வேண்டும் என்பது உறுதி.'' -நா. மு. மாணிக்கம்.

*(ii)* ''...இதன் முதல் பாட்டினைப் படிப்பவரெவரும் முடிவுப் பாடல் வரை படியாது புத்தகத்தைக் கீழே வைத்தல் இயலாது. ''அன்புடைக்காதல் வாழ்வே அறநெறி; அதனைக் கொள்ளத் தன்மனக் கினியரோடு சார்வதே உண்மைக் கற்பு. தமிழர்தம் பண்டை வாழ்வுக்கு, நாகரிகத்திற்கு அடிப்படையான செவ்விய கோட்பாட்டைத் திறம்பட விளக்கியுள்ளார், ஆசிரியர்...''

*((i) காதலும் கற்பும் 1946: சிறப்புரை)*

*((ii) மறுமலர்ச்சிக் கவிதைகள் 1946: பின் அட்டை)*

## எ) 'திராவிடப்பண்' நூல் பற்றிய மதிப்பீடு

*(i)* ''...திராவிட நாடு, திராவிடர் கொடி, திராவிடர் கழகத்தில் சேர்வீர் என்பன போன்ற பல தலைப்புகளிட்டு உணர்ச்சியூட்டும் வகையில் பாக்கள் பாடப் பட்டுள்ளன. இக்கால இசையை யொட்டிப் பாடப்பட்டுள்ளதால், இன்றைய இசைப் புலவர்களுக்குத் 'திராவிடப்பண்' ஓர் சிறந்த விருந்தென்னலாம்.''
- குடிஅரசு

*((ii) மறுமலர்ச்சிக் கவிதைகள் 1946: பின் அட்டை)*

*2.* இந்தக் கதைச்சுருக்கம் சமூக சேவை நாடகப் பாடல்கள் என்ற நூலில் இருந்து எடுக்கப்பட்டது. நாடகப் பிரதி கிடைக்காத நிலையில் இக்கதைச் சுருக்கமே நாடக வடிவமாகக் கொள்ளப்பட்டுப் புதுவை அரசு வெளியிட்டுள்ள புதுவைச்சிவம் நாடகங்கள் நூலில் பதிப்பிக்கப்பட்டுள்ளது (புதுவைச்சிவம் 2000: 231-232).

## துணை நூல்கள்


**முதன்மைச் சான்றுகள்**

அண்ணாத்துரை. சி.என், 1947, ஆரியமாயை, புதுச்சேரி, ஞாயிறு நூற்பதிப்பகம்.

---------------, 1947, மேதினமும் திராவிடர் கழகமும், புதுச்சேரி, ஞாயிறு நூற்பதிப்பகம்.

---------------, 1948, 1958-1948, புதுச்சேரி, ஞாயிறு நூற்பதிப்பகம்.

---------------, பாரதிதாசன், 1948, மகாகவி பாரதியார், புதுச்சேரி, ஞாயிறு நூற்பதிப்பகம்.

அண்ணாத்துரை. சி.என், மற்றும் மூவர், 1950, தீ பரவட்டும், புதுச்சேரி, ஞாயிறு நூற்பதிப்பகம்.

சிவப்பிரகாசம்.எஸ், 1932, புதுவை நெசவுத்தொழில் ஏழையர் எழுச்சிப்பாட்டு, புதுச்சேரி, கலாநிதிபிரஸ்.

---------------, 1936, ரஞ்சித சுந்தரா (அ) ரகசியச் சுரங்கம் என்னும் சமூகச் சீர்திருத்த நாடகப் பாட்டுகள், புதுச்சேரி, சந்தானம் பிரின்டிங் ஒர்க்ஸ்.

---------------, (ஆண்டு இல்லை), ஹிந்தி எதிர்ப்புப் பாடல்கள், ஈரோடு, உண்மை விளக்கம் பிரஸ்.

---------------, 1941, சமூக சேவை (நாடகப் பாட்டுகள்), புதுச்சேரி, ஸ்ரீ சாரதா பிரஸ்.

---------------, 1944, பெரியார் பெருந்தொண்டு, புதுச்சேரி, பூங்கொடிப் பதிப்பகம்.

---------------, 1945, கைம்மை வெறுத்த காரிகை, புதுச்சேரி, பூங்கொடிப் பதிப்பகம்.

சிவப்பிரகாசம். ச, 1945, மறக்குடி மகளிர், புதுச்சேரி, தொழிலாளர் மித்திரன்.

---------------, 1946, மறுமலர்ச்சிக் கவிதைகள், புதுச்சேரி, ஞாயிறு நூற்பதிப்பகம்.

---------------, 1947, கோகிலராணி, புதுச்சேரி, ஞாயிறு நூற்பதிப்பகம்.

---------------, *1951*, சிதைந்த வாழ்வு, புதுச்சேரி, ஞாயிறு நூற்பதிப்பகம்.

---------------, (தொகு.), *1949*, பெரியார் இராமசாமி, புதுச்சேரி, ஞாயிறு நூற்பதிப்பகம்.

நெடுஞ்செழியன். இரா, *1948*, புதிய பாதை, புதுச்சேரி, ஞாயிறு நூற்பதிப்பகம்.

பாரதிதாசன், *1948*, முல்லைக் காடு, புதுச்சேரி, ஞாயிறு நூற்பதிப்பகம்.

------------, *1955*, பாரதிதாசன் கதைகள், புதுச்சேரி, ஞாயிறு நூற்பதிப்பகம்.

புதுவைச்சிவம், *1945*, தமிழர் தன்மதிப்புப்பாடல்கள் (முதல் பதிப்பு), புதுச்சேரி, ஞாயிறு நூற்பதிப்பகம்.

------------, *1945*, தமிழர் தன்மதிப்புப்பாடல்கள்(இரண்டாம் பதிப்பு), புதுச்சேரி, ஞாயிறு நூற்பதிப்பகம்.

------------, *1946*, காதலும் கற்பும், புதுச்சேரி, ஞாயிறு நூற்பதிப்பகம்.

------------, *1946*, திராவிடப் பண், புதுச்சேரி, ஞாயிறு நூற்பதிப்பகம்.

------------, *1948*, இந்தி மறுப்புப் பாடல்கள், புதுச்சேரி, ஞாயிறு நூற்பதிப்பகம்.

------------, *1950*, தமிழிசைப் பாடல், புதுச்சேரி, ஞாயிறு நூற்பதிப்பகம்.

------------, *1951*, தன்மதிப்புப் பாடல், புதுச்சேரி, ஞாயிறு நூற்பதிப்பகம்.

------------, *1993*, புதுவைச்சிவம் கவிதைகள், சென்னை, முல்லைப் பதிப்பகம்.

------------, *1997*, புதுவைச்சிவம் கவிதைகள், புதுச்சேரி, புதுச்சேரி அரசு கலை பண்பாட்டுத்துறை.

------------, *2000*, புதுவைச்சிவம் நாடகங்கள், புதுச்சேரி, புதுச்சேரி அரசு கலைபண்பாட்டுத்துறை.

பெரியார், *1948*, விழாவும் நாமும், புதுச்சேரி, ஞாயிறு நூற்பதிப்பகம்.

## கையெழுத்துப் பிரதிகள்

### கவிதைகள்

கவிதைகள் எழுதப்பட்ட நோட்டுப் புத்தகம், 1935 - 1938.

பகுத்தறிவுப் பாடல்கள் (நோட்டுப் புத்தகம்), 1938 -1943.

### நாடகங்கள்

வீரத்தாய் (நோட்டுப் புத்தகம்), ஆண்டு குறிப்பிடப்படவில்லை.

தமிழச்சியின் தேச பக்தி (நோட்டுப் புத்தகம்), ஆண்டு குறிப்பிடப்படவில்லை.

கோவலன் - கண்ணகி (தாள் மடல் கட்டை), ஆண்டு குறிப்பிடப்படவில்லை.

ரஞ்சித சுந்தரா (அ) ரகசியச் சுரங்கம் (நோட்டுப்புத்தகம்), 1935.

அமுத வல்லி (அ) அடிமையின் வீழ்ச்சி (நோட்டுப்புத்தகம்), 1937.

தமிழர் வீழ்ச்சி (அ) இராமாயண சாரம் (தனித் தாள்களின் தொகுப்பு), ஆண்டு குறிப்பிடப்படவில்லை.

காந்திமதி (அ) கல்வியின் மேன்மை (தனித் தாள்களின் தொகுப்பு), ஆண்டு குறிப்பிடப்படவில்லை.

வீரநந்தன் (தனித் தாள்களின் தொகுப்பு), ஆண்டு குறிப்பிடப்படவில்லை.

மூன்று பெண்கள் (தனித் தாள்களின் தொகுப்பு), ஆண்டு குறிப்பிடப்படவில்லை.

### மொழியாக்கம்

தமிழ்-பிரெஞ்சு பாட நோட்டுப்புத்தகம், ஆண்டு குறிப்பிடப் படவில்லை.

காதல் முன் கட்டுப்பாடு (குறுங்காவியம்), (தனித் தாள்களின் தொகுப்பு), ஆண்டு குறிப்பிடப்படவில்லை.

### இதழ்கள்

அறிவுக்கொடி, 1936, சென்னை.

ஈழகேசரி, 1935, இலங்கை.

*கழகக் குரல், 1972, சென்னை.*

*காஞ்சி, 1962, காஞ்சிபுரம்.*

*குடிஅரசு, 1925, ஈரோடு, சென்னை.*

*ஞாயிறு, 1947, புதுச்சேரி.*

*சமநீதி, 1971, சென்னை.*

*சுடரொளி, 1947, புதுச்சேரி.*

*தமிழரசு, 1938, சென்னை.*

*திராவிட நாடு, 1942, காஞ்சிபுரம்.*

*திராவிடன், 1950, சென்னை.*

*தென்றல், 1950, சென்னை.*

*தொழிலாளர் மித்திரன், 1945, புதுச்சேரி.*

*நகர தூதன், 1934, திருச்சி.*

*நம்நாடு, 1951, சென்னை.*

*பகுத்தறிவு, 1936, ஈரோடு.*

*புதுவை முரசு, 1930-1932, புதுச்சேரி.*

*பொன்னி, 1947, சென்னை.*

*போர்வாள், 1948, காஞ்சிபுரம்.*

*போர்வாள், 1970, புதுச்சேரி .*

*மன்றம், 1945, சென்னை.*

*முரசொலி, 1950, சென்னை.*

*விடுதலை, 1938, சென்னை.*

*ஸ்ரீ சுப்ரமணியபாரதி கவிதா மண்டலம், 1935, புதுச்சேரி.*

**நேர்காணல்கள்**

*சி. ஜெகதாம்பாள் (கவிஞர் புதுவைச்சிவம் துணைவியார்), 31.08.2000.*

*செ. முத்து (புதுவைத் தி.மு.க.வின் தொழிற்சங்கத் தலைவராகப் பதவி வகித்தவர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்), முதலியார் பேட்டை, 31.08.2000.*

*தணிகாசலம், திலசைநகர், 31.08.2000.*

## சொற்பொழிவுகள்

சித்தன் (எ) இராதாகிருட்டிணன் (புதுவை நகர மன்றத்தில் புதுவை அரசு நடத்திய கவிஞர் புதுவைச்சிவம் பிறந்தநாள் விழா சிறப்புரை *23.10.1999*).

முனைவர் இரா. திருமுருகன் (பாரதிதாசன் அருங்காட்சியகச் சொற்பொழிவு *29.10.2003*).

முனைவர் ப. மருதநாயகம் (புதுவைத் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற புதுவைச்சிவம் அறக்கட்டளைச் சொற்பொழிவு நிகழ்வில் வரவேற்புரை *24.2.2004*).

# பின்னிணைப்புகள்

## கவிஞர் புதுவைச்சிவம் வாழ்க்கை வரலாறு

### பிறப்பும் பாரம்பரியமும்

கவிஞர் புதுவைச் சிவம் என்று பின்னாள்களில் அறியப்பட்டவரான ச.சிவப்பிரகாசம், 1908 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 23-ஆம் தேதி, புதுச்சேரியின் கொம்யூன்களில் ஒன்றான முத்தியால் பேட்டையில் பிறந்தார். சண்முக வேலாயுதம் - விசாலாட்சியம்மையாருக்குப் பிறந்த இரண்டு மகன்களில் முதலாமவர். இவரது இளவல் ச. நடனசபாபதி.

### பள்ளிப் பருவம்

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்த வழக்கப்படி திண்ணைப் பள்ளியில்தான் தம் கல்வியைத் தொடங்கினார் சிவப்பிரகாசம். பின்னர் முத்தியால்பேட்டையில் இருந்த அரசு பள்ளியில் அவரது கல்வி தொடர்ந்தது. பிரெஞ்சிந்திய அரசின் பாடத்திட்டத்தின்படி பிரெஞ்சும் தமிழும் அரசு பள்ளியில் கற்றுத் தரப்பட்டன. பத்தாம் வகுப்பு வரை அப்பள்ளியில் படித்துத் தேர்ச்சி பெற்றார் சிவப்பிரகாசம். தமிழில் யாப்புப் பயில வேண்டும் என்று அவருக்கு இருந்த ஆர்வத்தைப் பள்ளிப் படிப்பு நிறைவு செய்யவில்லை.

### தொழில்

பாரம்பரியமாக விவசாயத் தொழிலை மேற்கொண்டிருந்த குடும்பத்தைச் சேர்ந்தவர் சிவப்பிரகாசம். புதுச்சேரியைச் சேர்ந்த சஞ்சீவராயன்பேட்டையில் இவர்களுக்குச் சொந்தமான வேளாண் நிலங்கள் இருந்தன. சிவப்பிரகாசத்தின் தாத்தாவான தள்வா வீராசாமி நாயகர் காலம் வரையில் செழித்திருந்த வேளாண்மை, சிவம் தந்தையாரான சண்முக வேலாயுத நாயகரின் காலத்திற்குப் பின்பு

நசித்துப் போயிற்று. 1928–ஆம் ஆண்டில் தந்தையார் மறைவுக்குப் பிறகு, சிவப்பிரகாசம் மேற்கொண்டு வேளாண் தொழிலைக் கவனிக்க இயலாமல், முத்தியால்பேட்டையில் பிரபலமாயிருந்த தறி வேலையைக் கற்றுக் கொண்டு சம்பாதிக்க ஆரம்பித்தார். இதில் கிடைத்த வருவாய் தாயாரும், தம்பியும் கொண்ட குடும்பத்திற்குச் சரியாக இருந்தது. தம் இளமைக் காலங்களில் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருந்து, பின்னரே தறி வேலை கற்று, தாம் சம்பாதிக்க நேர்ந்ததாகச் சிவப்பிரகாசம் குறிப்பிட்டிருக்கிறார். தறித் தொழிலாளர் துயரம் குறித்துப் பின்னாள்களில் கவிதை வடித்ததற்கு இந்த அனுபவம்தான் அவருக்குக் கை கொடுத்தது.

**சீர்திருத்த எண்ணங்கள் உதயம்**

சிவப்பிரகாசத்தின் பெற்றோர்களும் முன்னோர்களும் பக்தியையும், ஆசாரத்தையும் போற்றியவர்களாக இருந்திருக்கின்றனர். தலைமுடி திருத்திச் சிகையலங்காரம் செய்து கொள்வது ஆசாரக் கேடாகக் கருதப்பட்ட காலமாக அது இருந்தது. உச்சந்தலையில் வட்டமாக நீளமாக முடிவைத்துச் சுற்றிலும் சிரைத்துக் கொண்டு நெற்றியில் பட்டையாக விபூதியும், அரையில் துண்டும் அணிந்து செல்வதுதான் அன்றைய வழக்கமாக இருந்திருக்கிறது. அப்படித்தான் தாமும் பள்ளிக்கூடம் சென்றதாகச் சிவப்பிரகாசமும் குறிப்பிடுகிறார். அந்தச் சூழ்நிலையில் முடிவெட்டிக் கொண்டு வந்ததற்காக ஆசாரத்தை மீறினார் என்று குற்றம் சாட்டப்பட்டு வீட்டை விட்டு வெளியில் அனுப்பப்பட்டார் சிவப்பிரகாசம். மகாகவி சுப்பிரமணிய பாரதியார் மீசையும், தாடியும் வைத்துக் கொண்டதை ஆசாரத்தை மீறியதாகக் கருதி ஊர் விலக்கமும் செய்யப்பட்டதாக அவரது வரலாற்றில் குறிப்பிடப்படுகிறது. சிறு அளவில் நடைமுறையில் மாற்றம் ஏற்படுத்திக் கொள்வதைக் கூட ஆசார மீறலாகச் சமூகம் நினைக்க, அதைச் சீர்திருத்தமாக இளைஞர் சமுதாயம் ஏற்றுக் கொள்வதை இந்நிகழ்வுகள் காட்டுகின்றன.

மரபை மீறி முடி அலங்காரம் செய்து கொண்டதற்காக வீட்டை விட்டு வெளியில் அனுப்பப்பட்ட சிவப்பிரகாசம், சிறிது நாள்களில் மீண்டும் வீட்டினுள் அனுமதிக்கப்பட்டார். இந்தத் தைரியத்தினால் தமது நண்பர்களோடு மூட நம்பிக்கைகளை

எதிர்த்துப் பேசி, அதனால் கடவுள் மறுப்புக் கொள்கையுடையவர் என்று நண்பர்களால் விமர்சிக்கப்பட்டார். இந்நிலை பல புதிய அறிமுகங்களையும் அவருக்கு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. அவருடைய நண்பர்களில் ஒருவரான சின்னாத்தா முதலியார் என்பவர் அவரிடம் ஒருமுறை குடி அரசு இதழைப் படித்துப் பார் எனக் கொடுக்க அதில் சொல்லப்பட்ட சீர்திருத்தக் கருத்துக்களில் முழுமையாக ஒன்றிப்போனார் சிவப்பிரகாசம்.

குடியரசு இதழ் படிப்பதை ஏற்றுக் கொள்ளாத அந்நாளைய சமுதாயத்தில், அவ்விதழை வரவழைக்கும் நண்பர் அதனைத் தம் வீட்டில் வைத்திருக்க முடியாமல் தொடர்ந்து சிவப்பிரகாசத்திடம் கொடுத்து விடுவார். அதனைப் படித்துவிட்டு அதிலிருக்கும் கருத்துக்களைப் பரப்ப முனைந்தபோது நாத்திகன் என்ற அடைமொழியைத் தாங்கலானார் சிவப்பிரகாசம்.

**பெரியாருடன் முதல் தொடர்பு**

இயல்பான கட்டுடைக்கும் எண்ணங்களுடன், குடி அரசு இதழ் கொடுத்த தெளிவும் சேர்ந்து சுயமரியாதை (தன்மான) உணர்வுகளின் தாக்கத்தில் சிவப்பிரகாசம் நிறைந்திருந்த நேரத்தில் பெரியார் ஈ.வெ.ரா. முத்தியால்பேட்டையில் கலந்து கொள்ளும் நிகழ்ச்சி பற்றி அறிய நேர்ந்தது. 1926 ஆம் ஆண்டில் முத்தியால்பேட்டையைச் சேர்ந்த ராஜகோபால் செட்டியார் என்பவரின் புதுமனை புகு விழாவிற்குத் திராவிடன் இதழ் ஆசிரியர் ஜனக சங்கர கண்ணப்பர், சிதம்பரம் தண்டபாணிப் பிள்ளை ஆகியோரும் கலந்து கொண்டனர். அந்நாள்களில் சடங்குகள் இல்லாத இந்நிகழ்வு புரட்சிகரமானது என்று பேசப்பட்டதாகவும், அன்றைய நிகழ்வில் பெரியார் ஈ.வெ.ரா. மூடநம்பிக்கையை ஒழிப்பதின் அவசியத்தை வலியுறுத்திப் பேசிய பேச்சால் தம்மைப் போன்ற பல இளைஞர்களும் கவரப்பட்டதாகவும் சிவப்பிரகாசம் குறிப்பிடுகிறார். இவ்வளவு நாள்கள் குடிஅரசு இதழில் மட்டும் படித்திருந்த சீர்திருத்தக் கருத்துக்களைப் பெரியார் ஈ.வெ.ரா.வின் நேரடிச் சொற்பொழிவின் மூலம் கேட்டுத் தெரிந்து பல இளைஞர்களும் பெரியாரின் இயக்கத்தில் ஈடுபட ஆரம்பித்தனர். அன்றைய தினம் பெரியார் ஈ.வெ.ராவுடன் ஏற்பட்ட அறிமுகமும், அவருடைய நேரடி அழைப்பும் சுயமரியாதை இயக்கத்தின்

நடவடிக்கைகளில் பங்கெடுக்கவும், அதனைச் செயல்படுத்தவும் சிவப்பிரகாசத்தைத் தூண்டின.

## பாரதிதாசனுடன் முதல் தொடர்பு

பெரியார் ஈ.வெ.ரா. முத்தியால்பேட்டையில் வந்து சொற்பொழிவு ஆற்றிய மூன்று மாதங்கள் கழித்து அப்பகுதியில் ஆத்திக மாநாடு ஒன்று ஏற்பாடானது. அதில் நவசக்தி இதழின் ஆசிரியர் திரு.வி.கலியாணசுந்தர முதலியாரும், லோகோபகாரி இதழ் ஆசிரியர் வேதாந்தி கோ. வடிவேல் செட்டியாரும் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினார்கள். முன்னர், பெரியார் ஈ.வெ.ரா. பேசிய கருத்துக்களை மறுத்துப் பேசும் வகையிலேயே அவ்விருவரது பேச்சுக்களும் அமைந்திருந்தன. இதனைச் செவிமெடுத்த சிவப்பிரகாசமும், சுயமரியாதைக் கொள்கையுடைய அவரது நண்பர்களும், துண்டுச் சீட்டு எழுதி மேடைக்கு அனுப்பிக் கேள்விக் கணைகளைத் தொடுத்தனர். இவ்வேளையில் வேறு ஒருவர் மேடையில் பேசும் கருத்துக்களை மறுத்துப் பேச அனுமதி கேட்டார் என்றும், அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டது என்றும் கேள்விப்பட்ட சிவப்பிரகாசமும் அவரது நண்பர்களும் அப்படி அனுமதி கேட்ட நபரைக் கண்டு பேசினர். அவர்தான் பாரதிதாசன் என்று பின்னாள்களில் அறியப்பட்ட கனகசுப்புரத்தினம். அப்போது அவர் முத்தியால்பேட்டையில் இருந்த அரசு பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். ஒத்த கருத்துள்ளவர்களாக இருந்ததால் அன்று முதல் பாரதிதாசனும், சிவப்பிரகாசமும் தோழர்கள் ஆயினர்.

## பாரதிதாசனிடம் யாப்புப் பயிலல்

பாரதிதாசனுடன் சிவப்பிரகாசத்திற்கு ஏற்பட்ட தொடர்பும் தோழமையும் நாளுக்கு நாள் விரிவடைய ஆரம்பித்தன. பாரதிதாசனுடன் ஏற்பட்ட தோழமையினால், அவர் ஒரு கவிஞர் என்று அறிந்து கொண்ட சிவப்பிரகாசம் தமக்கு யாப்புப் பயிலும் ஆர்வம் இருப்பதை அவரிடம் தெரிவித்து, தமக்கு அவரே யாப்புப் பயிற்றுவிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். இதனை வரவேற்ற பாரதிதாசனும் தமக்கு நேரமிருக்கும் மாலை வேளைகளில் சிவப்பிரகாசத்திற்கு யாப்புப் பயிற்றுவித்து வந்தார். முதலில் *நன்னூலில்* ஆரம்பித்துப் பின்னர்த் தமிழ் இலக்கணமும், யாப்பும்

கற்பித்தார். யாப்புப் பயிற்றுவிக்கும் அதே வேளையில் அங்கு வரும் மற்றவர்களுடன் சூடான விவாதங்களும் நடப்பதுண்டு. சுயமரியாதை இயக்கக் கருத்துகளை ஆதரித்துப் பாரதிதாசனும், சிவப்பிரகாசமும் பேசி வந்தனர். இது அவர்களின் இயக்கத்திற்கு மேலும் பல இளைஞர்களைச் சேர்த்தது. ம. நோயல், அ. லகாஷ், தேங்காய்த்திட்டு க. இராமகிருஷ்ணன் போன்றவர்கள் அப்போது சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபாடு கொண்டிருந்தனர்.

**சுயமரியாதைக் கும்பாபிஷேகம்**

புதுச்சேரி, முத்தியால்பேட்டையைச் சேர்ந்த பல அன்பர்கள் சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபாடு கொண்டிருந்தனர். சிவப்பிரகாசம் போன்ற இளைஞர்கள் பலர் இயக்கத்தில் இணைந்து செயல்பட்டுக் கொண்டிருந்தனர். குடிஅரசு இதழ் படித்ததனாலும், சுயமரியாதை இயக்கத் தலைவர்களை அழைத்து நிகழ்ச்சிகளை நடத்தியதாலும் சுயமரியாதை இயக்கத்தின் பால் பற்றுக் கொண்ட பலரும் தங்களுக்குள் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டனர்.

இவர்கள் அனைவரும் ஒன்று கூடும் இடமாக ஆரம்பத்தில் புதுவை ஜெகந்நாதம் பிரஸ் என்ற அச்சுக்கூடம் இருந்து வந்தது. மாலை வேளைகளில் தினமும் பாரதிதாசன் தலைமையில் கூடிப் பேசுவதை இவர்கள் வழக்கமாகக் கொண்டிருந்தனர். இக்கூட்டங்கள் பின்னர்ப் பொடிக்கடை நாராயணசாமி நாயுடு என்பவரின் கடையிலும் நடந்தன. புதுச்சேரி உப்பளம் பகுதியையும் இவர்கள் தாங்கள் சந்திக்கும் இடமாகக் கொண்டனர். தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்விடமாக இருந்த உப்பளம், சுயமரியாதை இயக்கத்தில் தீவிரப் பற்றுடைய இளைஞர்களைக் கொண்டிருந்தது. அவர்கள் உடற்பயிற்சி மற்றும், விளையாட்டுக் கழகங்கள் நடத்தி வந்தனர். சாதி வேறுபாடுகள் அதிகமாக நிலவிய அன்றைய சமுதாயத்தில் பாரதிதாசனும், புதுவைச்சிவமும் சாதி வேறுபாடுகளைக் களையப் பேச்சளவில் மட்டுமின்றிச் செயல்பாட்டிலும் வேகம் கொண்டிருந்தனர்.

இவர்களின் சாதி எதிர்ப்பு, மூட நம்பிக்கை ஒழிப்புப் பிரச்சாரம் ஒரு பக்கம் வளர்ந்து கொண்டிருந்தாலும், கடுமையான எதிர்ப்புகளையும் அவர்கள் சமாளிக்க வேண்டியதாயிற்று. இந்த எதிர்ப்புகளினூடே தங்கள் செயல்பாடுகளில் சில சாதனைகளையும்

இவர்கள் நிகழ்த்தினர். அதில் குறிப்பிடத்தக்க ஒன்றாக முத்தியால்பேட்டையில் 1929-ஆம் ஆண்டில் ஒரு சுயமரியாதைக் குடமுழுக்கு நிகழ்ச்சி அமைந்துள்ளது. இந்த நிகழ்ச்சி பற்றிக் குறிப்பிட்டிருக்கும் சிவப்பிரகாசம், முத்தியால்பேட்டை வெள்ளவாரியில் நடைபெற்ற தீமிதி விழாவில் சாமியாடிக் கொண்டிருந்த சிலரைத் தாம் கேலியும், கிண்டலும் செய்ததாகவும், அதனால் ஊர்ப் பிரமுகர்கள் சிலர் சிவப்பிரகாசத்திடம் விசாரணை மேற்கொள்ள, மூடநம்பிக்கைகளைக் களைய வேண்டும் என்பதற்காகத் தாம் இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபடுவதாகக் சொன்னதை அவர்கள் ஏற்றுக் கொண்டதாகவும், இதற்குப் பிறகு ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு கோயில் குடமுழுக்கு நிகழ்வில் மூடநம்பிக்கைகள் இல்லாமலும், புரோகிதச் சடங்குகள் இல்லாமலும் தமிழிலேயே வழிபாடும், குடமுழுக்கும் நடத்தப்பட்டன என்றும், அந்நிகழ்ச்சிக்குச் சுயமரியாதை கும்பாபிஷேகப் பிரகடனம் என்று பெயரிடப்பட்டு அவ்வாறே துண்டறிக்கைகளும் அச்சிடப் பட்டதாகவும் தெரிவித்திருக்கிறார். இதுபோன்ற சீர்திருத்தங்கள் செய்வதற்கு முத்தியால்பேட்டையில் பலரும் சுயமரியாதை இயக்க அன்பர்களாக இருந்ததே காரணம் என்றும் சிவப்பிரகாசம் நினைவு கூர்ந்திருக்கிறார்.

**புதுவை முரசு**

ஐரோப்பியர்கள் வருகையின் காரணமாக நம் நாட்டில் பல்வேறு அறிவியல் கண்டுபிடிப்புகள் அறிமுகமாயின. அதில் அச்சு இயந்திரம் மிகப்பெரிய மாறுதலுக்கும், சமூக மறுமலர்ச்சிக்கும் வழிவகுத்தது. இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்திலிருந்து பத்திரிக்கைகளின் எண்ணிக்கைகள் பல்கிப் பெருகின. ஒவ்வோர் இயக்கமும் தங்கள் கருத்துப் பரவலுக்காகத் தனித்தனி இதழ்களை நடத்த ஆரம்பித்தன. தன்னாட்சி (Home Rule) இயக்கத்திற்காக டாக்டர் அன்னிபெசன்ட் அம்மையார் நியூ இந்தியா என்னும் இதழைத் தொடங்கினார். தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தின் சார்பில் திராவிடன், ஜஸ்டிஸ், ஆந்திரப் பிரகாசிகா ஆகிய இதழ்கள் வெளிவந்தன. இதழின் பெயராலேயே அவ்வியக்கம் நீதிக்கட்சி (Justice Party) என அறியப்பெற்றது.

காங்கிரஸ் கட்சியின் சென்னை மாகாணத் தலைவராக இருந்த பெரியார் ஈ.வெ.ரா. தம்முடைய வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவக் கோரிக்கை காங்கிரஸ் மாநாடுகளில் ஏற்கப்படாததால் தமது தரப்பின் நியாயத்தை வெளியுலகம் அறிய வைக்க 1925ஆம் ஆண்டில் குடிஅரசு எனும் இதழை ஆரம்பித்தார். இவ்விதழே சுயமரியாதை இயக்கம் என்றும், இவ்விதழின் தொடக்க நாளான 02.05.1925 அன்றே சுயமரியாதை இயக்கம் தொடங்கப்பட்ட நாளாகக் கொள்ளலாம் என்றும் கருத்து நிலவுகிறது. சுயமரியாதை இயக்கம் முறையான ஓர் அமைப்பாக இல்லாத ஆரம்ப நிலையில், குடிஅரசு இதழையே இயக்கத்தின் நடவடிக்கையாகக் கொள்ள வேண்டிய நிலை, இயக்கச் செயல்பாடுகளுக்கு இதழ் எவ்வளவு அவசியம் என்பதை உணர்த்துகிறது.

புதுவையில் செயல்பட்டு வந்த சுயமரியாதைக் குழுவின் முக்கியப் பொறுப்பாளர்களாகப் பாரதிதாசன், சிவப்பிரகாசம், நோயல், அல்போன்ஸ் லகாஷ் ஆகியோர் இருந்தனர். இந்த நால்வரின் கூட்டு முயற்சியே புதுவை முரசு என்னும் வார இதழ் சுமார் இரண்டாண்டுகள் வெளிவரக் காரணமாக அமைந்தது. புதுவை முரசு கூட்டுக் கம்பெனி என்று அவ்விதழைப் பற்றிய செய்திகள், குடிஅரசு இதழில் வெளியிடப்பட்டிருக்கின்றன. இவ்விதழுக்குப் பதிப்பாசிரியராக நோயலும், நிர்வாகியாகச் சிவப்பிரகாசமும் பணியாற்ற, அல்போன்ஸ் லகாஷின் கலாநிதி அச்சுக்கூடத்தில் புதுவை முரசு அச்சிடப்பட்டது. பாரதிதாசன் கதை, கவிதை, கட்டுரை, தலையங்கம் எனப் பெரும் பகுதியை எழுதிவந்தார். தொடக்கத்தில் தேங்காய்த்திட்டு க. இராமகிருஷ்ணன் ஆசிரியராகவும், தொடர்ந்து குத்தூசி குருசாமியும், பின்னர்ப் பூவாளூர் அ. பொன்னம்பலமும் ஆசிரியர்களாகப் பணியாற்றினர். 1930 நவம்பர் 10-ஆம் தேதி முதல் புதுவை முரசு வார இதழாக வெளிவரத் துவங்கியது. 1931 ஆம் ஆண்டில் அதன் பொறுப்பாசிரியர் நோயல் மீது பிரெஞ்சிந்தியப் பாதிரிமார்களால் தொடரப்பட்ட வழக்கினால் செப்டம்பர் 1931 இல் சிவப்பிரகாசம் இதழின் பதிப்பாசிரியராக ஆனார். சிவப்பிரகாசமும் புதுவை முரசில் பல கட்டுரைகள் எழுதி வந்தார். 1932 ஆம் ஆண்டில் புதுவை முரசில் வெளிவந்த கட்டுரைகளுக்காகப் பட்டுக்கோட்டையைச் சேர்ந்த ஜார்ஜ் பெர்னான்டஸ் என்ற

கிறித்துவப் பாதிரியாரும், புதுவைக் கத்தோலிக்க மிஷனைச் சேர்ந்த 18 குருமார்களும் சிவப்பிரகாசம் மீது வழக்குத் தொடர்ந்தனர். இந்த வழக்கில் மொத்தமாக ரூ. 600 மற்றும் 500 பிராங்க் அபராதமும், மூன்று மாதக் காவல் தண்டனையும் சிவப்பிரகாசத்துக்கு விதிக்கப்பட்டன.

இதனாலும், வேறு யாரும் பதிப்பாசிரியராகப் பொறுப்பேற்றுக் கொள்ளாததாலும், பொருளாதாரச் சிக்கலாலும் புதுவை முரசு இதழ் தொடர்ந்து வெளிவராமல் 1932ஆம் ஆண்டு முற்பாதியுடன் நின்று போனது. 10.11.1930-இல் தனது முழக்கத்தைத் தொடங்கிய புதுவை முரசு 02.05.1932-க்கு பிறகு தனது முரசொலியை நிறுத்திக் கொண்டது. இதற்கு இரண்டு மாதங்கள் கழித்துப் புதுவை முரசு மீண்டும் வெளிவரும் என்று சிவப்பிரகாசம் குடிஅரசு இதழில் அறிவித்திருந்தும் புதுவை முரசு இதழ் பின்னர் வெளியாகவில்லை. முழுமையாக இரண்டாண்டுகள் முடிவதற்குள்ளேயே புதுவை முரசு முடங்கிப் போனாலும் இயக்க அளவில் அதை ஒரு வெற்றியடைந்த முயற்சி என்றும், சுயமரியாதை இயக்க வரலாற்றில் ஒரு மைல்கல் என்றும் கூறலாம். பிரெஞ்சிந்தியாவில் இருந்து வெளியிடப்பட்ட புதுவை முரசு பிரிட்டிஷ் இந்தியாவிலும், கடல் கடந்து மற்ற பிரஞ்சு காலனி ஆதிக்க நாடுகளிலும் தனது விற்பனை எல்லையைக் கொண்டிருந்தது. சுயமரியாதை இயக்கத்தின் அதிகாரப் பூர்வ ஏடாக வெளிவந்து கொண்டிருந்த குடி அரசுக்கு இணையாகவும், அதையும் விஞ்சும் வண்ணம் மற்ற வெளிநாடுகளிலும் புதுவை முரசு எதிர்பார்க்கப்பட்டதும் அதன் வெற்றிக்கு மற்றொரு சான்று.

**கூட்டங்கள், மாநாடுகள்**

புதுச்சேரியின் சுயமரியாதை இயக்கச் செயல்பாடுகளில் புதுவை முரசு இதழ் பெரும் பங்கு வகித்தது. இது தவிரக் கூட்டங்களையும், மாநாடுகளையும் நடத்திச் சீர்திருத்தக் கருத்துக்களை இவ்வியக்கத்தினர் பரப்பி வந்தனர். இதில் பாரதிதாசன், சிவப்பிரகாசம் ஆகியோரின் பங்கு பெரும் அளவில் இருந்தது. 1929-ஆம் ஆண்டு ஜனவரியில் பெரியார், ஈ.வெ.ராவைப் புதுச்சேரிக்கு அழைத்துப் பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. தவிர உள்ளூரைச் சேர்ந்தவர்களைக் கொண்டும் பல பொதுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. அப்படி பல பொதுக் கூட்டங்களில் பாரதிதாசனும், சிவப்பிரகாசமும் சுயமரியாதை இயக்கக் கொள்கைகளை விளக்கிப்

பொதுமக்களிடம் உரையாற்றினர். இக் கூட்டங்களுக்காக அச்சடிக்கப்பட்ட துண்டிறிக்கைகளில் சுயமரியாதை உபநியாசம் என்று அச்சிடப்பட்டிருக்கிறது.

1931-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் சுயமரியாதை இயக்கத்தின் மற்றோர் குறிப்பிடத்தக்க நிகழ்வாக ஒதியன்சாலைத் திடலில் நடைபெற்ற தொழிலாளர் மாநாடு அமைந்தது. புதுச்சேரியில் நடைபெற்ற முதல் தொழிலாளர் மாநாடான இதில் சென்னை மாகாண முன்னாள் தலைமை அமைச்சர் டாக்டர் பி. சுப்பராயன், சுதேசமித்திரன் ஆசிரியர் சி.ஆர். சீனிவாசன், திராவிடன் இதழ் ஆசிரியர் ஜனக சங்கர கண்ணப்பர், கே.என். ரங்கசாமி, புதுச்சேரியின் செல்வாக்கு மிகுந்த வழக்கறிஞர்கள் செல்லான் நாயகர், பெருமாள் அவுக்கா, பெரும் தனவந்தர் செல்வராசு செட்டியார் ஆகியோர் கலந்து கொண்டனர். புதுவையின் ஆலைத் தொழிலாளர்கள் சங்கம் அமைக்கும் உரிமை பெறவும், எட்டு மணிநேர வேலைச்சட்டம் பெறவும் இந்த மாநாடுதான் முதன் முதலாகக் குரல் கொடுத்தது.

## எழுதத் தொடங்கிய காலம்

சிவப்பிரகாசம் 1926-ஆம் ஆண்டில் பாரதிதாசனுடன் தோழமை பூண்டுப் பின்னர் அவரிடமே யாப்புப் பயின்று, பாரதிதாசனின் கவிதைகளைப் படி எடுத்துக் கொடுப்பதைப் பணியாகக் கொண்டிருந்தார். 1930-ஆம் ஆண்டில் ஏற்றுக் கொண்ட புதுவை முரசு இதழின் நிர்வாகப் பொறுப்பும், பின்னர் அவ்விதழுக்குப் பதிப்பாசிரியர் ஆனதும், அவரது எழுத்தார்வத்தையும் தூண்டின. அவ்விதழின் மெய்ப்புத் திருத்தும் பணியையும் அவர் மேற்கொண்டிருந்தார். இக்காலக்கட்டத்தில் தான் அவர் கட்டுரைகள் எழுத ஆரம்பித்தார். புதுவை முரசில் வெளியான அவரது கட்டுரைகள் அவரது சீர்திருத்த நோக்கத்தையும், இயக்க ஈடுபாட்டையும் வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளன.

## முதல் கவிதை வெளியீடு

சிவப்பிரகாசம் எழுதிய கவிதைகளின் முதல் தொகுப்பு, பத்துப் பக்கங்களைக் கொண்ட சிறு நூலாக 1932ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. புதுச்சேரி கலாநிதி அச்சகத்தில்

அச்சடிக்கப்பட்டு, வெளியிட்டவர் பி.கே. வேலு என்ற குறிப்புடன், புதுவை நெசவுத் தொழில் ஏழையர் எழுச்சிப்பாட்டு என்ற தலைப்பினலான ஐந்து பாடல்கள் கொண்ட இச்சிறு நூலே அச்சில் வெளியான அவரது முதல் நூல். இந்நூலில் நெசவுத் தொழிலாளர்களின் கடின உழைப்பு, வேலையில்லாமல் படும் அவதி, அரசாங்கம் தலையிடாத நிலை ஆகியவையே மையப்படுத்தப் பட்டிருக்கின்றன. தொழிலாளர் உரிமைக் கீதமாக அமைந்த இப்பாடல்கள் சமதர்மப், பொதுவுடைமைக் கோட்பாடுகளை முதன்முதலாகப் புதுச்சேரிக்கு அறிமுகம் செய்யும் வகையில் அமைந்திருந்தன.

**புதுச்சேரித் தொழிலாளர் போராட்டம்**

சிவப்பிரகாசம் வசித்து வந்த முத்தியால்பேட்டையில் நெசவுத் தொழில் செய்வோர் பெரும்பான்மையாக இருந்தனர். இவர்களது உற்பத்தித் துணிகள் பெரும்பாலும் மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதியாகிக் கொண்டிருந்தன. திடீரென ஏற்றுமதி நின்றுவிட்ட நிலையில் தறித் தொழிலாளர் குடும்பங்கள் வேலையின்றிப் பரிதவிக்க நேர்ந்தது. இந்நிலையையே கவிதையாக வடித்தார் சிவப்பிரகாசம். இத்தொழிலில் ஈடுபட்டிருந்த அனுபவம், தறித் தொழிலாளர் துயரை உணர்வுப் பூர்வமாக வெளிப்படுத்த அவருக்குத் துணை நின்றது. இவ்வெளியீட்டின் இறுதிப் பாட்டில், ஏழைத் தொழிலாளர் பெற்றிடும் தொல்லைக்கு இரக்கம் காட்ட ஓர் சட்டமிங்கில்லை என்று குறிப்பிட்டுள்ளார் சிவப்பிரகாசம். புதுவைப் பஞ்சாலைத் தொழிலாளர்கள் பல ஆயிரக் கணக்கில் இருந்தும் அவர்களுக்கென்று தொழிலாளர் நலச் சட்டங்கள் இல்லாததால் ஆலைத் தொழிலாளர்கள் பெரும் அவதியுற்று வந்தனர். இந்நிலையைப் பாரதிதாசனும், சிவப்பிரகாசமும் புதுவை முரசு இதழில் வெளிப்படுத்தி வந்தனர். தொழிலாளர் துயரம் குறித்து இக்காலக் கட்டத்தில் அவர்கள் எழுதிய கவிதைகள் பல இதழ்களிலும் வெளிவந்துள்ளன.

புதுச்சேரியிலிருந்து நா. வேங்கடாசல நாயகர் 1914 ஆம் ஆண்டு முதற்கொண்டு நடத்திய சுகாபிவிருத்தினி இதழ் தொழிலாளர் ஆதரவு இதழாக வெளிவந்தது. 1930 ஆம் ஆண்டுகளில் புதுவை முரசு இதழ் தொழிலாளர் உரிமை கோரும் இதழாகப் புதுவைச்

சுயமரியாதை இயக்கத்தினரால் நடத்தப்பட்டது. தொழிலாளர் தலைவராக இருந்த வ. சுப்பையா 1934 ஆம் ஆண்டில் சுதந்திரம் இதழைத் தொடங்கித் தொழிலாளர்களுக்கு ஆதரவாக இயங்கினார். சுயமரியாதைத் தொழிற்சங்கத் தலைவர்களாக இருந்த கே. சுந்தரராசு, அரங்கேசன் போன்றவர்கள் போராட்டங்களை நடத்தினர். இப் போராட்டங்களின் தொடர்ச்சியே 1936 ஆம் ஆண்டில் பெருங்கலவரமாக வெடித்து 12 தொழிலாளர்களின் உயிர்கள் பலிவாங்கப்பட்டன. இதன் பின்னரே பிரெஞ்சிந்தியாவிற்கென்று தொழிலாளர் நலச் சட்டங்கள், பிரான்சு அரசாங்கத்தால் 1937 ஆம் ஆண்டு சனவரி 18ஆம் நாளில் ஏற்படுத்தப்பட்டன. தொழிலாளர் நலச்சட்டம் புதுச்சேரியில் இல்லாதது குறித்துத் தமது தொடக்க நிலைப் படைப்பு (1932 ஆம் ஆண்டு) முதற்கொண்டு சிவப்பிரகாசம் வெளிப்படுத்தியமை குறிப்பிடத் தக்கது. 1936 ஆம் ஆண்டு, தொழிலாளர்கள் உயிரிழந்த நிகழ்வைச் சிவப்பிரகாசம் "புதுவைச் சவானா மில் படுகொலைப் பாட்டு" என்ற தலைப்பிலான தமது கவிதையில் பதிவு செய்துள்ளார்.

**பாரம்பரிய வீடு ஏலம்**

வேளாண்மையை அடிப்படைத் தொழிலாகக் கொண்டு முத்தியால்பேட்டையில் வாழ்ந்த சிவப்பிரகாசத்தின் குடும்பத்தில் பின்னர் வேளாண்தொழில் நசித்துப் போனதால், தொடர்ந்த காலங்களில் கடன் ஏற்பட்டு, பாரம்பரியமாக வாழ்ந்த வீடு ஏலம் போகும் நிலைக்கு வந்தது. இந்த நிலையில் வேறு வீடு பார்த்துக் கொண்டிருந்தார் சிவப்பிரகாசம். முத்தியால்பேட்டையில் இருந்து மூன்று கிலோமீட்டர் தூரம் தினமும் நடந்து வந்து புதுவை முரசு இதழ்ப் பணிகளை நடத்திக் கொண்டிருந்த அவருக்குப் புதுவையிலேயே வீடு இருந்தால் நலம் என்ற எண்ணத்தில் பாரதிதாசனிடம் தம் கருத்தை வெளியிட்டார். பாரதிதாசன் அப்போது செங்குந்தர் வீதியில் (அரவிந்தர் வீதி) குடியிருந்து வந்தார். அது மிகப் பெரிய வளமனையாக இருந்தபடியால், சிவப்பிரகாசம் அருகிலேயே இருப்பது தன் எழுத்துப் பணிகளுக்கும், புதுவை முரசு இதழ்ப் பணிக்கும் வசதியாக இருக்கும் என்று பாரதிதாசன் எண்ணினார். அவரது யோசனையை ஏற்று சிவப்பிரகாசம், பாரதிதாசன் வாழ்ந்த வீட்டின் பின்பக்கம் குடிவந்தார். பாரதிதாசனின் கவிதைகளைப் படி

எடுத்துப் பல இயக்க இதழ்களுக்கு அனுப்பும் வேலையும், இதழ்ப்பணிகளும், இயக்கப் பணிகளும், பாரதிதாசனோடு கூடவே இருந்த அனுபவமும் சிவப்பிரகாசம் எழுத்தாளராகவும், கவிஞராகவும் வெளிப்பட உதவின.

**பிரவே வகுப்பு**

அந்நாள்களில் பிரெஞ்சிந்திய அரசாங்கப் பாடத்திட்டத்தில் பிரவே (Bravet de langue indigene) என்றொரு தேர்வு முறை இருந்தது. இதில் தேறியவர்கள்தாம் அரசாங்கப் பணியில் ஆசிரியர்களாக முடியும். இந்தத் தேர்வுக்குச் செல்பவர்களுக்காகத் தனிப்பட்ட முறையில் தமிழ் வகுப்புகள் பாரதிதாசனும், சிவப்பிரகாசமும் குடியிருந்த வளமனையில் அவர்களால் நடத்தப்பட்டன. பின்னர்ப் பிரெஞ்சுப் பாடத்திற்கும், கணக்குப் பாடத்திற்கும் வகுப்புகள் நடத்தப்பட்டன. 1933 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15 ஆம் தேதி இவ் வகுப்புகள் ஆரம்பமானதாக (இந்த வகுப்புகளுக்கான) கணக்குப் புத்தகத்தில் சிவப்பிரகாசம் குறிப்பிட்டு இருக்கிறார். மாதச்சம்பளமாக மாணவர்களிடம் தலா இரண்டு ரூபாய் வசூலித்துத் தாங்கள் குடியிருந்த வீட்டிற்கான மாத வாடகை எட்டு ரூபாயைச் செலுத்திய கணக்கும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் பிரவே வகுப்பில் தமிழ் வகுப்புகளைப் பாரதிதாசனும், சிவப்பிரகாசமும் நடத்தினர். பின்னர்ப் பிரவே தேர்வு எழுதிச் சிவப்பிரகாசமும் அவரது தம்பி நடனசபாபதியும் தேர்ச்சி பெற்றனர். பிரவே தேர்ச்சி பெற்ற அனைவரும் அரசு பள்ளியில் ஆசிரியர்களாகச் சேர்ந்துவிடச் சிவப்பிரகாசம் மட்டுமே அரசு பணியில் சேரவில்லை. சுயமரியாதை இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டிருந்த அவர் அரசு பணிக்குச் செல்வதில் அக்கறை காட்டவில்லை. பாரதிதாசன் அரசு பணியில் இருந்ததால் சுயமரியாதை இயக்கப் பணிகளில் அவர் நேரடியாக ஈடுபட முடியவில்லை. இதனால் இயக்கத் தொடர்பான பணிகளுக்குச் சிவப்பிரகாசம் பெயரிலேயே விண்ணப்பிக்கப்பட்டன. இந்தச் சூழ்நிலையில் பாரதிதாசன் கூனிச்சம்பட்டில் உள்ள அரசு பள்ளிக்கு மாற்றப்பட்டார். பின்னர்ப் பிரவே வகுப்புகளைச் சிவப்பிரகாசம் 1944 ஆம் ஆண்டு வரையில் நடத்தி வந்தார்.

**தன்மான இயக்கங்கள்**

புதுச்சேரியில் சுயமரியாதை இயக்கம் பதிவுபெற்ற ஓர் அமைப்பாக இருந்திருக்கவில்லை. பொதுவுடைமைக்

கருத்துக்களைத் தமிழ்நாட்டில் முதன்முதலாகப் பரப்பிய இயக்கமாகச் சுயமரியாதை இயக்கம் இருந்ததால், பொதுவுடைமைக் கட்சியின் மீது விதிக்கப்பட்ட தடைகள் சுயமரியாதை இயக்கத்தின் மீதும் பாய்ந்தன. புதுவை முரசு இதழ் நின்று போனதற்கு அவ்விதழ்ப் பொறுப்பாளர் சிவப்பிரகாசத்தின் மீது வழக்குத் தொடரப்பட்டுத் தண்டனை அளிக்கப்பட்டதும், பொருளாதாரமும் மட்டும் காரணமல்ல; பிரெஞ்சிந்திய அரசாங்கத்தின் இதுபோன்ற அடக்கு முறைகளும் ஒரு காரணம். அதனால் அரசாங்க அனுமதி சுயமரியாதை இயக்கத்திற்கு மறுக்கப்பட்டது. அரசாங்கத்திடம் பதிவு பெற்று முறையான ஓர் அமைப்பாகச் செயல்பட வேண்டும் என்று புதுச்சேரி சுயமரியாதை இயக்கத்தினர் பெரிதும் விரும்பினர்.

இதைத் தொடர்ந்து பிரெஞ்சிந்தியாவில் சுயமரியாதை இயக்கத்தைப் பதிவு செய்ய வேண்டுமென்று புதுவைச் சுயமரியாதை இயக்கத்தினர் செயல்பட ஆரம்பித்தனர். அதன்படி பிரெஞ்சிந்தியாவில் சுயமரியாதை இயக்கத்தைப் பதிவு செய்யச் சிவப்பிரகாசம் பிரெஞ்சிந்திய அரசாங்கத்திடம் விண்ணப்பம் செய்தார். ஆனால் சுயமரியாதை இயக்கம், கடவுள் மறுப்பு இயக்கமென்று பிரெஞ்சிந்திய அரசாங்கம் கருதியதால் சுயமரியாதை இயக்கத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டது. எனவே தன்மதிப்புக் கழகம் என்ற பெயரில் வேறு விண்ணப்பம் அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டது. அதற்கும் பிரெஞ்சிந்திய அரசு அனுமதி அளிக்க மறுத்துவிட்டது.

இந்த நிலையில் பிரான்சில் செயல்பட்டுவந்த ஒரு பகுத்தறிவுச் சங்கம் பற்றிப் புதுச்சேரி சுயமரியாதை இயக்கத்தினர் அறிந்து அதன் கிளையைப் புதுச்சேரியில் நிறுவ முயற்சிகள் மேற்கொண்டனர். சுயமரியாதை இயக்கத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டதால், பிரான்சில் ஆரம்பிக்கப்பட்ட, தங்கள் இயக்கத்தைப் போன்றே பகுத்தறிவுக் கொள்கைகள் கொண்ட ஓர் இயக்கத்தின் கிளையை இங்கு ஆரம்பிப்பதில் பிரெஞ்சிந்திய அரசாங்கம் அனுமதி மறுக்காது என்று புதுச்சேரி சுயமரியாதை இயக்கத்தினர் நினைத்து இந்தச் செயல்பாட்டில் இறங்கினர்.

இந்த இயக்கம் ஆரம்பிப்பதற்கான ஆலோசனைக் கூட்டம் 1933 ஆம் ஆண்டு சனவரி ஆறாம் தேதியில் மாலை ஆறு மணிக்குப் பாரதிதாசனும், சிவப்பிரகாசமும் குடியிருந்த இல்லத்தில்

நடைபெற்றது. இவ்வியக்கத்திற்குப் பாரதிதாசன் தலைவராகவும், சிவப்பிரகாசம் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு இவ்வியக்கம் செயல்பட்டு வந்தது.

சுயமரியாதை இயக்கத்தின் செயல்பாடுகளை இவ்வியக்கத்தின் மூலமாகவே, மேற்கொண்டு வந்தனர் புதுச்சேரிச் சுயமரியாதை இயக்கத்தினர். 1940 ஆம் ஆண்டில் இலக்கிய மன்றம் என்ற அமைப்பு தொடங்கும் வரையில் இந்த அறிவியக்கமே புதுச்சேரிச் சுயமரியாதை இயக்கமாகச் செயல்பட்டது.

## சமதர்மமும், பொதுவுடைமையும்

அனைத்து நிலைகளிலும் ஆதிக்கம் அகற்றப்பட வேண்டுமென்று வலியுறுத்திய திராவிட இயக்கம் தொழிலாளர்களின் வாழ்வில் முதலாளித்துவ ஆதிக்கத்தை வன்மையாக எதிர்த்தது. பொதுவுடைமை சார்ந்த கருத்துக்களைப் பேசியும், எழுதியும் வந்த அவ்வியக்கத்தினர், பெரியார் ஈ.வெ.ராவின் ஐரோப்பிய, ரஷ்யப் பயணங்களுக்குப் பின்னர்ப் பொதுவுடைமைக் கருத்துகளை மேலும் தெரிந்து கொண்டு நேரடியாகவே முழங்கினர். சுயமரியாதை இயக்கமே 'சுயமரியாதைச் சமதர்மக் கட்சி' என்றானது. இதற்கு முன்பாகவே பொதுவுடைமைக் கருத்துக்களைப் "புதுவை நெசவுத் தொழில் ஏழையர் எழுச்சிப் பாட்டு" என்று கவிதை நூல் மூலம் வெளிப்படுத்தியிருக்கும் புதுவைச் சிவம், தொடர்ந்து தம்முடைய படைப்புகளில் பொதுவுடைமையைப் பெரிதும் வலியுறுத்தி உள்ளார். புதுவைச் சிவம் பங்கு கொண்டிருந்த இதழ்களிலும் தொழிலாளர் ஆதரவு முழக்கங்கள் ஓங்கி ஒலித்தன. 'தொழிலாளர் மித்திரன்' என்று ஓர் இதழையே நான்காண்டுகள் புதுச்சேரியில் இருந்து நடத்தினர். புதுவைச் சிவமும், காஞ்சி கலியாணசுந்தரமும் புதுச்சேரியில் துணி ஆலைகளில் அவ்வப்போது நிகழ்ந்து வந்த தொழிலாளர் போராட்டங்களுக்கு ஆதரவாகப் பல கவிதைகளையும், இசைப்பாடல்களையும் இயற்றினார் புதுவைச் சிவம். புதுச்சேரியின் தொழிலாளர்கள் எட்டு மணி நேர வேலை, சங்கம் அமைக்கும் உரிமை போன்ற பல்வேறு உரிமைகளைப் போராடிப் பெற்றதில் புதுவைச் சிவத்தின் படைப்புகளுக்கும் பங்குண்டு. சமதர்மத்தையும், பொதுவுடைமையையும் ஒரே கோட்பாடாகப் பாவித்த திராவிட இயக்கத்தினரைப் போன்றே புதுவைச்சிவமும்

தம்முடைய அனைத்து வகைப் படைப்புகளிலும் சமதர்மத்தையும், பொதுவுடைமையையும் மிகுதியாகக் கையாண்டுள்ளார்.

## ஸ்ரீ சுப்பிரமணியபாரதி கவிதா மண்டலம்

புதுவை முரசு இதழ் நின்ற பிறகு பாரதிதாசன், சிவப்பிரகாசம் ஆகியோரின் படைப்புகள் பிரிட்டிஷ் இந்தியாவில் இருந்து வெளிவந்து கொண்டிருந்த சுயமரியாதை இயக்க இதழ்களில் இடம் பெற்று வந்தன. குடிஅரசு, பகுத்தறிவு, விடுதலை, நகரதூதன், சண்டமாருதம் போன்ற இதழ்களிலும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த ஈழகேசரியிலும் அவர்களது படைப்புகள் தொடர்ந்து வெளிவந்தன. இந்நிலையில் தங்களுக்கென மீண்டும் ஓர் இதழைத் தொடக்குவதென அவர்கள் முடிவெடுத்தனர். பாரதிதாசன் கவிதைகளில் ஈடுபாடு கொண்டிருந்த புதுச்சேரி அன்பர் ம. தம்புசாமி பொருளுதவி செய்ய, பாரதிதாசன் ஆசிரியராக இருக்க, சிவப்பிரகாசத்தின் நிர்வாக மேற்பார்வையில் இவ்விதழ் வெளிவந்தது. எஸ்.ஆர். சுப்பிரமணியனும் இதழின் நிர்வாகத்தில் பங்கு கொண்டதோடு பொருளுதவியும் செய்தார். 1935-ஆம் ஆண்டில் தொடங்கி அவ்வாண்டிலேயே நின்று போய் விட்ட இதன் முதல் இதழ் பங்குனி மாதத்தில் வெளிவந்தது. ஆனி, ஆடி மாதங்களுக்கு ஒரே இதழாக வெளிவந்து ஐப்பசி மாதம் ஏழாவது இதழுடன் நின்று போனது.

முற்றிலும் கவிதை இதழாகவே கவிதாமண்டலம் நடத்தப்பட்டாலும் சுயமரியாதை இயக்கத்தின் கருத்துக்களே அதிலும் மிளிர்ந்தன. மூடநம்பிக்கை ஒழிப்பு, சீர்திருத்தம், சமதர்மம், பெண்ணுரிமை ஆகியவற்றோடு, நாட்டு விடுதலையிலும் கவிதா மண்டலம் நாட்டம் கொண்டிருந்தது. "விடுதலையுன் எண்ணமதாய் இருத்தல் வேண்டும்; வீரர் பாரதியாரின் எண்ணம் வேண்டும்" என்று முதல் இதழில் சிவப்பிரகாசம் எழுதிய வாழ்த்துப்பாவின் அடிகள் இதழின் நோக்கத்தை வெளிப்படுத்துவதுடன், நாட்டு விடுதலையில் சுயமரியாதை இயக்கத்தினரின் எண்ணத்தைத் தெளிவு படுத்துவதாகவும் அமைந்திருக்கின்றன. பல பிரெஞ்சுக் கவிதைகளின் மொழிபெயர்ப்புகளும் இவ்விதழில் இடம் பெற்றன. அவையும் பகுத்தறிவு சார்ந்தவையாகவே அமைந்தன. பாரதியாரின் புகழைப் பரப்புவதும் கவிதா மண்டலத்தின் அடிப்படை

எண்ணமாக இருந்தது. பாரதியாரின் பாடல்களும், பாரதியார் பற்றிப் பாரதிதாசன் எழுதிய பல கவிதைகளும் இவ்விதழில் இடம்பெற்றன. பாரதியார் கவிதைகளில் வெளிப்பட்ட சமதர்ம எண்ணங்களும், பெண்விடுதலையும், கவிதா மண்டலத்தில் பூத்துக் குலுங்கின. குறிப்பாகச் சிவப்பிரகாசம் எழுதிய சமதர்மம் போன்ற கவிதைகள் இதழின் பெயருக்கேற்பப் பாரதியின் பரிமாணத்தைக் காட்டுவதாகவே அமைந்திருந்தன. இவ்விதழ்களில் சுயமரியாதை இயக்கத்தில் அப்போது ஈடுபாடு கொண்டிருந்த ச.நடனசபாபதி, எஸ்.ஆர்.சுப்பிரமணியன், காசி விசுவநாதன், சாமி சிதம்பரனார், மு.த.வேலாயுதம் ஆகியோரது கவிதைகளும் இடம் பெற்றன.

**நாடகவாணர் புதுவைச் சிவம்**

பாரதிதாசன் நட்பினால் மெருகூட்டப்பட்ட சிவப்பிரகாசம் பாரதிதாசனைப் போலவே நாடகத்தில் பெரும் ஈடுபாடு கொண்டவர். அவரது பல நாடகங்கள் புதுவை, தமிழகப் பகுதிகளில் பலமுறை நடத்தப்பட்டன. சிவப்பிரகாசம் சுயமரியாதை இயக்கத்தில் இருந்த போதே அவரது நாடகங்கள் பலமுறை புதுச்சேரியில் நடைபெற்றன.

சிவப்பிரகாசம் எழுதிய ரஞ்சித சுந்தரா (அல்லது) ரகசியச் சுரங்கம் எனும் சமூகச் சீர்திருத்த நாடகம் 15.08.1936 இல் லாபிளேயாத் சங்கத்தினரால் புதுச்சேரியில் நடத்தப்பட்டது. இந்த நாடகமும், தேயிலைத் தோட்டத் தீமை (அல்லது) புத்தி கற்பித்த ராமாயி எனும் நாடகமும் 12.09.1936 அன்று அதே சங்கத்தினரால் நடத்தப்பட்டன. இந்த நிகழ்ச்சியின் போது அந்நாடகப் பாட்டுகள் அடங்கிய சிறு நூலொன்றும் வெளியிடப்பட்டது. பின்னர் அமுதவல்லி (எ) அடிமையின் வீழ்ச்சி என்ற நாடகம் 1937-ஆம் ஆண்டில் இயற்றப்பட்டு இயக்கத்தினரால் நடித்துக் காண்பிக்கப்பட்டது.

உப்பளம் சமூகச் சீர்திருத்த வாலிபர்களால், சிவப்பிரகாசம் எழுதி இயக்கிய சமூக சேவை எனும் நாடகம் 08.02.1941 இல் புதுவை கெப்ளே தியேட்டரில் நடத்தப்பட்டது. இந்நாடகத்தில் அந்நாடகப் பாட்டுகள் அடங்கிய சிறு நூலொன்றும் வெளியிடப்பட்டது. புதுவை, உப்பளம் பகுதியைச் சேர்ந்த பல வாலிபர் விளையாட்டுக் கழகங்கள் சுயமரியாதை இயக்க ஆதரவுக் கழகங்களாக மாறின. அக்கழகங்களின் மூலமாக, புதுவைச்சிவம் 1930ஆம் ஆண்டின் இறுதியில் எழுதிய சமூக சேவை எனும் இந்நாடகம் பலமுறை

நடத்தப்பட்டு, அந்நாடகத்தின் மூலம் வசூலான தொகை ஒடுக்கப்பட்டோர் கல்வி மற்றும் விளையாட்டுப் பணிகளுக்காகச் செலவிடப்பட்டது. அப்படி நிறுவப்பட்ட கல்விச்சாலை ஒன்று "சொசியத்தே எத்துவால் துய் மத்தேன்" என்ற வாசக சாலையாகப் புதுவை, உப்பளம் பகுதியில் இன்றளவும் புகழ் ஓங்கி நிற்கிறது.

1939-ஆம் ஆண்டில் எழுதப்பட்ட கோகில ராணி எனும் நாடகம் புதுவைச் சிவத்தின் நாடக வாழ்க்கையில் மிக உன்னத இடத்தைப்பெற்றது. முதன் முதல் அச்சில், 1947-ஆம் ஆண்டு நூலாக வெளிவந்த புதுவைச்சிவத்தின் நாடகமும் இதுவே. இந்நாடகம் தமிழ்நாட்டின் பல நகரங்களிலும், இலங்கை, மலேசியா போன்ற தமிழர் வாழும் பிறநாடுகளிலும் நடத்தப்பட்டுள்ளது. இந்நாடகங்களைத் தொடர்ந்து சிவப்பிரகாசம் எழுதிய நீதிவர்மன், பூங்கொடி, குமரிக்கோட்டம் ஆகிய நாடகங்களும் புதுவைப் பகுதிகளில் நடைபெற்றன.

புதுவையில் தமிழர் முன்னேற்ற நாடக மன்றம் என்ற ஓர் அமைப்பை நிறுவித் தங்கள் இயக்கக் கொள்கை பரப்பும் சீர்திருத்த நாடகங்களைச் சிவப்பிரகாசம் நடத்தி வந்தார். இந்த மன்றம் சிவப்பிரகாசம் எழுதிய சிதைந்த வாழ்வு உட்படப் பல சமூக நாடகங்களைப் புதுவைப் பகுதியில் நடத்தி வந்தது. சிவப்பிரகாசம் எழுதிய நாடகங்களில் கோகிலராணி (1947), சிதைந்த வாழ்வு (1951) ஆகியவை புதுவை ஞாயிறு நூற்பதிப்பகத்தால் அச்சில் வெளியிடப்பட்டன.

நாகபட்டினத்தில் ஆர்.வி. கோபாலால் ஆரம்பிக்கப்பட்ட நாகைத் திராவிடர் நடிகர் கழகம் 1945 ஆம் ஆண்டில் புதுவையில் சில காலம் தங்கி நாடகங்களை நடத்தி வந்தது. இதில் திருவாரூர் மு. கருணாநிதியும் இணைந்து நாடகங்கள் நடத்தியும் நடித்துக் கொண்டுமிருந்தார். இந்த நடிகர் கழகத்தின் மூலமாகக் கலைஞர் மு.கருணாநிதியின் சாந்தா அல்லது பழனியப்பன் போன்ற நாடகங்களும் மேலும் பல சீர்திருத்த நாடகங்களும் நடைபெற்று வந்தன. இந்த நடிகர் கழகத்திற்குப் புதுவையில் தேவையான உதவிகளைப் புதுவைத் திராவிடர் கழகத்தினர் செய்து வந்தனர். பாரதிதாசனும், சிவப்பிரகாசமும் அவர்களை வரவேற்றுப் புதுவை நீடராஜப்பையர் வீதியில் ஓர் இல்லத்தில் தங்க வைத்தனர். மேலும்,

புதுச்சேரி நேரு வீதியில் இருந்த கெப்ளே தியேட்டரில் நாடகங்கள் நடத்த ஏற்பாடு செய்து கொடுத்தனர். அப்போது நடைபெற்ற சீர்திருத்த நாடகத் தொடக்க விழாவின் போது புதுவைச் சுயமரியாதை இயக்கத்தினரால் சிவம் எழுதிய வரவேற்புக் கவிதை ஒன்றும் வாசித்து அளிக்கப்பட்டது.

பாரதிதாசன், சிவப்பிரகாசம் உள்ளிட்ட சுயமரியாதை இயக்கத் தலைவர்களின் தலைமையில் பல நாடகங்கள் இவ்விடத்தில் தொடர்ந்து நடைபெற்று வந்தன. இதில் சிவப்பிரகாசத்தின் நாடகங்களும் இடம்பெற்றன. புதுவையில் இருந்த மாற்றுக் கட்சியினர் சிலர் இந்நாடகக் குழுவினர் நடத்திவந்த நாடகங்களைத் தடை செய்ய வேண்டும் என்று கருதிச் சில அடியாட்களையும் ஏவி விட்டிருந்தனர் என்றும், அப்படி ஏவப்பட்ட அடியாட்கள் கெப்ளே தியேட்டர் எதிரே இருந்த ஒரு விடுதியில் இருந்து கற்கள் எறிந்து கலவரம் உண்டாக்கும் செயல்களில் ஈடுபட்டதாகவும், இதை முறியடிப்பதற்குப் பாரதிதாசனும், தாமும் மற்ற இயக்கத் தோழர்களுடன் கெப்ளே தியேட்டரின் எதிரிலும் டூப்ளே வீதியிலும், நாடகம் முடியும் வரை பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்ததாகவும் சிவப்பிரகாசம் குறிப்பிட்டிருக்கிறார்.

**புரட்சிக்கவி வெளியீடு**

சிவப்பிரகாசம் தமது கவிதைகள், நாடகங்கள் உருவாக்கத்தினூடே பாரதிதாசன் படைப்புகளைப் படி எடுப்பதையும், அவற்றை இதழ்களுக்கு அனுப்புவதையும் தனக்குகந்த பணியாக மேற்கொண்டு வந்தார்.

> ஓய்வு நேரமும் உற்சாகமும் ஒன்றுபடும் போது நான் ஒன்றை எழுதி முடிப்பதுண்டு. சூழ்ந்துள்ள தோழர்கள் காப்பாற்றினால் உண்டு. அல்லாவிடில் அவைகள் காணடிந்து போகும். இந்த விஷயத்தில் ஜாக்கிரதையாயிருப்பவர்கள் தோழர்கள் சிவப்பிரகாசம், துரைராஜன் ஆவர். புரட்சிக்கவி முதலிய சில சிறு நூல்களை என்னிடம் காட்டி, இவை நீங்கள் எழுதியவைகள் அச்சிடுகிறோம் என்றார்கள். ஆயிரம் தரம் நன்றி செலுத்தினேன் அவர்கட்கு.

என்று புரட்சிக்கவி நூலின் முன்னுரையில் பாரதிதாசன் குறிப்பிடுவதிலிருந்து, பாரதிதாசன் புகழ் பரவச் சிவப்பிரகாசம் எடுத்துக்கொண்ட முயற்சிகளை அறியலாம். புரட்சிக்கவி என்னும் தலைப்பினாலான இந்நூல் 1937-இல் வெளியான பின்னரே பாரதிதாசன் புரட்சிக் கவிஞர் என்ற அடைமொழி மூலம் அறியப்பட்டார் என்றும் சிவப்பிரகாசம் குறிப்பிட்டுள்ளார்.

**இந்தி எதிர்ப்புப் போராட்டம்**

சென்னை மாகாணத்தில் கட்டாய இந்தித் திணிப்பை எதிர்த்து, முதல் இந்தி எதிர்ப்புத் தீர்மானம், 1937-ஆம் ஆண்டில் திருச்சியில் கூடிய இந்தி எதிர்ப்பு மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டது. தொடர்ந்து நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் புதுவைச் சுயமரியாதை இயக்கத்தினரின் பங்கு, கணிசமாகவே இருந்தது. இந்தி எதிர்ப்புப் பிரச்சாரத்திற்காகப் பாரதிதாசனும், சிவப்பிரகாசமும் எழுதிய பல கவிதைகள் இயக்க இதழ்கள் அனைத்திலும் வெளியாயின. பிரெஞ்சிந்தியாவின் பூர்வகுடியினர் தாங்களும் தமிழர்களே என்று உணர்ந்து, இன அடிப்படையிலான போராட்டத்திற்குத் தங்களை உட்படுத்திக் கொள்ளவும், இந்திய அளவில் ஏற்படும் மொழிக் கொள்கை தங்களையும் பாதிக்கும் என்ற அளவில் தங்களுடைய போராட்டங்களை பிரிட்டிஷ் இந்திய அளவில் விரிவுபடுத்தவும் இந்தித் திணிப்பு அவர்களைத் தூண்டியது. பிரெஞ்சிந்தியாவில் உள்ள பிரச்சினைகள் மட்டுமின்றித் தமிழகப் பிரச்சினைகளிலும் தலையிட்டுத் தங்கள் கருத்தை எடுத்துரைக்கவும் புதுவைச் சுயமரியாதை இயக்கத்தினர்க்கு இது ஒரு வாய்ப்பாக அமைந்தது. இந்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திய புதுவைச் சுயமரியாதை இயக்கத்தினர் இன, மொழி, உணர்வுகளினூடே தங்கள் இயக்க வளர்ச்சிக்கும், வெற்றிக்கும் வழிவகுத்தனர்.

இந்தக் காலக்கட்டத்தில் தமிழ் மொழியின் மேன்மை குறித்தும், இந்தி மொழித் திணிப்பை எதிர்த்தும், மிகுதியான பாடல்களை சிவப்பிரகாசம் இயற்றினார். இசைப்பாடல்களும், கவிதைகளுமாக இயற்றப்பட்ட அவை அனைத்துமே இயக்க இதழ்களில் வெளியாயின. 'ஹிந்தி எதிர்ப்புப் பாடல்கள்' என்ற தலைப்பில் 1938-ஆம் ஆண்டில் குடிஅரசுப் பதிப்பகம் வெளியிட்ட

தொகுப்பு நூலில் சிவப்பிரகாசத்தின் பல பாடல்கள் இடம்பெற்றன. இந்தி எதிர்ப்பு இயக்கத்தின் இரண்டாம் கட்டமான 1948-ஆம் ஆண்டில் சிவப்பிரகாசம் இந்தி மறுப்புப் பாடல்கள் என்ற தலைப்பில் தமது ஞாயிறு நூற்பதிப்பகம் மூலமாக ஒரு நூலை வெளியிட்டுள்ளார்.

## தமிழ்த் திருமணம்

இயக்கப் பணிகளில் மனமொன்றி ஈடுபட்டுக் கொண்டிருந்த சிவப்பிரகாசம் தமது 32-ஆவது வயதில் திருமணம் செய்து கொண்டார். தமது இயக்கக் கொள்கைகளுக்கு முன்னுதாரணமாக ஒரு விதவைப் பெண்ணை மறுமணம் செய்யவே சிவப்பிரகாசம் திட்டமிட்டிருந்தார். நாள்கள் சென்றதால் தம் தாயார், தம்பி மற்றும் இயக்கத்தினரின் வற்புறுத்தலினால் கோட்டைக்குப்பம் பழைய மணியம் நடராஜப்பிள்ளையின் மகளாகிய ஜெகதாம்பாள் என்பவரை 1940-ஆம் ஆண்டு செப்டம்பர் 15ந் தேதி மணந்து கொண்டார். பாரதிதாசன் தலைமையில் சீர்திருத்தத் திருமணமாக இத்திருமணம் நடைபெற்றது.

**உண்மை நெறியில் உயர்ந்த தமிழர்**
**பண்டைத் திருமணம் பாரினில் ஓங்குக**

என்ற அடிகள் தலைப்பில் குறிக்கப்பட்டு, தமிழ்த் திருமணம் நடைபெறும் என்று திருமண அழைப்பிதழ் குறிப்பிடுகின்றது. அந்நாளில் சடங்குகள் எதுவும் இல்லாமல் சீர்திருத்த முறையில் இத்திருமணம் நடைபெற்ற செய்தியைச் சிவப்பிரகாசத்தின் நண்பர்கள் பலரும் நினைவு கூர்ந்துள்ளார்கள். இத்திருமணத்திற்குப் பாரதிதாசனும், அவரது மாணவர்கள் சித்தன் உள்படப் பலரும் வாழ்த்துப்பா அச்சிட்டு வழங்கினார்கள்.

## தமிழாசிரியர் புதுவைச்சிவம்

திண்ணைப் பள்ளியில் தமிழும், அரசு பள்ளியில் பிரெஞ்சும், தமிழும் பயின்ற புதுவைச்சிவம் தமிழில் யாப்புப் பயில மிகவும் ஆர்வமுற்றிருந்தார். 1926-ஆம் ஆண்டில் பாரதிதாசனுடன் அவருக்கு ஏற்பட்ட தொடர்பு அந்த ஆவலைப் பூர்த்தி செய்தது. பாரதிதாசனிடம் யாப்புப் பயின்ற அவர், 1933-ஆம் ஆண்டில் பாரதிதாசனுடன் இணைந்து பிரவே தேர்வுக்கான வகுப்புகளை நடத்தி வந்தார். இதில் பாரதிதாசன் தமிழ் வகுப்பு நடத்தும்போது

பாடம் கேட்ட புதுவைச்சிவம், பாரதிதாசனுக்கு வேலை மிகுந்த போது தாமே தமிழ் வகுப்புகளை நடத்துவார். பின்னர்ப் பாரதிதாசன் கூனிச்சம்பட்டுப் பள்ளிக்கு மாற்றலாகிச் சென்றுவிடவே, இந்தப் பிரவே வகுப்புகளை 1944 ஆம் ஆண்டு வரையில் தொடர்ந்து நடத்தித் தமிழ்க் கற்பித்து வந்தார் புதுவைச்சிவம்.

பிரெஞ்சிந்திய அரசாங்கத்தின் பிரவே தேர்வில் வெற்றி பெற்றாலும், இயக்க ஈடுபாடு காரணமாக அரசு பணியில் சிவப்பிரகாசம் சேரவில்லை. என்றாலும் ஏதாவதொரு வருமானம் வாழ்க்கைக்குத் தேவை என்ற அவசியத்தில் சிவப்பிரகாசம் தம் இயக்கப் பணிகளுக்குப் பாதிப்பு இல்லாத வகையில் தனியார் பள்ளியொன்றில் தமிழ் ஆசிரியராகப் பணிபுரிந்து வந்தார். 'சொசீயத்தே புரோகிரேசீஸ்த்' என்ற ஒரு கல்வி நிறுவனம் நடத்திய பள்ளியில் அவர் 1939 முதல் தொடர்ந்து பணியாற்றி வந்தார். அரசு பள்ளயில் அரசாங்கப் பணி புரிவதைவிடவும், தனியார் பள்ளியில் சொற்ப வருமானமே என்றாலும், இயக்கப் பணிகளுக்காகவே தாம் தனியார் பள்ளியில் பணியாற்ற நேர்ந்ததாகச் சிவப்பிரகாசமே குறிப்பிட்டிருக்கிறார். இயக்கப் பணி காரணமாக அரசு வேலை கிடைத்தும் ஏற்காமல் விட்டுவிட்ட அவர், காலமுழுவதும் தனியார் பள்ளித் தமிழாசிரியராக மிகச்சொற்ப வருமானத்தில் கரைந்து போனார்.

## தமிழிசை இயக்கமும் புதுவைச் சிவமும்

தமிழிசையின் பெருமையைப் பாரதியார் உணர்ந்து எழுதினார். தமிழனுக்கு மரக்காது என்று கூடப் பாரதியார் கடிந்து எழுதி எழுத்திலேயே தமிழிசை இயக்கத்தை உருவாக்கினார். 1940-ஆம் ஆண்டில் பாரதிதாசன் தலைவராகவும் புதுவைச் சிவம் செயலாளராகவும் இருந்து நடத்திய புதுவை இலக்கிய மன்றத்தின் உட்பிரிவாகத் தமிழிசைக் கழகம் இருந்தது. இசையோடு பாடத் தமிழில் பாடல்கள் இல்லை என்றால் அறையுங்கள் என்று பாரதிதாசன் கூறியதுடன் நல்ல தமிழில், பல இசைப்பாடல்கள் இயற்றினார். தெலுங்குக் கீர்த்தனைகளில் உள்ள பாடல்களைக் கூடத் தமிழில் தந்தார் பாரதிதாசன். தமிழில் பகுத்தறிவுப் பாடல்களின் தேவையை உணர்ந்து புதுவைச்சிவம் தமிழிசைப் பாடல்களை மிகுதியாக இயற்றினார். அவை தமிழர் தன் மதிப்புப்

பாடல்கள் (1945), திராவிடப் பண் (1946), இந்தி மறுப்புப் பாடல்கள் (1948), தமிழிசைப் பாடல்கள் (1950), தன் மதிப்புப் பாடல் (1951) என்ற தலைப்பில் இசைப்பாடல் தொகுதிகளாக வெளிவந்தன. தமிழிசையை மீண்டும் தலைநிமிரச் செய்வதையே நோக்கமாகக் கொண்டு இப்பாடல்கள் இயற்றப்பட்டிருப்பதாகப் புதுவைச் சிவமே குறிப்பிடுகிறார்.

> தமிழ் மக்களுக்குத் தமிழிசையில் ஆர்வம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அவர்கள் ஆர்வத்திற்கு கேற்பத் தமிழிசையைக் கேட்க முடிவதில்லை.. தமிழிசை வல்லுநரும், பிறமொழிக் கீர்த்தனைகளை இசை அரங்கில் பாடுகின்றனரே யொழியத், தமிழிசை பாடுவது அரிதாகவேயிருக்கிறது. அப்படி பாடும் ஒன்றிரண்டு பாடல்களும் காலத்திற் கேற்பக் கருத்துக்களைக் கொண்டதாக இல்லை. இது பாடுவோர் குற்றமாகாது. அவர்களுக்குப் போதிய அளவு இன்னும் தமிழிசைப் பாடல்கள் கிடைக்காததே ஆகும்.

என்று தமிழிசைப் பாடல்கள் (1950) நூலின் முன்னுரையில் குறிப்பிடும் புதுவைச்சிவம், இசை வல்லுநர்கள் இப்பாடல்களைப் பாடிச் சீர்திருத்தக் கருத்துக்களை மக்களிடையே பரப்ப வேண்டும் என்றும் அம்முன்னுரையிலேயே வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

**புதுச்சேரி திராவிடர் கழகம்**

1944-ஆம் ஆண்டில் சேலத்தில் நடைபெற்ற நீதிக்கட்சி மாநாட்டில்தான் சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகமாகப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு ஓர் அமைப்பாக உருவெடுத்தது. இதனையடுத்துத் தமிழ்நாட்டில் அனைத்துப் பகுதிகளிலும் திராவிடர் கழகக் கிளைகள் அமைக்கும் பணி விரைந்து செயல்படுத்தப் பட்டது. புதுச்சேரியிலும் திராவிடர் கழகம் அமைப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டன. புதுச்சேரியில் சுயமரியாதை இயக்கத்தினரின் கூட்டம் ஒன்று 1945-ஆம் ஆண்டு நடைபெற்றது. அக்கூட்டம் திராவிடர் கழகக் கூட்டம் எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அதன் பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதன்படி புதுச்சேரி திராவிடர் கழகத்தின் தலைவராக வழக்கறிஞர் சு. பெருமாளும், செயலாளராகச் சிவப்பிரகாசமும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பிரெஞ்சிந்திய அரசிடம் விண்ணப்பிக்கவும், திராவிடர் கழகம் அமைக்கவும் அதன் செயலாளர் சிவப்பிரகாசத்திற்கு இக்கூட்டம் அனுமதியும் அளித்தது. அதன்படி புதுச்சேரி திராவிடர் கழகம் எனும் ஓர் அமைப்பினை நிறுவிக்கொள்ளப் பிரெஞ்சிந்திய அரசிடம் விண்ணப்பித்தார், சிவப்பிரகாசம். பலவித விசாரணைகளுக்குப் பின்னர் இறுதியாகப் பிரெஞ்சிந்திய அரசிடமிருந்து திராவிடர் கழகம் ஏற்படுத்திக் கொள்ள உத்தரவு அளிக்கப் பட்டது. இதனைத் தொடர்ந்து புதுச்சேரி திராவிடர் கழகத் திறப்பு விழா நடைபெற்றது. ஆனால் எதிர்ப்பாளர்களால் இவ்விழா கலவரப்படுத்தப்பட்டது.

இந்தத் தொடக்கவிழா, கலவரத்தில் முடிந்தாலும் அமைப்பில் பங்குகொண்டிருந்தவர்கள் தொடர்ந்து உற்சாகமாகவே இயக்கப் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். ஒவ்வொரு சிற்றூர் மற்றும் கிராமங்களில் திராவிடர் கழகம் திறப்பதும், பொதுக்கூட்டங்கள் நடத்துவதும், சென்னை மாகாணத்தில் இருந்து இயக்கத் தலைவர்களை வரவழைத்துக் கொள்கை விளக்கப் பரப்புகள் செய்வதும் புதுவைத் திராவிடர் கழகத்தினரின் செயல்பாடுகளாய் அமைந்தன. இந்நிலை 1949 ஜூன் மாதம் வரை நீடித்தது.

திராவிடர் கழகம் தவிரப் பல்வேறு இலக்கிய மன்றங்களும், தமிழ் மன்றங்களும் புதுவைத் திராவிடர் கழகத்தினரால் தோற்றுவிக்கப்பட்டன. இந்த அமைப்புகளுக்குப் பாரதிதாசன் தலைவராகவும், சிவப்பிரகாசம் செயலாளராகவும் செயல்பட்டனர்.

**பதிப்பாளர் புதுவைச் சிவம்**

கவிஞர் புதுவைச் சிவம் ஒரு பதிப்பாளராகவும் இருந்து, தமிழுக்குச் சிறந்த பகுத்தறிவுக் கருத்துக்களை உடைய பல நூல்களை வெளியிட்டிருக்கிறார். 1943-ஆம் ஆண்டு முதல் நூல்களைப் பதிப்பிக்க ஆரம்பித்த அவர், தமது பதிப்பகத்திற்கு ஞாயிறு நூற்பதிப்பகம் என்று பெயரமைத்து 1954-ஆம் ஆண்டு வரையில் மொத்தம் 19 நூல்களை வெளியிட்டுள்ளார். இவற்றுள் அவரது கவிதை, நாடகங்கள் உள்ளிட்ட ஒன்பது நூல்களும், பெரியார், அண்ணா, பாரதிதாசன், நெடுஞ்செழியன் ஆகியோரின் ஒன்பது நூல்களும், பெரியாரைப் பற்றிய ஒரு தொகுப்பு நூலும்

அடங்குகின்றன. இப்பதிப்பகத்திற்கான சட்டப்பூர்வமான உரிமை 14.10.1950 ஆம் நாளிட்டு அப்போதைய பிரெஞ்சிந்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்டிருக்கிறது.

சிவப்பிரகாசம் தமது ஞாயிறு நூற்பதிப்பகம் மூலமாக வெளியிட்ட அனைத்து நூல்களுமே இயக்கத்தின் கொள்கை விளக்கமாகவும், அதைப் பரப்பும் நோக்கிலுமே அமைந்திருந்தன. புதுவைச் சிவத்தின் இப்பணிகளைப் பாராட்டிய தந்தை பெரியார், "எனது நண்பர் சிவம்" என்றும் "புதுவைச்சிவம் தொடர்ந்து இதுபோல் பல நூல்களை வெளியிட வேண்டுமென்றும்" விழாவும் நாமும் என்ற நூலின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். இவரது கவிதைப் பணிகளைப் பாராட்டிய அறிஞர் அண்ணாவும் புதுவைச் சிவத்தைத் தமது புதுவைத் தோழர் என்றும், புதிய பேராசிரியர் என்றும் திராவிட நாடு இதழ்களில் குறிப்பிட்டுள்ளார்.

**புதுச்சேரித் தி.மு.க அமைப்பாளர்**

1949 செப்டம்பர் மாதம் தோற்றுவிக்கப்பட்ட தி.மு.க வின் புதுவைப் பகுதி அமைப்பாளராகச் சிவப்பிரகாசம் செயல்பட்டு வந்தார். புதுவையில் சுயமரியாதை இயக்கம் தொடங்கி, திராவிட இயக்கத்தின் முக்கியப் பொறுப்பாளராக இயங்கி வந்த சிவப்பிரகாசம், தி.மு.க. வை உருவாக்கிய முக்கிய ஆலோசனைக் குழுவிலும், அதன் பொதுக்குழுவிலும் இடம் பெற்றிருந்தார். மேலும், புதுச்சேரியில் தி.மு.க. வின் அமைப்பாளராக அவர் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்டார்.

தமிழகத் தி.மு.க.வின் சட்ட திட்டங்கள், இறுதியாக்கப் பட்டதைத் தொடர்ந்து, புதுவைத் தி.மு.க. வின் கொள்கை, சட்ட திட்டங்கள், செயல்பாட்டு வழிமுறைகள் ஆகியவற்றை வடிவமைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இவை படிப்படியாக இறுதி வடிவத்தை நெருங்கி, 1954-ல் பிரெஞ்சிந்தியச் சட்டத் திட்டங்களின் படி அரசாங்கத்திடம் பதிவு பெறுவதற்காக விண்ணப்பிக்கப்பட்டன. புதுவைத் தி.மு.க. எனும் அமைப்பிற்கு "அமைப்பாளர்" எனும் பொறுப்பைத் தவிர வேறு பொறுப்புகள் ஏதும் 1954 ஆம் ஆண்டுவரை இல்லாததால், பொறுப்புகளில் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான தேர்தல் நடைபெற்றது. இதில் புதுவைத் தி.மு.க. வின் செயலாளராகச் சிவப்பிரகாசம்

தேர்ந்தெடுக்கப்பட்டார். இதன் பின்னர்ப் புதுவைத் தி.மு.க. பிரெஞ்சிந்திய அரசாங்க நிர்வாகத்தில் ஓர் அரசியல் கட்சியாகப் பதியப்பெற்றது.

**இதழாளர் புதுவைச் சிவம்**

புதுவை முரசு (1930-1932), ஸ்ரீ சுப்பரமணிய பாரதி கவிதா மண்டலம் (1935) ஆகிய இதழ்களில் புதுவைச் சிவத்தின் பங்களிப்பு குறித்து முன்னமே விளக்கப்பட்டுள்ளது. 1940 களில் தொழிலாளர் மித்திரன் என்னும் இதழ் புதுவையிலிருந்து வெளியானது. காஞ்சி கல்யாண சுந்தரத்தை ஆசிரியராகக் கொண்ட இவ்விதழின் நிர்வாகப் பொறுப்பையும் புதுவைச் சிவமே ஏற்றிருந்தார். இவ்விதழில் புதுவைச் சிவத்தின் படைப்புகள் பல இடம் பெற்றன. 1940 களின் பிற்பாதியில் ஞாயிறு என்ற மாத இதழும், சுடரொளி என்னும் மாதமிருமுறை இதழும் புதுவைச் சிவத்தால் வெளியிடப்பட்டிருக்கின்றன. இவற்றிற்கு ஆசிரியரும் புதுவைச் சிவமே. இவ்விரு இதழ்களுக்குமான பிரெஞ்சிந்திய ஆளுநரின் உத்தரவு 18.12.1947 அன்று பிறப்பிக்கப்பட்டது.

1970-களின் தொடக்கத்தில் போர்வாள் என்னும் மாதமிருமுறை இதழ் புதுவையில் இருந்து வெளியிடப்பட்டது. இதன் சிறப்பாசிரியராகப் புதுவைச் சிவமும், ஆசிரியராகச் செ.முத்துவும் இருந்தனர். தி.மு.க. இதழ் என்று முகப்பில் குறிப்பிடப்பட்டு அன்றைய புதுவைச் செய்திகள் பலவற்றையும் புதுவைச்சிவத்தின் கட்டுரைகளையும் தாங்கி இவ்விதழ் வெளிவந்தது.

**விடுதலை வீரர் புதுவைச்சிவம்**

அடிமைப்பட்டுக்கிடக்கும் தமிழினம் தன்மானம் பெற்றுத் தலைநிமிர வேண்டும் என்பதே புதுவைச்சிவத்தின் வாழ்நாள் குறிக்கோள் என்பதை அவரது படைப்பு ஒவ்வொன்றும் பறைசாற்றும். எந்தச் சக்தியும் ஆதிக்கம் செலுத்துவதை அவர் எதிர்த்தார். ஏகாதிபத்திய எதிர்ப்பினாலும், அரசாங்கம் மதகுருக்களுக்குக் கட்டுப்பட்டுக் கிடக்கிறது என்று புதுவை முரசு இதழில் எழுதியதாலும் 1932-ஆம் ஆண்டில் பிரெஞ்சிந்திய அரசால் 3 மாத சிறைத் தண்டனையும், 500 பிராங்க் அபராதமும் விதிக்கப் பெற்றார். 1935-ல் ஸ்ரீ சுப்பரமணிய பாரதி கவிதா மண்டலம் முதல்

இதழுக்கு எழுதிய வாழ்த்துப்பாவில் "விடுதலையுன் எண்ணமதாய் இருத்தல் வேண்டும், வீரர் பாரதியாரின் எண்ணம் வேண்டும்" என்று வாழ்த்தினார் புதுவைச் சிவம்.

1930-ஆம் ஆண்டுகளில் தொழிலாளர் போராட்டம் நடந்தபோது அவர்களுக்கு ஆதரவாகப் பல கவிதைகளும், துண்டறிக்கைகளும் எழுதி ஊக்கப்படுத்தினார். புதுவைத் தொழிலாளர் போராட்டத்திற்குத் தமது படைப்புகளால் எழுச்சியூட்டினார். புதுவைத் தொழிலாளர் போராட்ட வெற்றியில் புதுவைச்சிவத்தின் பங்கு இன்றியமையாதது. சமுதாயச் சீர்திருத்தம், ஏகாதிபத்திய எதிர்ப்பு ஆகியவற்றை வலியுறுத்தும் பல நாடகங்களை இயற்றிப் புதுச்சேரியிலும், தமிழகத்திலும் நடத்தினார். 1954-ஆம் ஆண்டில் புதுச்சேரி நகரமெங்கும் தாம் சார்ந்திருந்த இயக்கத்தின் (தி.மு.க) கிளைகளை நிறுவிப் புதுச்சேரிப் பகுதிகள் பிரான்சின் கட்டுப்பாட்டில் இருந்து இந்திய யூனியனுடன் இணைய வேண்டும் என்ற பிரச்சாரத்தை மேற்கொண்டார். தமிழ்நாட்டிலிருந்து தி.மு.க. தலைவர்களை வரவழைத்து, பிரெஞ்சிந்திய விடுதலைப் போராட்டத்தை ஆதரித்துப் பேசவைத்து, புதுவை மக்களிடையே விடுதலை உணர்வு மேலும் எழுச்சி பெறக் காரணமானார். புதுவைக் காந்தி வீதியில் இருந்த ஜுபிடர் ஸ்டுடியோ எனும் புகைப்பட நிறுவனத்தின் மாடியில் தினமும் தம் ஆதரவாளர்களைக் கூட்டிப் பிரெஞ்சுக்காரர்களை வெளியேற்றும் திட்டங்களை மேற்கொண்டார். பிரெஞ்சு அரசுக்கு எதிரான தி.மு.க வின் செயல்திட்டங்களும், அறிக்கைகளும் இவ்விடத்தில்தான் வடிவமைக்கப்பட்டன.

பிரெஞ்சிந்திய விடுதலைப் போராட்டத்தில் தி.மு.கவின் செல்வாக்கை முழு அளவில் பயன்படுத்திக் கொள்ளும் முயற்சியில் தி.மு.க நிறுவனரான அண்ணாவின் அனுமதி பெற்று விடுதலைப் போராட்டத்தைத் தீவிரப்படுத்தத் துணையாய் நின்றார் புதுவைச்சிவம். புதுச்சேரி விடுதலையில் திராவிட இயக்கத்தினரின் பங்களிப்பு இருந்தாலும், 1970-ஆம் ஆண்டு விடுதலை வீரருக்கான தாமிரபத்திர விருது வழங்க மத்திய அரசு முன்வந்தபோது அதை ஏற்க மறுத்துவிட்டார் புதுவைச்சிவம்.

**பெண்ணுரிமை**

இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் பெண்ணுரிமைக் குரல்கள் இந்தியாவில் பரவலாக ஒலிக்கத் தொடங்கின. மதம், இறை

நம்பிக்கை, வைதிகக் கோட்பாடுகளுக்குள் தன்னைப் புதைத்துக் கொண்டு அக்கோட்பாடுகளுக்குப் பங்கம் வராமல் வழிந்தெழும் பெண் உரிமைக் குரல்களே சன்னமாக ஒலிக்கத் தொடங்கிய வேளையில், திராவிட இயக்கத்தின் பெண்ணுரிமைக் குரல் சடங்கு, சம்பிரதாயம் தொடங்கி, மதம், இறைநம்பிக்கை ஆகிய போர்வைகளில் இருந்தும் விடுபடும் குரலாக இந்தியாவில் ஓங்கி ஒலித்தது.

திராவிட இயக்கத்தின் இந்தத் தீவிரத் தன்மை புதுவைச் சிவம் படைப்புகளில் முழுவதுமாக வெளிப்பட்டுள்ளது. பெண்களுக்குக் கல்வியையும், வீரத்தையும் வலியுறுத்தும் அதேசமயம் மகளிர்க்கு மணவுரிமை, சொத்துரிமை உட்பட அனைத்திலும் சமத்துவம் கோரும் பாடல்களை மிகுதியாக இயற்றியுள்ளார் புதுவைச்சிவம். குழந்தை மண எதிர்ப்பும், விதவை மறுமணமும் அவரது படைப்புகளில் அதிகமாகக் காணப் படுகின்றன. அவரது பாத்திரப் படைப்புகளில் வரும் மகளிர் படித்தவர்களாகவும், சமுதாயப் பிரச்சினைகளுக்காகப் போராடுபவர்களாகவும், பகுத்தறிவு இயக்கத்தில் இணைந்து உரிமைப் பிரச்சாரம் செய்பவர்களாகவும், சாதி மதத் தடைகளை மீறிக் காதல் செய்து சீர்திருத்த மணம் புரிபவர்களாகவுமே படைக்கப்பட்டுள்ளனர். கவிதை, நாடகம், இசைப்பாடல்கள், மொழிபெயர்ப்புகள் ஆகிய அவரது படைப்புகளில் பெண்ணுரிமைக் கோட்பாடும், சமவுரிமையும் நிறைந்து காணப்படுகின்றன.

**சீர்திருத்தத் திருமணங்கள்**

இயக்கக் கருத்துப் பரவலுக்கும் திராவிட இயக்கத்தினர் தங்கள் இல்ல நிகழ்ச்சியில் இடமளித்தனர். பல சுயமரியாதைத் திருமணங்கள் பொதுக் கூட்டங்களாகவே நடைபெற்றன. புதுச்சேரியிலும் இது போன்ற சுயமரியாதைத் திருமணங்கள் இயக்கத் தலைவர்களால் நடத்தி வைக்கப்பட்டன. சிவப்பிரகாசம் தலைமையில் பல சுயமரியாதைத் திருமணங்கள் நடைபெற்றன. சுமார் ஆயிரம் திருமணங்களுக்கு மேல் தாம் தலைமை ஏற்று நடத்தி வைத்ததாகச் சிவப்பிரகாசம் குறிப்பிட்டுள்ளார். பிரெஞ்சிந்தியச் சட்ட திட்டங்களின்படி சுயமரியாதைத் திருமணங்கள் புதுச்சேரியில் சட்டபடி செல்லுபடியானவை என்பது குறிப்பிடத் தக்கது.

தமிழ்நாட்டில் 1968ஆம் ஆண்டில்தான் சுயமரியாதைத் திருமணங்கள் சட்டமாக்கப்பட்டன.

**இயக்கப் பணிகள்**

புதுச்சேரியில் முதன் முறையாகத் தி.மு.க மாநாடு 1959 ஆம் ஆண்டு மே மாதம் 2,3 தேதிகளில் நடைபெற்றது. இம்மாநாட்டு வரவேற்புக் குழுவின் செயலராகச் சிவப்பிரகாசம் பணியாற்றினார். மாநாட்டிற்குத் தலைவர்களைப் பேச அழைத்து, நிகழ்ச்சிகளை நெறிமுறைப்படுத்திச் சற்றேறக் குறைய தி.மு.கவின் அனைத்துத் தலைவர்களையும் அழைத்து இம்மாநாடு புதுவையில் நடத்தப்பட்டது. இம்மாநாடு வெற்றிகரமாக நடந்தேறியதாகவும், மாநாட்டை முன்னின்று நடத்திய சிவப்பிரகாசம், வழக்கறிஞர் சு.பெருமாள் ஆகியோருக்கு நன்றி தெரிவித்தும் திராவிட இயக்க இதழ்கள் செய்தி வெளியிட்டன.

பிரான்சு-இந்தியா ஒப்பந்த வரையறைக்குள் உள்ளபடி புதுச்சேரிப் பகுதிகளுக்கு 1954 - ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டசபைத் தேர்தலில் புதுவைத் தி.மு.க. பங்கேற்கவில்லை. அடுத்து நடைபெற்ற 1959 சட்டசபைத் தேர்தலில் புதுவைத் தி.மு.க. பங்கேற்றது. ஆனால் புதுவைத் தி.மு.க. வெற்றிபெறவில்லை. தி.மு.க. வேட்பாளராகப் போட்டியிட்டவர்களுள் சிவப்பிரகாசமும் ஒருவர். அவர் போட்டியிட்ட தொகுதி காசுக்கடை.

1963 இல் புதுச்சேரிப் பகுதிகள் இந்தியா அரசாங்கத்தால் யூனியன் பகுதிளாக அங்கீகரிக்கப்பட்டன. யூனியன் பகுதிகளுக்கான சட்டத்தின்படி புதுச்சேரிக்கென்று ஒரு சட்டமன்றம் உருவாக்கப்பட்டு அதற்கான தேர்தல் நடைபெற்றது. இந்தத் தேர்தலிலும் காசுக்கடைத் தொகுதியில் தி.மு.க வேட்பாளராகச் சிவப்பிரகாசம் போட்டியிட்டுத் தோல்வியடைந்தார்.

**ஆசிரியர் பணி நீக்கம்**

தனியார் கல்வி நிறுவனமான சொசீயத்தே புரோகிரேஸ்த் என்னும் பள்ளியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்து வந்த சிவப்பிரகாசம் பணி மூப்பு காரணமாக ஓய்வு பெற்றார் என்று அந்நிர்வாகம் அறிவித்தது. ஆனால் ஓய்வூதியமோ முன்னறிவிப்போ எதுவும் தரப்படவில்லை. 1964-ஆம் ஆண்டில் காசுக்கடைத் தொகுதியில்

போட்டியிட்டுத் தோல்வியுற்ற அவரை 1965-ஆம் ஆண்டில் பள்ளி நிர்வாகம் அரசியல் ஈடுபாடு என்ற காரணத்தைக் காட்டி வேலை நீக்கம் செய்துவிட்டது. தனிப்பட்ட முறையிலும், புதுவைச் சிவம் பலபேருக்குத் தமிழ்க் கற்பித்து வந்தார்.

ஆனால் தம்மை வேலையினின்று நீக்கப்பட்டதாகவே சிவப்பிரகாசம் கருதினார். அந்த நிலையில் அவர் பெற்று வந்த மாத ஊதியம் தொண்ணூறு ரூபாய். இந்த நிலையில் வேறு வருமானம் ஏதும் இல்லாத நிலையில் தனியார் பயிற்சிப் பள்ளியில் பகுதிநேரத் தமிழாசிரியராகப் பணி புரிய ஆரம்பித்தார். இக்காலக் கட்டத்தில் வறுமையால் மிகுந்த வாட்ட முற்றார் சிவப்பிரகாசம்.

**புதுச்சேரி நகரத்துணை மேயர்**

தமிழ்நாட்டிலும், புதுச்சேரியிலும் தி.மு.க. மிகப்பெரும் அரசியல் இயக்கமாக வளர்ந்து கொண்டு வந்தது. 1967 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் நடை பெற்ற சட்டமன்றத் தேர்தலில் பெரும்பான்மை இடங்களை வென்று அது ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியது. அறிஞர் அண்ணா தமிழ்நாட்டின் முதலமைச்சர் ஆனார். இதனைத் தொடர்ந்து புதுச்சேரியிலும் தி.மு.க.வின் எழுச்சி குறிப்பிடத்தக்க அளவில் இருந்தது. 1968 ஆம் ஆண்டில் நடைபெற்ற புதுச்சேரி நகர மன்றத் தேர்தலில் தி.மு.க. பெரும்பான்மை இடங்களை வென்றது. முத்தியால்பேட்டையில் உள்ள செவராயப்பேட்டைத் தொகுதியில் சிவப்பிரகாசம் வெற்றி பெற்றார். பின்னர், குபேர் புதுச்சேரியின் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். துணை மேயர்களுள் ஒருவராகவும், முத்தியால்பேட்டை மேயராகவும் சிவப்பிரகாசம் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**பாராளுமன்ற உறுப்பினர்**

1969 ஆம் ஆண்டு புதுச்சேரிக்கான மாநிலங்களவை உறுப்பினர் தேர்தல் நடைபெற்றது. அப்போது புதுச்சேரியில் தி.மு.க. அரசாங்கம் செயலபட்டுக் கொண்டிருந்ததால் தி.மு.க. சார்பில் ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுக்கத் தேர்வு நடைபெற்றது. தி.மு.க.வின் கூட்டணிக் கட்சிகளும் ஒரு சேர ஆதரித்த உறுப்பினராகச் சிவப்பிரகாசம் இருந்தார். அதனால் மாநிலங்களவை உறுப்பினராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1969 ஆகஸ்ட் மாதம் முதல் 1975 வரை

இந்தப் பதவியில் அவர் நீடித்தார். நாடாளுமன்ற மேல் அவையில் முதன்முதலில் தமிழில் உரை நிகழ்த்தியவர் இவரே. தமது பதவிக்காலம் முழுவதிலும் பாராளுமன்ற உரைகளை அவர் தமிழிலேயே முழங்கினார். மாநிலங்களவையில் தி.மு.க. கொறடாவாகவும் அவர் செயல்பட்டார். பாராளுமன்ற மேலவையில் முதன்முதலாகப் புதுச்சேரிக்கு மாநிலத் தகுதி வேண்டும் என்று 17.12.1970 ஆம் ஆண்டில் அவர் உரையாற்றினார்.

இந்தக் காலக்கட்டத்தில் புதுச்சேரியின் பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் அவர் மாநிலங்கள் அவையில் உரையாற்றினார். இராஜமானிய ஒழிப்பு மசோதா ஆதரவு, பிரெஞ்சு ஆட்சிக் காலத்து அரசு ஊழியர்களுக்குச் சம்பளச் சலுகை உயர்வு, பாராளுமன்ற மேலவையில் தமிழில் பேச வசதி, பாரதிதாசன் அஞ்சல் தலை, சாதி மதக் கலவரங்களைத் தடுக்கப் பகுத்தறிவுப் புரட்சி தேவை, அரசியல் இதழ்களுக்கு அரசாங்கம் நிதியுதவி, தேசியச் சின்னங்களைக் கட்சி நலனுக்குப் பயன்படுத்தக் கூடாது, புதுவை, மரக்காணம் வழியாகச் சென்னைக்கு இரயில் வசதி, புதுச்சேரிக்குக் கூடுதல் நிதி போன்ற பிரச்சினைகளிலும் அவர் பாராளுமன்ற மேலவையில் உரை நிகழ்த்தியுள்ளார்.

## பாரதிதாசன் விருது

தமிழக அரசு ஆண்டு தோறும் வழங்கி வரும் பாரதி தாசன் விருது சிவப்பிரகாசத்துக்கு 1983 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. பாரதிதாசனோடு நெருங்கிய நட்புக் கொண்டவராகவும், அவரது படைப்புகள் நூலாக்கம் பெறக் காரணமாக இருந்ததற்காகவும் இவ்விருது சிவப்பிரகாசத்திற்கு வழங்கப்படுவதாகத் தமிழக அரசின் செய்தி வெளியீடு குறிப்பிடுகிறது. மதுரையில் நடைபெற்ற தமிழ்நாடு அரசு விழாவில் பாரதிதாசன் விருதினை அன்றைய சட்டப் பேரவைத் தலைவர் சிவப்பிரகாசத்துக்கு அணிவித்தார். பாரதிதாசன் உருவம் பொறித்த நான்கு சவரன் பதக்கமும், மாதந் தோறும் ரூ. 500 உதவி நிதியும் இவ்விருதினால் சிவப்பிரகாசத்திற்குக் கிடைத்தன. தம்முடைய இறுதிக் காலத்தில் இத்தொகை தம்முடைய மருத்துவச் செலவிற்கு மிகவும் உதவியாக இருந்ததாகச் சிவப்பிரகாசம், தமிழ்நாடு அரசின் முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்து எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

## எண்பதாம் ஆண்டு விழா

1988 ஆம் ஆண்டில் எண்பதாம் அகவையை நிறைவு செய்த சிவப்பிரகாசத்திற்கு அவருடைய பிறந்த நாளான அக்டோபர் 23-இல் எண்பதாம் ஆண்டு நிறைவு விழா கொண்டாடப்பட்டது. அவருடைய நண்பர்களும் உறவினர்களும் இந்நிகழ்ச்சியில் பங்கு கொண்டனர்.

## மரணம்

உடல் நலம் குன்றியிருந்த சிவப்பிரகாசம் தமது 81 ஆவது வயதில் புதுவைப் பொது மருத்துவமனையில் 1989 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31-ந் தேதி காலமானார். தம்முடைய மரணச்சீட்டு எப்படி அச்சடிக்கப்படவேண்டும் என்று அவர் தன்னுடைய கைப்பட எழுதி வைத்திருந்தார். எந்தவிதமான சடங்குகளும் தமது இறுதி நிகழ்ச்சிகளில் இடம் பெற்று விடக்கூடாது என்ற எண்ணத்தில் அவர் தம் மரணச்சீட்டைக் கூடத் தாமே எழுதி வைத்திருந்தார். இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த அவரது உடல் மீது, திராவிடர் கழகத்தின் கொடியும், திராவிட முன்னேற்றக் கழகக் கொடியும், அவரது இறுதி விருப்பப்படி போர்த்தப்பட்டிருந்தன. அவருடைய இறுதி நிகழ்வில் கூட அவர் முன்னரே வெளிப்படுத்திய நெறிமுறைகள், இயக்கக் கௌ்கைகளை அவர் எந்த அளவு உள்வாங்கியிருந்தார் என்பதையும், அவற்றோடு எங்ஙனம் ஒன்றியிருந்தார் என்பதையுமே காட்டுவதாக அமைகின்றன.

## மரணத்திற்குப் பிறகு

1993 ஆம் ஆண்டில் 'கவிஞர் புதுவைச்சிவம் இலக்கியப் பேரவை' என்ற அமைப்பு புதுவைத் தமிழறிஞர்களால் உருவாக்கப்பட்டது. புதுவைச்சிவம் பிறந்தநாள், அரசு விழாவாகக் கொண்டாடப்படும் என்று புதுச்சேரி அரசு அறிவித்து, 1977 ஆம் ஆண்டு முதல் கொண்டாடி வருகிறது. புதுவை அரசின் கலை பண்பாட்டுத்துறை மூலம் கவிதை நூல்கள் தொகுக்கப்பட்டு 1997 ஆம் ஆண்டிலும், புதுவைச் சிவத்தின் எட்டு நாடகங்கள் தொகுக்கப்பட்டு 2000 ஆம் ஆண்டிலும் வெளியிடப்பட்டன. 2002 ஆம் ஆண்டில் புதுச்சேரி அரசால் புதுவைச்சிவம் முழு உருவச்சிலை புதுச்சேரி, காமராசர் சாலையில் அமைக்கப்பட்டு ஆண்டுதோறும் அவரது நினைவு நாளும், பிறந்தநாளும் புதுவை அரசின் செய்தி

விளம்பரத்துறையால் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆய்வு நிறுவனம், புதுவைச்சிவம் கவிதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து 2003ஆம் ஆண்டு வெளியிட்டது. அதே நிறுவனத்தில் புதுவைச்சிவம் இலக்கியப் பேரவை சார்பில் "புதுவைச்சிவம் அறக்கட்டளை" 2004ஆம் ஆண்டு நிறுவப்பட்டு ஆண்டுதோறும் கருத்தரங்கம் நடைபெற்று வருகிறது. கவிஞர் புதுவைச்சிவம் நூற்றாண்டை (2007-2008) புதுச்சேரி அரசும், புதுச்சேரி, தமிழகத்தைச் சேர்ந்த பல்வேறு தமிழ் அமைப்புகளும் அரசியல் கட்சிகளும் கொண்டாடின. புதுவைச்சிவம் படைப்புகளைத் தமிழக அரசு அவரது நூற்றாண்டில் நாட்டுடைமை ஆக்கியுள்ளது. புதுவை, சென்னைப் பல்கலைக்கழகங்கள் நூற்றாண்டுக் கருத்தரங்கை நடத்தின. நூற்றாண்டை ஒட்டிப் புதுவைச்சிவம் நினைவாக அருங்காட்சியகமும், வளைவுத் தூணும் அமைக்கப்படும் என்று புதுச்சேரி அரசு அறிவித்துள்ளது.



# நேர்காணல்கள்

## "கனிந்த நினைவுகள்"

**(புதுவை அரசின் கலை பண்பாட்டுத்துறை 2000 ஆம் ஆண்டில் தொகுத்து வெளியிட்ட 'புதுவைச் சிவம் நாடகங்கள்' என்ற நூலில் 'கனிந்த நினைவுகள்' எனுந் தலைப்பில் வெளியான பகுதி (பக். 425-438) இங்கே தரப்பட்டுள்ளது).**

கவிஞர் புதுவைச் சிவத்தின் நாடகங்களில் நடித்தவர்களில் ஒரு சிலர் இன்றும் வாழ்ந்து வருகின்றனர். நாடகம் நடைபெற்ற அக்காலச் சூழலையும், நாடகம் நடைபெற்ற விதம், நாடகம் நடத்தப்பட்ட நோக்கம், நாடக ஒத்திகை நிகழ்வுகள் எனப் பல அரிய தகவல்களை அவர்களிடம் நேர்காணல் நிகழ்த்தியபோது அறிய முடிந்தது. புதுவைச் சிவத்தின் நாடகங்களில் நடித்த உப்பளம் திரு. கோவிந்தராஜ் கொரிதோம், கதிர்காமம் திரு.வை.தணிகாசலம், புதுவை திருமதி தமிழ்ச்செல்வி, புதுவைச் சிவம் நாடகங்களைப் பற்றிப் பல தகவல்கள் அறிந்தவரான பத்திரிக்கையாளர் திரு.கஜேந்திர பாஸ்கரா, கவிஞரின் மனைவி திருமதி ஜெகதாம்பாள் ஆகியோரின் நினைவலைகள் சில இப்பகுதியில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. நேர்காணல் நிகழ்த்தப்பட்ட நாள்கள் அவரவரைப் பற்றிய அறிமுகக் குறிப்புகளுடன் கொடுக்கப்பட்டுள்ளன. இந் நேர்காணல்களை நிகழ்த்தியவர் முனைவர் சிவ. இளங்கோ.

### "தொண்டு செய்து பழுத்த பழம்"

கவிஞர் புதுவைச்சிவம் அவர்களால் இயற்றப்பட்டு 1941 இல் மேடையேற்றம் கண்ட, "சமூக சேவை" என்ற நாடகத்தில் முக்கிய வேடமேற்று நடித்த திரு.கோவிந்தராஜ் கொரிதோம் அவர்களை 15.4.94 அன்று நேர்முகம் கண்டோம்.

பதப்படுத்தப்பட்ட ஆலிவ் விதையைப்போல, தமது எண்பதாவது வயதில், எண்ணங்களைக் கோர்வையாக்கச் சற்று சிரமப்பட்டுக் கொண்டிருந்தார் கொரிதோம். அவரும், அவரது நண்பர்களான வள்ளுவதாஸ், துரை, ஏகானந்தன், சாமு ஆகியோர் கால்பந்துக் குழுவில் இணைந்து செயல்பட்டதையும், அவர் கப்பித்தானாக (Captain) விளையாடியதையும், அந்த அணி தோற்றறியாத வரலாற்றையும், எத்துவால் துய் மத்தேன் என்னும் மன்றம் பாடசாலை விளையாட்டுச் சங்கமாக மாறியதையும், அதற்கான வசூல் வேண்டி நாடகம் நடத்தியதையும் துண்டு துண்டாக நினைவுகூர்ந்தார். இந்தக் கலாசாலைச் சங்கத்திற்குக் கிறித்தவர் எதிர்ப்பு இருந்ததையும், தாங்கள், அதைச் சமாளிக்கக் கைகலப்பில் கூட இறங்கி வெற்றி பெற்றதையும் நினைவில் கொண்டு வந்த அவர், மேலும் ச. சிவப்பிரகாசம் நாடகங்கள் கடவுள் கொள்கைக்கு எதிராகவும், சமூகச் சீர்திருத்த நாடகங்களாகவும் இருந்ததால் இயல்பாகவே பழமையில் ஊறிவிட்ட சமூகப்பின்னணியைக் கொண்ட சமுதாயத்தினருக்கும் அதில் எதிர்ப்பு இருந்ததையும் தாங்கள் அடிதடிகளில் ஈடுபட்டதனால்தான் அந்த எதிர்ப்புகளைச் சமாளிக்க முடிந்ததையும் அவர் நினைவைக் கசக்கித் தெரிவித்தார்.

மேலும் நாடகம் நன்றாக நடந்த நிகழ்வுகள், அதில் ச.சிவப்பிரகாசம் கலந்து கொண்டது, நாடகம் கெப்ளே தியேட்டரில் நடைபெற்றது, அதிக அளவில் கும்பல் வந்தது, பாரதிதாசன் தலைமை தாங்கி நடத்தியது, உருளையன் பேட்டை வீரப்பசாமி, கணபதி சகர், தியாகி மிசேல் போன்றோர் கலந்து கொண்டது, நாடகத்தில் நடித்தது மட்டுமன்றித் தாம் கோரசும் பாடியது ஆகிய பல அரிய நினைவுகளைத் திரு.கொரிதோம் வெளிப்படுத்தினார். ஒரு கால் சற்றுப் பாதிக்கப்பட்டிருந்த நிலையிலும் நம்மை அவர் அன்புடன் வரவேற்று, காலத்தைப் பின்னோக்கிய நினைவுகளை அள்ளித் தெளித்தமைக்கு நன்றி கூறி விடைபெற்றோம்.

## "குமரிக் கோட்ட நாயகி"

பேரறிஞர் அண்ணாவின் "குமரிக்கோட்டம்" நாவலை, கவிஞர் ச. சிவப்பிரகாசம் நாடகமாக எழுதினார். அந்நாடகம் புதுவைக் கெப்ளே தியேட்டரில் பாவேந்தர் பாரதிதாசன் தலைமையில் நடைபெற்றது. இந்நாடகத்தில் கதாநாயகியாக நடித்த திருமதி தமிழ்ச்செல்வி அவர்களை நேர்முகம் கண்டபோது (16.4.94) அவ்வம்மையார் தெரிவித்த செய்திகள் கீழே தொகுத்தளிக்கப்படுகின்றன.

"என்னோட பேரு பிரமிளா ஒதேத். நாடகத்திற்காகத் தமிழ்ச் செல்வியானேன். நான் சின்ன வயசிலேயே நாட்டியம் கத்துக்கிட்டேன். எஸ். கே. சாமிநாதப் பிள்ளை என்பவர்தான் என் குரு. சின்னாஸ் வீட்டில்தான் பயிற்சி நடக்கும். என்னோட லில்லியான், நதியான், கிறிஸ்தியான்னு இன்னும் மூன்று பெண்களும் நடனம் கத்துக்கிட்டாங்க. நான் சீக்கிரம் கற்றுக்கிட்டதால அவங்களுக்கு என் மேல பொறாமை. அதனால் எங்க வீட்டிலேயே பயிற்சி வச்சிக்கலாம்னு எங்கம்மா சொன்னாங்க. ஆனா குரு அவ்வளவு சீக்கிரம் எங்க வீட்டுக்கு வரலை. 3 மாசம் கழித்துதான் வந்தார். 'இவளுக்கு ஒரு அடவு கூடத் தெரியல, என்னா டான்ஸ் கத்துக்குடுத்தீங்ன்னு' எங்கம்மா கேக்கவும், 'காலை ஒடிச்சிடறேன் வா'ன்னு அன்றிலிருந்து எங்க வீட்டிலேயே நடனம் கற்றுக் கொடுத்தார். சீக்கிரமே நான் ஆடக் கத்துக்கவும் என்பேர்ல ரொம்ப அபிமானம் குருவுக்கு. என்னோட பரதநாட்டியம் அரங்கேற்றம் 1951ல் மேயில் (நகரமன்ற அலுவலக அரங்கில்) நடந்தது. சுத்தானந்த பாரதியார் தலைமை தாங்கினார். 'நடனமணி'ன்னு பட்டமெல்லாம் குடுத்தாங்க. ரொம்பப் பெரிய மனுஷங்க வீட்டு விசேஷத்துல எல்லாம் நடனமாடியிருக்கேன். கவர்னர், செக்ரெத்தேர் (அப்போது ஷாந்திலியே) இன்னும் அந்த மாதிரிப் பெரியவுங்க பார்ட்டி கொடுக்கும் போது நடனம் ஆடக் கூப்பிடுவாங்க.

அப்பத்தான் நாடகத்திலியும் நடிக்க ஆரம்பிச்சேன். 1948, 1949 லன்னு நினைக்கிறேன். அப்போ எனக்கு 11 வயசுதான். சொல்லுவாங்க, நடிப்பேன், அவ்வளவுதான். நாடகம், ஒத்திகைன்னா சரியா ஒரு ஐந்து நிமிஷம் முன்னாடிதான்

நானும் என் அம்மாவும் போவோம். முடிஞ்சதும் திரும்பிடுவோம். ஒத்திகை பெரும்பாலும் ரெவேய் சொசியால்லதான் (லப்போர்த் வீதி) நடக்கும். 'குமரிக் கோட்டம்' நாடகம் நல்லா ஞாபகமிருக்குது. அதான் உங்கப்பா (ச.சிவப்பிரகாசம்) எழுதின நாடகம். இது இல்லாம 'பழமையில் பயங்கரம்', 'குப்பையில் மாணிக்கம்' விக்தோர் (தமிழ்நேசன்) வசனம் எழுதிய நாடகம், அப்புறம் ஆந்திரே மரியின் 'வெற்றி வீரன்'னு இப்படி பல நாடகத்துல நடிச்சிருக்கேன். ரொம்பச் சின்ன வயசா இருந்ததினால கதை, மற்ற விஷயங்கல்லாம் எனக்கு அவ்வளவா ஈடுபாடு இல்லை. அதனால வேற எதுவும் நினைப்புக்கு வரலை".

தமது மலரும் நினைவுகளைச் சுருக்கமாகச் சொன்ன திருமதி தமிழ்ச்செல்வி அவர்கள், மிக அரியதொரு செய்தியையும் தமது நேர்முகத்தினூடே தெரிவித்தார்.

"நான் நல்லாவும் பாடுவேன். நாடகத்துல மட்டும் இல்லாம வேற ஏதாவது கூட்டம்னா கூட அதுல பாட வேண்டியிருந்தா என்னைக் கூப்பிடுவாங்க. பல கூட்டங்கள்ல பாரதிதாசன் பாட்டு, உங்கப்பா பாட்டு நிறையப் பாடியிருக்கேன். ஒரு சமயம் உப்பளத்தில ஒரு கூட்டம். பாரதிதாசனுக்கு வரவேற்புக் கூட்டம்னு ஞாபகம். அதுல மூணு பாட்டுப் பாடினேன். அந்தப் பாட்டுங்க பாரதிதாசன் எழுதினதா, இல்லை உங்கப்பா எழுதினதான்னு தெரியல. ஆனா இவங்க ரெண்டுபேர்ல ஒருத்தரோட பாட்டுதான் அது. அதுல, ஒன்னு 'சந்திரலேகா' திரைப்படத்துல கலைவாணர் என்.எஸ். கேவும் மதுரமும் பாடற 'ஐலேலோ பக்கிரியாமா' மெட்டுல அந்தப் பாட்டைப் பாடினேன்.

அந்தோ இப்படியாம்மா
அந்நியன்சொல் இந்தி இங்காமா
அந்தோ இப்படியோ, இப்படியோ, இப்படியோ இப்படியோம்மா
ஆடுமாடு மேய்க்க வந்த
ஆரியப் பதர்களையே
அடிவாரடி அடித்து ஒட்டிவிட்டோம் ஒஹோ ஓ... ஓ...
....
.........."

இதற்கு மேல் இந்தப் பாட்டு திருமதி தமிழ்ச்செல்வி அவர்களுக்கு நினைவில்லை. இந்தப்பாட்டை 'ஐலேலோ' மெட்டில் மிக இனிமையாகப் பாடிக் காண்பித்தார். அவர் பலமுறை முயன்றும் நினைவின்மையால் பாடலை முழுமையாக்க முடியவில்லை, என்றாலும் இவ்வளவு அரிய செய்திகளைச் சொன்ன திருமதி தமிழ்ச் செல்வி அம்மையாருக்கு மனங்கனிந்த நன்றியைத் தெரிவித்து விடைபெற்றோம்.

## "தகவல் சுரங்கம்"

**பத்திரிக்கையாளர் திரு.கஜேந்திர பாஸ்கரா பாரதி தாசனுடனும், புதுவைச் சிவத்துடனும் நெருங்கிப் பழகியவர். அவர்தம் நினைவுகள் (16.4.1994இல்) இங்கே தொகுத்துத் தரப்படுகின்றன.**

1941ம் ஆண்டு என்று நினைவு. அப்போது எனக்கு வயது 6 இருக்கும். எங்கள் இருப்பிடமான உப்பளத்தில் இருந்து ஒரு சில முதியவர்களைத் தவிர ஆண்களும், பெண்களும் குழந்தைகளுமாக எல்லோரும் நடந்தே வந்தோம், புதுவை டூப்ளே வீதியில் இருந்த கெப்ளே தியேட்டருக்கு. அன்று 'சமூக சேவை' எனும் நாடகம். நாடக ஆசிரியர், கதை வசனகர்த்தா புதுவைச் சிவம் எனும் ச.சிவப்பிரகாசம் அவர்கள். எங்கள் ஊரைச் சேர்ந்தவர்களும், உறவினர்களும் அந்நாடகத்தில் முக்கிய வேடம் கொண்டு பங்கு வகித்ததால் எங்கள் ஊரே அந்நாடகத்திற்குத் திரண்டிருந்தது. நாடகத்திற்கு நல்ல கும்பல். நாடகம் முடிந்து அனைவரும் நடந்தே வீடு திரும்பினோம். இரயில்வே நிலையம் அருகே ஒன்றும், இப்போதிருக்கும் தண்ணீர்த் தேக்கம் அருகில் ஒரு விளக்கும் வழி காட்டிக் கொண்டு நிற்கும். எனக்கு அப்போது சிறுவயது என்பதால் நாடகத்தைப் பற்றி வேறு எதுவும் குறிப்பிட்டுச்சொல்ல முடியவில்லை. ஆனால் சில பாடல் வரிகள் இன்னும் நினைவில் உள்ளன. "மாநிலம் போற்றிடும் பாதை - அது மாண்புறும் சுயமரியாதை" என்ற பாடலும் "ஆத்திகம் மெல்ல அழியலாமோ நாத்திகம் பரவலாமோ அடடா இது என்ன நியாயமோ" என்ற வரிகளும் எப்போதும் நினைவில் உள்ளன.

நாடகத்தில் மட்டுமல்லாது அந்தப் பாட்டைப் பாடி நடித்த எனது மாமாவும், அண்ணனும் அடிக்கடி ஒத்திகை பார்க்கும் போதும், வீட்டிலும் அந்தப் பாடல்களைப் பாடிக் கொண்டிருந்ததால் அது என் நெஞ்சில் நிலைத்துவிட்டது. உப்பளம் சமூகச் சீர்திருத்த வாலிபர் சங்கம் என்று ஓர் அமைப்பை ஏற்படுத்தி அதன் மூலம் புதுவைச் சிவத்தின் பல நாடகங்கள் நடத்தப்பட்டன. கவிஞரோடு நெருங்கிப் பழகி, நாடகம் ஏற்பாடு செய்தும், நடித்தும் சேவை செய்த தோழர்கள் பலர். பெருமாள், தர்மசிவம், மாணிக்கவேல் சகர், பலராம் குளோவிஸ், மாணிக்க சாமி கிளேர், ஜகந்நாத காணன், பக்கிரி திவிதேர் ஆகியோர் அதில் குறிப்பிடத்தக்கவர்கள்.

எங்கள் ஊரை மதித்து வருபவர்களைத்தாம் நாங்களும் மதிப்போம், பாரதியைப்போல. அப்படித்தான் எங்களூருக்கு அடிக்கடி வந்தவர் ச. சிவப்பிரகாசனார். எனது பெரியப்பா கேசவன் வீட்டுத் திண்ணையில் வந்தமர்வார். உப்பளம் பகுதியில் கேசவன்தான் முதன் முதலாகச் சுயமரியாதை இயக்கம் ஆரம்பித்தவர். பாரதிதாசனும், சிவப்பிரகாசமும் அடிக்கடி உப்பளம் வருவார்கள். சுயமரியாதை இயக்கம் தாழ்த்தப்பட்டோர் உரிமைக்குப் போராடி வந்ததால் அப்போது உப்பளம் பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் அனைவரும் பாரதிதாசனுக்கும், சிவப்பிரகாசத்துக்கும் ஆதரவாய் இருந்தனர். கேசவன் அப்போது ரோடியர்மில் சுயமரியாதைத் தொழிற்சங்கத் தலைவராக இருந்தார். அப்போது வ. சுப்பையா அரிசன சேவா சங்கம் சார்பில் சேரிகளில் சீர்திருத்தம் பரப்பிவந்தார். படித்த பிள்ளை இப்படி சேவை செய்கிறதே என்று சவானா ஆலைத் தொழிற்சங்கத் தலைவர் தாவீது, கேசவனிடம் அறிமுகப்படுத்தி வைத்தார். இதன் மூலம்தான் சுப்பையாவும் தொழிற்சங்க வாதியானார். எங்கள் ஊர்ப் பெரியவர்களிடம் புதுவைச் சிவம், சுயமரியாதை இயக்கத்தைப் பற்றியும் தந்தை பெரியார், பன்னீர் செல்வம் மற்றும் பல தலைவர்களைப் பற்றியும் கூறுவார். நான் ஓடிப்போய் பஜ்ஜி வாங்கி வந்து தட்டில் வைப்பேன். சாப்பிட்டுக் கொண்டு அனைவரும் நேரம் மறந்து பேசிக் கொண்டிருப்பர். எனது பெரியப்பா கேசவன் ஒரு வாசக சாலை நடத்தி வந்தார். கிறிஸ்தவர்களுக்குப் பாதிரிமார்கள் நடத்தும்

பள்ளிகள் இருக்கக், கலவை சுப்புராய பள்ளி போன்றவைகளில் தாழ்த்தப்பட்டவர் களுக்குப் போதிய இடமில்லை. இடமிருந்தாலும் மற்றவர்களோடு போட்டியிட முடியவில்லை. எனவே அவர்களுக்கென்று ஒரு வாசக சாலையைப் புதுச்சேரியிலேயே முதன்முதலாக, எனது பெரியப்பா கேசவன், உப்பளத்தில்தான் துவக்கினார். பின்னர் இந்த வாசக சாலை படிப்பு மட்டுமன்றி விளையாட்டுப் பயிற்சியும் அளிக்கும் பயிற்சிக் கூடமாயிற்று. அதற்குத் தகுந்தாற் போல் தெவியோ என்ற பாதிரியாரின் ஆலோசனையின் பேரில் அவ்வாசக சாலையின் பெயர் சொசீயத்தே எத்துவால் தூய் மத்தேன் (Societe Etoile du matin) என்று மாற்றப்பட்டது. வாசகசாலை விரிவுபடுத்தப்பட வேண்டுமானால் பொருள் வேண்டுமல்லவா? அதற்குக் கவிஞர் சிவத்திடம் ஆலோசனை கேட்டனர். அவர் என்ன செய்வார். அவர் சொத்தும் வறுமைதானே. ஆனாலும் தமது நாடகங்களை நடத்திக் கொள்ள இசைவு தந்தார் அப்படியாவது சீர்திருத்தம் பரவட்டுமே என்று அவருக்கு ஆசை. அதன்படியே அவருடைய 'சமூக சேவை' நாடகம் பலமுறை நடத்தப்பட்டு அதில் கிடைத்த வருவாயைக் கொண்டு 'எத்துவால் துய் மத்தேன்', பாட சாலைக்குக் கட்டடம் கட்டப்பட்டது. அதில் இரவுப் பாட சாலையும் நடந்தது. உண்மையான ஒரு சுயமரியாதைக்காரராக இறுதி வரை வாழ்ந்தவர் புதுவைச் சிவம். மிகவும் மென்மையானவர். ஆனால் கொண்ட கொள்கையில் உறுதியானவர். சுயமரியாதை என்றால் என்ன என்றுணர்ந்து அதன் வழியில் இயக்கத்தை நடத்தி வந்தார். அவர் பழகியதெல்லாம் பெரியார், அண்ணா, பாரதிதாசன் போன்ற பெரிய பகுத்தறிவாதிகளிடம். அதனால்தான் அவரும் அப்படி இருந்தார். நான் 20 ஆண்டுகளுக்கும் முன்னர் ஒருமுறை அவரைச் செயின்ட்தெரேஸ் வீதியில் வழியில் சந்தித்தேன். பொதுவான விஷயங்களும், அரசியல் நிலைகள் குறித்தும் பேசினோம். இப்படியெல்லாம் இயக்கம் வளர்த்துவிட்டு இப்போது யார் யாரோ வருகிறார்கள். நீங்கள் ஒதுங்கிவிட்டீர்களே என்று கேட்டேன். அதற்கு அவர், "ஈட்டி எட்டின வரை பாயும்; பணம் பாதாளம் வரை பாயும்" என்றார். அதுதான் அவரை நான் கடைசியாகச் சந்தித்தது.

## "நான் அவர் சேவகன்"

***புதுவைச் சிவத்தின் அணுக்கத் தொண்டராக இருந்தவரும், அவரது பல நாடகங்களில் நடித்தவருமான கதிர்காமம் வை. தணிகாசலம் என்பவரின் நினைவிலிருந்து.... (29.5.94)***

நான், அவருக்குச் சேவகன் போல் பலகாலம் அவருடனே தோழமையுடன் பழகி வந்தேன். அவரது பல நாடகங்களில் நடித்தேன். நிறைய நாடகங்கள் அவர் எழுதி, இயக்கிப் புதுவையின் பல பகுதிகளிலும் நடைபெற்றன. எல்லாம் சீர்திருத்த நாடகங்கள்தாம். பெரும்பாலும் பாரதிதாசன்தான் தலைமை வகிப்பார். நீதிவர்மன் என்று ஒரு நாடகம். கதை தேசிகம் பிள்ளை எழுத, வசனமும் பாடல்களும் புதுவைச் சிவம் எழுதினார். தமிழ்க் கல்விக் கழகத்தின் நிதிக்காக அந்த நாடகம் நடத்தப்பட்டது. அதில் நான் சுகுணவதி என்னும் பெண் வேஷம் போட்டேன். ஒரு காட்சியில், காளிகோயிலின் முன் காதலன் கத்திக் குத்துப்பட்டுக் கிடக்க நான் அலறி, "நாதா, என்னைக் கைவிட்டீரா, நான் என்ன செய்வேன். என்னே என் நிலைமை. தாயும் இழந்தேன், தந்தையும் இழந்தேன், சுற்றத்தாரையும் இழந்தேன்" என்று வசனம் பேசிப் பாட வேண்டும். ஒத்திகையில் பலமுறை இந்தக் காட்சியில் நான் சரியாக நடிக்கவில்லை என்று புதுவைச் சிவத்திற்குக் கோபம். அதனால் அப்போது ஓடிக்கொண்டிருந்த 'பாலநாகம்மா' படத்திற்கு என்னை அனுப்பி வைத்தார். 10 தடவை இப்படி அனுப்பினார். இதற்குப் பிறகும் நான் சரியாக நடிக்க வில்லையென்று, "சீ! போடா" என்று சொல்லிவிட்டார், என் வாழ்நாளில் கடுமையாக அவர் சொன்ன சொல் இதுதான். எப்பவும் சாந்தமாகச் சிரித்த முகத்துடன் தான் பேசுவார். அவர் போய் இப்படி சொல்லி விட்டாரே என எனக்கும் ஆத்திரம். கூட இருந்த தேசிகம் பிள்ளையும் 'போடா' என்று சொல்லிவிட அத்துடன் ஒத்திகை முடிந்தது. புதுவைச் சிவம் என் மேல் கோபப்பட்டாரே என்று என் மனம் வாடிக் கொண்டிருந்தது. எந்த நேரமும் அதே உறுத்தல். அந்த வேகமும் கோபமும் சேர்ந்து அடுத்த ஒத்திகையில் விசாரத்தோடு

நடித்தேன். ஒழுங்காக வந்தது. புதுவைச் சிவமும், தேசிகம் பிள்ளையும் நிறைவுற்று என்னைப் பாராட்டினார்கள். இந்த நாடகம் புதுவையிலும், கடலூர் மஞ்சக்குப்பம் முத்தையா அரங்கிலும் நடைபெற்றது. கலெக்டர் முன்னிலை வகித்தார்.

**இந்நாடகத்தில் ஒரு பாடல்**

*மாநிலம் தன்னைப் போற்றும் மாகாளி தாயே*
*என் வர்மம் செய்மேல்*
*ஆனசாந்தசீலன் மீது ஆசையும் கொண்டேன்*
*.... நேசமும் கொண்டேன் ....*
*இன்றுந்தன் சன்னதி தன்னிலே மாமணமாம்*
*என்னரும் தாயே என் காதலரைக் காணோம்*
*..................*
*..................*
*ஏங்குதே நெஞ்சம்*
*ஏது காரணமோ? (மாநில)*
*“மாது நான் கொண்ட மனத்துயராலே*
*வாடி வருந்திடலானேன் - மண்மேலே”*

**மந்திரியாரிடம் பாடல்**

*மதியேமிகும் மந்திரியாரே நீரே*
*அந்த ஜெயசீலன் சிந்தை அறிந்தேனே*
*அவரின்றில் ஓர்*
*ஆடவரைப் பாரேன் (மதியே)*

**விதவை ஆனபின் ஒரு பாடல்**

*மாநிலத் தோற்றமெல்லாம் பொய்யே - அதில்*
*மாண்டு மடியும் நாமும் மெய்யே*
*தேனெனும் வாழ்வென்பார் பொய்யே - அது*
*திரையினில் தோன்றும் காட்சி மெய்யே*
*ஊனிரை மனிதர்க் காதல் - அவர்*
*உறுதி அழிக்கும் விஷமாகும்*
*வீணில் அதில் உழல வேண்டாம் நெஞ்சே*
*மேலாம் பதந்தனைக் காண்பாய் காண்பாய் (மானில)*

இதேபோலப் 'பூங்கொடி' எனும் நாடகம் கதை, வசனம், பாடல் எல்லாம் புதுவைச் சிவமே. ஒத்திகை பார்க்கப்பட்டது. இதில் வரும் பாடல்களுக்கு மெட்டுப் போட்டவர் தர்மராஜ். இதில்தான் "சாதியும் பேதமும் வீணாகுமே, தாரணி மாந்தர் யாவரும் சமமே" என்ற பாட்டு நான் பாடினேன்.

ஒருமுறை, தூத்துக்குடியில் நடைபெற்ற மாநாட்டுக்காக, புதுவைச்சிவத்துடன் நானும் சென்றேன். எங்களுடன் கனகலிங்கம், முத்தியால்பேட்டை வைத்தியநாதன், சித்தானந்தம், பார்த்தசாரதி அவர் மனைவி ஆக இத்தனை பேரும், வேறு சில தோழர்களும் தூத்துக்குடிக்கு இரயிலில் சென்று கொண்டிருந்தோம். எங்கள் எல்லோருக்கும் டிக்கெட் இருந்தது. ஆனால் பார்த்தசாரதியும் அவர் மனைவியும் ஒரே டிக்கெட்தான் வைத்திருந்தனர். ஞாபக மறதியோ, அல்லது கணக்கில் விடுபட்டுவிட்டதோ தெரியாது. திண்டுக்கல் தாண்டி இரயிலில் டிக்கெட் பரிசோதனை நடந்தது. நான் எல்லோருக்குமாகச் சேர்த்து இருந்த டிக்கெட்டைக் கொடுக்க, பரிசோதகர் அவற்றை வாங்கிச் சரிபார்த்துவிட்டு நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள் எங்கே போகிறீர்கள் என்று கேட்டார். நாங்கள் சொன்னதும், புதுச்சேரியிலிருந்தா? உங்களுக்குக் கவிஞர் புதுவைச் சிவத்தைத் தெரியுமா? என்று கேட்டார். நாங்கள் தெரியும் என்றோம். தெரியுமா? அவர் பிறந்த ஊராக இருக்கின்றீர்கள் அவரையும் அறிந்திருக்கிறீர்கள். நீங்களா இப்படி செய்வது? என்று ஒரு டிக்கெட் குறைவதைக் குறிப்பிட்டுக் கேட்டார். நாங்கள் உடனே கணக்கில் தவறு நேர்ந்துவிட்டது. அதற்குண்டான பணத்தைச் செலுத்தி விடுகிறோம் என்று சொல்லிப் பின் புதுவைச் சிவத்திடம் போய் அறிமுகப்படுத்தி வைத்தோம். டிக்கெட் பரிசோதகர் அகமகிழ்ந்து, இவரா கவிஞர் புதுவைச் சிவம்? இத்தனை எளிமையாக இருக்கிறாரே என்று வியந்து, பின் அவருடைய கவிதைகளைப் பற்றியும், நாடகங்களைப் பற்றியும் அவரோடு நீண்ட நேரம் உரையாடி விட்டுத்தான் சென்றார்.

**இன்னும் பல அரிய, தகவல்களைத் தெரிவித்த திரு.தணிகாசலத்திற்கு நன்றி தெரிவித்து விடை பெற்றோம்.**

## "ஐம்பதாண்டுக்காலம் அவரோடு"

**கவிஞரின் மனைவி திருமதி ஜெகதாம்பாள் அவர்களிடம் நாடகம் தொடர்பான சில செய்திகளைச் சேகரித்தோம். *(31.8.2000).* அவரது நினைவுகளில் இருந்து...**

*காலையில் வீட்டைவிட்டுக் கிளம்பினால் ஆசிரியப்பணி முடித்து, கட்சிப்பணியும் முடித்து இரவு நேரஞ்சென்றுதான் வீடு திரும்புவார். வந்தபின் சாப்பிட்டுவிட்டு நெடுநேரம் எழுதிக் கொண்டிருப்பார். மண்ணெண்ணெய்யில் எரியும் பெரிய சிம்னி விளக்கும், தீந்தான் (இங்க்) தொட்டு எழுதும் கட்டைப் பேனாவும் (அப்பல்லாம் பவுண்டன் பேனா ஏது?) கையுமாகத்தான் இருப்பார். சில நேரம் இருமல் சத்தம் கேட்கும். எழுந்து வந்து பார்த்தால் சுருட்டுப் பிடித்துக்கொண்டு எழுதிக்கொண்டிருப்பார்.*

*அவருடைய நாடகங்கள் நிறையப் பார்த்திருக்கிறேன். கெப்ளே தியேட்டர், இப்போ பாரதிதாசன் மகளிர் கல்லூரி இருக்கும் இடத்தில் இருந்த தகரக்கொட்டா, சாராய ஆலைப் பக்கத்தில் மேடை போட்டும் நாடகங்கள் நடக்கும். வெளியூரில் இருந்தெல்லாம் வந்து நாடகப் புத்தகங்கள் கேட்பாங்க. வாங்கிக்கொண்டு போய் நாடகம் போடுவார்கள் அதற்குத் தலைமை தாங்கக் கூப்பிடுவார்கள். முடிந்தால் இவர் போவார். ஆனால் எந்த நாடகம் நடத்தவும் பணம் வாங்கியதில்லை. கருப்புச் சட்டை போட்டுக் கொண்டு யார் வந்து கேட்டாலும் நாடக நூலைக் கொடுத்து நடத்திக்கொள்ளுங்கள் என்று கொடுத்து விடுவார்.*

**(ரஞ்சித சுந்தரா (அ) ரகசிய சுரங்கம் நாடகப் பாட்டுகள் நூலில் சில பாடல்களில் ★ இக்குறியிட்டு, அவை தேசிங்குராஜன் கிராமபோன் செட்டில் உள்ளவை என்று குறிப்பிட்டிருக்கும் விவரத்தைச் சொல்லி, தேசிங்குராஜன் இசைத்தட்டுகள் பற்றியும் கேட்டதற்கு)**

*அந்தக் கிராமபோன் செட் அவரோட (புதுவைச் சிவத்தின்) சின்னம்மா வீட்டில் இருந்தது. எம்.கே. தியாகராஜ*

பாகவதரின் சிந்தாமணி, முதலான பழைய படங்களின் இசைத்தட்டுகளும் நிறைய இருக்கும். அத்துடன்தான் பாரதிதாசன் எழுதிய தேசிங்குராஜன் இசைத்தட்டுகளும் இருந்தன. தேசிங்குராஜன் பாட்டுகள் அப்போ ரொம்ப சிரிப்பாயும், கேட்க நல்லாவும் இருக்கும்.

*"அவுட்டு சத்தம் போட்டுப் பார்த்த போதிலும் - அட*
*செவுட்டுச் சிறுக்கி விழுமோ உந்தன் காதிலும்"*

*"புண்ணாக்குக்கு இப்போ என்ன அவசரம்*
*பிள்ளைக்கு இங்கே அடிக்குது நளிர் சுரம்".*

என்று அங்கங்கே சில வரிகள்தான் நினைவுக்கு வருகின்றன.

**இன்னும் சில பாடல் வரிகள்**

*"இது காலம் காத்திருந்தேனே*
*என் காதலா இன்று நானே*
*தீரனே கண்ணாளா?"*

*"அணையாத செந்தணல் குளிப்பேன்*
*ஆகா என் நெஞ்சம் தணிப்பேன்"*

*"தணலல்லவே என் ஐயா - என்*
*மணவாளரின் குளிர்மார்பு."*

*"சீலனே தயாளா தீர்ந்ததே என் வாழ்வு"*

**இப்படி பல பாடல்களையும், கவிஞர் புதுவைச் சிவம் அவர்களின் வாழ்க்கை நிகழ்வுகளையும் பெருமளவில் அவர்கள் நினைவு கூர்ந்தாலும், அவரது நாடகம் தொடர்பான செய்திகள் மட்டுமே தொகுத்துத் தரப்பட்டுள்ளன.**

# புதுவைச் சிவம் நாடக ஆவணங்கள்

## 1. அச்சில் வெளிவந்தவை

அ) நாடக நூல்கள்

1) கோகிலராணி மேலட்டை
2) கோகிலராணி உள்பக்க அட்டை
3) சிதைந்த வாழ்வு மேலட்டை
4) சிதைந்த வாழ்வு உள்ளட்டை

ஆ) நாடகப் பாட்டுகள்

1) ரஞ்சித சுந்தரா (அ) ரகசியச் சுரங்கம் மேலட்டை
2) சமூகசேவை மேலட்டை
3) சமூக சேவை உள்ளட்டை
4) சமூக சேவை கதைச் சுருக்கம்

இ) இதழ்களில் வெளியானவை

1) ஒவ்வா மணம் வெளிவந்த இதழ் முகப்பு
2) ஒவ்வா மணம் நாடகப் பக்கம்
3) மோட்சப் பித்து வெளிவந்த இதழ் முகப்பு
4) மோட்சப் பித்து நாடகப் பக்கம்
5) நிலம் யாருக்குச் சொந்தம் வெளிவந்த இதழ் முகப்பு
6) நிலம் யாருக்குச் சொந்தம் நாடகப் பக்கம்

## 2. கையெழுத்துப் படிகள்

அ) நாடகங்கள்

1) ரஞ்சித சுந்தரா (அ) ரகசியச் சுரங்கம் முகப்பு
2) ரஞ்சித சுந்தரா (அ) ரகசியச் சுரங்கம் முதல் பக்கம்
3) அமுதவல்லி (அ) அடிமையின் வீழ்ச்சி முகப்பு
4) அமுதவல்லி (அ) அடிமையின் வீழ்ச்சி முதல் பக்கம்
5) வீரத்தாய்
6) தமிழ்ச்சியின் தேச பக்தி
7) இராமாயண சாரம் (அ) தமிழரின் வீழ்ச்சி
8) கோவலன் கண்ணகி
9) வீரநந்தன்
10) காந்திமதி காட்சியமைப்பு
11) மூன்று பெண்கள் கதையமைப்பு
12) மூன்று பெண்கள் காட்சியமைப்பு
13) புதிய வாழ்வு
14) காதல் முன் கட்டுப்பாடு முகப்பு
15) காதல் முன் கட்டுப்பாடு முதல் பக்கம்

ஆ) நாடகப்பாட்டுகள்

1) அமுதவல்லி (அ) அடிமையின் வீழ்ச்சி
2) சிதைந்த வாழ்வு

## 3. நாடகத் துண்டறிக்கைகள் / விளம்பரங்கள்

1) ரஞ்சித சுந்தரா (அ) ரகசியச் சுரங்கம்
2) ரஞ்சித சுந்தரா (அ) ரகசியச் சுரங்கம்
3) கோகிலராணி
4) சிதைந்த வாழ்வு
5) சிதைந்த வாழ்வு நூல் விளம்பரம்
6) கோகிலராணி நூல் விளம்பரம்

## 4. நாடக மதிப்பீடுகள்

1) நகரதூதன் (20.09.1936)
2) குடிஅரசு (27.09.1936)

## 5. நாடகம் தொடர்பான கடிதங்கள்

1) அசம்மாள் பேட்டை திராவிடர் கழகத்தினர் எழுதிய கடிதம்.
2) போளூர் தாலுக்கா வில்வாராணி திராவிடர் கழகத்தினர் எழுதிய கடிதம்.
3) இரணியன், செயலாளர், திராவிடர் கழகம்.
4) பட்டம்மாள், நாடக நடிகை.
5) ஈப்போ (மலேசியா), திராவிடர் கழத்தினர் எழுதிய கடிதம்.
6) சேலம், நாடகக் குழுவினரின் கடிதம்

## புதுவைச் சிவம் மறைவிற்குப்பின்

## 1. நாடக நூல்கள்

1) புதுவைச்சிவம் நாடகங்கள் (2000) மேலட்டை
2) புதுவைச்சிவம் நாடகங்கள் (2000) உள்ளடக்கம்
3) புதுவைச்சிவம் படைப்புகள் (காவ்யா) மேலட்டை
4) புதுவைச்சிவம் படைப்புகள் (காவ்யா) நாடக உள்ளடக்கம்

## 2. நாடகத் துண்டறிக்கைகள்

1) ரஞ்சித சுந்தரா (அ) ரகசியச் சுரங்கம்
2) புதிய வாழ்வு
3) அமுதவல்லி (அ) அடிமையின் வீழ்ச்சி
4) காந்திமதி (அ) கல்வியின் மேன்மை
5) வீரநந்தன்

## 3. நாடகப் புகைப்படங்கள்

1) புதிய வாழ்வு
2) காந்திமதி (அ) கல்வியின் மேன்மை
3) அமுதவல்லி (அ) அடிமையின் வீழ்ச்சி
4) வீரநந்தன்





புதுவைச் சிவம் தனது ஞாயிறு நூற்பதிப்பகம் வாயிலாக 1947 ஆம் ஆண்டு வெளியிட்ட
கோகிலராணி நாடக நூலின் மேலட்டையும் உள்பக்க அட்டையும்





ஞாயிறு நூற்பதிப்பக வெளியீடு: 17

NO: 8700

# சிதைந்த வாழ்வு !

(சமூக சீர்திருத்த நாடகம்)

ஆசிரியர்:—
ச. சிவப்பிரகாசம்
(புதுவை)

ROJA. MUTHIAH
ARTIST
KOTTAIYUR P O
RAMNAD DIST.

டிசம்பர் 1951] [விலை ரூ 1-4-0

வெளியிடுவோர்:
ஞாயிறு நூற் பதிப்பகம்
28. அம்பலத்தாடு ஐயர் மடத்து வீதி,
பாண்டிச்சேரி.

புதுவைச் சிவம் தனது ஞாயிறு நூற்பதிப்பகம் வாயிலாக 1951 ஆம் ஆண்டு வெளியிட்ட
சிதைந்த வாழ்வு நாடக நூலின் மேலட்டையும் உள்பக்க அட்டையும்


ரஞ்சித — சுந்தரா

அல்லது

ரகசியச் சுரங்கம்.

என்னும் சமூக சீர்திருத்த நாடகப்

பாட்டுகள்.

தோழர், S. சிவப்பிரகாசம்

புதுவை.

புதுவை.

1936

1936 ஆம் ஆண்டில் புதுவைச் சிவம் இயற்றிய ரஞ்சித சுந்தரா (அ) ரகசிய சுராங்கம் நாடகம் நடைபெற்ற போது வெளியிடப்பட்ட நாடகப் பாட்டுகள் நூலின் முகப்பு


Grande Séance Récréative
Pour la construction d'une
Salle de Lecture à Oupalom (Calleroyeth)

உப்பளம் சமூக சீர்திருத்த வாலிபர்களால்
புதுவைக் கெப்ளே தியேட்டரில்
(8-2-41) சனிக்கிழமை இரவு 9-30½ மணிக்கு

புதுவை S. சிவப்பிரகாசம் அவர்களால் எழுதிய

# சமூக சேவை

என்னும் ஓர் சிறந்த சீர்திருத்த நாடகம்
நடைபெற்றபோது

A. Belcondo
R. Peroumal
S. Grévy
C. Baskara
M. Sagairre
P. Clément
C. Brave

(Membres du Comité D'organisation
de la Représentation)

இவர்களால் வெளியிடப்பட்டது.

ஸ்ரீ சாரதா பிரஸ், புதுவை

1941 ஆம் ஆண்டில் புதுவைச் சிவம் இயற்றிய சமூக சேவை நாடகம் நடைபெற்ற போது வெளியிடப்பட்ட நாடகப் பாட்டுகள் நூலின் முகப்பு



வசனமும். பாட்டும்:
S. சிவப்பிரகாசம்.

பக்க வாத்தியங்கள்:

| | | |
|---|---|---|
| M. M. வேலு | ... | ஆர்மோனியம் |
| A. திமோதேன் | ... | பிடில் |
| S. சித்தாபதி | ... | மிருதங்கம் |
| A. சிவலிங்கம் | ... | புல்புல்தாரா. |

நடிகர்கள்:

| | | |
|---|---|---|
| M. சசேச | ... | மொரேலோக், சந்தான், பக்தா |
| T. வீரப்பசாமி | ... | [illegible] |
| V. K. சசேச | ... | கமலா |
| A. R. கோத்தியே | ... | கல்யாணன் |
| A. [illegible] | ... | சீதா |
| A. அப்னேர் | ... | பத்மா |
| G. A. பாணி | ... | ஜமீன் |
| D. கோரிதோம் | ... | சட்டங்கடிமவோர் |
| B. பாஸ்கரா | ... | [illegible], [illegible], சேவகன் |
| S. ஜேகதீசன் | ... | சாமன், சேவகன் |
| P. மர்த்தி | ... | ஜமீன்தாரணி |
| A. கிரேலி | ... | ஜெயில்காவலர் |
| R. எத்மூராஜலு | ... | தோழி, பெண் |
| G. A. பாணி, M. L. L. பிரகாசம் | ... | காமிக் (ராஜும், பூராசி) |
| மரியதுரை | ... | டான்ஸ் |

1941 ஆம் ஆண்டில் புதுவைச் சிவம் இயற்றிய சமூக சேவை நாடகம் நடைபெற்ற போது வெளியிடப்பட்ட நாடகப் பாட்டுகள் நூலின் பின் அட்டை



சமூக சேவை

கதைச் சுருக்கம்.

[illegible]

1941 ஆம் ஆண்டில் புதுவைச் சிவம் இயற்றிய சமூக சேவை நாடகம் நடைபெற்ற போது வெளியிடப்பட்ட நாடகப் பாட்டுகள் நூலின் முகப்பு அட்டையின் பின்பக்கம்




## ஔவ்வா மணம்.

(S. சிவப்பிரகாசம்)

(தாய் தந்தையர் சோபாவில் அமர்ந்திருத்தல். அருமை மகள் அழுகை கண்ணீர்த்தனாய் எதிரில் நிற்கிறாள்.)

தாய்:—

அம்மா குழந்தாய்! அழுவதா லாவதென்?
அந்த மாப் பிள்ளையின் அழகுக் கென்ன?
வயது சென்ற கிழவரும் அல்லவே.
வயதாம் சித்திரை வந்தால் ஐம்பதாம்!
அயர்வு கொள்வது அழகா? நீ சொல்!
தபரம் வேண்டாம்; சுகமாய் வாழ்வாய்.
என்னரு மகளே! என் மொழி யைக்கேள்!
அன்றுனக் கெழுதிய எழுத்தாப் போல்தான்
இன்று நடக்கும் நக்கம் வேண்டாம்.

தந்தை:—

அருமை மகளே! மன்றுல் சாங்கள்
பெருமை யடைய இருப்பதை நீதான்
அறிய நீ தேனோ? பெரியோர் சொற்படி
நடப்ப தல்லவோ பெண்களுக் கழகு!
கடன்கொண் டவரால் கஷ்டப் படுகிறோம்;
குடும்பம் நடக்க வழிதான் உண்டா?
மிடிமை வாழ்க்கை யகற்றும் நீதான்
பிடிவா தஞ்செய லாமோ கண்ணே!
கிழமாப் பிள்ளையென் றெண்ணுறாய்; கனிதரும்
கிழவன் கேடிலாச் செல்வ வந்தன்!
குடும்பம் மன்னிலே படையும் உன்றுல்
தடைசெய் யாதே! தடைசெய் யாதே!

(மகள் மணம் நிற்குள் கேட்டு அழுகின்றாள்; கண்களிலிருந்து நீர் பெருகுகிறது.)

தாய்:— (சிறிது கோபத்துடன்)

இத்தனை காருநிலை அருமையாய் வளர்த்தும்
சித்தம் கெட்டவளே! ஏன் சொல்லை
அவமதிக் கின்றாய்? புவியிலுன் மணம்
என்ன என்பதைத் தெரியுமோ? ...

மகள்:—

... ... ... அம்மா!
அருமையாய பெண்ணைப் பெற்று வளர்த்தீர்!
அருமைக் குழந்தைதான்; ஆசைக் கொரு பெண்!

ஸ்ரீ சுப்ரமணிய பாரதி கவிதா மண்டலம் 1935 சித்திரை மாத இதழில் வெளியான புதுவைச் சிவத்தின் ஒவ்வா மணம் செய்யுள் நாடகம்




## மோக்ஷப் பித்து!

### தந்தை மகன் சம்பாஷணை.

(S. சிவப்பிரகாசம்.)

தந்தை:—

எத்தனை தவங்கள் செய்தேன்;
உனைப்பெற்றேன் என்றன் கண்ணே!
"புத்" தென்னும் நரக லோகம்
புகாமல் நான் மீள்வ தற்கே!
சித்தமே களிக்க நீயும்
செல்வத்தில் வளர்ந்தாய்! நானும்
செத்ததும் மோக்ஷம் போகச்
செய்வதுன் கடமை யன்றோ?

மகன்:—

அன்பான எனது தந்தாய்!
அறிந்தேன் நான் உமது நோக்கம்;
நன்று! நீர் மோக்ஷம் போக
நான் சடங் கியற்றல் என்னே!
அன்பான குவட்டா மக்கள்
ஐம்பதா யிரவர் மாண்டார்!
என் செய்வார் மோக்ஷம் போக?
யாரனுப்பு வார்கள் தந்தாய்?

p சுப்ரமணிய பாரதி கவிதா மண்டலம் 1935 வைகாசி மாத இதழில் வெளியான புதுவைச் சிவத்தின் மோட்சப் பித்து செய்யுள் நாடகம்







புதுவைச் சிவம் எழுதிய நிலம் யாருக்குச் சொந்தம் நாடகம் வெளியான போர்வாள் இதழும், நாடகம் வெளியான பக்கமும்


ரஞ்சித - சுந்தரா

அல்லது

ரகசியச் சுரங்கம்.

ஆக்கியோன்,

S. சிவப்பிரகாசம்.

1935.


ரஞ்சித - சுந்தரா,

அல்லது

ரகசியச் சுரங்கம்.

காட்சி 1.

இடம்: புதுவையில் ஓர் வீடு.

பாத்ரம்: மாணிக்கச் செட்டி, லக்ஷுமி, கோகிலம்.

[மாணிக்கச் செட்டியாரும் அவர் மனைவியும் லக்ஷுமியும் தமது வீட்டில், தோட்டத்தில் அமர்ந்து ...]

மாணிக். — ... லக்ஷுமி! நான் இன்று தனியாக ... மணிக்கெல்லாம் கோர்ட்டுக்குப் போகவேண்டும். ... வேலையெல்லாம் சீக்கிரம் ஆகட்டும்.

லக்ஷுமி — உமக்கு எப்போது பார்த்தாலும் இந்தக் கோர்ட்டு ... தான்! வட்டிக்கடை வைத்தாலும் வைத்தீர், ... இப்படி ... ?

மாணிக். — ... ! வட்டிக்கடை இல்லாவிட்டால் ... தெரியும் ... ! நாம் இந்தப் புதுவைக்கு ... வந்து 15 வருடங்களாகின்றன. அதற்கு முன் என்ன ...? இப்போதுதானே ... நாம் இந்த ஊரில்

1935 ஆம் ஆண்டில் புதுவைச் சிவம் இயற்றிய ரஞ்சித சுந்தரா (அ) ரகசியச் சுரங்கம் நாடகக் கையெழுத்துப்பிரதியின் முகப்பு மற்றும் முதல் பக்கம்


அமுத வல்லி

அல்லது,

அடிமையின் வீழ்ச்சி.

ஆக்கியோன்:-

S. சிவப்பிரகாசம்.


அமுதவல்லி

அல்லது

அடிமையின் வீழ்ச்சி.

காட்சி, 1.

1937 ஆம் ஆண்டில் புதுவைச் சிவம் இயற்றிய அமுத வல்லி (அ) அடிமையின் வீழ்ச்சி நாடகக் கையெழுத்துப்பிரதியின் முகப்பு மற்றும் முதல் பக்கம்




1939 ஆம் ஆண்டில் புதுவைச் சிவம் இயற்றிய வீரத்தாய் நாடகக் கையெழுத்துப்பிரதியின் முதல் பக்கம்




1939 ஆம் ஆண்டில் புதுவைச் சிவம் இயற்றிய தமிழச்சியின் தேச பக்தி நாடகக் கையெழுத்துப்பிரதியின் முதல் பக்கம்



1939 ஆம் ஆண்டில் புதுவைச் சிவம் இயற்றிய தமிழர் வீழ்ச்சி (அ) இராமாயண சாரம் நாடகக் கையெழுத்துப்பிரதியின் முதல் பக்கம்



1940- 45 ஆம் ஆண்டு வாக்கில் புதுவைச் சிவம் இயற்றிய கோவலன் கண்ணகி நாடகக் கையெழுத்துப்பிரதியின் முதல் பக்கம்



1940-45 ஆம் ஆண்டு வாக்கில் புதுவைச் சிவம் இயற்றிய காந்திமதி அல்லது கல்வியின் மேன்மை நாடகக் கையெழுத்துப்பிரதியின் முதல் பக்கம்



1940-45 ஆம் ஆண்டு வாக்கில் புதுவைச் சிவம் இயற்றிய வீர நந்தன் நாடகக் கையெழுத்துப்பிரதியின் முதல் பக்கம்



1945-50 ஆம் ஆண்டு வாக்கில் புதுவைச் சிவம் இயற்றிய மூன்று பெண்கள் நாடகக் கையெழுத்துப்பிரதியின் கதையமைப்பும், காட்சி அமைப்பும்




1950 ஆம் ஆண்டில் புதுவைச் சிவம் இயற்றிய புதிய வாழ்வு நாடகக் கையெழுத்துப்பிரதியின் முதல் பக்கம்




1940–45 ஆம் ஆண்டு வாக்கில் பிரெஞ்சுக் கவிஞர் அல்போன்ஸ் தொதே எழுதிய கவிதையைத் தழுவி புதுவைச் சிவம் இயற்றிய காதல் முன் கட்டுப்பாடு நாடகக் கையெழுத்துப்பிரதியின் முகப்பு


காதல் முன் கட்டுப்பாடு!

கட்டுடைத்த காதல்!

ஓர் பிரெஞ்சுக் கவிதையைத் தழுவிய மொழிபெயர்ப்பு

1

ஓர் நாள் ஞாயிற்றுக்கிழமை. சூரியன் மறையும் நேரம். 'பிளாஸ் ரொய்யால்' என்னும் அழகிய நந்தவனத்திலே ஆந்த்ரே என்னும் கத்தோலிக்கச் சிறுவனுக்கும், சாரா என்னும் யூதப் (யூயீ) மதப் பெண்ணுக்கும் காதல் அரும்பியது!

யூதப் மதப் பெண்கள், இயல்பாகவே அழகிற் சிறந்தவர்கள். அதிலும் சாரா என்பவள், அழகில் தனக்கிணையற்று விளங்கினாள். பசும்பொன் மேனி! நீண்டு வளர்ந்த புருவம்! பின்னலிட்ட கூந்தல்! பருத்த மார்பு! சிவந்த தாமரை முகம்!

அந் நந்தவனத்தில் போடப்பட்டிருந்த நீண்ட சாய்வுள்ள பெஞ்சின் ஓர் முனையில், சாரா அமர்ந்திருக்கிறாள்; மூர்-

1940 45 ஆம் ஆண்டு வாக்கில் பிரெஞ்சுக் கவிஞர் அல்போன்ஸ் தொதே எழுதிய கவிதையைத் தழுவி புதுவைச் சிவம் இயற்றிய காதல் முன் கட்டுப்பாடு நாடகக் கையெழுத்துப்பிரதியின் முதல் பக்கம்


காதல் முன் கட்டுப்பாடு!

[ஓர் பிரெஞ்சுக் கவிதையைத் தழுவியது]

1

ஓர் நாள் ஞாயிற்றுக்கிழமை. சூரியன் மறையும் நேரம். "பிளாஸ் ரொய்யால்" என்னும் அழகிய நந்தவனத்தில்தான், ஆந்த்ரே என்னும் கத்தோலிக்கச் சிறுவனுக்கும், சாரா என்னும் யூதப் (யூயீ) மதப் பெண்ணுக்கும் காதல் அரும்பியது!

யூதப் மதப் பெண்கள், இயல்பாகவே அழகிற் சிறந்தவர்கள். அதிலும், சாரா என்பவள், அழகில் தனக்கிணையற்றவளாய் விளங்கினாள்! நல்ல தோற்றம்! பசும்பொன் மேனி! நீண்டு வளர்ந்த புருவம்! பின்னலிட்ட கூந்தல்! பருத்த மார்பு! சிவந்த தாமரைப் பாதம்!

அந் நந்தவனத்தில் போடப்பட்டிருந்த நீண்ட சாய்வுள்ள பெஞ்சின் ஓர் முனையில், சாரா அமர்ந்திருக்கிறாள்; மற்றொரு முனையில்

1940 45 ஆம் ஆண்டு வாக்கில் பிரெஞ்சுக் கவிஞர் அல்போன்ஸ் தொதே எழுதிய கவிதையைத் தழுவி புதுவைச் சிவம் இயற்றிய காதல் முன் கட்டுப்பாடு நாடகக் கையெழுத்துப்பிரதியின் திருத்தப்பட்ட பிரதி


சிதைந்த வாழ்வு

நாடகப் பாட்டுகள்

சிதைந்த வாழ்வு நாடகப் பாட்டுக்கள் தொகுப்பின் கையெழுத்துப் பிரதியின் முதல் பக்கம்


அமுத வல்லி

அல்லது

அடிமையின் வீழ்ச்சி

பாட்டுகள்

ஆக்கியோன்:

புதுவை.

அமுதவல்லி (அ) அடிமையின் வீழ்ச்சி நாடகப் பாட்டுக்கள் தொகுப்பின் கையெழுத்துப் பிரதியின் முதல் பக்கம்



இன்றிரவு! நாகரீக உலகிற்கோர் நல் விருந்து! நன்றிரவு!

15-8-36 சனிக்கிழமை இரவு 9-30 மணிக்கு,

'லா பிளேயாத்' சங்கத்தாரால்,

தோழர், S. சிவப்பிரகாசம்

ரஞ்சித - சுந்தரா

அல்லது

ரகசியச்சுரங்கம்.

| | | | |
|---|---|---|---|
| சோபா | 5 0 0 | 2-வது வகுப்பு | 1 0 0 |
| முதல் வகுப்பு | 2 0 0 | பெஞ்சு | 0 8 0 |
| தரை அணா 4 | | ஸ்திரீகள் தரை அணா 2 | |

J. தவிசோ.

M. முத்தோம்.

ரஞ்சித சுந்தரா (அ) ரகசியச் சுரங்கம் நாடகம் புதுச்சேரியில் 15.08.1936 அன்று நடைபெற்றபொது வழங்கப்பட்ட துண்டறிக்கை



வில்லைத் திராவிடர் கழகத்தாரா

பாரதிதாசன் மாணுக்கர் தோழர் புதுவைச்சிவம் இ

"கோகிலராணி

என்னும் நாடகத்தை வில்லைத்திராவிடர் கழக நிதிக்காக நடத்தப்ப

முக்கிய நடிகர்கள்.

சி. சண்முகம்—சுகுணவர்மன், அரசன்
மு. செங்குட்டவன்—சேனாதிபதி
அ. அருணாசலம்—சேத்தூர் சிற்றரசன்
இபல்பின் நடிகர் சண்முகம்—பிரமகுரு
வி. சிவப்பிரகாசம்—இளைய ராணி
க. முத்தியாலு—கோகிலராணி, தவப்பெண்
நாராயணசாமி—சந்தரா
அ. பழனி—வீரவர்மன்
சா. முருகையன்—சாரணதன்
கு. வரதராசன்—பூங்கொடி
வை. மாணிக்கம்—அருகம்
தாமவீரன்—ஸ்ரீமுகன், கிழவன்
ஆறுமுகம்—பிரதாபன்
ஆனந்தன்—குப்பன்

இடையில் காஞ்சிபுரம் தர்மாபாயின் டேன்சு இடச்சியாக நடிப்பதும் காணத்தக்கன.

சங்கீத ஆர்மோனியம் காஞ்சிபுரம் தோழர் சண்முகானந்தம் அ வில்லை வரதன் பக்க வாத்தியம்

டிக்கட்:- 1-வது வகுப்பு 0 9 0, 2-வது வகுப்பு 0

துண்டு சிட்டுக்கும் அனாவசியமான கேள்விக்கும் பதில் கிடையாது. எ காரணத்தைக்கொண்டு டிக்கட் வாபீஸ் செய்யப்படமாட்டாது.

துண்டுகள்:— அ. விருத்தாசல செட்டி, எ. சின்னதம்பி முதல் பூ. நடேச உடையார், ச. மண்ணாக் கவுண்டர்.

கோகிலராணி நாடகம்வில்வாராணியில் 10.08.1947 அன்று நடைபெற்றபொது வழங்கப்பட்ட துண்டறிக்கை

அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க, மீண்டும் இந்நாடகம் நடத்தப்படுகிறது.

**இச்சமயம் தவறினால், மறுசமயம் வாய்ப்பதரிது!**

இன்றிரவு! நன்றிரவு!!

புதுவை வடபாரிசம் சாராய ஆலைக்கெதிரில் மின்சார விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கும் கொட்டகையில்,

**12-9-36 சனிக்கிழமை இரவு சரியாக 9 மணிக்குத்**

தோழர், S. சிவப்பிரகாசம் அவர்களாலியற்றப்பெற்ற

## "ரஞ்சித—சுந்தரா அல்லது ரகசியச்சுரங்கம்"

என்னும் சமூக சீர்திருத்த நாடகத்தையும்,

**"தேயிலைத் தோட்டத் தீமை! அல்லது புத்தி கற்பித்த ராமாயி"**

என்னும் விடா நகைப்பையும் ஓயாச் சிரிப்பையும் தரும் "காமிக்" ஒன்றையும் நடத்திக் காண்பிக்கப்படும். அது சமயம் சகோதர சகோதரிகள் விஜயஞ்செய்து எமது நாடகத்தைச் சிறப்புவிக்க வேண்டுகிறோம்.

டிக்கட் விவரம்.

| | | | |
|---|---|---|---|
| முதல் வகுப்பு | 2 0 0 | பெஞ்சு | 0 8 0 |
| 2-வது வகுப்பு | 1 0 0 | தரை | 0 4 0 |

யூனிபாரத்துடன் வரும் மிலித்தேர் சிப்பாய்களுக்கு முழு சார்ஜ் வசூலிக்கப்படும். இடமுள்ளவரையில்தான் டிக்கட் கொடுக்கப்படும். ஆட்டகால சட்டத்தை அனுசரிக்கப்படும்.

சங்கத் தலைவர்,
J. தவியோ.

ஸ்டேஜ் மானேஜர்,
M. முத்தோம்.

சந்தானம் பிரிண்டிங் ஒர்க்ஸ், புதுவை.

மிருதங்கம்: S. நடேசப்பிள்ளை.

ஆர்மோனியம் பின்பாட்டு M. முத்துபிள்ளை

ரஞ்சித சுந்தரா (அ) ரகசியச் சுரங்கம் நாடகம் புதுச்சேரியில் 12.09.1936 அன்று நடைபெற்றபொது வழங்கப்பட்ட துண்டறிக்கை

நெ. 1

எதிர்பாருங்கள் ! எதிர்பாருங்கள் !!

புதுவை,

**தமிழர் முன்னேற்ற நாடக மன்றத்தாரால்**

அளிக்க இருக்கும்

# சிதைந்த வாழ்வு!

என்னும் சிரிய சமூக நாடகத்தை விரைவில் எதிர்பாருங்கள்.

28—5—53.

சந்தானம் பிரின்டிங் ஒர்க்ஸ், புதுவை.

சிதைந்த வாழ்வு நாடகம் புதுச்சேரியில் 28.05.1953 அன்று நடைபெற்றபொது வழங்கப்பட்ட துண்டறிக்கை




சிதைந்த வாழ்வு நாடக நூலுக்கான விளம்பரம் (1951 ஆம் ஆண்டில் புதுவைச் சிவம் வெளியிட்ட தன்மதிப்புப் பாடல் நூலின் கடைசிப் பக்கம்




கோகிலராணி நாடக நூலுக்கான விளம்பரம் (1947 ஆம் ஆண்டில் புதுவைச் சிவம் வெளியிட்ட மகாகவி பாரதியார் நூலின் பின் அட்டை



# புதுவையில் உயரிய சீர்திருத்த நாடகம்

அன்பர்களின் வேண்டுகோளுக் கிணங்க மீண்டும் 12-9-36-ந் தேதி சனிக்கிழமை இரவு 9.30-மணிக்கு "லா பிரேனியாத்" சங்கத்தாரால் தோழர் எஸ். ஜெயப்பிரகாசம் அவர்களால் எழுதப்பெற்ற "ரஞ்சித சுந்தரா அல்லது ரகசியச் சுரங்கம்" என்னும் சமூக சீர்திருத்த நாடகம் அதி விமரிசையாக நடத்திக் காண்பிக்கப்பட்டது.

நாடகத்திற்கு ஏராளமான ஆண்களும் பெண்களும் விஜயம் செய்திருந்தனர். காரைத் தோழர் பி. அம்மைநாதன் அவர்களும், தோழர் [illegible] அவர்களும் விஜயம் செய்திருந்தனர்.

இந் நாடகத்தில் தோழர் எஸ். [illegible]ராஜு (தோழர் பாரதிதாசன் அவர்களால் எழுதப்பட்ட "தேசிங்கு ராஜன்" செட்டில் [illegible] நடித்தவர்) அவர்களும், தோழர் எம். எஸ். எல்லப்பன் (டை செட்டில் தோகைமயிலோடியாக நடித்தவர்) அவர்களும், இந் நாடகங்களின் பொருளுதவியாளரான தோழர் எல். துரைராஜன் (டை செட்டில் [illegible] வாசித்தவர்) அவர்களும், மற்றுமுள்ள நடிகர்களும் திறம்பட நடித்தது குறிப்பிடத் தக்கது.

ஆர்மோனிஸ்ட் தோழர் எம். மாணிக்கவேலு (டை செட்டில் ஆர்மோனியம் வாசித்தவர்) அவர்கள், நாடகத்தின் இடையிடையே சமயமறிந்து பாடல்கள் மிக உருக்கமாகவும் தெளிவாகவும் பாடினார்.

நாடகத்தின் இடையில் "தேசியத் தோட்டத் தீமை அல்லது [illegible] ராமாயி" என்னும் ஒரு காமிக் நடத்திக் காட்டப்பட்டது. இதில் தோழர்களான எம். மாணிக்கவேலு, எம். எஸ். எல்லப்பன், எம். சாமிக்கண்ணு ஆகிய மூவரும் வேடிக்கையாக நடித்து, ஜனங்களுக்கு அடங்காச் சிரிப்பை உண்டாக்கிவிட்டது குறிப்பிடத்தக்கது.

நாடக முடிவில் தோழர் எல். துரைராஜன் அவர்கள் "லா பிரேனியாத்" சங்கத் தலைவர் Y. தவியோ அவர்களுக்கும், உப தலைவர் ஜி. நித்தியன் அவர்களுக்கும், நாடக ஆசிரியர்களுக்கும், தோழர் அம்மைநாதன் அவர்களுக்கும், மற்றும் இந் நாடகத்தில் முக்கியப் பொறுப்பேற்று உழைத்த தோழர்கள் எம். முத்தையும், எம். ரோயேல், எ. கப்ரியேல் முதலியவர்களுக்கும் டை சங்கத்தின் சார்பில் மலர்மாலை அணிவித்தார். பிறகு வந்தனோபசாரம் கூறுகையில், எதிரிகள் இந் நாடகம் நடக்கவொட்டாதபடி செய்த சூழ்ச்சியினால் அதிகாரிகள் உத்தரவு தர மறுத்துவிட்டார்களென்றும், அப்படியிருந்தும் சங்கத் தலைவர் Y. தவியோ அவர்கள் நாடகம் நடைபெறுவதற்கான பெருமுயற்சி எடுத்துக்கொண்டு அதிகாரிகளிடம் உத்தரவு வாங்கித் தந்தமைக்குப் பாராட்டியும் கூறிய பின் நாடகம் இனிது முடிவுற்றது.

நகரதூதன், 20.9.1936, [illegible]

ரஞ்சித சுந்தரா (அ) ரகசியச் சுரங்கம் நாடகம் புதுச்சேரியில் நடைபெற்றது. அதுகுறித்த செய்தியும் நாடக மதிப்பீடும் திருச்சியில் இருந்து வெளிவந்த நகர தூதன் 20.09.1936 இதழில் வெளியானது.

சொல்லுகிறேன். இவ்வார் தி ல ஆசக வயையு றறது.

## புதுவையில் சீர்திருத்த நாடகம்

### ஜனங்களிடையே பெருத்த உற்சாகம்!

தோழர் எல். சிவப்பிரகாசம் அவர்களால் எழுதப்பெற்ற "ரஞ்சித—சுந்திரா அல்லது ரகசியச்சுரங்கம்" என்னும் சமூக சீர்திருத்த நாடகத்தைப் புதுவை டைபாசிசர் "வாலிபேவாத்" சங்கத்தாரால், ஏரான மான் பொருட்செலவில் மின்சார விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட கொட்டகையில் 15-8-36 சனிக்கிழமை இரவு அதிவிமரிசையாய் நடத்தி வைக்கப்பட்டது.

மழையாக இருந்தும், நாடகத்திற்கு ஏராளமான ஆண்களும் பெண்களும் விஜயஞ் செய்திருந்தனர். நாடக ஆரம்பத்தில் தோழர் எல். சிவப்பிரகாசம் அவர்கள், சமூக சீர்திருத்த நாடகங்களின் அவசியங்களைப் பற்றிச்சிறிது நேரம் பேசினார். நாடகத்தின் இடையிடையே ஆர்மோனியம் தோழர் எம். மாணிக்கவேலு அவர்கள் சுயமரியாதைக் கீதங்கள் பாடி ஜனங்களிடம்—குறிப்பாகப் பெண்களிடம் ஓர் புத்துணர்ச்சியை உண்டாக்கியது குறிப்பிடத்தக்கது.

பழக்க வழக்கங்களினால் ஏற்படும் நிலைமைகளைப் பற்றியும், மதம் ஜாதி பேதம் ஆகியவைகளால் மக்களின் முன்னேற்றம் பாதிக்கப்படுவதைப் பற்றியும், விதவையென்னும் கட்டுப்பாட்டால் பெண்கள் அடைந்துவரும் பரிதாபநிலை—கொடுமை ஆகியவைகளைப்பற்றியும், மடாதிபதியின் சூழ்ச்சிகளைப்பற்றியும், மற்றும் பெண்கள் முன்னேற்றம், பெண் கல்வி, காதல்—கற்பு மணம், உண்மை கற்பு ஆகியவைகளின் அவசியங்களை வலியுறுத்தியும் எழுதப்பட்டிருந்த இந்நாடகம், மக்களின் உள்ளத்தை உருகச் செய்ததோடு, சீர்திருத்த உணர்ச்சியையும் ஊக்கத்தையும் உண்டாக்கி விட்டதென்பதை அன்று விஜயஞ்செய்திருந்தோரின் மனோநிலை நன்கு விளக்கிவிட்டது. தோழர் எல். துரைராஜன் அவர்கள் கதாநாயகனாக நன்கு நடித்தார். மற்ற நடிகர்களும் திறம்பட நடித்தது குறிப்பிடத்தக்கது. இந்நாடகத்தையே மறுபடியும் நடத்திக் காண்பிக்கும்படி பலர் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். "வசிகர—மனோகரி" என்னும் சீர்திருத்த நாடகம் விரைவில் நடைபெறுமெனத் தெரிகிறது.

ரஞ்சித சுந்தரா (அ) ரகசியச் சுரங்கம் நாடகம் புதுச்சேரியில் நடைபெற்றது. அதுகுறித்த செய்தியும் நாடக மதிப்பீடும் 1936 ஆம் ஆண்டு குடியரசு இதழ்களில் வெளியானது.

ரஞ்சித சுந்தரா (அ) ரகசியச் சுரங்கம் நாடகம் புதுச்சேரியில் நடைபெற்றது. அதுகுறித்த செய்தியும் நாடக மதிப்பீடும் 1936 ஆம் ஆண்டு குடியரசு இதழ்களில் வெளியானது.



திராவிடநாடு திராவிடருக்கே!

புரட்சி ஓங்குக! இழிவு ஒழிக!!

வெல்க திராவிடம்! வாழ்க பெரியார்!!

... 21 நாள் 6.9.1947

அன்புமிக்க தோழர். சிவப்பிரகாசம் அவர்களுக்கு அசம்மாள் பேட்டை திராவிட மாணவ கழகச் செயலாளர் தி.கோ. லக்ஷ்மணன் எழுதியது.

ஐயா,

தாங்கள் எழுதிய "கோகிலவாணி" என்னும் நாடகத்தை 11.9.47 வியாழன் இரவு நடத்தப் போகிறோம். அதுபோது தாங்கள் நாடகத்திற்கு வந்து நாடகத்திற்கு தலைமை தாங்கி நடத்தி கொடுப்பீர் என்று எதிர்பார்க்கிறோம். உடனே பதில் எழுதுமாறு மிகவணக்கத்துடன் கேட்டுக்கொள்கிறோம்.

இங்ஙனம்

From. தி.கோ. லக்ஷ்மணன் அசம்மாள்பேட்டை தி.மா.கழக செயலாளர்.

8.9.47

P.T.O.

கோகிலவாணி நாடகம் நடத்துவது குறித்து அசம்மாள் பேட்டை திராவிடர் கழகத்தினர் புதுவைச் சிவத்திற்கு எழுதிய கடிதம்



திராவிடர் கழகம்

வில்வாரணி வட்டம்.

வில்வாரணி

Date 6.8.1947

போற்றுதற்குரிய தோழர் புதுவைச் சிவம் அவர்களுக்கு வணக்கம்.

V.A. Ramaswamy
Secretary
6.8.47

கோகிலவாணி நாடகம் நடத்துவது குறித்து வில்வாரணி திராவிடர் கழகத்தினர் புதுவைச் சிவத்திற்கு எழுதிய கடிதம்



கிளைத்த வாழ்வு நாடகம் நடத்துவது குறித்து சேலம் நாடக நடிகை பட்டம்மாள் புதுவைச் சிவத்திற்கு எழுதிய கடிதம்



கோகிலாராணி நாடகம் நடைபெற்றது குறித்து விலவாராணி திராவிடர் கழகத்தின் செயலாளர் இரணியன் புதுவைச் சிவத்திற்கு எழுதிய கடிதம்



சிதைந்த வாழ்வு நாடகம் நடத்துவது குறித்து சேலம் நாடகக் குழுவினர் புதுவைச் சிவத்திற்கு எழுதிய கடிதம்



கோகிலராணி நாடகம் நடத்துவது குறித்து மலேசியாவில் உள்ள ஈப்போ நகர திராவிடர் கழகத்தினர் புதுவைச் சிவத்திற்கு எழுதிய கடிதம்




## உள்ளடக்கம்


| வ. எண் | நாடகங்கள் | பக்கம் |
|---|---|---|
| 1. | ரஞ்சித சுந்தரா (அ) ரகசியச் சுரங்கம் | 1 |
| 2. | அமுதவல்லி (அ) அடிமையின் வீழ்ச்சி | 77 |
| 3. | கோகிலராணி | 139 |
| 4. | சமூக சேவை | 229 |
| 5. | வீர நந்தன் | 233 |
| 6. | காந்திமதி (அ) கல்வியின் மேன்மை | 239 |
| 7. | மூன்று பெண்கள் | 257 |
| 8. | புதிய வாழ்வு | 271 |

### நாடகப் பாட்டுகள்

| | | |
|---|---|---|
| 1. | ரஞ்சித சுந்தரா (அ) ரகசியச் சுரங்கம் | 367 |
| 2. | அமுதவல்லி (அ) அடிமையின் வீழ்ச்சி | 387 |
| 3. | சமூக சேவை | 399 |
| 4. | சிதைந்த வாழ்வு | 415 |

### கனிந்த நினைவுகள்

| | | |
|---|---|---|
| 1. | நேர்காணல்கள் | 425 |
| 2. | நாடகத் துண்டறிக்கைகள் | 439 |


புதுவை அரசின் கலை பண்பாட்டுத் துறை 2000 அவது ஆண்டில் வெளியிட்ட புதுவைச் சிவம் நாடகங்கள் தொகுப்பு நூலின் முகப்பும் உள்ளடக்கப் பக்கமும்




பொருளடக்கம்

I புதுவைச் சிவம் நாடகங்கள்

அ. மேடை (உரைநடை) நாடகங்கள்
1. ரஞ்சித சுந்தரா அல்லது ரகசியச் சுரங்கம் (1935) ........ 2
2. அமுதவல்லி அல்லது அடிமையின் வீழ்ச்சி (1937) ........ 79
3. கோகில ராணி (1939) ........ 147
4. சமூக சேவை (1941) ........ 249
5. வீரநந்தன் (1940-1945) ........ 251
6. காந்திமதி அல்லது கல்வியின் மேன்மை (1940-1945) ........ 256
7. மூன்று பெண்கள் (1945 - 1950) ........ 273
8. புதிய வாழ்வு (1950) ........ 286
9. சிதைந்த வாழ்வு (1951) ........ 387
ஆ. குறு நாடகங்கள் (ஓரங்க, ஈரங்க நாடகங்கள்)
10. வீரத்தாய் (1939) ........ 492
11. தமிழச்சியின் தேசபக்தி (1939) ........ 498
12. நிலம் யாருக்குச் சொந்தம் (1971) ........ 500
இ. காப்பிய நாடகங்கள்
13. தமிழர் வீழ்ச்சி அல்லது இராமாயண சாரம் (1939) ........ 506
14. கோவலன் - கண்ணகி (1940-1945) ........ 516
15. காதல் முன் கட்டுப்பாடு (1940-1945) ........ 517
ஈ. செய்யுள் நாடகங்கள்
16. ஒவ்வாமணம் (ஓரங்க நாடகம்) (1935) ........ 530
17. கைகூடாக் காதல் (1950) ........ 532
உ. நாடகப் பாட்டுகள்
18. ரஞ்சித சுந்தரா ........ 561
19. அமுதவல்லி ........ 580
20. சமூக சேவை ........ 590
21. சிதைந்த வாழ்வு ........ 605
22. நாடகப் பாட்டுகள் (சுதம்பம்) ........ 613

காவ்யா பதிப்பகம் 2007 ஆம் ஆண்டில் வெளியிட்ட புதுவைச் சிவம் படைப்புகள் தொகுப்பு நூலின் முகப்பும் நாடக உள்ளடக்கப் பக்கமும்



புதுவை அரசு கலை - பண்பாட்டுத்துறை நடத்தும் கவிஞர் புதுவை சிவம் அவர்களின் பிறந்த நாள் விழாவில்
புதுவை மாநில நாடக மன்றங்களின் கூட்டமைப்பின் ஒத்துழைப்போடு

புதுவை "தஞ்சை ஃபைன் ஆர்ட்ஸ்" வழங்கும்

நடாதிபதியாக தஞ்சைதாசன் நடிக்கும்

ரஞ்சித சுந்தரா (அல்லது) ரகசியச்சுரங்கம்

(சுயமரியாதை - சமூகச் சீர்திருத்த நாடகம்)

நாள் : 30-10-99, சனிக்கிழமை
மாலை 6.30 மணி

கதை வசனம்
கவிஞர் புதுவை சிவம்

இடம் : கம்பன் கலையரங்கம்
புதுவை.

இயக்கம்
ப. முருகேசன்

மேடை நிர்வாகம் : ஏ. ஸ்ரீநிவாஸன்

இசை : G. தமிழரசன் ஒப்பனை : S. வேலாயுதம் ஒலிஒளி மற்றும் காட்சித் திரைகள் : K. அசோகன்

கலைஞர்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| வேலவதாசன் | பொன். பக்கிரிசாமி | பாண்டீஸ்வரன் | சூரன் ப. தங்கராசு | செ. ராமமூர்த்தி |
| வி. கருணாகரன் | தி. அமிர்தகணேசன் | வீ. அனந்த கிருஷ்ணன் | க. மாணிக்கம் | க. பச்சையப்பன் |
| கவிவைட்பித்தன் | துரை. இராமலிங்கம் | இரா. பசுபதிராஜன் | இ. ஸீசர் | G. கலைவாணி |
| கலைமாமணி சியாமளா, சென்னை. | புதுவை கவிதா | சென்னை ஜமுனா | புதுவை பாரதி | |

அனைத்துவகை ஒத்துழைப்பு
நெல்லை ராஜன் - G. அங்கப்பன் - இல. கருணாகரன்

1935 - இல் கவிஞர் புதுவை சிவம் அவர்கள் எழுதிய இந்நாடகத்தைக் காணத் தவறாதீர்கள் !

புதுவை அரசின் கலை பண்பாட்டுத் துறையும், தஞ்சைத் தமிழகப் பண்பாட்டு மையமும் இணைந்து நடத்திய புதுவைச் சிவம் பிறந்த நாள் விழாவில் நடைபெற்ற ரஞ்சித சுந்தரா (அ) ரகசியச் சுரங்கம் நாடகத் துண்டறிக்கை



உயிர் இருக்கும்வரை ! எங்கள் உடன் இருக்கும் நாடகக்கலை !!

புதுச்சேரி அரசு கலை பண்பாட்டுத்துறை - மற்றும் இந்திய அரசு தஞ்சை தென்னக பண்பாட்டு மையம்
இணைந்து நடத்தும்
கவிஞர் புதுவைச் சிவம் பிறந்தநாள் விழாவில்
கலைமாமணி M.S. ராஜா. B.A. வின் புதுவை கண்மணி கிரியேஷன்ஸ் வழங்கும் நாடகம்
கவிஞர் புதுவைச்சிவம் அவர்களின்

அமுதவல்லி

(சமுதாய விழிப்புணர்வு நாடகம்)

கதை: கவிஞர் புதுவைச்சிவம் வசனம், இயக்கம்: கலைமாமணி M.S. ராஜா. B.A.
இடம் : புதுச்சேரி – ஆந்திர மஹா சபா
நாள்: 19.11.2010, வெள்ளிக்கிழமை மாலை 7.30மணி

கலைஞர்கள்: S. ஜெயசீலன், M.Com., B.Ed. நட. ராமமூர்த்தி. M.A. P. செல்வநாதன், M.A.B.L.,
S.N. ஏழுமலை. M. குணசேகரன். A. சகாயராஜ். P. இராமமூர்த்தி.

இவர்களுடன் கவிஞர் புதுவைச் சிவத்தின் மைந்தர் முனைவர் சிவ. இளங்கோ
K. விஜி (எ) விஜயமாலா . S. லக்ஷ்மி. இசை: J. எட்வின் ஒப்பனை: கலைமாமணி பாண்டீஸ்வரன்

அவசியம் வருக ! ஆதரவு தருக !! என அன்புடன் அழைக்கும் : Kalaimamani M.S. RAJA, B.A.
Programme Committee Member South Zone Cultural Centre, Ministry of Culture, Government of India.

புதுவை அரசின் கலை. பண்பாட்டுத் துறையும், தஞ்சைத் தமிழகப் பண்பாட்டு மையமும் இணைந்து நடத்திய புதுவைச் சிவம் பிறந்த நாள் விழாவில் நடைபெற்ற அமுதவல்லி (அ) அடிமையின் வீழ்ச்சி நாடகத் துண்டறிக்கை


புதுச்சேரி அரசு கலை பண்பாட்டுத்துறை
தஞ்சைத் தென்னகப் பண்பாட்டு மையம்
இணைந்து நடத்தும் புதுவைச்சிவம் அவர்களின் நூற்றாண்டு விழா

| இடம் : | நாள் : |
|---|---|
| புதுவை கடற்கரை காந்தி திடல் | 15.02.08 வெள்ளிக்கிழமை இரவு 8.01 மணி |

அமரர் பாவலர் ச. தண்டபாணி அவர்களின் நல்லாசியுடன்
புதுவை ஆப்டெக்ஸ் நுண் கலை மன்றம் வழங்கும்
கவிஞர் புதுவைச்சிவம் அவர்களின்
# புதிய வாழ்வு
சமூக சீர்திருத்த நாடகம்

காட்சியில் கலைஞர்கள் :
கலை நன்மாமணி துரை ஜனார்த்தனன்,
கலைநன்மாமணி சூரன் ப. தங்கராசு,
நாடக இளவல் பி. விஜயகுமார், நவரச நாயகன் லி. கருணாகரன்,
கலைநன்மாமணி பாஸ்கரன், வி. அனந்த கிருஷ்ணன்,
சிவநெறி கயிலைப் பித்தன், பாவலர் நட. இராமமூர்த்தி,
ஆன்மீக திலகம் செ. இராமமூர்த்தி, குப்புசாமி, சிவாஜி, அ. கமல் விக்ரம்
புதுவை பாரதி, திருக்கனூர் சாரங்கா, புதுவை விஜி
இவர்களுடன் நகைச்சுவை அரசு
கலைமாமணி பாண்டீஸ்வரன்

மேடை நிர்வாகம் : ம. ராமலிங்கம், வ. பூபாலன், வே. ராதா கிருஷ்ணன்,
இசை : சங்கீத பூஷன் வெ. ஜெகதீசன்
இணை இயக்கம் : நவரச நாயகன் லி. கருணாகரன்
இயக்கம் : சூரன் ப. தங்கராசு
ஒப்பனை, இயக்கம் மேற்பார்வை : கலைமாமணி பாண்டீஸ்வரன்

அன்புடன் அழைக்கும்
புதுவை நாடக மன்றங்களின் கூட்டமைப்பு
36, பழைய மார்க்கெட் வீதி, முதலியார்பேட்டை, புதுச்சேரி - 605 004.
போன் : 0413 - 2355557

புதுவை அரசின் கலை. பண்பாட்டுத் துறையும், தஞ்சைத் தமிழகப் பண்பாட்டு மையமும் இணைந்து நடத்திய புதுவைச் சிவம் பிறந்த நாள் விழாவில் நடைபெற்ற புதிய வாழ்வு நாடகத் துண்டறிக்கை


முன் அரங்கில்
பாவலர். சிவ இளங்கோ
திரு. அரிமளம் சு. சிவக்குமார்
பாவலர். ந. இராமமூர்த்தி
பாவலர். திருமதி. கலா விசு
செல்வி. மைதிலி
திரு. கலைப்புலி சங்கர்
பாவலர். மு. சச்சிதானந்தம்
திரு. சட்ட திருநாவுக்கரசு
செல்வன். பாரதிசிவம்
செல்வன். கோவலன்

மேடை நிர்வாகம்
பாவலர். ந. இராமமூர்த்தி
பாவலர். சீ. தமிழ்வாணன்

இசை
இராஜரத்தினம்

கதை, நாடகம் காட்சி அமைப்பு
கவிஞர் புதுவைச்சிவம்

வசனம்
திருமதி மு. விமலா

தயாரிப்பு
கானல்வரி கலைக் குழுவினர்

உதவி இயக்கம்
பா. மைதிலி

இயக்கம்
சிவ. இளங்கோ

புதுச்சேரி அரசு
கலை, பண்பாட்டுத் துறையும்
தஞ்சைத் தென்னகப் பண்பாட்டு மையமும்
இணைந்து வழங்கும்
கவிஞர் புதுவைச் சிவம்
பிறந்தநாள் விழா-2005

விழா நிகழ்ச்சியில்
கானல்வரி கலைக் குழுவினர்
வழங்கும்
காந்திமதி (அ)
கல்வியின் மேன்மை
என்னும்
புதுவைச்சிவம் நாடகம்

இயக்கம்
சிவ இளங்கோ

இடம்
ஜெயராம் உணவகம்
புதுச்சேரி.

நாள்/நேரம்
23.10.2005
மாலை 6.30 மணியளவில்

புதுவை அரசின் கலை பண்பாட்டுத் துறையும், தஞ்சைத் தமிழகப் பண்பாட்டு மையமும் இணைந்து நடத்திய புதுவைச் சிவம் பிறந்த நாள் விழாவில் நடைபெற்ற காந்திமதி (அ) கல்வியின் மேன்மை நாடகத் துண்டறிக்கை



புதுச்சேரி அரசு

கலை, பண்பாட்டுத் துறை—தஞ்சைத்
தென்னகப் பண்பாட்டு மையம்
இணைந்து வழங்கும்

கவிஞர் புதுவைச் சிவம் பிறந்தநாள் விழா

அழைப்பிதழ்

நாள்
23 அக்டோபர், 2002

நேரம்
மாலை 5.30 மணி

இடம்
எஸ்.எஸ். திருமண நிலையம்
67, சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை
புதுச்சேரி



கலை-இலக்கிய நிகழ்ச்சிகள்

இரவு 7.30 மணி

கவியரங்கம்

பொருள்
கவிஞர் புதுவைச் சிவம் பாடல்களில்....

பங்கேற்போர் :

கவிஞர் கோ. கலியபெருமாள், புதுச்சேரி - "சமூகச் சீர்திருத்தம்"
கவிஞர் பூங்கொடி பராங்குசம், புதுச்சேரி - "நாட்டுப்பற்று"
கவிஞர் காசிகோவன், புதுச்சேரி - "பெண்ணியம்"
கவிஞர் நளினி சாரங்கன், புதுச்சேரி - "மொழி உணர்வு"

இரவு 8.15 மணி

வழக்காடு மன்றம்

பொருள்
பகுத்தறிவுச் சிந்தனையாளர் கவிஞர் புதுவைச் சிவம்

தலைமை : திரு சண்முக வடிவேலு, திருவாரூர்
வழக்குத் தொடுப்பவர் : முனைவர் அரங்க. மு. முருகையன், புதுச்சேரி
வழக்கு மறுப்பவர் : திரு அரிமதி இளம்பரிதி, புதுச்சேரி

இரவு 9.00 மணி

நாடகம்

கவிஞர் புதுவைச் சிவம் அவர்களின் "புதிய வாழ்வு"

வழங்குபவர்கள் : "கட்டியக்காரன்" குழுவினர்

புதுவை அரசின் கலை பண்பாட்டுத் துறையும், தஞ்சைத் தமிழகப் பண்பாட்டு மையமும் இணைந்து நடத்திய புதுவைச் சிவம் பிறந்த நாள் விழா அழைப்பிதழ். இந்நிகழ்ச்சியில் புதிய வாழ்வுநாடகம் கட்டியக்காரன் கலைக் குழுவினரால் நிகழ்த்தப்பட்டது.



புதுச்சேரி அரசு கலை, பண்பாட்டுத்துறை
இந்திய அரசு, தஞ்சை தென்னக பண்பாட்டு மையம்
இணைந்து நடத்தும் கவிஞர் புதுவைச் சிவம், பிறந்த நாள் விழா
இடம்: ஆந்திர மகா சபா, வள்ளலார் சாலை. நாள்: 24.10.2009, சனிக்கிழமை மாலை 5.00 மணி.

இச்சிறப்பான விழாவில்...

திரு. இராம. வீரப்பன் அவர்கள் (முன்னாள் தமிழக அமைச்சர்)
மாண்புமிகு M.O.H.F. ஷாஜகான் அவர்கள் (பொதுப்பணி, கலை பண்பாட்டுத்துறை அமைச்சர்)
திரு. இரா. சிவா, அவர்கள் (உருளையன் பேட்டை சட்டமன்ற உறுப்பினர்)
திருமதி C. பானுமதி, அவர்கள் (இயக்குநர், கலை பண்பாட்டுத்துறை)

மற்றும் தமிழ்மாமணிகள், கலைமாமணிகள், அரசு அதிகாரிகள், கலை ஆர்வலர்கள் முன்னிலையில்

30 ஆண்டுகளாக புதுச்சேரி மண்ணிலே தொடர்ந்து கலைப்பணியாற்றி வரும்
கலைச்செல்வம், நாடகக் கலை அரசு எம். எஸ். ராஜா, B.A வின்
புதுவை கண்மணி கிரியேஷன்ஸ் பெருமையுடன் வழங்கும்
கவிஞர் புதுவைச் சிவத்தின் வீர நந்தன் (விழிப்புணர்வு நாடகம்)
கதை: கவிஞர் புதுவைச் சிவம்.
மேடைக்கதை - வசனம் - இயக்கம் - கலைச்செல்வம் எம். எஸ். ராஜா, B.A

S. ஜெயசீலன், M.Com. ப. செல்வநாதன், M.A. B.L. நட. இராமமூர்த்தி, M.A. M. குணசேகரன் S.N. ஏழுமலை
A. சகாயராஜ் P. ராமமூர்த்தி விஜி (எ) K. வீரம்மாள் லக்ஷ்மி (எ) S. பிரியானா மார்க்
இவர்களுடன் சிறப்புத் தோற்றத்தில் புதுவைச் சிவத்தின் மைந்தர், முனைவர் சிவ. இளங்கோ
இசை : G. தமிழரசன். ஒப்பனை: கலைமாமணி பாண்டீஸ்வரன். தொடர்புக்கு : 98423 64063

புதுவை அரசின் கலை. பண்பாட்டுத் துறையும், தஞ்சைத் தமிழகப் பண்பாட்டு மையமும் இணைந்து நடத்திய புதுவைச் சிவம் பிறந்த நாள் விழாவில் நடைபெற்ற வீரநந்தன் நாடகத் துண்டறிக்கை



புதுவை அரசின் கலை· பண்பாட்டுத் துறையும், தஞ்சைத் தமிழகப் பண்பாட்டு மையமும் இணைந்து நடத்திய புதுவைச் சிவம் பிறந்த நாள் விழா 23.10.2002 அன்று நடைபெற்ற போது புதிய வாழ்வு நாடகத்தை நடத்திய கட்டியக்காரன் கலைக் குழுவினர்.



புதுவை அரசின் கலை பண்பாட்டுத் துறையும், தஞ்சைத் தமிழகப் பண்பாட்டு மையமும் இணைந்து நடத்திய புதுவைச் சிவம் பிறந்த நாள் விழாவில் நடைபெற்ற வீரநந்தன் நாடகத்தில் ஒரு காட்சி.




புதுவை அரசின் கலை பண்பாட்டுத் துறையும், தஞ்சைத் தமிழகப் பண்பாட்டு மையமும் இணைந்து நடத்திய புதுவைச் சிவம் பிறந்த நாள் விழாவில் நடைபெற்ற காந்திமதி (அ) கல்வியின் மேன்மை நாடகத்தில் ஒரு காட்சி.




புதுவை அரசின் கலை. பண்பாட்டுத் துறையும், தஞ்சைத் தமிழகப் பண்பாட்டு மையமும் இணைந்து நடத்திய புதுவைச் சிவம் பிறந்த நாள் விழா 23.10.2005 அன்று நடைபெற்ற போது காந்திமதி (அ) கல்வியின் மேன்மை நாடகத்தை நடத்திய கானல்வரி கலைக் குழுவினர்.



புதுவை அரசின் கலை. பண்பாட்டுத் துறையும், தஞ்சைத் தமிழகப் பண்பாட்டு மையமும் இணைந்து நடத்திய புதுவைச் சிவம் பிறந்த நாள் விழா 24.10.2009 அன்று நடைபெற்ற போது வீரநந்தன் நாடகத்தை நடத்திய கண்மணி கிரியேஷன்ஸ் நாடகக் குழுவினர்.



புதுவை அரசி ன் கலை. பண்பாட்டுத் துறையும், தஞ்சைத் தமிழகப் பண்பாட்டு மையமும் இணைந்து 15.02.2008இல் நடத்திய புதுவைச் சிவம் பிறந்த நாள் விழாவில் நடைபெற்ற புதிய வாழ்வு நாடகத்தில் ஒரு காட்சி.

102410
நூலகம்

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
# சென்னை - 600 113

## அண்மை வெளியீடுகள்

| | ரூ.பை. |
|---|---|
| அறிஞர்கள் பார்வையில் பேரறிஞர் அண்ணா | 145.00 |
| அறிஞர் அண்ணா-மொபசான் சிறுகதைகள்-ஒப்பாய்வு | 160.00 |
| இராசேந்திர சோழன் வெளியிட்ட எசாலம் செப்பேடுகள் | 55.00 |
| கடலடியில் தமிழர் நாகரிகம் | 55.00 |
| படைப்பு நெறிமுறைகள் | 150.00 |
| Comparative Studies in Literary Cultures | 100.00 |
| Sangam Classics:New Perspecties | 105.00 |
| கடற்பொறியியற் கலைச்சொற்கள் (குறுங்கலைக்களஞ்சியம்) | 150.00 |
| அரங்கியல் நோக்கில் கபிலர் பாடல்களில் காணலாகும் கதைமாந்தர்கள் | 100.00 |
| சங்க இலக்கியத்தில் சமூக ஆய்வுகள் | 55.00 |
| தமிழ் வாழ்க்கை வரலாற்றிலக்கியம் | 170.00 |
| கவிஞர் குலோத்துங்கனின் மானுடயாத்திரை காவிய வானில் புதிய தாரகை | 45.00 |
| தமிழ் நாடக வகையும் வரலாறும் | 110.00 |
| வா.செ.கு.என்ற ஆளுமையாளர் | 50.00 |
| உ.வே.சா.வின் குறுந்தொகை உரைத்திறன் | 45.00 |
| மருதத்தில் மக்கள் வாழ்வியல் | 40.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 1 பாயிரம் - 1 | 85,00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 4 எழுத்தியல் - 2 | 140,00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 2 பாயிரம் - 2 | 75,00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 6 உயிரீற்றுப்புணரியல்-1 | 125,00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 7 உயிரீற்றுப்புணரியல்-2 | 160,00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 8 மெய்யீற்றுப்புணரியல் | 160,00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 9 உருப்புணரியல் | 95,00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 12 வினையியல் | 190,00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 13 பொதுவியல்-1 | 140,00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 16 இடைச்சொல்லியல் | 90,00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 17 உரிச்சொல்லியல் | 55,00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 18 தொல்.நன்னூல் | 120,00 |
| பண்டைத் தமிழ் எழுத்துக்கள் (ம.ப.) | 65.00 |
| வல்லம் புராணம் | 200.00 |
| இதழியல் உலகம் | 120.00 |
| தமிழும் தமிழ்க் கற்பித்தலும் | 60.00 |
| படைப்பிலக்கியம்-விளிம்புநிலை மக்கள் ஆய்வுநோக்கு | 100.00 |
| பழந்தமிழும் கிளைமொழிகளும் | 65.00 |
| உலக மொழிகளில் தமிழ்ச்சொற்களும் இலக்கணக்கூறுகளும் | 85.00 |
| அரசகுலச் சான்றோர் வரலாறும் மதுரைக்காஞ்சியும் | 115.00 |
| பெயரியல் | 55.00 |
| தமிழ்இகலாம் உருவாக்கமும் திருக்குர்ஆன் தமிழ் வாசிப்பும் ஆய்வியல் சிந்தனை | 45.00 |
| தலித் அறம் | 45.00 |
| பொதுவுடைமை இயக்க இதழ்கள் | 115.00 |
| தமிழில் இதழியல் | 270.00 |

---

**733 கவிஞர் புதுவைச்சிவத்தின் சீர்திருத்த நாடகங்கள் 120.00**

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

## அண்மை வெளியீடுகள்

| | ரூ.பை. |
|---|---|
| அறிஞர்கள் பார்வையில் பேரறிஞர் அண்ணா | 145.00 |
| அறிஞர் அண்ணா-மொபசான் சிறுகதைகள்-ஒப்பாய்வு | 160.00 |
| இராசேந்திர சோழன் வெளியிட்ட எசாலம் செப்பேடுகள் | 55.00 |
| கடலடியில் தமிழர் நாகரிகம் | 55.00 |
| படைப்பு நெறிமுறைகள் | 150.00 |
| Comparative Studies in Literary Cultures | 100.00 |
| Sangam Classics:New Perspecties | 105.00 |
| கடற்பொறியியற் கலைச்சொற்கள் (குறுங்கலைக்களஞ்சியம்) | 150.00 |
| அரங்கியல் நோக்கில் கபிலர் பாடல்களில் காணலாகும் கதைமாந்தர்கள் | 100.00 |
| சங்க இலக்கியத்தில் சமூக ஆய்வுகள் | 55.00 |
| தமிழ் வாழ்க்கை வரலாற்றிலக்கியம் | 170.00 |
| கவிஞர் குலோத்துங்கனின் மானுடயாத்திரை காவிய வானில் புதிய தாரகை | 45.00 |
| தமிழ் நாடக வகையும் வரலாறும் | 110.00 |
| வா.செ.கு.என்ற ஆளுமையாளர் | 50.00 |
| உ.வே.சா.வின் குறுந்தொகை உரைத்திறன் | 45.00 |
| மருதத்தில் மக்கள் வாழ்வியல் | 40.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 1 பாயிரம் - 1 | 85,00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 4 எழுத்தியல் - 2 | 140,00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 2 பாயிரம் - 2 | 75,00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 6 உயிரீற்றுப்புணரியல்-1 | 125,00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 7 உயிரீற்றுப்புணரியல்-2 | 160,00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 8 மெய்யீற்றுப்புணரியல் | 160,00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 9 உருப்புணரியல் | 95,00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 12 வினையியல் | 190,00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 13 பொதுவியல்-1 | 140,00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 16 இடைச்சொல்லியல் | 90,00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 17 உரிச்சொல்லியல் | 55,00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 18 தொல்.நன்னூல் | 120,00 |
| பண்டைத் தமிழ் எழுத்துக்கள் (ம.ப.) | 65.00 |
| வல்லம் புராணம் | 200.00 |
| இதழியல் உலகம் | 120.00 |
| தமிழும் தமிழ்க் கற்பித்தலும் | 60.00 |
| படைப்பிலக்கியம்-விளிம்புநிலை மக்கள் ஆய்வுநோக்கு | 100.00 |
| பழந்தமிழும் கிளைமொழிகளும் | 65.00 |
| உலக மொழிகளில் தமிழ்ச்சொற்களும் இலக்கணக்கூறுகளும் | 85.00 |
| அரசகுலச் சான்றோர் வரலாறும் மதுரைக்காஞ்சியும் | 115.00 |
| பெயரியல் | 55.00 |
| தமிழ்இசுலாம் உருவாக்கமும் திருக்குர்ஆன் தமிழ் வாசிப்பும் ஆய்வியல் சிந்தனை | 45.00 |
| தலித் அறம் | 45.00 |
| பொதுவுடைமை இயக்க இதழ்கள் | 115.00 |
| தமிழில் இதழியல் | 270.00 |

733 கவிஞர் புதுவைச்சிவத்தின் சீர்திருத்த நாடகங்கள் **120.00**